**யாழ்ப்பாணம்** - சமூகம், பண்பாடு, கருத்துநிலை

கார்த்திகேசு சிவத்தம்பி

---

இந்நூலில் இடம்பெறும் கட்டுரைகள் இதுவரை தமிழில் ஆழமான பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படாத யாழ்ப்பாணச் சமூகத்தை சமூகவியல், சமூகவரலாறு ஆகிய துறைகளினூடாக சித்திரிக்க முனைகின்றன.

யாழ்ப்பாணச் சமூகத்தின் இயங்கியல் விவரணம், அச்சமூகத்தில் மேலாண்மை பெற்று விளங்கும் கருத்து நிலைகள் ஆகியனவற்றையும், அவற்றின் பின்புலத்தில் யாழ்ப்பாணத்தின் புலமைத்துவமரபு, மதநிலைச் சமூக அசைவியக்கம், ஆகியனவற்றையும், அச்சு ஊடகங்களின் தொழிற்பாட்டினையும் எடுத்துக் கூறும் இக்கட்டுரைகள், யாழ்ப்பாணச் சமூக வரலாற்றையும் கோடிட்டுக் காட்டுகின்றன.

தனிக்கட்டுரைகளாகவும், பிரசுரங்களாகவும் வெளிவந்த காலங்களில், புலமைச் சர்ச்சைகள் பலவற்றைக் கிளப்பிய இவை, இப்போது நூல் வடிவில் யாழ்ப்பாணச் சமூகம் பற்றிய ஒரு ஒட்டு மொத்தமான பார்வையை வழங்குகின்றன.

**கார்த்திகேசு சிவத்தம்பி** : யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக பணியாற்றிய பின் இவர் தற்போது அதே பல்கலைக் கழகத்தில் தகைசார் ஓய்வுநிலை பேராசிரியராகவுள்ளார்.

தனது இள, முதுமாணிப்பட்டங்களை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப்பட்ட ஆய்வை இங்கிலாந்திலுள்ள பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக் கொண்ட இவர் இலக்கிய திறனாய்வு, இலக்கிய வரலாறு, சமூக வரலாறு, நாடகமும் அரங்கியலும் என பல்வேறு துறைகளில் ஈடுபாடுடையவர்.

இவர் கேம்பிறிட்ஜ், பேர்கிளி, ஹாவாட், உப்சலா, சென்னை, தஞ்சாவூர் உட்பட பல்வேறு பல்கலைக்கழகங்களில் முதுநிலை ஆய்வாளராகவும் வருகைப் பேராசிரியராகவும் ஆய்வுகளையும், விரிவுரைகளையும் மேற்கொண்டிருந்தார்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும், நாற்பதிற்கு மேற்பட்ட சிற்றாய்வேடுகளையும், நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

குமரன் புத்தக இல்லம்

யாழ்ப்பாணம் - சமூகம், பண்பாடு, கருத்துநிலை

கார்த்திகேசு சிவத்தம்பி

# யாழ்ப்பாணம்

## சமூகம், பண்பாடு, கருத்துநிலை



**கார்த்திகேசு சிவத்தம்பி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்

## சமூகம், பண்பாடு, கருத்துநிலை

**கார்த்திகேசு சிவத்தம்பி**
*(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை)*

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை.
2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : யாழ்ப்பாணம் : சமூகம், பண்பாடு, கருத்துநிலை

ஆசிரியர் : பேராசிரியர் கா.சிவத்தம்பி ©

முதல்பதிப்பு : ஆவணி 2000

ஒளியச்சு : குமரன் அச்சகம், கொழும்பு.

வெளியீடு : குமரன் புத்தக இல்லம்

| | |
|---|---|
| 201, டாம் வீதி, | 3, மெய்கை விநாயகர் தெரு, |
| கொழும்பு - 12. | குமரன் காலனி, |
| தொ.பே: 421388 | சென்னை - 26. |

இ.தபால் : kumaranbh@eureka.lk

விலை (இந்தியா) : 100.00

Title : YALPPANAM : CAMUKAM - PANPATU - KARUTTUNILAI
(JAFFNA : SOCIETY - CULTURE - IDEOLOGY)

Author : Prof. K. Sivathamby ©

First Edition : August 2000

Typesetting : Kumaran Press (Pvt) Ltd, Colombo.

Publishers : Kumaran Book House

| | |
|---|---|
| 201, Dam Street, | 3, Meigai Vinayagar Theru, |
| Colombo - 12. | Kumaran Colony, |
| Tel : 421388 | Madras - 26. |

E. mail : kumaranbh@eureka.lk

Price (India) : 100.00

**Printed by : Monark Graphiks**
Chennai - 14.



*யாழ்ப்பாணப்*
*பல்கலைக்கழகத்துக்கு,*

*அது எனக்குச் செய்தவற்றுக்கும்*
*தந்தவற்றுக்குமான*

*ஒரு மிக மிகச் சிறிய கையுறை*

---

அது பல வகைகளில்
ஒரு புண்ணியபூமி.
புண்ணியபூமிகளுக்குள்
வந்து சேர்ந்துவிடும்
எல்லா அழுக்குகளுடனும்.

ஆனால்
அதற்குள் எனக்கிருந்த
கால்பலமும், கருத்து நிலைப்பாடும்
நான் வெளியே சிறகுகளை
விரிக்கக் கூடியதாக விருந்தது.
அந்தச் சிறகடிப்புக்கள் பலருக்குப்
பெரு விருப்புத் தரவுமில்லை.

இவை யாவற்றுக்குமூடே,
என் மனதின்
பெரு வேட்கையாகவிருந்தது
வகுப்பறைவிட்டு வெளியே
செல்லும் மாணவரின்
திருப்தி நிறைந்த கண்களும்
நன்றிகலந்த இன்முகமுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுப்புரை

இலங்கையின் வரலாற்றில் தமிழர்களைப் பொறுத்தவரை 1956ம் ஆண்டு ஓர் முக்கிய திருப்புமுனை ஆண்டாகவே கருதப்பட வேண்டும். இதுவரையான தமிழர்களின் வாழ்க்கைப் போக்கை பிரிநிலைப் படுத்திக் காட்டக்கூடிய ஆண்டாகவும், பின்னர் வரும் காலத்தை எச்சரிக்கை செய்யும் குறியீடாகவும் இந்த ஆண்டு அமைந்திருந்தது.

தமிழ்ச்சமூகத்தில் வாழ்வியல் இருப்பு படிப்படியாக கேள்விக்குள்ளாக்கப்பட்டன. தமிழர்களின் எதிர்காலம் மேலும் மோசமாக சீர்குலைக்கப்படத் தொடங்கியது. தமிழ் மக்களின் வாழ்வியல் மேலும் கொடூரமான இராணுவ அடக்குமுறைகளையும் அவற்றுக்கெதிராக பல்வேறு வடிவங்களில் போராட வேண்டிய நிர்ப்பந்தமும் கொண்ட வரலாறாக்குகிறது. 'தமிழர்' எனும் ஒரே ஒரு தகுதியே அவர்களது வாழ்வியல் சூறையாடப்படக் காரணமாகிவிடுகிறது. இந்நிலையில் தொடர்ந்தும் வாழ்வியல் மீதான அக்கறையும் தங்கள் இருப்பின் அடையாளத்துக்காகவும், தங்கள் அடையாளத்தின் இருப்புக்காகவும் ஒவ்வொரு கணமும் போராடிக் கொண்டிருக்கும் சமூகமாகவே தமிழ்ச்சமூகம் மாறத் தொடங்கியது.

இதனால் தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலம் கருதிய செயற்பாடுகள், பன்முகரீதியில் வெளிப்பட வேண்டிய நிர்ப்பந்தம் நமது சிந்தனையின் ஆழமும், புலமை வீச்சும் ஒருங்கே தம் பிரச்சனைப்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோல்களை வெளிப்படுத்த வேண்டும். இதனால் தமிழ்ச் சூழலில் இதுவரை நடைபெற்ற புலமைச் செயற்பாடுகள் யாவும் இன்று தமிழ்ச்சமூகம் முகம் கொடுத்த, முகம் கொடுத்துவரும் பிரச்சனைகளின் பன்முகத்தன்மைகளையும், அவற்றின் தாட்பரியங்களையும் விளங்கிக் கொள்ள, விளக்க நாம் எவ்வளவு தூரம் முற்பட்டுள்ளோம் எனவும் திரும்பிப் பார்க்க வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே தமிழ்ச் சமூகத்தின் சிந்தனைகளையும் பிரச்சனைப் பாடுகளையும் வெளிப்படப் பேசுவது, அவற்றை முன்வைப்பது என்பது கூட சமூகப் புலமையின் குறைந்தபட்சக் கடமையென்றே கருதலாம்.

இலங்கையில் தமிழர்கள் வடக்கு, கிழக்கு, மலையகம், தென்னிலங்கை என பரந்து வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் மதநிலைப்பட்டு சைவம், கிறிஸ்தவம் எனவும் வாழ்ந்து வருகின்றனர். இலங்கை மக்கள் மத்தியில் முதலாளித்துவ அரசியல் உறவுகள் அறிமுகப்படுத்தப்பட்ட தொடக்க காலத்தில் இருந்து யாழ்ப்பாணச் சமூகமே முழுத் தமிழ்மக்களையும் பிரதிநிதித்துவம் செய்வதான ஒரு தோற்றப்பாட்டினை நடைமுறையில் கொண்டிருந்தது.

யாழ்ப்பாணச் சமூகம் பல்வேறு சிக்கல்தன்மை கொண்ட ஒரு அதிகாரப் படிநிலைச் சமூகம். அது சாதிமுறைமை விதிக்கும் அதிகாரப் படிநிலை இறுக்கம் கொண்டது. இதற்கு சமய அங்கீகாரமும் உள்ளது. ஆக யாழ்ப்பாணச் சமூக அமைப்பின் அதிகாரப்படிநிலை சாதிய மத இயல்பு கொண்டது. சைவ வேளாள ஆணாதிக்கக் கருத்துநிலை மையப்படுத்தப்பட்ட மேலாட்சி வகிக்கும் சமூக அமைப்பு.

யாழ்ப்பாணத்தின் சைவ வேளாள மேலாதிக்கப் போக்கு ஏனைய மதப் போக்குகளில் மேலாட்சி செலுத்துகிறது. தூய்மையான இந்துச் சமூகமாகவே அதிலும் சைவசமயம் சமஸ்கிருதமயப்படுத்தப்பட்ட - ஆகமநிலைப்படுத்தப்பட்ட - போக்காகவே உள்ளது. இந்த சைவத்தின் பாதுகாவலர்கள் படித்த வேளாளர்கள். அடிநிலை மக்களினது மத மரபுகள் சைவத்தின் தூய்மையை அசுத்தப்படுத்துபவை. எனவே சைவ வேளாள ஆதிக்கப் போக்கு, இந்த மரபுகளை சைவப் பண்பாட்டின்பாற் பட்டனவாக கொள்ளக்கூடாது எனும் ஒரு திட்டவட்டமான மனோபாவத்தை வன்மையாக வளர்த்தெடுத்துள்ள சமூகம்.

யாழ்ப்பாணத்தில் ''சைவமும் தமிழும்'' என்னும் கோட்பாட்டினை ''நாவலர் மரபு'' தொடர்ந்து பேணி வருகிறது. ''சைவமே தமிழ்'', ''தமிழே சைவம்'' எனும் போக்கு வன்மையாக நிலவுகிறது. இதனால் ஏனைய மதப்பிரிவினைகளை தமிழர்களாக கருதாது ஒதுக்கட்பாட்டுணர்வுடன் ஆதிக்க மனோபாவத்துடன் நோக்கி வருவதைக் காணலாம். இப்போக்கு தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட காலத்திலும் அடியோடு மாற்றப்பட்டதாக கருத முடியாது. வடக்கிலிருந்து - யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட பொழுது அதற்கு பரவலான எதிர்ப்புணர்வு சைவத் தமிழர்களில் வெளிப்படாத



மனநிலையையும், அத்துடன் அதனைத் சாதாரணமாகவே நியாயப் படுத்தும் மனநிலையையும் கூட இப்பின்புலத்தில் வைத்தே புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று தமிழ்த்தேசியம், தமிழ்ச்சமூக உருவாக்கம் பற்றியெல்லாம் சிந்திக்கும் பொழுது மேற்குறித்த போக்குகளையெல்லாம் துடைத்தெறிந்து வரவேண்டும். இதற்கு அனைத்துச் சமூககங்களையும் ஒருங்கிணைத்துப் பார்க்கக்கூடிய சிந்தனையும் தெளிவும் வேண்டும். ஆதிக்கச் சிந்தாந்தப் போக்குகளிலிருந்து விடுபட்டுத் தமிழ்ச்சிந்தனை வளர வேண்டும். ஆகவே 'தமிழ்த்தேசியம்', 'தமிழ்ச் சமூக உருவாக்கம்' பற்றி இன்னும் விரிந்த பரந்த தளத்தில் சிந்திக்க வேண்டும். இதற்குரிய 'புலமைச் சூழல்', 'புலமை வேட்கை' முன்னெப்போதையும் விட அதிகரிக்கத் தொடங்கிவிட்டன.

இதனால் புதிய பிரச்சனைகளும், கேள்விகளும், சிந்தனைகளும் புதுநோக்கிலான அறிவியற் பார்வையை நோக்கி முன்தள்ளுகின்றன. ஈழத்துத் தமிழ்ப் புலமை பாரம்பரியம், அதனது சமூக அரசியல் செயற்பாடுகள் விரிவு கொள்கின்றன. இதனால் மீள்நோக்குவயப்பட்ட 'வாசிப்புகள்', 'மறுவாசிப்புக்கள்' முதன்மை பெறத் தொடங்கின. பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, மு.தளையசிங்கம் போன்றோரை மீள்வரலாற்று நோக்கில் புரிந்து கொள்வதற்கான அவசியங்களை, தேவைகளை ஏற்படுத்தின.

இவ்வாறான புரிதல் முயற்சியில், வாசிப்புச் செயற்பாட்டில், புலமை வேட்கையில், தேடலில் ஈடுபடும் பொழுது தான் பேராசிரியர் சிவத்தம்பி யாழ்ப்பாணச் சமூகம் குறித்து பல்வேறு தளங்களில் எழுதிய எழுத்துக்கள் கவனிப்புக்கு வருகின்றன.

யாழ்ப்பாணச் சமூகத்தின் அமைப்பு, அதன் உருவாக்கம், அதன் அசைவியக்கம், யாழ்ப்பாணச் சமூகத்தில் மேலாட்சி செலுத்தும் கருத்தியல் போக்குகள் என பல்வேறு தளத்தில் சிந்திப்பதற்கான ஆய்வு நிலையில் நின்று ஒரு புலமைத்தளத்தை பேராசிரியர் நம்முன் நிறுத்தியுள்ளார்.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்களால் பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு தேவைகள் நிமித்தம் எழுதிய இந்த எழுத்துக்கள் வழியே ஒரு மைய இழை ஓடிக் கொண்டிருப்பதை காணமுடியும். இன்று இவ் எழுத்துக்கள் - கட்டுரைகள் முழுவதையும் தொகுத்துப் பார்க்கும் பொழுது அவற்றிடையே ஒரு பொதுமை தெளிவாகவே காணமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ''யாழ்ப்பாணச் சமூகம்'' அதன் அசைவியக்கம் எனும் தளத்தில் புறவயப்பட்ட ஓர் ஆய்வு நோக்கினை தெட்டத் தெளிவாகவே வெளிப் படுத்திக் கொண்டிருப்பதே.

இதுவரை எம்மிடையே யாழ்ப்பாணச் சமூகம் பற்றிப் பேசுவதில், குறிப்பாக புலமை மட்டத்தில் மௌனமே கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அதாவது பேசாப் பொருளாகவே இருந்தது. இதனை சிவத்தம்பி 1971இல் ''யார் இந்த யாழ்ப்பாணத்தான்'' எனும் கட்டுரை மூலம் தன்னளவில் பேசுபொருளாக மாற்றினார். மேலும் படிப்படியாக யாழ்ப் பாணச் சமூகம் குறித்து இன்னும் பல்வேறு தளங்களிலும் ஊடாடி ஒரு முழுமையான பேசு பொருளுக்குரிய நியாயப்பாட்டை, அதன் சிறப் புக்களை எடுத்துக் காட்டி ஆய்வு ரீதியில் நோக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்திச் செல்கின்றார்.

இவ் எழுத்துக்கள் சிவத்தம்பியின் புலமையின்பாற்பட்ட சிறப்புத் துறை நிலைப்பட்ட ஆய்வு முயற்சியில் இருந்து பெறப்பட்ட எழுத்துக் கள் அல்ல. ஆனால் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தை சமூகவியல், மானிடவியல், சமூகவரலாறு போன்ற துறைகளின் வழி சென்று மீள் நோக்கு செய்யும், ஆய்வு செய்யும் காரணத்தால் அத்தகைய புலமைப் பின்புலத்தின் ஒரு தர்க்கரீதியான விளைவில் உருவானவையே இந்த யாழ்ப்பாணச் சமூகம் தொடர்பான கட்டுரைகள்.

நாம் இதுவரை தமிழ்ச்சமூகம் என்பதை யாழ்ப்பாண மைய நோக்கு -யாழ்/சைவ/வேளாள/ஆண் நிலை நின்று மட்டுமே நோக்கி வந்துள் ளோம். இப் போக்கே பரவலாக காணப்பட்டது. தற்போது இப்போக்கை மறுக்க வேண்டும். ஒவ்வொரு தமிழ்ச் சமூகக் குழுமங்களிடையேயான தனித்துவங்களையும் பொதுமக்களையும் அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். பன்மைத்துவ நோக்கிலேயே 'தமிழ்ச்சமூகம்' கட்டமைக் கப்பட வேண்டும்.

ஆக இப்பின்னணியில்தான் சிவத்தம்பியின் இந்த நூல் யாழ்ப் பாணச் சமூகம் பற்றி இதுவரையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பார்வைகளு க்கு, நோக்குகளுக்கு மாறான ஒரு மாற்றுப் பார்வையை முன்வைக்கிறது. இது ஈழத்துத் தமிழ் சமூக உருவாக்கம் பற்றிய பார்வைக்கும் ஏனைய தமிழ்ப் பிரதிநிதி குழுமங்கள் பற்றிய ஆய்வுக்கும், தெளிவுக்கும் கூட சில அடிப்படைகளை வழங்கிச் செல்கிறது. வரலாறு குறித்த மேட்டிமை அணுகல் முறை மற்றும் மையம் சார்ந்த அணுகல் முறையின் பயன் பாட்டை நிராகரிக்க முற்படுகிறது. புதிய ''வரலாறு எழுத்தியல்'' முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.



எந்தவொரு சமூகக் குழுமத்தினதும் உண்மையான பிரச்சினை களை அறிந்து கொள்வது என்பது, அந்த சமூகத்தில் முதல் மொழியி லுள்ள எழுத்துக்கள் வழியே தான் சாத்தியப்படும். அந்த முதல் மொழி எழுத்துக்கள் அம் மொழிக் குழுமத்தின் - குறித்த பிரதேசத்தின்- சமூக உளவியலை எடுத்துக் கட்டுவனவாகவும் இருக்கும். இதனால்தான் இக்கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் தவிர்க்க முடியாது விடுகிறது.

இவ்வாறான பின்புலத்தில் இந்நூலின் வருகை சமூக முக்கியத் துவம் வாய்ந்த ஒன்றாகவே இருக்க முடியும். தமிழ்ச் சமூகம் பற்றிய பட்டவர்த்தனமாக ஆய்வு செய்யப்புகுபவர்கள் மேலும் சமூகம் குறித்து சிந்திப்பவர்கள் மத்தியில் 'இந்நூல்' விரிந்த விவாதங்களைத் தூண்டு வனவாகவே இருக்கும். சிவத்தம்பியின் கருத்துக்கள், ஆய்வுகள் மட் டுமே முடிந்த முடிவானவை என அறுதியிட்டுக் கூறமுடியாது. மாறாக இவை ஒரு தொடக்கமே. ஆயினும் நமது புலமைச் சூழல் இன்னும் பல்வேறு வகையான பார்வைகளை, ஆய்வுகளை வேண்டி நிற்கின்றன.

இதுவரை ஈழத்துத் தமிழ்ப் புலமைப் பாரம்பரியச் செல்நெறிகளில் பல்கலைக்கழகப் புலமையாளர்களின் -தமிழ்த்துறை சார்ந்த- ஈடுபாடும் சிறப்பு நிலை ஆய்வுகளும் புதிய வகையிலான தோற்றுவிப்புக்கும் ஒழுங்கமைப்புக்கும் பங்களிப்புச் செய்துள்ளன. இவ்வாறு பங்களிப்பு நல்கியவர்களுள் பேராசிரியர்கள் விபுலாநந்த அடிகள், க.கணபதிப் பிள்ளை, சு.வித்தியானந்தன், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோ ரின் தொடர்ச்சியான புலமைச் செயற்பாடுகள் கவனிப்புக்குரியன. இந் தச் செழுமைத் தொடர்ச்சியின் கடைசிக் கொழுந்து, இன்றைய புலமைக் குறியீடு கா.சிவத்தம்பி எனலாம்.

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை தோற்றுவித்த ''ஈழத்து வாழ்வும் வளமும்' எனும் பரந்த ஆய்வுத் தளத்தின் ஒரு கிளைப்பாடு யாழ்ப் பாணச் சமூகம் பற்றிய ஆய்வு. கணபதிப்பிள்ளையின் இதற்கான வரலாறு நிலைப்பட்ட முன்வரைவினை, ஆர்வத்தினை, தூண்டுதலை 'சங்கிலி' எனும் நாடகத்துக்கு அவர் எழுதிய முன்னுரை சுட்டிக் காட்டுகிறது. இதன் தர்க்கரீதியான வளர்ச்சி அகற்சி 'யாழ்ப்பாணச் சமூகம்' குறித்து இன்னும் பல்வேறு தளங்களில் ஆய்வு ரீதியில் நோக்கு வதற்கான ஒரு புலமைத் தொடர்ச்சிப் பேணுகையை இந்த நூல் மூலம் சிவத்தம்பி தோற்றுவிக்கின்றார்.

இந்த நூல் ஒரு நூலின் முழுமையின் பொருட்பரப்புக்கியைந்து அத்தியாய நிலையில் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் இந்த நூலில் ''கூறியது கூறல்'' தவிர்க்கமுடியாது. ஆனால் இவற்றையும் மீறி ஓர் ஒழுங்கு முறைக்குள் வைத்து நோக்குவதற்கான முழுச் சாத்தியங்களையும் கொண்டுள்ளன.

யாழ்ப்பாணச் சமூகம் பற்றிய முற்று முழுதான பார்வைகள், ஆய்வுப் போக்குகள் யாவும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன எனத் திடப்படுத்திக் கூறிவிட முடியாது. சாதியப் பால்நிலை குறித்து இன்னும் துல்லியமாகப் பேசப்படாமலேயே உள்ளன. எண்பதுகளின் பின்னரான மாற்றங்கள் பற்றி முழுமையாகப் பேசப்படாமலேயே உள்ளன. முஸ்லிம் மக்கள் இஸ்லாமியப் பண்பாடு, கிறிஸ்தவ மக்கள் கிறிஸ்தவப் பண்பாடு இவை குறித்தெல்லாம் பேசப்படாமலேயே உள்ளன. ஆகப் பேசப்படாத இந்த விடயங்களும் பேசுபொருளாக்கப்படும் பொழுதுதான் ''யாழ்ப் பாணம்'' முழுமை பெறும். இந்நூலில் இக்கட்டுரைகள் இல்லாதது ஒரு பெரும் குறையே.

எவ்வாறாயினும் யாழ்ப்பாணச் சமூகம் குறித்து ஓரளவு பேசுவதற் கும் சிந்திப்பதற்கும் சில சாத்தியங்களை இந்நூல் கொண்டுள்ளது. பேசாப் பொருளை ஓரளவு பேசத் துணிந்தமைக்கு இந்நூல் வரவு நல்ல அறிகுறி. திறந்த கருத்தாடல் சூழல் எம்மிடையே வளர்க்கப்படும் பொழுது மேலும் பல புதிய வெளிச்சங்கள் கிடைக்கும். அத்தகைய வெட்டவெளிச்சமான பார்வைக்கு பேராசிரியர் சிவத்தம்பியின் எழுத்துக் கள் ஆய்வுகள் சில 'கருத்தாக்கச் சாதனங்களை' முன்வைக்கின்றன. ஆனால் நமக்கு இன்னும் பல்வேறு கருத்தாக்கச் சாதனங்கள், நோக்கு கள், பார்வைகள் வேண்டும்.

பேராசிரியர் அவர்களின் இக்கட்டுரைகளை தொகுத்து தரும்படி குமரன் புத்தக இல்லத்தினர் கேட்ட போது மகிழ்ச்சியடைந்தேன். அவர்களுக்கும் இத்தொகுப்பைத் தொகுக்க அனுமதி தந்த பேராசிரியர் சிவத்தம்பி அவர்களுக்கும் என் நன்றிகள்.

**தெ.மதுசூதனன்**
சென்னை.
1-2-2000



# வாக்குமூலம்

எனது இளம் நண்பர் மதுசூதனன் நிழற்படப் பிரதிகளாக இந்தத் தொகுப்பைக் காட்டிய பொழுது நான் பெரிதும் சந்தோஷப்பட்டேன். இந்தத் தொகுப்பினுள் வருவன ஏதோ ஒருவகையில் யாழ்ப்பாணச் சமூகம் பற்றிய ஒரு நோக்கினைத் தருகின்றன. இந்த நோக்கினையும் நோக்கு இயைபினையும் எல்லோரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் என்னளவில் இது எடுத்துக் கூறப்பட வேண்டிய ஒன்று. பின்போடப்பட முடியாதது.

மார்க்சிய சமூகவியல் சார்ந்த விவரணங்கள் எம் சமூகத்துக்கும் அவசியம். எங்களை நாங்கள் அறிந்து கொள்ள, மற்றவர்கள் நம்மைப் பார்ப்பது போல் நாங்கள் எங்களைப் பார்ப்பது அவசியம்.

இந் நூலில் இடம்பெறும் கட்டுரைகள் பல்வேறு கால கட்டங்களில் எழுதப்பட்ட எழுத்துக்கள் ஆகும். ஒவ்வொரு முறையும் ஏதோ ஒரு பின்போட முடியாத புலமைத் தூண்டுதல் இவை எழுதுவதற்கு உந்துத லாக அமைந்து வந்துள்ளது.

இவற்றுள் ''கூறியது கூறல்'' என்பது நிறையவே காணப்படும். அதைத் தவிர்க்க முடியவில்லை. கட்டுரைகளை நூலாகத் தொகுக்கின்ற பொழுது இந்தச் சிரமம் ஏற்படுகிறது. வரன்முறையான நூலின் பகு முறையான அதிகாரங்களாக இவற்றை எழுதப் பெரிதும் விரும்புகிறேன். அதற்கான வேளை என்னிடத்தில்லை.

யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல் என்னும் உரையின் இறுதியில் நான் பாரதியை மேற்கோள் காட்டிப் பேசிய அந்தப் பகுதியை இங்கும் அப்படியே எடுத்துக்கூற விரும்புகிறேன். பேசாப் பொருளைப் பேசுவதில் பல சிரமங்கள் உள்ளன. அதுபற்றிப் பின்னர் கூறுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் நான் கூறவிரும்புவது நான் பயில்வினால் ஒரு சமூகவிய லாளன் அல்லன் என்பதையே. ஆனால் எனக்கு மானிடவியலில் நிறைய ஈடுபாடு உண்டு. மார்க்சியம் எனது கருத்து நிலையின் தளம். இவற்றின் பின்புலத்தில் தமிழியலில் வருவன சிலவற்றை பகுப்பாய்வு செய்துள்ளேன். சமூகவியலின் வளர்ச்சியிலேயே மார்க்சியத்திற்கு ஒரு முக்கியமான இடம் உண்டு. மார்க்சியம் கூறும் சமூக வரலாறு உண்மை யில் ''வரலாற்றுச் சமூகவியலினுள்'' (Historical Sociology) வருவது தான். மனித வளர்ச்சியை, வரலாற்றை, சமூக இயக்கத்தை நாம் மனிதர்களாக (தனித்தனி மனிதர்களாக) இருக்கும் அதேவேளையில், ஒட்டுமொத்தமான ஒருவிடயப் பொருளாகவும் பார்க்கும் ஆற்றலை மார்க்சியம் தருகிறது. இன்னும் மூன்று காரணங்கள் உள்ளன. ஒன்று, இலங்கையின் மிக முக்கிய அரசியல் விஞ்ஞானிகளோடும் சமூக வியலாளர் சிலரோடும் புலமை ஊடாட்டம் கொள்ளும் வாய்ப்பு எனக் குக் கிட்டியிருந்தது. இரண்டு, இச்சமூகத்தை மிக உன்னிப்பாக அவதானித்துச் செயற்பட வேண்டிய ஒரு பெரும் பணியின் மிகச் சிறிய ஒருபாகம், நான் 1986 முதல் 1996 வரை சார்ந்திருந்த புனர்வாழ்வு நிறுவனத்திற்கு இருந்தது (TRRO). குறிப்பாக உள்ளூர்ப் புலப் பெயர்வு கள் மூலம் நாங்கள் அறிந்தவை அநேகம். மூன்றாவது, மேலானது என்று தம்மைக் கூறிக்கொள்ளும் சாதிக் குழுமத்துக்கும், கீழானவையாக ஒதுக்கப்பட்ட சாதிக் குழுமங்களுக்கும் இடைப்பட்ட சாதிக் குழும மொன்றில் நான் பிறந்தவன். சிறுபிராயத்தில் அந்தச் சூழலில் வளர்ந் தவன். இது எனக்கு அக இடர்ப்பாடுகள் இன்றி யாழ்ப்பாணத்தின் சாதி, சமூகங்களைப் பார்ப்பதற்கான ஒரு மனோதிடத்தை தந்துள்ளது. எவரும் எதுவும் வரலாற்று வெற்றிடங்களிலிருந்து தோன்றுவதில்லை.

சமூக இயக்கத்தின் ஆழ அகலங்களைக் காண விரும்பும் கருத்து நிலைத் தூண்டலே இக்கட்டுரைகளுக்கான புலமைத்தளமாகும். இந்தத் தொகுதியிலுள்ள மிகமுக்கிய குறைபாடுகளிலொன்று யாழ்ப்பாணச் சமூகத்தின் அடிநிலைச் சாதிகள் இயங்கும் முறைமையையும் மேல் நிலைப்படும் முறைமையினையும் பற்றி நான் எழுதியவை சில இங்கு சேர்க்கப்படாது உள்ளமையே. குறிப்பாக வதிரி தேவரையாளிச் சமூகம் பற்றிய என்னுடைய சிறுபதிகைகள் இதில் சேர்க்கப்பட்டிருப்பின் நான் மேலும் சந்தோஷப்பட்டிருப்பேன். அக்கட்டுரைகளின் பிரதிகளை இப்பொழுது பெற்றுக் கொள்வது முடியாதுள்ளது.

இவற்றை நான் எழுத வேண்டியதற்கான காரணம் எழுத வேண் டியவர்கள் இவைபற்றி எழுதாமல் விட்டமையே. சமூகவியலாளர் களுக்குச் சாதிகளின் அமைப்பு முறைமை (Caste as a System)யை எழுதக் கூச்சம். வரலாற்றாய்வாளர்கள் (அ) நவீன காலத்திற்கே வருவ தில்லை. (ஆ) வந்தவர்களும், சமூகப் பரிமாணங்கள் பற்றி விரிக்க வில்லை. கைலாசபதியும் நானும் இலக்கியத்திலிருந்து வரலாற்றுக்கும் சென்றதற்கான காரணங்களில் இதுவுமொன்று. இன்னுமொன்று, அது முக்கியமானது எங்கள் இலக்கிய வரலாற்றுக்கு, சமூக வரலாறுதான் தளம். அதுதான் ஜீவசுருதி. எழுத்துக்கள் சமூகத் தேவைகளுக்கும் எழுது பவரின் ஆளுமைகளுக்குமேற்ப பின்னிப் பிணைந்து வருகின்றன.

யாழ்ப்பாணத்தின் நவீனகால வரலாறு பற்றிய ஆய்வுக் குறை வினை இங்கு சற்று வலியுறுத்த வேண்டுவது அவசியமாகிறது. ஹண்டி பேரின்பநாயகம் பற்றிய சீலன்கதிர்காமரின் தொகுப்பையும், காலஞ் சென்ற அருமைநாயகத்தின் ஓரளவு மறைக்கப்பட்டுப்போன 19ஆம் நூற்றாண்டின் யாழ்ப்பாண வரலாறு பற்றிய கட்டுரையையும் தவிர முக்கிய ஆய்வுகள் எதுவும் இதுவரை பிரசுரிக்கப்படவில்லை என்றே கூறவேண்டும். யாழ்ப்பாணத்தின் சமூக வரலாற்றில் நடந்த சாதி எதிர்ப்புப் போராட்டங்கள் பற்றிய வரலாறு பூர்வமான தகவல்கள் மறைக்கப்படுகின்றன. வெளிவந்தவையும் பூரண ஆய்வுகளல்ல. இத் துறையில் ஈடுபட்டுள்ள பிறநாட்டறிஞர்களின் தொகையும் குறைவு. மாவிட்டபுரம் கோவில் நுழைவுப் போராட்டம் பற்றி ஃபாபன் பேகரு டைய நல்ல கட்டுரையொன்று ''ஜேணல் ஒஃப் ஏஷியன் ஸ்ரடீஸ்'' இல் வெளிவந்தது. யாழ்ப்பாணச் சமூகத்தின் வாழ்வியற் பண்பாடு பற்றிச் சித்தார்த்தன் பேரின்பநாயகம் சில சமூகவியற் பதிவுகளைச் செய்துள் ளார் (The Karmic Theatre). இதைவிட யாழ்ப்பாணத்தின் மாறும் சமூக அமைப்பைக் கணிப்பிடும் புலமை நிலைப்பட்ட ஆய்வுகள் அதிகம் இல்லை. யாழ்ப்பாணச் சமூகத்தை ஆராய்ந்துள்ள சமூக மானிட வியலாளர்களுள் முக்கியமானவர்கள் பிறைஸ் றயான், கெனத் டேவிட், ஃபாபன் பேகர், ஷொன் போர்க் முதலியோர் ஆவர். பொருளியல் பற்றி பாலகிருஷ்ணன், நித்தியானந்தனுடைய கட்டுரைகளைத் தவிர, பிற கட்டுரைகள் பெரும்பாலும் அரசியற் பொருளாதாரத்தைத் (Political economy) தவிர்ப்பவையே.

1983 / 84க்குப் பிந்திய ஈழத்துத் தமிழின் நிலை பற்றிய எழுத்துக் களிற் கூட போதாமை உண்டு. 1995ம் வருடத்து இடப்பெயர்வு பற்றிய ஒரு விரிவான நூலுண்டு (குகபாலன் - 1998).

சுருக்கமாகச் சொன்னால் மற்றைய சமூகங்கள் பற்றி அறிவதற்கு நாம் மேற்கொண்ட உலகப் பொதுவான அணுகுமுறைகளின் அடிப் படையில் நம் சமூகத்தை -யாழ்ப்பாணச் சமூகத்தைப்- பார்க்கத் தயங்கு கிறோம். அந்த அளவில் இது ஒற்றைக் கண்ணன் ராஜாவாக இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைதான். நான் கேட்பதெல்லாம் இரண்டு கண்ணுமுள்ள ராஜாக்கள் தயவு செய்து வாருங்கள். வந்து புலமை நெறி நின்று, காய்தல் உவத்தலின்றி எழுதுங்கள்.

நம்மிடையே இன்னுமொரு சிக்கலுண்டு. நமது சமூகத்திலுள்ள நாமே அதிகம் ஏற்றுக் கொள்ள விரும்பாத அதன் இயல்புகளை - அம்சங்களை மற்றவருக்குச் சொல்லக் கூடாதென்கின்ற கொள்கையை நாம் கடைப்பிடிக்கிறோம். வெளிநாடொன்றில் யாழ்ப்பாணம் பற்றிய கருத்தரங்கு ஒன்றில் நான் பேசி முடிந்ததும் ஒரு இளம் நண்பர் வந்து ''இவற்றையெல்லாம் ஏன் சேர் சொல்லுகிறீர்கள்!'' என்று கேட்டார். இந்தப் புலமைத் தயக்கம் ஒன்று உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். துரதிர்ஷ்டவசமாக எஸ்.ஜே. தம்பையா போன்ற பிரபல சமூக மானிடவியலாளர் எம்மிடையே இல்லை. அவரும் கூட, இரண்டொரு விடயங்களில் தவிர, யாழ்ப்பாண சமூகம் பற்றி எழுதவில்லை. "

இன்னுமொரு சுவாரசியமான உண்மை சிங்களப் புலமையாளர்களிடையே காணப்படுகின்ற சமூக மானிடவியல், சமூகவியல், அரசறிவியல் ஈடுபாடு நம்மிடையே மிகக் குறைவு. (பேராசிரியர் சிவராஜா ஒரு இனிமையான புறநடை. ஆனால் நாம் அவரிடமிருந்து இன்னும் நிறைய எதிர்பார்க்கிறோம்.)

அந்த வகையில் நமது சமூகம் இன்னும் 'மூடப் பெற்ற' சமூகமாகவே உள்ளது. 1974 - 1994 காலப்பகுதியில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களின் அளவுகளுக்கும் கனதிக்கும் இணையான சமூக மாற்றம் ஏற்படவில்லை. அகதி முகாம்கள் பலவற்றில் ஏற்பட்ட சமூகப் பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்தவன் என்ற வகையில் நான் இதனை வலியுறுத்தியே கூறலாம். மேலும் போராட்ட காலத்தில் ஏற்பட்டுள்ள எத்தனையோ மாறுதல்கள் போராட்டம் நின்றபின்னர் எந்த அளவுக்குத் தக்கவைக்கப்படும் எனும் வினாவை எனது தமிழரல்லாத ஆய்வாள நண்பர்கள் கேட்கிறார்கள். இது உண்மையில் கேள்விக்குரியதே.

இது நான் அடுத்துச் சொல்ல விரும்புவதற்கு நல்ல வாயிலாக அமைகிறது. அதாவது நமது சமூகம் பற்றியும் அதன் அசைவியக்கம் பற்றியும் நிலவுகின்ற விஞ்ஞானபூர்வமான அறிவுப் போதாமை பல சிக்கல்களுக்குள் எங்களை மாட்டியுள்ளது.

யாழ்ப்பாணச் சமூகம் படித்தவர்களைக் கொண்டது என்பது ஒரு பொதுவான எடுகோள். ஆனால் எமது சமூகம் பற்றிய விடயங்களில் நாம் திறந்த, கட்டற்ற ஒரு கலந்துரையாடலுக்கு (Open Discussion) பழக்கப்பட்டிருக்கிறோமா என்பது பிரதானமான கேள்வி.



புலமை நிலைப்பட்ட ஒரு ''திறந்த'' சொல்லாடலை நோக்கியே இந்தக் கட்டுரைத் தொகுதி பிரசுர வடிவம் பெறுகின்றது.

இந்தத் திறந்த சொல்லாடல் இல்லாததால் யாழ்ப்பாணச் சமூகம் அநுபவித்துள்ள இன்னல்கள் பல என்பதை நாம் இன்னும் தான் உணரவில்லை.

இதற்குப் புலமை நிலைப்பட்ட, சமூகவியல், வரலாறு, வழிவரும் காரணங்கள் உண்டு.

முதலாவது இச் சமூக அமைப்பின் படிநிலை அடுக்கமைவுப் (hierarchy) பண்பு காரணமாக, சமூக அதிகாரங்களை நாங்கள் இழக்கத் தயாராக வில்லை. நமக்குக் கீழே உள்ளவர்களை அடக்கி வைத்திருப்பதன் மூலம் நமது 'உயர்' நிலையைத் தக்கவைத்துக் கொள்ள எண்ணுகிறோம்.

நமது அடையாளங்களை குடும்பம், சாதி என்ற மட்டங்களிற் பேணிக் கொள்கிறோம். இவை தவிர்க்க முடியாதவை என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

இதில் வரும் கட்டுரைகளுள் ஒன்றான ''யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல்'' எனும் கட்டுரை எனக்குப் பல சிக்கல்களை ஏற்படுத்திற்று.

சேர்.பொன்.இராமநாதனைப் பற்றி நான் கூறிய கருத்துக்களுக்காக இராமநாதனின் பெயர் கொண்ட நிறுவனத்துக்கு நான் தொடர்ந்து தலைமை தாங்கக் கூடாதென்பதற்காக அன்றிருந்த துணைவேந்தரிடம் பேராசிரியர் இருவரைக் கொண்ட ஒரு இரகசியக் குழு தூது போனது என்பது இந்த வருடம் தான் (1999) எனக்குத் தெரியவந்தது. சேர். பொன்னம்பலம் இராமநாதனைப் பற்றிய ஒரு திறந்த கருத்தாடலை வைப்பதற்குப் பதிலாக திரைமறைவுக் காய்நகர்த்தல்கள் பல்கலைக் கழகத்திலேயே நடக்குமானால் அகதியாய்ச் சென்ற இடங்களில் போராட்டத்தையே திரித்துக் கூறுபவனை எவ்வாறு கண்டிக்க முடியும்?

ஒருபுறம் சமூகப்படிநிலை அடுக்கமைவு காரணமாகவும், இன்னொருபுறம் மிக நீண்டகாலமாக சுய அரசியல் அதிகாரம் இல்லாததாலும் நம்மிடையே காலனித்துவத்தின் தாக்கம் மிக அதிகமாகும்.

இவை காரணமாக வெளிப்படையாக சொல்வதிலும் பார்க்க, இரகசியமாக (திரைமறைவில்) சொல்வது நமது இயல்பாகிவிட்டது. 'குடும்பம்', 'பகுதி' என்ற மட்டங்களுக்கு மேல் நாம் அதிகம் செல்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பண்புகளினால் இந்தச் சமூகத்திலுள்ள சில இயல்பான நற்பண்புகள் சமூகப் புனருத்தாரணத்துக்கு, அதன் ஆக்கத்திற்குப் பயன்படாமற் போகின்றன. வறுமையிற் செம்மை, கடும் உழைப்பு, அயல் பற்றிய சிரத்தை, பொறுப்புணர்ச்சி ஆகிய பல குணங்கள் அக்குடும்பங்களுக்கே பயன்படாமல் போகின்ற நிலைமையை அவ தானிக்கிறோம். தான் தனது குடும்பம் என்ற சுயநல வரையறை அகதி நாடுகளுக்குச் செல்வதற்குப் பயன்படுகிறது. இந்த மண்ணிலிருந்து கிளம்பிய பண்புகள் இந்த மண்ணோடோயே நம்மைச் சேரவிடாது தடுக்கும் ஒரு அவலம் -சோகம்- நம்மிடை இன்று வளர்கிறது.

இந்த வேளையில் நாம் செய்ய வேண்டுவது நம்மைக் கண்ணாடி யில் பார்ப்பதுதான். அந்த நோக்கு கைப்படுவதற்கு இந்தச் சிறுநூல் ஒரு தொடக்கமாக அல்ல, தொடக்கத்துக்கான ஒரு ஆயத்த, தொண்டைச் செருமலாகத்தானும் அமைந்துவிட்டால் போதுமானது.

இந்த வேளையில் இதில் வரும் கட்டுரைகள் பலவற்றை நான் எழுதிய காலங்களில் நான் ஊடாடியவர்கள் பற்றி இங்குக் குறிப்பிடல் அவசியம். இக்கட்டுரைகளிற் பெரும்பாலானவை -ஒன்றைத் தவிர- எல் லாமே 80களில் எழுதப்பட்டவை. அதனால் கைலர்சபதியுடனான ஊடாட்டம் இருக்கவில்லை. பிரதானமாகக் குறிப்பிடப்பட வேண்டிய வர்கள் மூன்று நான்கு நிலைப்பட்டவர்கள். ஒரு நிலையில் குமாரி ஜெயவர்த்தனா, நியூட்டன் குணசிங்க, சார்ல்ஸ் அபேசேகர ஆகியோர் முக்கியமானவர்கள். இன்னொரு மட்டத்தில் பேராசிரியர்கள் பால கிருஷ்ணன், வி.நித்தியானந்தன் முக்கியமானவர்கள். இன்னொரு மட் டத்தில் தெணியான், டொமினிக்ஜீவா மிக முக்கியமானவர்கள். இன் னொரு மட்டத்தில் வி.பி.சிவநாதன், ஏ.ஜே.கனகரத்தினா, குழந்தை சண்முகலிங்கம், க.சண்முகலிங்கம், சி.மௌனகுரு ஆகியோர் எடுத்துக் கூறப்படவேண்டியவர்கள். இன்னொரு மட்டத்தில் தராகி சிவராம், மதுசூதனன் ஆகிய இருவரும் முக்கியமானவர்கள். க.குமரன் அற்புத மான ஊக்கி. சற்று ஆழமாகச் சிந்திக்கிற பொழுது இந்தத் துறையில் எனது சிந்திப்பின் அவசியத்தை வற்புறுத்திய நண்பர்கள் முருகையன், பொ.சிவஞானசுந்தரம், காலஞ்சென்ற ஏ.விசுவநாதன் ஆகியோரை என்னால் மறக்கமுடியவில்லை. நமது சமூகத்தைப் பற்றிய ஒரு விடயநோக்குப் பார்வையை எமக்குப் பாலில் நெய்யாகக் கலந்து ஊட்டியவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை. ஈழத்து வாழ்வும் வளமும் தொகுப்பில் வரும் சில கட்டுரைகளை பிரதியெடுத்த பெருமை எனக்கு உண்டு. அந்த நூலின் வெளியீட்டிலும் ஒரு பங்கு உண்டு. பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஒரு பெரும் சமுத்திரம் (வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்). இன்னும் சற்று அடிநிலைக்குப் போகிறபொழுது நான் வாழுகிற சமூகம் பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்திய எனது தகப்பன் வழிப் பேரனாரையும் (தகப்பனாரின் சித்தப்பா-வீரகத்தியார் தம்பர் சிதம்பரப்பிள்ளை), தாய்வழிப் பேத்தியையும் (பார்வதி) நினைவு கூர்கிறேன். இந்தக் கட்டுரைகளைத் தமிழில் எழுதுவதற்கான உந்துதல் ஆங்கிலத்தில் இத்தகைய கட்டுரைகளை எழுத வேண்டிய ஏற்பட்ட புலமை நிர்ப்பந்தமே. அதில் குமாரி ஜெயவர்த்தனாவின் பங்கு மிகப் பெரியது. இவர்கள் எல்லோருக்கும் எனது நன்றி உடையது.



இக்கட்டுரைகளுட் பெரும்பாலானவற்றையும் இந்த வாக்கு மூலத்தையும் படியெடுத்தவர் கி.பார்த்திராஜா என்ற சென்னைப் பல்கலைக்கழகத் தமிழிலக்கியத் துறை ஆராய்ச்சி மாணவன். ஒழுங் கமைதியான உற்சாகமான இளைஞன். அவருக்கு என் நன்றிகள் உரித்து. இந்த நூற்றாண்டின் இறுதியில் இந்தப் பதிகை வெளிவரு கிறது. அடுத்த நூற்றாண்டுக் கால எல்லைக்குள் எழுதப்படப் போகின்ற இவ்விடயம் பற்றிய நூல்களில் நமது வாரிசுகள் இதில் கூறப்படும் சிக்கல்களிலிருந்து விடுபட்டமைக்குச் சான்றாக மாத்திரம் இந்நூல் மேற்கோள் காட்டப்பட வேண்டும். பிரச்சினைகளின் தொடர்ச்சியைச் சுட்டுவதற்கன்று என்ற பேராவலுடன் யாழ்ப்பாணத்திலிருந்து கணிச மான அளவு தூரமுள்ள ஆனால் தொடர்புகள் பல உள்ள தமிழகத்தி லிருந்து இதனை நிறைவு செய்கின்றேன்.

யாழ்ப்பாணத்து நினைவுகளிலிருந்து வெளிவர முடியாதவனாய் வெளி வர விரும்பாதவனாய்.....

*கார்த்திகேசு சிவத்தம்பி*
சென்னை.
10.07.1999

பிற்குறிப்பு :

1999இல் இது அச்சேறவில்லை. 2000 சனவரியில் இந்த வாக்கு மூலத்தை (கொழும்பிலிருந்து கொண்டு) வாசிக்கும் பொழுது, யாழ்ப் பாணச் சமூகம் பற்றிய ''அதிக நம்பிக்கை தராத'' ஒரு சமூகத் தொனியே மேலோங்கி நிற்பது போலப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மனநிலையில் நூலை நிறைவு செய்வதன் புலமைப் பொருத் தப்பாட்டைப் பற்றி மீண்டும் மீண்டும் சிந்தித்தேன்.

இந்த இடத்திலேதான் தன் சொந்தச் சமூகத்தைப் பற்றிய ஆய்வினை மேற்கொள்பவருக்கும், அச்சமூகத்தை விளங்கமுனையும் ஒரு 'வெளி யாருக்கும்' உள்ள புலமைச்சமநிலை வேறுபாடு நன்கு புலனாகிறது.

இவ்வேளையில் ஒரு முக்கிய குறிப்பை இந்த ''வாக்கு மூல''த்திற் சேர்ப்பது அவசியமாவது தெரிகின்றது. (சட்டத்திலும் மீள் விசா ரணைக்கு இடமுண்டுதானே. உண்மையில் முந்திய வாக்குமூலத்தைத் தெளிவு செய்ய அது அவசியமாகின்றது.)

1971இல் ''யார் இந்த யாழ்ப்பாணத்தான்'' என்ற கட்டுரையை மலையகச் சஞ்சிகையான அஞ்சலியில் எழுதிய பொழுதிருந்த யாழ்ப் பாணம் இப்பொழுது நிச்சயமாக இல்லை. (ஆனால் அந்தக் கட்டுரை 1970களுக்கு முந்திய நிலையை நன்கு சுட்டுகின்றது.)

1971 - 2000ம் ஆண்டுக் காலத்தில் குறிப்பாக 1974 முதல் (1974 தமிழாராய்ச்சி மாநாட்டில் நடைபெற்ற வன்முறை மரணங்கள்) வரும் ஒரு கால்நூற்றாண்டு காலத்தில் யாழ்ப்பாணம் பெரிதும் மாறிவிட்டது.

1981இல் ஏறத்தாழ எட்டு லட்சத்து முப்பத்தோராயிரமாக இருந்த சனத்தொகை இப்பொழுது (2000) சுமார் 3 லட்சமாகவே இருக்கு மென்று கூறப்படுகிறது. குறிப்பாக 1984 முதல் ஏற்பட்ட இடப் பெயர் வுகள் காரணமாகப் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த இடப்பெயர்வு முதலில் திருகோணமலையிலிருந்து யாழ் மாவட்டத்துக்கும் (1983) முல்லைத்தீவுக்கும் நடைபெற்றது. 1984 முதல் 1988 வரை யாழ்ப்பாணத்துக்குள் பிரதானமாகக் கடற்கரைப் பிரதேசங்கள் பாதிக்கப்பட்டன. 1990 முதல் வலிகாமப் பிரதேசம், தீவுப்பகுதி ஆகியன பாதிக்கப்பட்டன. 1990 இலிருந்து நடந்த இடப்பெயர்வு ஒரு கிராமத் திலிருந்து இன்னொரு கிராமத்துக்கான இடப்பெயர்வாகவே அமைந்தது. காங்கேசன்துறை, மயிலிட்டி, மாதகல், வாசவிளான், தெல்லிப்பழை ஆகிய பகுதிகளிலிருந்து யாழ்.நகர்ப்புறத்தை நோக்கிய ஒரு பெயர்வு இருந்தது. ஏறத்தாழச் சுன்னாகம் தெற்கெல்லையானது.

இப்படித் தொடங்கியது 1995 இல் தென்மராட்சிக்கும் வன்னிக்கு மான பெரிய இடப்பெயர்வாகின்றது (பார்க்க: குகபாலன் -1998).

இந்த அகப்பெயர்வு நடந்த அதேவேளையில் பிறநாடுகளுக்குக் குடும்பம் குடும்பமாகப் பெயரும் ஒரு தன்மையும் காணப்பட்டது.



முதலில் இளைஞர்கள் சென்றனர். பின்னர் அவர்களுடைய உறவினர் சென்றனர். இவ்வாறாக கனடா, நோர்வே, சுவீடன், பிரான்ஸ், அவுஸ்தி ரேலியா எனப் பல நாடுகளுக்குச் சென்று குடியேறினர்.

இந்தக் குடிப்பெயர்வுகள் கணிசமான சமூக மாற்றங்களை ஏற் படுத்தியுள்ளன.

இப்பொழுது முன்னர் நிலவிய அளவுக்குச் சாதி ஒதுக்குமுறை இல்லை என்றாலும், ஒரே தரத்தினவான சாதிக்குழுமங்கள் இணைந்து வாழுகின்ற ஒரு நிலைமையைக் காணலாம்.

இவ்விடப் பெயர்வுகளுக்கு காரணமாகவுள்ள அரசியல், போர்ச் சூழல் காரணமாக இனத்துவ அடையாளம் மேலோங்கி நிற்பது கண் கூடு. தமிழர்களுக்குள்ளே நிலவும் அகவேற்றுமைகள் பற்றிச் சிந்திக் காது (யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு என்பன போன்ற, வடமராட்சி, தென்மராட்சி என்பன போன்ற, உயர்சாதி - தாழ்த்தப்பட்டவர் என்பன போன்ற வேற்றுமைகளின்றி) சகல தமிழர்களையும் (மலையகத் தமிழர் உட்பட) ஒரே நிலையில் வைத்து அரசு ஓரங்கட்டுவதனாலும், நிர்வாகப் பக்கச்சார்புகளும், தலைகுனிவுகளும் இனத்துவ இருப்பை வலியுறுத்து வதனாலும் தமிழர் என்ற அடையாளம் கொண்டே இம்மக்கள் தங்கள் அரசியல், சமூகப் பிரக்ஞையை விளங்கிக் கொள்கின்றனர். இத்தகைய நிலையில் அவ்வவ் குடும்பங்கள் மட்டத்தில், அவரவர் வாழும் சூழ் நிலைகளுக்கேற்ப, வர்க்க இணைவு ஒன்று ஏற்படுகிறது.

இது ஒரு புறமாக, நாடுகள் நிலைப்பட்ட புலப்பெயர்வில், பண் பாட்டொருமை காரணமாகவும் சமூக வேறுபாடுடையவர்கள் ஒன்றாக இணைகின்றனர்.

ஆனால் இதிலுள்ள பிரதான வினா யாதெனில், இந்த மாற்றங்கள் யாழ்ப்பாணத்தில் மிஞ்சியுள்ள (ஏறத்தாழ) மூன்று லட்சம் பேரிடத்தும் காணப்படுகின்றனவா? என்பதே.

இதற்கான பதில் ''இல்லை'' என்பதே ஆகும்.

ஆனால், உயர்வர்க்க நிலையில் சமஸ்கிருதமயவாக்கம் நிறைய நடைபெறுகின்றது. அடிநிலை மக்களின் வாழ்க்கையில் அதிக மாற்றங் கள் இல்லை.

அந்த அளவில் இந்தக் கட்டுரைகளுக்கு சமூக வரலாற்று முக்கியத் துவமளவு சமூகவியல் ஏற்புடைமையும் (இன்றுவரை) உண்டு என்றே கருதுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பற்றிய இக்கட்டுரைத் தொகுதியை யாருக்கு அர்ப்பணிப்பது என்பது ஒரு மனச்சிக்கலாகவிருந்தது.

இதனை நான் 1978 - 95 வரை கடமையாற்றிய (சொற்களின் ...... தன்மையைப் பாருங்கள் வெறும் கடமையாகவா அந்தப் பணிகளைக் கொண்டேன்; இல்லை, அவற்றுள் என் ஜீவன் இருந்தது) யாழ்.பல் கலைக்கழகத்துக்கே அர்ப்பணிக்க விரும்புகிறேன்.

அங்கு என் இருப்பு எல்லா வேளைகளிலும் இனியதாக இருக்க வில்லை. நான் கூறிய கருத்துக்களுக்காக ஓரங்கட்டப்பட்டேன். ஆனால் அதே நேரத்திற் சில புலமையாளர்களின் மதிப்பையும் பல மாணவர் களின் அன்பையும் பெற்றிருந்தேன் என்பது இப்பொழுது நான் இளைப் பாறிய நிலையிலே எனக்குத் தெரியவருகிறது. இது மனதுக்கு நிறைந்த திருப்தியைத் தருகிறது.

யாழ்.பல்கலைக்கழகம் நான் அவர்களுள் ஒருவனாக யாழ்ப்பாணத் திலிருந்த பொழுது சில இடர்ப்பாடுகளை ஏற்படுத்தியிருந்தாலும் (சில பெட்டிசங்கள் கூடச் சென்றன என்று ஒருவாரத்துக்கு முன்னர் கொழும் புக்கு வந்த ஒரு நண்பர் சொன்னார்) நான் யாழ்ப்பாணத்தை விட்டு வந்து, அங்கு மீண்டும் செல்ல உடல் நிலையில்லாததன் பின்னர் அப் பல்கலைக்கழகம் எனக்குப் பல கௌரவங்களைச் செய்தது. எனது சேவைக்குரிய ''தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரிய'த் தகைமையை மாத்திரமல்லாமல் ஒரு கௌரவப் பட்டத்தையும் தந்தது (1998). 1996 முதல் ஏற்கனவே நிழலருமை வெய்யிலிலே என்பதை உணர்ந்து கொண்டிருந்த எனக்கு இத்தகைமைகள் வருடிச் சிலிர்க்க வைத்தன. நான் அங்கு பதினெட்டு வருடகாலமாக கடமையாற்றிய பொழுது தரச்சிந்திக்காத ஓர் அழைப்பையும் விடுத்தது. 1998க்கான சேர்.பொன். இராமநாதன் நினைவுப் பேருரையை ஆற்றுமாறு என்னை அழைத்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்துக்கு என் நன்றியுரித்து. என் முன்னாள் சக ஆசிரியர்களுக்கும் என் அன்பு உரித்து. என் மாணவர் களுக்கு என் வாத்சல்யம் உரித்து.

மாணவர்களின் சிறப்பிலேயே ஆசிரியர் வாழுகின்றார்.

அந்தப் பெருமையைத் தந்த, தரும் என் மாணவர்களுக்கு என் சிரம் தாழ்ந்த வணக்கங்கள்.

1996 நவம்பர் முதல் 1998 செப்டம்பர் வரை யாழ்.பல்கலைக் கழத்தின் இசைவாலும், கிழக்குப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் அழைப்பாலும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றினேன்.



அது ஒரு தனி அநுபவம். ஈழத்தமிழின் பரப்பையும், பண்பாட்டுப் பன்முகப்பாட்டையும் அது உணர வைத்தது.

மட்டக்களப்புச் சமூகம் பற்றிய ஆய்வுகள் பலவுள்ளன. ஆனால் அப்பகுதி மக்களின் வாழ்வியற் பண்பாட்டை விளக்கும் ஆக்கங்கள் குறைவே.

கிழக்குப் பல்கலைக்கழகச் சேவையின் பின்னர், எனது சேவை முடிவுறும் தறுவாயில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வருகைப் பேராசிரியராக ஒரு வருடம் தொழிற்பட்டேன் (1998 நவம்பர் - 1999 நவம்பர்).

எனது உத்தியோக வாழ்வின் நிறைவைச் சுட்ட இந்தப் பரிணாமம் பெரிதும் உதவிற்று.

ஆனால் இவற்றுக்கெல்லாம் காரணம், யாழ்ப்பாண மண்ணில் என் கால்கள், வலுவுடன் நின்றமைதான்.

சடங்குகளுக்கான பொங்கல் முடிவுற்றதும் பானைக்கும் அடுப் புக்குமென்று ஒரு சிறிது பொங்கலை அகப்பையால் தட்டி விடுவார்கள்.

அந்தப் பவித்திர உணர்வோடு இந்தப் பின்னுரையை நிறைவு செய்கின்றேன். குமரன் புத்தக இல்லத்துக்கு என் நன்றியுரித்து.

*கார்த்திகேசு சிவத்தம்பி*
28.1.2000

2/7 றாம்ஸ்கேற்,
58, 37வது ஒழுங்கை,
வெள்ளவத்தை,
கொழும்பு -06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

பக்கம்

யார் இந்த யாழ்ப்பாணத்தான்? ........ 1

யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல் ........ 17

யாழ்ப்பாணத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும்
பற்றி விளங்கிக் கொள்வதற்கான ஓர் அறிமுகக் குறிப்பு ........ 55

யாழ்ப்பாண வரலாற்றுக் கருத்துநிலையின் அகற்சியை
வேண்டிநிற்கும் ஒரு பிரசுரம் ........ 73

யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு
- ஓர் இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டம் ........ 80

யாழ்ப்பாணத்தின், எழுதவிடப்படாத
கலை வரலாறு பற்றி.... ........ 108

யாழ்ப்பாணச் சமூகமும் இளைஞர் எழுச்சியும் ........ 125

யாழ்ப்பாணத்து இந்து மக்களிடையே
சமூக மேனிலைப்பாட்டு அசைவியக்கமும் வழிபாடும் ........ 133

தமிழ்ச் சைவப் பண்பாட்டிற்
செல்வச்சந்நிதியின் முக்கியத்துவம் ........ 146

கந்த புராணத்துக்குள் வராத முருகனுக்கு
ஒரு பெரிய புராணம் உருவாகின்றது ........ 152

யாழ்ப்பாணத்தில் 'தொடர்பும்' பண்பாடும் ........ 165

ஈழநாடும் அதன் தொடர்புநிலை வலுவும் ........ 190

பின்னிணைப்பு ........ 200
சமூக வரலாற்றுப் பின்புலத்தில் யாழ்ப்பாணச் சமூகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்த யாழ்ப்பாணத்தான்?

இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக வாழ்வில் ''யாழ்ப் பாணத்து மனிதன்' என்பவன், தனிப்பட்ட ஒரு கருத்துருவாக- கோட் பாடாகக் காணப்படுகின்றான். இலங்கையின் பிற மக்கட் குழுவினரி லிருந்து சுலபமாகப் பிரித்தறியக் கூடிய பண்புகளையும், குணநெறி களையும் கொண்டவனாக இவன் கருதப்படுகின்றான். இலங்கைத் தமிழரது சமீபகால அரசியல், சமூக வாழ்க்கை காரணமாக, இவனது தனித்துவத்தையும், மற்றவர்களினின்று பிரிநிலைப்பட்டு நிற்கும் பண்பையும் அழுத்திக் கூறும் பண்பு இப்பொழுது சிறிது குறைந்துள்ள தெனினும், 'பிரகிருதி'யாகவே இன்னும் உள்ளான் என்பதை எவரும் மறுக்க முடியாது. யாழ்ப்பாணத்து மனிதனின் கிடுகு(வேலி)த் திரை அவனை மற்றவர்களிடமிருந்து பிரித்து வைக்கின்றது என்ற குற்றச் சாட்டு இன்னும் முற்றாக நிராகரிக்கப்படவில்லை.

இந்த உண்மையை உணர்ந்து அந்த 'மனிதனை', சமூகப் பிராணியை அவன் இயற்கைச் சூழல் எனும் பின்னணியில் வைத்து ஆராய்வது முக்கியம். யாழ்ப்பாணத்து மனிதனை அறிய விரும்புபவர்களும் இம் முயற்சியிலிறங்க வேண்டுவது அத்தியாவசியமாகும். அரசியல்வாதி முதல் இலக்கிய ஆர்வலர் வரை யாவருக்கும் இப்பணி முக்கியமானதாகும்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக யாழ்ப்பாணத்து மனிதனின் வாழ்க்கை முழுவதையும் சமூகவியல், மனிதவியல் நெறிப்படி நோக்கிக் கண்ட ஆராய்ச்சிகள் மிகச் சிலவே. மனிதவியல் நெறி சார்ந்த ஓரிரு ஆராய்ச் சிகள் செய்யப்பட்டுள்ளனவெனினும், அவை பூரணமானவையன்று. உள்ளவைதானும் எல்லோரும் படித்தறியக்கூடிய அளவுக்குச் சுலப மாகப் பெறக் கூடியனவாக இல்லை. யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு விளங்கும் அரசியற் கட்சிகள் கூட இத்தகைய முயற்சியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. அத்தகைய ஆராய்ச்சிகள் அவ்வப் பயில் நெறிகட்கியையச் செய்யப்பட வேண்டியவை. (சிங்கள மக்களைப் பற்றி இத்தகைய ஆராய்ச்சிகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன.)

எனினும் ஒன்றும் வாய்ப்பாக இல்லையே என்பதற்காகத் தொடர்ந்து வாளாவிருக்காது இத்துறையில் சிந்தனை தூண்டப்பட வேண்டிய தன் அவசியத்தை வற்புறுத்தும் வகையில், பொதுப்படையாக, யாழ்ப்பாணத்து வாழ்க்கையின் சமூகவியற் பின்னணியைக் கோடிட்டுக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இச் சஞ்சிகையின் தேவைகட்கியையக் கருத்துக்கள் பொதுப்படையாகக் கூறப்படுகின்றனவெனினும், அவை சான்றுகளுடன் கூடியவையே.

இலங்கைத் தமிழர் எனும்பொழுது, இலங்கையில் வாழும் தமிழ் இனத்தவர் எல்லோரையுயும் - கிழக்கு மாகாணத்தில் வாழ்பவர்கள், மேற்கு, வடமேற்கு மாகாணங்களில் வாழ்பவர்கள், பிற மாகாணங்களில் வாழ்க்கை நடத்தும் தமிழர்கள் - குறிப்பிட வேண்டுமென்பது உண்மையெனினும், இந்நாட்டில் வாழ்கின்ற பெரும்பான்மையினத்தினராகிய சிங்கள மக்களைப் பொறுத்தமட்டில், இலங்கைத் தமிழர் என்ற கோட்பாடு இலங்கையின் வட்பாகத்தில் வாழும் தமிழர்களையே குறிப்பிடுகின்றது என்பது யாவரும் அறிந்த உண்மையே. இதன் காரணமாக கிழக்கு மாகாணத் தமிழரிடையே நிரந்தரமான ஒரு மனக் காழ்ப்பு உண்டென்பதும் உண்மையாகும். சிங்கள மக்களின் இக் கருத்து எத்துணை பொருத்தமானது என்பது பிரச்சினை அன்று; கருத்து இதுவே என்பது தான் முக்கியம்.

சிங்கள மக்கள், தாம் பெரும்பான்மையாக வசிக்கும் இடங்களிலுள்ள தமிழர்களைக் கொண்டே இக் கருத்தினைப் பெற்றுள்ளனர். இக்கருத்து இந்நூற்றாண்டின் மூன்றாம், நாலாம் சகாப்தம் முதல் நிலவி வருகின்றது. மொழியால், நடையுடை பாவனைகளால், முயற்சி நெறிகளால் வேறுபட்ட இத்தமிழரைச் சிங்கள மக்கள் சுலபமாக இனங்கண்டு கொண்டனர். சிங்கள மக்கள் அறிந்த யாழ்ப்பாணத்தார் இருதரப்பட்டவர்கள். ஒரு குழுவினர் சிங்களப் பிரதேசங்களில் வியாபாரம் செய்தவர்கள்; செய்பவர்கள் (இப்பொழுது இத் தொகை மிக மிக அருகியுள்ளது); மற்றையோர் அரசாங்க உத்தியோகத்தர்கள், உயர் நிலை அதிகாரிகளாக மாத்திரமல்லாது, பொதுமக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய நடுநிலை அதிகாரிகளாகவும் யாழ்ப்பாணத் தமிழர்கள், சிங்களப் பிரதேசங்களிற் கடமையாற்றி வந்தனர். சுகாதாரப்



பரிசோதகர், ஓவர்சியர், புகையிரத நிலைய அதிபர், தபாற்கந்தோர் அதிபர் போன்ற பதவிகள் வகித்து வந்தோர் பலர் பொதுசனத் தொடர்புடைய பதவிகளை வகித்து வந்தமையால், இவர்கள், கிராமப்புறச் சிங்கள மக்களிடையே அந்நிய அரசாங்கத்தின் பிரதிநிதிகள், ஆட்சியின் வீசுகரங்கள் என மதிக்கப்பட்டமை ஆச்சரியமான ஒன்றன்று. பதவி நிலை காரணமாக மாத்திரமல்லாது, பதவியை வகித்தவர்கள் தாம் அரசாங்கத்தின் கீழ்ப்படிவுள்ள ஊழியர்கள் என்ற எண்ணங் காரணமாக தமது பதவி அதிகாரங்களைக் கையாண்ட முறையும், அவ்வதிகாரங்களால் தமது 'சொந்த' நிலையை முன்னேற்றிக் கொண்ட முறையும் இவர்களை மேலும் அம் மக்களிடமிருந்து அகலப் பிரித்திருந்தது. யாவற்றுக்கும் சிகரமாக அமைந்தது இவ்வுத்தியோகத்தர்கள், வியாபாரிகளின் பண்பாட்டு வேறுபாடே. தாம் தொழிலாற்றும் பிரதேசம் வாழ்க்கையுடன் இணைந்து செல்ல முடியாத அளவுக்கு மொழி, மதம், கண்ணோட்டங்கள் இவர்களைப் பராதீனப்படுத்தி வைத்திருந்தன. இவற்றால் அடிநிலைச் சிங்கள மக்கள் இவர்களை எப்பொழுதும் தம்மிலிருந்து வேறுபட்டவர்களாகவே கருதினர். இவை காரணமாக, இவர்கள் தங்கள் நலனில் ஆர்வமுடையவர்களல்லர் என்ற கருத்து அவர்களிடையே வேர்விட்டு வளர்ந்தது.

மத்திய நிலைச் சிங்கள மக்களைப் பொறுத்தமட்டில், யாழ்ப்பாணத் தமிழரைப் பற்றிய கருத்துப் பதிவுக்கு காரணமாக இருந்தவர்கள் அரசாங்க உத்தியோகத்திலிருந்த தமிழர்களே. இந்நிலையில் ஆங்கில மொழி ஓரளவு பாலம் அமைக்கும் தொடர்பாக இருந்ததெனினும், முன்கூறிய பண்பாட்டு வேறுபாடு யாழ்ப்பாணத்தவர்கட்குரிய ஒதுங்கு நிலை வாழ்க்கையும் அவர்களை நீருள் எண்ணெய் போன்று பிரித்துக் காட்டியது. 1930, 1940ம் தசாப்தங்களில் இவ்வுணர்வு வேறுபாடு இருந்த அளவு நிலையினை லனறோல் எழுதிய 'அவர் யாழ்ப்பாணத்திலிருந்து வருகிறார்' (He Comes from Jaffna), 'செனற்றர்' முதலிய நாடகங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆங்கில ஆட்சியில் உத்தியோகம் பெறுவதற்கு வேண்டிய ஆங்கிலக் கல்வி வசதி யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு நன்கு வாய்த்திருந்தமையால் தமிழர்களைப் பற்றிய ஒரு விரோத உணர்வு அக்காலத்தில் இலைமறை காயாக நிலவி வந்தது. இனவாரிப் பிரதிநிதித்துவ வழி வளர்ந்து வந்த சனநாயகக் கட்சி முறை மத்தியதர நிலையில் சிங்கள மக்கள் தமிழ் மக்களைப் பிரித்து நோக்கும் பண்பையும் இறுதியில் இனவாதக் கோஷத்தையும் வளர்த்தது. ஆங்கிலக் கோமாற்கோ தாமென்றும் மீளாவாளாய் அவர்தம் கொய்மலர்ச் சேவடியினை குறுகி நின்று கொண்டு, அந்தப் பலத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் யார்க்கும் குடியல்லோம், சிங்கள மக்களை அஞ்சோம் என்ற ஏகாதிபத்திய தாசானுதாச நோக்கு தமிழ் உத்தியோகத்தர்களை சிங்கள வரிடமிருந்து பிரித்தது. சுதந்திரத்திற்கு சிறிது முற்பட்ட காலத்தில் எழுப்பப்பெற்ற 'ஐம்பதுக்கைம்பது' கோஷம், சுதந்திர இலங்கையில் சிங்கள மக்கள், தமிழர் - யாழ்ப்பாணத்தார் - பாற் கொண்ட நோக்குக்கு அடித்தளமமைத்தது. சிங்கள மக்கள் தமிழரின் அரசியல் நோக்கினை நன்கு விளங்காமலிருந்திருக்கலாம். ஆனால் ஆங்கிலமறியாத சிங்கள மக்களுக்கு எமது நிலையை நாமும் என்றும் விளக்கவில்லை. அரை நூற்றாண்டு காலமாக இனவாரி அரசியலுக்குப் பழக்கப்பட்ட மத்தியதர வர்க்கத்தினர், இனக் கோஷங்களையே அரசியற் கோரிக்கைகளாக் கினர். ஐம்பதுக்கைம்பது போய்த் தமிழரசாயிற்று. அவர்களிடையேயும் அது தனிச் சிங்களக் கோரிக்கையாயிற்று. சுதந்திரத்திற்குப் பின்வந்த தேசிய எழுச்சிகளின் அடிப்படை உண்மையை உணராது ஏகாதிபத்திய காலத்துக்கேற்ற சலுகைகளை நாம் வலியுறுத்த வலியுறுத்தச் சிங்கள மக்களிடையே, நாம் என்றென்றுமே பிறத்தியார்தான் என்ற எண்ணம் வளர்ந்தது. முந்திய காலத்தில் நிலவி வந்த பண்பாட்டு வேறுபாட் டுணர்வு, இந்த அரசியல் வேறுபாட்டு உணர்வுடன் சங்கமித்து இனப் பிரிவினை வாதத்துக்கு இடமளித்தது. சிங்கள மக்களின் நோக்கில், தமிழர்கள் சிங்களவருக்குரிய நாட்டை அவர்களிடமிருந்து பறித்துக் கொள்ள முயலுபவர்களாயினர். தென்னிந்தியாவின் அண்மையும் மொழியொருமையும் இப்பயத்தை அதிகரித்தது. யாழ்ப்பாணம் என்பது எங்கோ தூரத்தேயுள்ள இடமென்ற எண்ணம் படித்த சிங்கள மக்களி டையே கூட நிலவுவதை இன்றும் காணலாம்.

மொத்தப் பயனாகச் சிங்கள மக்கள் யாழ்ப்பாணத் தமிழரிலிருந்து பராதீனப்பட்ட நிலையினையடைந்தனர். அடிநிலைச் சமுதாய அமைப் பில், பண்பாட்டு நோக்கில், பல ஒற்றுமைகளிலிருந்தும் இவ்வேறுபாட் டுணர்வு வளர்ந்தது. சுருக்கமாகக் கூறின், சிங்கள மக்களிடத்தே யாழ்ப்பாணத்தாரைப் பற்றி அரசியற் சந்தேகமும், குணநல ஒதுங்கு நிலையும் காணப்படுகின்றது.

சிங்கள மக்களின் நிலை இவ்வாறிருக்க இந்நாட்டில் உள்ள யாழ்ப்பாணத்தாரல்லாத பிற தமிழ் பேசும்இனத்தினரின் நிலையை ஆராய்வோம். இவர்களுள் முஸ்லிம்கள் முக்கியமானோர். இலங்கை முஸ்லிம்கள் மொழியால் ஒற்றுமைப்பட்டவர்களெனினும் மதத்தால், பண்பாட்டால் வேறுபட்டவர்கள். கிழக்கு மாகாணம், தென் மாகாணம், மத்திய மாகாணம், மேல் மாகாணம் ஆகிய இடங்களிலே இவர்கள்



பெரும்பான்மையாகக் காணப்படுகின்றனர். வடக்கில் மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் குறிப்பிடத்தக்க முஸ்லிம் சனத்தொகையுண்டு. முஸ்லிம்கள் இவ்வாறு பரவலாகக் காணப்பட்டாலும், தென்மேல் மத்திய மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களே இந்நாட்டின் முஸ்லிம் வெகுசன அபிப்பிராயத்தை உருவாக்குபவர்களாகவும் வெளியிடுபவர் களாகவும் காணப்படுகின்றனர். இம் முப்பெரும் பிரிவுகளில் வாழும் முஸ்லிம்களுடன் தொடர்பு கொண்டுள்ளவர்கள் பெரும்பான்மை யாழ்ப்பாணத் தமிழாசிரியர்களே. முஸ்லிம் பிள்ளைகளை முஸ்லிம் ஆசிரியர்களே பயிற்ற வேண்டுமென்ற கோஷத்தின் காரணமாக இவர்கள் தமிழாசிரியர்களை... 'யாழ்ப்பாணத்து மாஸ்டர்மாரை' படிப்படி யாகத் தம் பகுதிகளில் குறைக்க வேண்டுமென்றனர். தங்களுக்குரிய கல்வி வசதிகள்பெருக்கப்பட்டுத் தாமும் அரசாங்க உத்தியோகங்களில் அமர வேண்டுமெனக் கோரினர். அவர்களிடத்தும் வளர்ந்து வரும் மத்தியதர வர்க்கத்தினரே இக் கோஷங்களைக் கிளப்பினர். தங்கள் பகுதிகளில் கடமையாற்றிய ஆசிரியர்களை பதச்சோறாக வைத்து இவர்கள் யாழ்ப்பாணத்தவரை மதிப்பிட்டனர். பல ஆசிரியர்களது சேவைகள் நன்கு மதிக்கப்பட்டனவெனினும், பொதுவில் இவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள் தம் முன்னேற்றத்துக்குத் தடையானவர்க ளென்றே கருதத் தொடங்கினார்கள். இக் கருத்து சரியானதா என்பது பற்றி நாம் இங்கு ஆராய வேண்டியதில்லை. அத்தகைய கருத்து நிலவிற்று என்பதை அறிந்து கொள்வதுதான் முக்கியம். பண்பாட்டு வேறுபாடு, ஒதுக்கல் நிலைவாழ்வு, முஸ்லிம்களின் தமிழ்த் தரம் பற்றிய யாழ்ப்பாணத்து மாஸ்டர்மாரின் கருத்து முதலியன இதற்குக் காரணமாக அமைந்தன. சரியோ பிழையோ முஸ்லிம் மக்களின் இக்கருத்துக்கு அரசியற் காரணங்களும் உள. எவ்வாறாயினும் எண்ணிய கருத்து உண்மையென்பதை மறுத்துவிட முடியாது.

தமிழ் பேசும் மக்களிற் பண்பாட்டில் வேறுபட்ட குழுவினரின் கருத்து இவ்வாறிருக்க தமிழினத்தவர் என்ற வரைவிலக்கணத்துள் வரும் பிற தமிழர்கள் யாழ்ப்பாணத்தவரைப் பற்றி என்ன நினைக் கிறார்கள் என்பதைப் பார்ப்போம். இத்தகைய பிரிவினருள் முதலில் இடம்பெற வேண்டியவர்கள் மலையகத்துத் தமிழராகிய தோட்டப் பகுதியினர். இவர்களுடன் தொடர்பு கொண்ட யாழ்ப்பாணத்தவருள் முக்கியமானவர்கள் தோட்டப் பாடசாலை ஆசிரியர்களும், தோட்டங் களிற் கடமையாற்றுபவர்களுமே. அங்கொருவர் இங்கொருவராகச் சில யாழ்ப்பாணத்தவர்கள் தோட்டத் துரையாகவோ 'சின்னத் துரை'யா கவோ இருக்கின்றார்களெனினும், வணிக விவசாயத்தின் வர்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை காரணமாக அவர்களது வாழ்க்கை தோட்டத் தொழிலாளர் களது அன்றாட வாழ்க்கைக்கு அப்பாற்பட்டதாகவே இருக்கின்றது. தொழிலாளரது வாழ்க்கையுடன் இணைந்து காணப்படும் யாழ்ப் பாணத்தார் பாடசாலை ஆசிரியர்தான். தோட்டப் பகுதியினர் தமது ஆசிரியரின் தன்மை, நோக்கம் பற்றி எத்தகைய மதிப்பீட்டினை வைத்திருக்கிறார்களென்பதை அஞ்சலியில் வெளிவந்து கொண்டி ருக்கும் 'மாறுதல்கள்' எனும் தொடர்கதையில் வரும் குறிப்பொன்று துலக்கமாக வெளிக்காட்டுகின்றது. 'ஒரு நூறு நூற்றைம்பதாவது (பிள்ளைகள்) வந்தால், இதை ட்றிபள் செஷனாக்கி இன்ஸ்பெக்டரை 'றெக்கமண்ட்' பண்ணச் சொல்லி எலிமண்டறி ஸ்கூல் லீவிங் சேடிபிக் கட்டுடன் இருக்கும் மனுஷியை பிடித்துப் போடலாம், என்று ஆசிரியர் அங்கலாய்த்துக் கொண்டு கிடக்கும் பொழுது...' (அஞ்சலி, ஒகஸ்ட் 71 இதழ், பக்.11) ஆசிரியர் பாடசாலைக்குச் செய்ய முனையும் முன்னேற் றங்கள் எவ்வாறு சுய நோக்குடனிணைந்துள்ளன என்பதை இந்த மலையகத்து நாவலாசிரியர் நன்கு சித்திரிக்கின்றார். யாழ்ப்பாணத்தார் தம்முடைய நன்மைக்காகவே எதையும் செய்பவர்கள் என்ற எண்ணம் மலையகத்து மக்களிடையேயும் வேரோடியுள்ளது. அரசியற்றுறையிலும் யாழ்ப்பாணத்தார் தம்மைக் கைவிட்டு விட்டதாகவே மலையகத்து தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

இந்திய வமிசாவழியினரான தமிழர் இத்தகைய கருத்தைக் கொண் டிருக்க நிரந்தர இலங்கைத் தமிழ்ப் பிரசைகளான கிழக்கு மாகாணத் தமிழர்களுடைய நோக்கம் வேறுபாடுடையதன்று. கிழக்கு மாகாணத் தமிழர்கள் வடபகுதித் தமிழர்களுடன் அந்நியோந்நியப் பிணைப்புக் கொண்டவர்களல்லரென்பது ஊரறிந்த உண்மை. 'யாழ்ப்பாணிகள்' என்ற பதப் பிரயோகத்தின் உணர்ச்சிப் பகைப் புலத்தின் ஆழத்தை நாம் மறந்து விடக்கூடாது. இலங்கைத் தமிழர்கள் என்ற முறையில் தமக்குரிய சில உரிமைகள், சலுகைகளைத் தாம் அனுபவிக்க முடியாத அளவுக்குத் தம்மை யாழ்ப்பாணத்தவர் தள்ளி வைத்துள்ளனர் என்ற விரக்தியுணர்வு மட்டக்களப்புத் தமிழ் மக்கள் பலரிடையே காணப்படுவது உண்மை. 1956க்கு பின் இலங்கையின் அரசியலரங்கில் ஏற்பட்ட மாற்றங்கள் யாழ்ப்பாணத்தவரையும் கிழக்கு மாகாணத்தவரையும் இணைக்க உதவியுள்ளது, உண்மையெனினும் மேற்கூறிய கருத்துத் தொடர்ந்து நிலவுகின்றது என்பது பலர் வெளியே எடுத்துச் சொல்லவிரும்பாத உண்மையாகும். அரசாங்க ஊழியர்கள், வர்த்தகர்கள் முதலியோரே இப்பகுதி மக்களுடன் முக்கிய தொடர்பு கொண்ட யாழ்ப்பாணத்தவ ராவர். வடபகுதித் தமிழருக்கும் இப்பகுதிகளுக்கும் அரசியலில் ஒரு



மைப்பட்ட கருத்தில்லை என்பதைப் பொதுத்தேர்தல்கள் பலமுறை நன்கு எடுத்துக் காட்டியுள்ளன. இங்கும் நாம் யாழ்ப்பாணத்தார் பற்றிய கருத்தின் நியாய அநியாயங்களை ஆராய வேண்டியது இல்லை; கருத்து உள்ளது எனும் உண்மையே முக்கியமாகும்.

இவ்வாறு பார்க்கும் பொழுது வடபகுதியில் வாழும் தமிழர்கள் மாத்திரமே தனியோரு குழுவினராகக் கருதப்படுகின்றனர் என்ற எண்ணம் தோன்றலாம். ஆனால் நிலைமை அதுவன்று. வடபகுதி யிலுள்ள தமிழ் வன்னிப் பகுதிகளிலும் யாழ்ப்பாணத்தவருக்கெதிரான ஓர் உணர்வு உண்டு. வன்னிப்பகுதியின் வளத்தை யாழ்ப்பாணத் தவர்கள் சூறையாடுகின்றனர் என்றவொரு அபிப்பிராயம் அப்பகுதியில் நிலவுகின்றதென்பதும், அவ்வுணர்வைப் பயன்படுத்தி அங்கு வாழ் கின்ற யாழ்ப்பாண மக்களை அகற்றுவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டனவென்பதும் இன்று எம்மிற் பலர் குறிப்பிட விரும்பா உண்மையாகும்.

இவ்வாறு இலங்கையில் வாழும் ஒவ்வொரு பிரிவினரும் யாழ்ப் பாணத்தவரைக் குற்றஞ் சாட்டுகின்றனர். இவற்றுக்கிணையாக யாழ்ப்பாணத்தவர்களும் மேற்கூறிய பிரிவினர் ஒவ்வொருவருக்கெதி ராகவும் கூறும் குறைகள் உள்ளன. ஆனால் அவ்வப் பிரிவினரைப் பற்றி நாம் இங்கு ஆராயாததால் இவ்விடத்து நாம் அவற்றை எடுத்துக் கூறவோ ஆராயவோ வேண்டிய அவசியமில்லை.

ஆகவே, நாம் இப்பொழுது யாழ்ப்பாணக் குடாநாட்டுள் வந்து விடுகிறோம். குடாநாட்டில் வாழ்பவர்களே உண்மையான யாழ்ப் பாணத்தவர்கள் என்ற நிலையை எய்தி விடுகிறோம். இது உண்மை யான நிலைமையா என்பதை இனி ஆராய வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் தமிழர்களும், ஒரு சில முஸ்லிம் களும் வாழ்கின்றனர். இவர்களுள் முஸ்லிம்கள் உண்மையான 'யாழ்ப் பாணத் தமிழராக' யாழ்ப்பாணத்தவரால் ஏற்றுக் கொள்ளப்படுவ தில்லை. எனவே நாம் தமிழர்களைத் தான் எடுத்துக் கொள்ளல் வேண்டும். இந்த நிலையிலாவது ஒருமை உணர்வும், கூட்டுணர்வும் நிலவுகின்றதா என்பதைப் பார்த்தல் வேண்டும். இக்கட்டத்திற்றான் யாழ்ப்பாணத்தின் அகமுரண்பாடுகள் தென்படத் தொடங்குகின்றன. அதாவது சமயமும் சாதியும் இவ்விடத்திற்றான் முக்கிய பிரிவினைச் சக்திகளாக முகிழ்ந்து நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் கிறித்தவர்களை 'வேதக்காரர்' என்றும் சைவர்களைத் 'தமிழர்கள்' என்றும் குறிப்பிடும் மரபொன்றுண்டு. யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு பாகத்திலும் கிறித்தவர்கள் உள்ளனரெனினும், கிறித்தவர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்துக் கலாசார வாழ்வினின்றும் ஒதுக்கப்பட்டவர்களாகவே உள்ளனர். யாழ்ப்பாணத்துப் பெரும்பான்மை மக்கள் சைவ மதத்தவராதலால், மதம் மாற்றப்பட்டவர்களான கிறித்தவர்கள் சைவர்களினின்றும் ஒதுங்கி வாழுமாறு கிறித்தவ மத போதகர்களால் ஊக்கப்படுத்தப்பட்டு வந்தமை வரலாற்று உண்மையாகும். கிறித்தவர்களையும் றோமன் கத்தோலிக்க வேதத்தினர் எனவும் புரோட்டஸ்தாந்து வேதத்தினர் எனவும் வகுக்கலாம். இவர்களுள் பண்பாட்டொதுக்கம் கத்தோலிக்க வேதத்தினரிடையிலேயே பெரும்பாலும் காணப்படுகிறது. உயர் சாதியினருள்ளும் கத்தோலிக்கர் பலருள்ளனரெனினும் உயர் சாதியினரல்லாதவர்களும் தாழ்த்தப்பட்ட சாதியினருமே பெரும்பான்மையினர். மேற்குறிப்பிட்ட பண்பாட்டொதுக்கத்துக்கு இதுவும் ஒரு காரணமாகும். ஆயினும் அவர்களது மத உணர்வே இவ்வொதுக்க நிலைக்கு முக்கியமான காரணமாகும். யாழ்ப்பாணத்தில் மிக அண்மைக்காலம் வரை இம்மத ஒதுக்கீட்டுணர்வு அடிதடி சண்டை நிலையை எய்தி நின்றதென்பதும் வரலாற்றுண்மை. புரோட்டஸ்தாந்தப் பிரிவுகளுள் வருபவர்கள் பெரும்பான்மையும் உயர் சாதியினராகக் காணப்படுவது கண்கூடு. ஒல்லாந்த, ஆங்கில ஆட்சிக் காலங்களில் மதம் மாற்றப்பட்டவர்களாதலால் இவர்கள் பெரும்பாலும் உத்தியோகத்தினராகவே உள்ளனர். கம வாழ்க்கையை தனிப் பொருளாதார முயற்சியாக மேற்கொண்டுள்ள புரோட்டஸ்தாந்தினர் மிக மிகச் சிலரே. உண்மையில் அத்தகையதோர் இல்லையென்றே கூறலாம். இவர்களே யாழ்ப்பாண வாழ்க்கையில் 'மேனாட்டு நெறிமாற்ற முகவர்' களாக (Agents of Westernisation) விளங்கி வந்துள்ளனரென்று கூறலாம். இதன் காரணமாக இவர்கள் தேசிய வாழ்வுடன் இணையாதவர்களென்ற குற்றசாட்டு ஓரளவு நிலவி வருகின்றது. புரோட்டஸ்தாந்துக் கிறித்தவர்களும், றோமன் கத்தோலிக்கர்களும் தமது மதங்காரணமாக (இம் மதத்தினர் உத்தியோக இடங்களிலும் காணப்பட்டதால்), யாழ்ப்பாணத்துக்கு வெளியே, சிறப்பாகக் கொழும்பில் பிற மக்களுடன் -அதாவது தம்மதங்களை சார்ந்த பிற இனத்தினருடன்- இணைந்து வாழக்கூடியதாக இருந்தது. இதன் காரணமாக யாழ்ப்பாணத்துக் கிறித்தவர்கள் தாம் யாழ்ப்பாணத்துச் சைவ மக்களிலும் பார்க்க விரிந்த மனப்பான்மை உடையவர்கள் என்று கருதிக் கொள்வதுண்டு. உத்தியோகங் காரணமாக யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தின் தொடர்பற்றுப் போனவர்களின் தொகையை எடுத்தாராய்ந்தால் அத்தகையோருள் கிறித்தவர்களே அதிகமானோர் என்பது தெரியவரும். இத்தகைய பண்பியற் காரணங்களால் யாழ்ப்பாணத்தாருள்ளும் கிறித்தவர்கள் ஒதுங்கியும் ஒதுக்கப்பட்டுமே நிற்கின்றனர்.

மீதியாக உள்ளவர்கள் சைவ மக்களே. சைவ மக்கள் என்ற நிலையில் வைத்துப் பார்க்கும் பொழுது சாதி பேதம் முக்கிய இடம் வகிப்பதைப் பார்க்கின்றோம். சைமன்காசிச் செட்டி என்பவர் 1834-ல் தாம் வெளியிட்ட The castes, customs, Manners and Literature of the Tamils (தமிழரின் சாதி, சம்பிரதாயங்கள், இலக்கியம்) எனும் நூலில் ஏறத்தாழ 65-க்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ்ச் சாதிப் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் பல சாதிகள் இன்றைய கணக்கீட்டில் இடம்பெற முடியாதவை என்பதுண்மையே. சமூக அதிகார நிலையினைப் பொறுத்தமட்டில் யாழ்ப்பாணத்துச் சாதிக்குழுக்களை மூன்று பிரிவாக வகுக்கலாம்:-

(அ) உயர் சாதியினர்

(ஆ) உயர் சாதியல்லாதார்

(இ) குடிமக்கள்

உயர் சாதியினருள் இன்று முக்கிய இடம் பெறுவோர் வெள்ளாளரே. ஒல்லாந்தர் காலத்தில் அகம்படியார், மடப்பள்ளியார், வெள்ளாளர் முதலியோர் உயர்சாதியினராகக் கருதப்பட்டு வந்தனர். பிராமணர் மிக உயர் சாதியினரெனினும் யாழ்ப்பாணத்து வாழ்க்கையில் அதிகார மேன்மை உடையவர்கள் வெள்ளாளரே.

நட்டுவர், செட்டியார், சேணியர், கைக்கோலியர், தட்டார், கொல்லர், திமிலர், முக்குவர் முதலியோர் (இப்பட்டியல் பூரணமானதன்று) உயர் சாதியல்லாதோர் எனக் கருதப்படுகின்றனர். பொதுப்படையாகக் கூறினால், விவசாய வாழ்க்கையை மேற்கொள்ளாதவர்கள் இப்பிரிவினுட் கொண்டுவரப்பட்டனர் என்று கூறலாம்.

''கரையார்'' என அழைக்கப்பெறும் மீனவக் குடியினர் வெள்ளாளர்களால் தமக்குச் சமமானவர்களாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லையெனினும் , இவர்கள் சம அந்தஸ்துடையவர்களாகவே வாழ்ந்து வந்துள்ளனர் என்பது தெரிய வருகின்றது.

மூன்றாவதாக உள்ள குடிமக்கள் குழுவினர் யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பின் சிறப்பமிசமாவார். கோவியர், நளவர், பள்ளர், சாண





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார், சிவியார் என்போர் குடிமக்களென ஒல்லாந்தரால் கணக்கிடப் பட்டனர். இவர்கள் வெள்ளாளரின் விவசாய வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் அவர்களின் அடிநிலை மக்களாக நடத்தப்பட்டு வந்தனர். குடிமக்கள் என்போர் வெள்ளாள மக்களுக்குக் குடும்ப ஊழியம் செய்து வந்தார்கள்.

யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பின் பொதுப்படையான அதிகார வரன் முறை இதுவே. எனினும், இடத்துக்கிடம் காலத்துத்துக்குக் காலம் உயர்வு தாழ்வு நோக்க மாற்றமுற்றே வந்தது. இது உயர் சாதியின ரல்லாதோர் எனப்பட்டவர்கள் சம்பந்தமாகவே பெரும்பாலும் தொழிற் பட்டு வந்தது. எந்த நிலையிலும் அதிகார மேன்மையும் உயர்வும் வெள்ளாளரிடத்தேயே இருந்து வந்தது.

பிராமணர்கள் யாழ்ப்பாணச் சாதியமைப்பில் அதிகார மேன்மை யுடையவர்களாக இருக்கவில்லை. தமிழ் நாட்டின் சமூக அமைப்புக்கும் யாழ்ப்பாணத்துச் சாதியமைப்புக்கும் உள்ள முக்கிய வேறுபாடு இது வாகும். தமிழ் நாட்டைப் போன்று, யாழ்ப்பாணத்திற் பிராமணர் நிலச் சொந்தக்காரர்களாக விளங்கவில்லை. யாழ்ப்பாணத்துப் பிராமணர் பெரும்பாலும் புரோகித வாழ்க்கையை மேற்கொண்டிருந்தமையே இதற்குக் காரணமாகும்.

சாதியமைப்பின் முக்கிய அமிசங்கள் சாதிக்குள்ளேயே திருமணஞ் செய்து கொள்ளல், குறைந்தோர் எனக் கருதப்படுவோருடன் சம ஆசனம், சம போசனம் வைத்துக் கொள்ளாமை, அடிநிலைச் சாதியினர் எனக் கருதப்படுவோரை கோயில் முதலிய இடங்களுக்குள் புகவிடாமை என்பனவாகும். இவற்றுள் திருமணந் தவிர்ந்த மற்றையவை உண்மை யில் அந்தஸ்துச் சின்னங்களாகவே தொழிற்பட்டன.

யாழ்ப்பாணத்துப் பொருளாதார சமூக வாழ்க்கையில் வெள்ளாள மேலாண்மை யாழ்ப்பாண வரலாற்றின் ஆரம்ப காலம் தொட்டே காணப்படும் ஒரு பண்பாகும். யாழ்ப்பாணத்தில் எவ்வாறு குடியேற்றம் நடந்தது என்பதைக் கட்டுக்கதை உருவில் தெரிவிக்கும் இலக்கியச் சான்றுகளை (யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்கள்) ஆராயும் பொழுது, யாழ்ப்பாணத்தில் முதன் முதலிற் குடியேறிவர்களுள் அதிகார நிலையிலிருந்தோர் விவசாய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தவர் களே என்பது தெரியவரும். யாழ்ப்பாண அரசுக் காலத்திலும் இவர்களே பிரதேசப் பொறுப்பதிகாரிகளாகக் கடமையாற்றி வந்தனர் என்பது தெரியவரும். அந்நியராட்சிக் காலத்திலும் இவர்கள் அந்நியனைப் பேணிவந்தனர் என்பதும் அவ்வதிகார நிலையை விட்டுக் கொடுக்காது



காலத்திற்கேற்றவாறு தமது கட்டுப்பாட்டதிகாரத்தைத் தம் கைகளி னுள்ளேயே வைத்திருந்தனர் என்பதும் தெரியவரும். போத்துக்கேயர் காலத்தில் ஒரு சிறிது மாறிற்றெனினும் இது பொதுப்படையான ஓர் உண்மையாகும்.

இவ்வரலாற்றுப் பண்பு காரணமாக, யாழ்ப்பாணத்து வரலாற்றைப் பின்னோக்காகப் பார்க்கும் சிலர் 'வெள்ளாளர் மேலாண்மைக் கோட் பாட்டினை' (The Theory of Vellala Domination) எடுத்துரைப்பர். போத்துக்கேய ஒல்லாந்த ஆட்சியாவணங்களை ஆராயும் பொழுது இவ்வுண்மை நன்கு புலனாகின்றது. ஒல்லரந்தர் கால யாழ்ப்பாண ஆட்சி முறையை நன்கு எடுத்துக் காட்டுவதாக அமையும் சுவார்டெக் குறூன் நினைவேட்டில் (Memoir Left by Hendrick Zwaardracoon (1697) Colombo, 1911) இப்பிரச்சினை பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில், வெள்ளாளர் மற்றைய சாதியினரை அடக்கி வந்தவர் என்றும் தாழ்ந்த சாதியினர் தமக்கெதிராக முறைப் பாடுகள் சமர்ப்பிக்க முடியாத வண்ணம் அடக்கி வைத்திருந்தன ரென்றும் அந்நிலைமையைத் தான் மாற்றியமைக்க முனைந்ததாகவும் கூறியுள்ளார். பன்னெடுங்காலமாக இருந்துவரும் வெள்ளாள மேன் மைக்கு இவர்கள் இடங்கொடுத்து வந்தனர் என்பது 1661-ல் எழுதப் பட்ட ஓர் அறிவுறுத்தற் குறிப்பிலிருந்து பெறப்படுகின்றது. ஒல்லாந்தர் காலத்தில் முக்கிய தமிழ்ப் பிரதானிகள் புரட்டோஸ்தாந்து மதத்தைத் தழுவியிருந்தனரென்பது அவர்களது பெயர்களால் தெரியப்படுகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் இம் முறைமை தொடர்ந்து நிலவி வந்தது. ஒல்லாந்தர் காலத்தைப் போலவே, ஆங்கில ஆட்சியின் முற்கூற்றிலும், பெரும் பதவிகள் சாதியதிகார அடிப்படையிலேயே வழங்கப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சியமைப்பை மாற்றி ஆங்கிலக் கல்வியைப் பதவி நுழைவுச் சீட்டாக்கிய பொழுதும் இந் நன்மையை இவர்களே பெற்றனர். கிறித்துவக் கல்லூரிகள் ஆங்கிலம் கற்பிப்பதால் தேசிய வாழ்வின் பண்பாட்டடிப்படை தகர்க்கப்படுகின்றதென்பதை உணர்ந்து செயற்பட்ட ஆறுமுக நாவலர் சாதிவாதியாக இருந்தா ரென்பதை அவரது பல்வேறு கட்டுரைகள் நன்கு புலப்படுத்துகின்றன. நாவலரின் சாதிவாதத்தினால் உயர்சாதியரல்லாத சைவத் தமிழறிஞர் ஒருவர் நாவலரைக் கண்டிக்க நேர்ந்தமை இன்றைய இலக்கிய வரலாற் றேடுகளிற் காணப்படாத உண்மையாகும். தேசியவாதம் கூட யாழ்ப் பாணத்தில் சாதியடிப்படையைப் பேணுவதற்கான ஓர் அம்சமாக மாற்றப்பட்டது. யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட சாதியினர் பலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறித்தவத்தைத் தழுவியமைக்குக் காரணம் உயர்சாதிச் சைவர்கள் அவர்களை அடக்கி வைத்திருந்தமையே என்பது கிறித்தவ ஏடுகளி லிருந்து புலனாகின்றது. சைவ ஆங்கிலப் பாடசாலைகளிலே தாழ்த் தப்பட்ட சாதிப் பிள்ளைகளுக்குப் பலகாலமாக இடம் வழங்கப்படா திருந்தது. ஆரம்பப் பாடசாலைகள் கூட சாதியடிப்படையில் இயங்கி வந்ததென்பது பலரறிந்த உண்மை.

இவ்வாறு கல்வி வசதியினால் உத்தியோக வாய்ப்புக்கள் பெற்று யாழ்ப்பாணத்திலிருந்து - யாழ்ப்பாணத்தவர்கள் என்ற பூரண உணர்வு டன், வெளிப்பிரதேசங்கட்குச் சென்றவர்கள் பெரும்பாலும், உயர்சாதி மக்களே. கிறித்தவர்களும் அவ்வாறு வெளியே சென்றனரெனினும் அவர்கள் முன்னர் குறிப்பிட்டவாறு, ஒதுக்கு நிலை வாழ்க்கையை மேற்கொண்டவர்களல்லர். ஏறத்தாழ 1945 வரையில் பெரும்பான்மை யும் இந்நிலைமை காணப்பட்டது. வெள்ளாளர் அல்லாதாரும் சிறு தொகையினர் சென்றதுண்மையே. ஆனால் அவர்கள் பிற இடங்களிற் றாமும் யாழ்ப்பாணத்து தாழ்த்தப்பட்ட சாதியினரல்லர் என்று நிறுவ வேண்டிய சமூகத் தேவையிருந்ததன் காரணமாக அவர்களும் பெரும் பான்மையினரின் வாழ்க்கை நெறியையே மேற்கொள்ள வேண்டி யிருந்ததெனலாம்.

ஆனால், இவ்வெள்ளாள மேலாண்மையானது உண்மையில், யாழ்ப்பாணத்துப் பொருளாதார அமைப்பின் சமூக வெளிப்பாடே. எனவே இதனை வெறும் சாதிப் பிரச்சினையாகக் கொண்டு எரிந்த கட்சி எரியாத கட்சி பாடுவதால் பிரச்சினையின் அடியுண்மையை அறியாது போய்விடும் ஆபத்து ஏற்படும்.

யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்பு விவசாய மேன்மையடிப்படை யில் நிறுவப்பட்டது. குடியேறிய நாள் முதல் அந்நியராட்சி வரை விவசாய நிலச் சொந்தக்காரர்களாக இருந்தவர்கள் வெள்ளாளரே. விவசாயப் பொருளாதார அடிப்படை காரணமாகவே குடிமக்கள் என்ற கோட்பாடு தோன்றிற்று. விவசாயத் தொழிலாளர்கள் குடி மக்களாயினர். நிலவுடைமைச் சமுதாயமாகவே இது இயங்கி வந்தது. யாழ்ப்பாணத்து அரசின் தோற்றத்தை ஆராயும் பொழுது பிரதேச நிலவுடைமையாள ரிடையே மன்னன் சிறந்த நிலையை எய்தியிருந்தான் என்பது தெரிய வரும். நிலவுடைமை ஆட்சிக்குள்ள பன்முகப்படுத்தப்பட்ட அதிகார நெறி (Decentralised authority) காரணமாக நிலவுடைமையாளரே அதிகாரிகளாகவுமிருந்தனர். யாழ்ப்பாணப் புவியியலமைப்புக் காரண மாக பிற தொழில்களும் அங்கு (அந்தப் பூர்வீக உற்பத்திச் சாதன



நிலையில்) வளரமுடியவில்லை. இதனால் விவசாய நிலவுடைமை யாளர் மிகமுக்கிய இடத்தைப் பெற்றனர். யாழ்ப்பாணத்து நிலவுடை மைச் சமுதாயத்தின் சிறப்பமிசங்களில் மேற்கூறியது முக்கியமானது. (யாழ்ப்பாணத்து நிலவுடைமைச் சமுதாய அமைப்பின் சிறப்பமிசங்கள் பற்றி கணேசலிங்கனின் 'சடங்கு' எனும் நாவலுக்கான முன்னுரை யிலும் சில கூறப்பட்டடுள்ளன). இந்தச சூழ்நிலையில் இயல்பாகவே பொருளாதார அரசியல், சமூக மேன்மைகள் இயைந்து கிடந்தன.

ஆனால் இப்பொருளாதாரம் விவசாயப் பெருக்கத்துக்கான வாய்ப் புக்களைக் கொண்டதன்று. நிலத்தினமைப்பு நீர்வசதியின்மை, சாதன மின்மை, போதாமை முதலியன காரணமாக இது வளரக்கூடிய ஒன்றாக இருக்கவில்லை. ஆனால் அன்றைய நிலையில் மீன் பிடித்தலைத் தவிர்த்த (மீன் பிடித்தலிலும் ஆழ்க்கடல் மீன்பிடித்தலுக்குத்தான் சிறிது சுயாதீனமிருந்தது. உள்ளூர் ஆறுகளில் மீன்பிடித்தோர் நிலைமை மற்றையோரைப் போன்றேயிருந்தது.) மற்றைய தொழில்கள் யாவும் விவசாயத்தை நோக்கியதாகவே அதை நம்பி வாழ்வனவாகவே இருந் தன. இதனால் விவசாய நிலவுடைமையாளரின் சமூக கட்டுப்பாட் டதிகாரம் (Social Control) பூரணமானதாக இருந்தது. அதாவது அவர் களே மேன்மையாளராக இருந்தனர். மேனிலையிருப்பவர்களிடம் மேலாண்மை செல்வது இயல்பே. பின்னர் அந்நிய ஆட்சி நிறுவப்பட்ட பொழுதும் அடிப்படைப் பொருளாதார அமைப்பு மாற்றப்படாதிருந்தது.

ஆங்கில ஆட்சியின் கீழ் ஆங்கிலக் கல்வி, உள்ளதிலும் பார்க்க ஸ்திரமான ஒரு பொருளாதார பலத்தை - உத்தியோகங்களை -அளித்த பொழுது அவற்றை மேல்நிலையிலிருந்தவர்களே பெற்றுக் கொண்ட னர். தமிழ் நாட்டிலும் இதே நிலைமைதான் ஏற்பட்டது. அங்கு பிராமணர் கள் பெற்றுக் கொண்டார்கள். ஏற்கனவே பொருளாதார, சமூக அதிகாரத் துக்குப் பழக்கப்பட்டவர்கள், இப்புதிய பொருளாதார, சமூக பலத்தை மற்றவர்களுக்குச் சுவற விடாது தடுத்தமையும் இயல்பே. இச்சந்தர்ப் ப்த்தில் யாழ்ப்பாணத்து வெள்ளாளக் குடியினர் பலர் தாம் உத்தியோகம் பார்க்கத் தொடங்கி மேனிலைமை வகிக்கத் தொடங்கிய பின்னர் தங்களது வறிய சுற்றத்தினர் அவ்வழியிற் சென்று மேனிலை எய்துவ தைத் தடுத்தனர் என்னும் உண்மையையும் நாம் மறந்துவிடக் கூடாது. பெரிய உத்தியோகத்தர் பலர் தமது வறிய சுற்றத்தினரின் குழந்தைகளு க்கு ஆங்கிலக் கல்வி வசதியளிக்காதும், வசதியை மறுத்தும் வந்தன ரென்பதும் யாழ்ப்பாணச் சமூகத்தை நன்கறிந்தோர் அறிவர் (தனிச் சிங்கள மொழி உபயோகம் வெள்ளாள மக்களின் மேலாண்மையைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகர்த்து அவர்களையும் மற்றச் சாதியினரைப் போல் சலுகையற்ற வர்களாக்கி விடுமென்பதற்காகவே சிங்கள மொழிச் சட்டத்தைத் தமிழர் சிலர் எதிர்க்கின்றனர் என ல.ச.ச.க.யைச் சேர்ந்த திரு.காராளசிங்கத்தின் கருத்தை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கொள்ளல் நன்று.)

இவ்வாறாக, உத்தியோகத் தனியுரிமை மேனிலையிலிருந்த மக்களிடமே சென்றமை வியப்புக்குரியவொன்றல்ல.

வியாபாரத்தைப் பொறுத்தமட்டில், இத்தகைய கல்வி வசதிகள் பெருமளவிற் கிடையாத தீவுப்பகுதியினரே பெரும்பாலும் வெளிப் பிரதேசங்களில் கடைகள் நிறுவினர். இன்றும் இந்நிலைமை ஓரளவு தொடர்ந்து நிலவுவதைக் காணலாம். காரை தீவு, புங்குடு தீவு முதலிய தீவுகளைச் சேர்ந்தவர்கள் இத்துறையில் முன்னோடிகளாக விளங்கினர்.

இத்தகைய விரிவற்ற சமுதாய அமைப்பிலுள்ளோர் (closed groups) பிற இடங்களுக்குச் சென்ற பொழுது மற்றவர்களிடமிருந்து ஒதுங்கியும், தம்முள்தாம் நெருங்கி இணைந்தும் வாழ்ந்தமையும், தமது நலன்களைத் தொடர்ந்து பேண முனைந்தமையும் இயற்கையே. உத்தியோகமும், வியாபாரமும் குடும்ப மேனிலைக்காகவும் அம்மேனிலையைப் பேணுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளே. எனவேதான் அவர்கள் தாம் சென்ற பிற இடங்களிலும் அவ்வுணர்வுடன் வாழ்ந்து வந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து பிற பிரதேசங்களுக்குச் சென்றவர்கள் அவ்வப் பிரதேச மக்களுடன் இணைந்து வாழாது சொந்தக் கிராமத்தையும், சொந்தக் குடும்பத்தையும் நோக்கியே வாழ்ந்து வந்ததும் இதனாலேயே.

கட்டுப்பாடுகள் நிறைந்த இக்கட்டுக்கோப்பிலிருந்து விடுபட்டு எப்படியோ கல்வி வசதிபெற்று மேனிலை எய்திய உயர்நிலையற்ற சாதியினருடன் (அவ்வாறு பெறுவதற்கான வாய்ப்புக்கள் அரசாங்கத்தால் என்றுமே வழங்கப்பட்டு வந்தன. அவற்றைப் பயன்படுத்த முடியாதிருந்தமையாற்றான் மற்றைய சாதியினர் கீழ் நிலையிலிருந்தனர்) உயர் சாதியினர் பிற தேசங்களில் சமவாழ்வு நடத்தியும் வந்தனர். மீண்டும் அந்த விரிவற்ற சமுதாயத்துக்குத் திரும்பும் பொழுது, பழைய படி சம்பிரதாயங்களைப் பேணி வந்தனர். இதனால்தான் 'ஆனையிறவுக் கங்காலை எல்லாரும் ஒண்டுதான்' என்ற தொடர் வழக்கில் வரலாயிற்று. (இக்கருத்து உண்மையான யாழ்ப்பாணத்தின் சமூகவெல்லை ஆனையிறவே என்பதையும் காட்டுகின்றது.)

யாழ்ப்பாணத்து மனிதனைப் பற்றி கூறப்படும் கருத்துக்கள் எவ்வாறு ஏற்பட்டன என்பதையுணர்த்தும் யாழ்ப்பாணத்துப் பின்னணி இதுதான் (முன்னர் கூறியது போல, கருத்துக் கூறுபவர்களின் பின்னணியும் கருத்தின் தன்மையைத் தீர்மானிப்பதில் முக்கிய இடம் பெறும். ஆனால் இங்கு நாம் அதை ஆராய வேண்டுவதில்லை.)

யாழ்ப்பாணத்துக்கேயுரிய சிறப்பான சமூகப் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கான திறவுகோலும் இதுதான். சாதிப் பிரச்சினை; தமிழரசியற் கட்சிகளின் அமைப்பும் அவற்றின் நோக்கங்களும் பற்றிய பிரச்சினை ஆகியனவற்றை விளங்கிக்கொள்ள இக்கண்ணோட்டம் பயன்படும்.

பிற தமிழ்ப்பிரதேசத்தினர் மனதிலுள்ள யாழ்ப்பாண மேலாண்மை பற்றிய கருத்தையும் விளங்கிக் கொள்ள இது உதவலாம். மொழியொருமையிலும் பார்க்க தமது குறுகிய சமூக ஒருமையை யாழ்ப்பாணத்தார் விரும்பியமையே இதற்குக் காரணம். வன்னிப் பகுதி, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலுள்ள சமுதாய பொருளாதார அமைப்பு யாழ்ப்பாணத்து அமைப்பினின்றும் வேறுபட்டன வென்பதையும் மனத்திலிருத்திக் கொள்ளல் வேண்டும்.

ஆனால் நாம் இதுவரை பார்த்த இந்த 'யாழ்ப்பாணத்தான்' தொடர்ந்தும் மாறாது இருக்கின்றானா அல்லது மாறி வருகின்றானா என்பது தான் முக்கிய பிரச்சினையாகும்.

யாழ்ப்பாணக் குடா நாட்டினுள்ளே பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன; ஏற்பட்டு வருகின்றன. இலவசக்கல்வி, தமிழ் மொழி மூலம் கல்வி, மாறி வரும் தேசிய அரசியல் நிலைமை, வாக்குரிமையின் முக்கியத்துவம் பற்றிய உணர்வு, (இரகசிய வாக்கெடுப்பளித்த துணிவு), குடியேற்றத் திட்டங்கட்குச் செல்லல், விவசாயமல்லாத பொருளாதார முயற்சிகளின் வளர்ச்சி ஆகியன யாழ்ப்பாணத்து அக வாழ்க்கையை மாற்றி வருகின்றன.

இலவசக் கல்வியால் பல சாதியினரும் கல்வி வசதியைப் பெறுகின்றனர். இதனாலும், தமிழ் மொழி மூலக் கல்வியினாலும் ஒரு குறிப்பிட்ட சாதியினரின் கல்வித் தனியுரிமை இப்பொழுது பூரணமாகத் தகர்க்கப்பட்டுள்ளது. சாதியமைப்பிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கம்மாளச் சாதியினர் (artisans) ஒன்றாகவும் தாழ்த்தப்பட்டோர் ஒன்றாகவும் இணையுமளவுக்கு கலப்பு மணங்கள் நடைபெறுகின்றன. சாதி உயர்வு, தாழ்வுகளை மதிக்காத கலப்பு மணங்களும் உண்டு. கற்றோரிடையே சாதிச் சம்பிரதாயங்கள் போற்றப்படுவது குறைகின்றது. ஆனையிறவுக்கப்பால் குடியேற்றங்கட்குச் செல்வதால், பிரதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வு குறைகின்றது. புதிய பொருளாதார முயற்சிகளால் சாதித் தொழிலடிப்படை அருகுகின்றது. அரசியல் மாற்றங்கள் காரணமாக தமிழ் பேசும் இனம் எனப் பிற பிரதேசத் தமிழரையும் முஸ்லிம்களையும் இணைத்துக் கொள்வதற்கான எண்ணம் வளர்க்கப்படுகின்றது. இவற்றாலேற்படும் மாற்றங்களால் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ வேண்டுமென்ற தேசிய உணர்வு பிறக்கின்றது. தமிழ் பேசும் இனம் என்ற கோட்பாடு பொருளாதார அடிப்படையற்ற வொன்றானபடியால் அக்கோஷம் தற்காலிகமானதாகவே இருக்கும். தேசிய நிலையில் சமவாய்ப்பும், இன நேசமும் ஏற்படும் பொழுது இக்கோட்பாடு மறைந்து விடும். இத்தகைய புதிய சூழ்நிலையில் தோன்றுபவன் பழைய யாழ்ப் பாணத்தானாக இருக்க முடியாது. இம்மாற்றங்கள் தோற்றுவிக்கும் புதிய தலைமுறை உருவாகிக் கொண்டிருக்கின்றது. இப்பொருளாதார அரசி யல் மாற்றங்கள் பூரணமாக ஏற்பட்ட பின்னரே புதிய சமூக ஏற்பாடு தனிப்பட்ட கருத்துருவம் பெறும். அப்பொழுதுதான் பழைய 'யாழ்ப் பாணத்தான்' என்பவன் இல்லாது போய்விட்டான் என்ற உணர்வு ஏற்படும்.

நாளை வரவிருக்கும் சமுதாய மாற்றத்தின் முன்னோடி இன்றைய அறிவியக்கங்களே. வளர்ச்சிப் படியாகக் கொள்ளப்பட்ட தேசிய இலக்கியக் கோஷம் நாளை வருவதை உணர்த்துவதாகும். அந்த இலக்கியக் கோஷத்தை முன்வைத்த பெருமை, பிணக்கும் சுரண்டலு மற்ற புதியதொரு சமுதாயத்தைத் தோற்றுவிக்க விரும்பும் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் எல்லோர்க்கும் உரியதாகும்.

(அஞ்சலி 1971)



# யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல்

## அதன் உருவாக்கம், இயல்பு, அசைவியக்கம் பற்றிய ஒரு பிராரம்ப உசாவல்

யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு அமிசங்களில் ''கண்டதுண்டு, கேட்டதில்லை'' யாகவுள்ளனவற்றுள் ஒன்று, யாழ்ப்பாணச் சமூகத் தின் யதார்த்தபூர்வமான சித்திரிப்பு ஆகும். நம் கண்முன்னே குத்திட்டு நிற்கின்றதும், நமது சமூக நடைமுறைகளைப் பெரிதும் ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்துவதுமான இந்த விடயம் பற்றி நாம் பேசுவதும் இல்லை. பேசமுயல்வதும் இல்லை. இந்த மௌனம், இந்தச் சமூகத்தின் ஆரோக் கியமான வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கின்றமையால், புலமை நிலையிலாவது இதனை அகற்றவேண்டுமென்பதற்காக இந்த உசா வலினை மேற்கொள்கின்றேன். நமது சமூகம், அதன் வரலாற்றில் எதிர் நோக்கிய மிக முக்கியமான நெருக்கடி வேளைகளில் ஒன்றான இன்றைய காலகட்டத்தில், நமது சமூகம் பெருமாற்றத்தினுக்கு உட்பட்டு நிற்கும் இவ்வேளையில், நமது சமூகத்தின் சிந்தனைகளையும் முன்வைப்பது, சமூகப் புலமையின் குறைந்த பட்சக்கடமையென்றே கருதுகின்றேன்.

யாழ்ப்பாணச் சமூகம் பற்றிய மானிடவியல், சமூகவியல், ஆய்வு கள் மிகக் குறைவாகவேயுள்ளன. இத்துறையில் தொழிற்படும் மேனா ட்டு அறிஞர் மிகச்சிலரே. (Bryan Pfaffenberger, Kenneth David, Skijonberg) இத்துறையிற் சர்வதேசப் புகழ்பெற்ற எஸ்.ஜே.தம்பையா போன்ற தமிழர்களாகிய அறிஞர்கள் கூட ஈழத்துத் தமிழ் மக்களின் சமூகவியல் மானிடவியல் ஆய்வுகளிற் பூரணகவனம் செலுத்துவ தில்லை. யாழ்ப்பாணச் சமூகம் பற்றிச் சித்தார்த்தன் பேரின்பநாயகம் எழுதியுள்ள "The Karmic Theatre" என்னும் நூல் சுவாரசியமான ஒன்றாகும். ஆனால் அது யாழ்ப்பாணச் சமூக அமைப்பு, மாற்றம் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரன்முறையான ஆக்கம் அன்று. இத்தகைய ஒரு நிலையில், இங்கு நிகழும் சமூக மாற்றத்தின் தன்மைகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வது யாழ்.பல்கலைக்கழகப் புலமையாளரின் கடமையாகின்றது.

சமூக வரலாறு, சமூகவியல், மானிடவியல் ஆகிய துறைகளின் வழிச்சென்று தமிழிலக்கியப் பாரம்பரியத்தை மீள் நோக்குச் செய்யும் ஓர் ஆய்வுமுறையில் ஏற்பட்ட அநுபவங்கள் காரணமாக நான் இவ்விடயத்திற்கு ஈர்க்கப்பட்டுள்ளேன். அந்தப் புலமைப் பின்புலத்திலேயே இந்தக் கட்டுரை எழுதப் பெறுகின்றது. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, இது ஓர் அறிமுக முயற்சியேயாகும். தமிழ்மொழி நிலையில் இவ் விடயத்தைப் பற்றி வெளிப்படையான சிந்திப்புக்களைத் தூண்டுவதே இதன் நோக்கமாகும். அந்த அளவுக்கு இந்தக் கட்டுரையின் அணுகுமுறையிற் சில ''நெகிழ்ச்சிகள்'' தென்படலாம். அத்துடன், இது ஒரு பிராரம்ப முயற்சியாதலாலும், இக்கட்டுரை 60 நிமிட வேளைக்குள் வாசிக்கப்படத்தக்கதாக அமையவேண்டுமென்பதாலும் நான் விரும்பும் ஆழம் கூட, இந்த ஆய்விற் புலப்பட முடியாதுள்ளது.

இச்சிறு ஆய்வு பின்வரும் விடயங்கள் பற்றி நோக்கவுள்ளது.

I. யாழ்ப்பாணத்தின் ''சமூக''த்தை இனங்கண்டு கொள்ளல்.

II. யாழ்ப்பாணச் சமூகத்தின் உருவாக்கம் நிலை பேறு தொடர்ச்சியின் சின்னமாகத் ''தேசவழமைச் சட்டம்'' அமையுமாறு.

III. யாழ்ப்பாணச் சமூகத்தின் இயல்புகள் சிலவற்றினை நோக்கல்.

IV. இச் சமூகத்தின் பண்பாடும் கருத்து நிலையும்

V. இச்சமூகத்தின் சமகால அசைவியக்கத்தின் தன்மைகள் சில.

VI. நிறைவுரை.

## I. யாழ்ப்பாணச் சமூகத்தை இனங்கண்டு கொள்ளல்

சமூகவியலிற் பெயர்பெற்ற பாடப்புத்தகங்களுள் ஒன்றான மக்ஜவரின் ''சொசைற்றி'' (Society) என்னும் நூலில் (1961) வரும் ஒரு கூற்று, சமூகத்தின் அமைப்பு பற்றிய பல அடிப்படை உண்மைகளை விளக்குவதாக அமைகின்றது.

> *''சமூகப் பிறவிகளான மனிதர்கள், தமது நடத்தை முறைகளைப் பல்வேறுபட்ட முறைகளில் வழிநடத்துகின்ற, கட்டுப்படுத்துகின்ற ஓர் ஒழுங்கமைப்பினை ஆக்குவதன் மூலமும் மீளாக்கம் செய்வதன் மூலமும் தங்கள் இயல்பினை வெளிப்படுத்திக் கொள்கின்றனர்.''*

ஒரு குறிப்பிட்ட பிரதேச வட்டத்தினுள் வாழுகின்றவர்கள் என்ற வகையிலும், அவ்வாறு ''வாழும்'' பொழுது பல்வேறு ஊடாட்டங்களையும் தொடர்புகளையும், உறவுகளையும் கொண்டுள்ளவர்கள் என்ற வகையிலும் (அப்பொழுது தான் அந்தக் குழுமம் இயங்கும்) அந்தக் குழுமத்தினர் ஒரு ''சமூகம்'' என அழைக்கப்படுதல் மரபு. நாட்டுநிலைகளிலும், நாடுகள் அளாவிய நிலைகளிலும், அத்தகைய ''சமூகங்களை''ப் பற்றிப் பேசுவது வழக்கம் (அமெரிக்கச்சமூகம், தமிழ்ச்சமூகம்).

குறிப்பாக ஒரு வாழிடவரையறைக்குள் சீவிக்கும் பொழுது, அந்தச் சமூகம் ஒரு குறிப்பிட்ட கட்டமைவினைக் கொண்டதாக அமையும் (Social Structure). அந்தச்சமூகத்தின் பல்வேறு அலகுகளிடையேயும் நிலவும், காலச் செம்மைபெற்ற ஒழுங்குமுறைப்பட்ட அமைவொழுங்குள்ள உறவுகள் இந்தக் கட்டமைவைப் புலப்படுத்தி நிற்கும். இவ்வாறு அமையும் கட்டமைவு அதன் இயங்கு நிலையில் ஓர் ''அமைப்பு'' (System) ஆகத் தொழிற்படும். அந்தச் சமூகம் இயங்கும் முறைமையை விளங்கிக் கொள்வதற்கு அது எவ்வகையில் ஓர் ''அமைப்பு'' ஆகத் தொழிற்படுகின்றது என்பதை அறிந்து கொள்வது அவசியமாகும். அமைப்பு என்பது ''ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டுள்ள பாகங்கள், பொருள்கள், உயிர்களின் தொகுதி'' என்பர். அந்த இயங்கு நிலைமுறைமை அதற்கு ஒரு ''தனித்துவத்தை'' வழங்கும்.

இவ்வாறு நோக்கும் பொழுது, யாழ்ப்பாணத்தினை வாழிடமாகக் கொண்ட ஒருவர், ''யாழ்ப்பாணத்தவர்'' என்று சுட்டப்படுவதற்கான நடத்தை முறைகள், சீவிய முறைகள், கண்ணோட்டங்கள், மனோபாவங்கள் ஆகியவற்றைக் கொண்டிருப்பார்.

ஈழத்தின் தமிழ் மக்களை நோக்கும் பொழுது இரு முக்கியமான சமூக அமைவுகளை இனங்காணலாம்:

1) மட்டக்களப்புச் சமூகம்.

2) யாழ்ப்பாணச் சமூகம்.

இந்த ''யாழ்ப்பாண மனிதனை''ப் பற்றிய சில சமூகவியல், அரசியல், பொருளியல் அவதானிப்புக்கள் உள்ளன (ஜேன்றசல்:8). ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்த யாழ்ப்பாண மனிதரைப் பற்றிய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரன்முறையான ஆய்வுகள், முன்னர் குறிப்பிடப்பட்டதற்கியைய ஆங்கிலத்திலே மிகக்குறைவு. தமிழில் இல்லையென்றே கூறவேண்டும். தமிழில் இத்தகைய ஆய்வுகள்; நூல்கள் இல்லாமைக்கு ஆழமான ஒரு நியாயமும் உண்டு. அதாவது நாம் உண்மையில் நம்மைப் பற்றிய ஒரு புறநோக்கான (விடயி நோக்கான - Objective) ஒரு பார்வையை இன்னும் வளர்த்துக் கொள்ளவில்லை என்று கூறவேண்டும் போலுள்ளது. சிங்கள சமூகத்தினைப் புறநோக்காகப் பார்த்து அதனை ஆராய்ந்துள்ள, ஆராய்ந்துவரும் சில அறிஞர்கள் போன்று (நியூட்டன் குணசிங்க, R.A.L.H. குணவர்த்தனா, குமாரி ஜயவர்த்தனா போன்றவர்கள்) நம்மிடையே இன்னும் ஓர் அறிஞர்குழாம் தோன்றவில்லை. நம்மிடையே சமூக வரலாறு பற்றிய ஆய்வுகள் வளர வேண்டுவது மிக அவசியமாகும். பல்துறைச்சங்கம ஆய்வு முறையின் மூலம் நாம் இந்த ஆய்வுப் பணியினை மேற்கொள்ளல் வேண்டும்.

## II. தேசவழமைச்சட்டமும் நமது சமூக உருவாக்கத்தில் அதன் முக்கியத்துவமும்

''யாழ்ப்பாணத்துச் சமூகம்'' என்று திட்டவட்டமாகக் குறிப்பிடத்தக்க ஒரு குழுமம் உண்டு என்பதற்கான பிரதான சான்று, இந்த சமூகத்தினரிடையே வழக்கிலுள்ள தேசவழமை எனும் சட்டத்தொகுதியாகும்.

யாழ்ப்பாண மாநிலத்தைத் தமது ஆட்சிக்குக் கீழ் கொண்டு வந்த ஒல்லாந்தர், நீதிபரிபாலனத்தினுக்கான மன்றுகளை நிறுவிய பொழுது அம்மன்றுகளிலே தளமாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான சட்டத்தைத் தொகுக்க முனைந்த பொழுது, யாழ்ப்பாணத் ''தேச''த்தின் ''வழமை'' யாகவிருந்த நடைமுறைகளையே சட்டமாகத் தொகுத்து எடுத்துக் கொண்டனர். அத்தொகுப்புப் பணிக்குத் திசாவையாகவிருந்த கிளாஸ் ஐசாக்ஸ் (Class Isaaks) என்பவர் பொறுப்பாயிருந்தார். 1706 ஓகஸ்ட் 14ல் கோணெலியஸ் ஜோன் சீமோன்சினால் (Corneltus Joan Simmons) பணிக்கப்பெற்ற இத்தொகுப்பு 1707ம் வருடம் ஜனவரி மாதம் 30ம் திகதி டச்சுத்தேசாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இத்தொகுதி தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, 12 தமிழ் முதலியார்களால், உண்மையான தேசவழமையே என அத்தாட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர், 1707 டிசம்பர் 15ஆம் திகதி சட்டப்புத்தகத்திற் சேர்த்துக் கொள்ளும் படிக்குத் தேசாதிபதியின் காவலாளரால் பணிக்கப் பெற்றது.



இச்சட்டத்தினையே யாழ்ப்பாணத்துத் தமிழர்களுக்கிடையே எழும் வழக்குகளுக்கான சட்டமாகக் கொள்ள வேண்டுமென பிரித்தானிய ஆட்சி 1806 டிசம்பர் 9ம் திகதி ஏற்றுக் கொண்டது. அதன் பின்னர், 1895 முதல் தேசவழமைச்சட்டத்திலே பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. நாட்டின் பொதுச் சட்டத்துடன் தேசவழமைச்சட்டம் முரணாகுமிடங்களில் இம்மாற்றம் ஏற்படுத்தப்பட்டதெனலாம். இத்தகைய பல்வேறு மாற்றங்களின் பின்னர் இன்று தேசவழமைச்சட்டமானது யாழ்ப்பாணத்து மக்களின் சொத்துரிமைக் கையளிப்புச் சட்டமாகவே தொழிற்படுகின்றது.

1707இல் இருந்த நிலையில் அது கொண்டிருந்தனவற்றை நோக்கும் பொழுது அக்கால யாழ்ப்பாணச் சமுதாயத்தின் அமைப்பு மிகத் துல்லியமாகப் புலப்படுகின்றது. 1707 இல் தொகுக்கப்பெற்ற பொழுது தேசவழமைச்சட்டம் ஒன்பது பிரிவுகளைக் கொண்டதாக விளங்கிற்று. அந்த ஒன்பது பிரிவுகளையும் அவை ஒவ்வொன்றிலும் இடம்பெற்றவற்றையும் அறிவது யாழ்ப்பாணத்தின் வரலாற்றுச் சமூகவியல் அமிசமொன்றினை அறிவதாக அமையும்.

முதலாம் பிரிவு

**சொத்துரிமையும் பேறும் பற்றியது.**

1. மூவகைச் சொத்துக்கள்

   சீதனம், முதுசம், தேடியதேட்டம்.

2. சீதனம் பற்றியது.

3-6. மகள்மாரின் விவாகமும் அவர்களுடன் கொடுக்கப்பெறும் சீதனமும்.

7. மகன்மாரின் விவாகமும் அவர்களுக்குரிய பங்கும்

8. சொத்தினைக் கொடுத்தல் (மகன்மாருக்குச் சொத்து போகாமலிருப்பதற்காக ஈடுவைப்பதைத் தடுத்தல்).

9. பிள்ளைகளும் தாயுமுள்ளவிடத்துச் சொத்துரிமை செல்லும் முறைமை (தகப்பனிறந்தவிடத்து).

10. தாய் மீண்டும் விவாகஞ் செய்யுமிடத்துச் சொத்து பிரிக்கப்பட வேண்டிய முறைமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பிள்ளைகளும் தகப்பனுமுள்ளவிடத்துச் சொத்து பிரிக்கப்படும் முறைமை (தாயிறந்தவிடத்து).

12. பிள்ளைகள் தாய் தந்தையற்றவர்களாகவிருக்குமிடத்துச் சொத்து பிரிக்கப்படும் முறைமை.

13. ஒன்று விட்ட சகோதரர், சகோதரிமார் மாத்திரமுள்ள விடத்துச் சொத்து பிரிக்கப்படும் முறைமை.

14. இரண்டு தாரத்துப் பிள்ளைகளுமிருக்குமிடத்துச் சொத்து பிரிக்கப்படும் முறைமை.

15. தத்தம் பெற்றோருக்கு ஒரே பிள்ளைகளாகவிருந்த இருவரின் சொத்துக்கள் பிரிக்கப்படும் முறைமை.

16. சொத்து நன்கு திருத்தப்பட்டு (பயன் அதிகரிக்கப்புடுத்தப்பட்டு) இருக்குமிடத்து அது பிரிக்கப்படும் முறைமை.

17. ''அஞ்ஞானி'' யொருவன் கிறிஸ்தவப் பெண்ணை மணம் செய்யும் இடத்துச் சொத்து பிரிக்கப்படும் முறைமை.

18. இரு ''அஞ்ஞானிகள்'' விவாகம் செய்யும் பொழுது சொத்து பிரிக்கப்படும் முறைமை.

## இரண்டாம் பிரிவு

### சுவீகாரம் செய்தல்

1. சுவீகாரத்துக்கான சடங்குகள் (பெற்றுக் கொள்ளும் தாய், வண்ணார், அம்பட்டர் முன்னிலையில் மஞ்சள் தண்ணீர் குடித்தல்).

2. சுவீகாரஞ் செய்வோருக்கு வேறு பிள்ளைகளுக்குப் பின், அவர்களது சொத்துக் கையளிக்கப்படும் முறைமையும் பிரிக்கப்படும் முறைமையும்.

3. சுவீகாரம் பெறப்பட்டவர் பிள்ளைகளில்லாமல் இறப்பின்.

4. ஒருவொருக்கொருவர் உறவினரல்லாத இரு பிள்ளைகள் சுவீகாரம் செய்யப்படுமிடத்து.

5. சுவீகரிக்கப்பட்ட பிள்ளையின் சுவீகாரத்தை சுவீகாரம் செய்பவரின் உறவினர் ஏற்றுக்கொள்ளாதவிடத்து அந்தச் சுவீகாரப் பிள்ளைகளிடையே சொத்தை பிரிக்கும் முறைமை.

6. மூன்று சகோதரர்களில் ஒருவர் ஒரு பிள்ளையைச் சுவீகாரஞ் செய்யுமிடத்து.

7. உயர்ந்த அல்லது குறைந்த சாதிப்பிள்ளையொன்று சுவீகாரம் செய்யப்படும் பொழுது.



## மூன்றாம் பிரிவு

### காணி தோட்டம் முதலியன வைத்திருத்தல்

1. கூட்டுச் சொத்தாகவோ, கூட்டுச் செய்கையாகவோ வைத்திருத்தல்.

2. காணியை வாடகைக்குப் பெறல்.

3. ஒருவர் காணியிலுள்ள மரத்துப் பழங்கள் இன்னொருவரின் காணி மீது தொங்கி நிற்பின்.

4. பனைமர உரிமை.

## நான்காம் பிரிவு

### நன்கொடை பற்றியது

1. கணவனும் மனைவியும் பிரிந்து வாழும் பொழுது எவையெவற்றை நன்கொடையாகக் கொடுக்கலாம் எவையெவற்றைக் கொடுக்க முடியாது என்பது பற்றி.

2. எந்த அளவுக்குப் பெறாமக்கள், மருமக்களுக்கு (nephews and nieces) நன்கொடை கொடுக்கலாம் என்பது பற்றி.

3. இன்னொருவரிடத்து காணி நன்கொடை பெறும் பொழுது.

4. ஒரு மகனுக்கு அல்லது இரண்டு மகன்மாருக்கு நன்கொடை கொடுக்கப்படுமிடத்து.

5. விவாகஞ் செய்யாத மகன்மாருக்கு உறவினரால் கொடுக்கப்படுவன. அவர்கள் விவாகஞ் செய்யும் பொழுது அவர்களிடத்தேயிருத்தல். மற்றையவை அப்படிச்செல்லா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் பிரிவு

**ஈடுகள் அடைவுகள் பற்றியது**

(குறிப்பு: ஈட்டுக்கும் ஒற்றிக்கும் பொதுவான முறையிலே Mortgage என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது)

1. ஈடுவைத்த காணியானது மீட்கப்படும் வரை அதன் ஆட்சியும், வருமானமும் ஈடு வாங்கியவருக்கேயுரியதெனுமிடத்து (இது உண்மையில் ஒற்றியாகும்).
2. ஒற்றி பெறுவோரே அத்தகைய காணிகளுக்கான வரிகளைக் கட்ட வேண்டும் எனல்.
3. போதுமான முன்னறிவித்தல் கொடாது மீட்கும் பொழுது.
4. குறிப்பிட்ட வருடக் காலத்துக்கான ஈடு.
5. பழமரங்களை ''ஈடு'' வைத்தல்.
6. அடிமைகளை ஈடுவைத்தல்.
7. மிருகங்களைப் பயன்படுத்துவதற்கான கடன் (மாடு).
8. நகைககள் அடைவு வைத்தல்.

ஆறாம் பிரிவு

**வாடகை பற்றியது**

1. உழவுக்கு மாடுகளை வாடகைக்குப் பிடிப்பது பற்றியது.

ஏழாம் பிரிவு

**கொள்வனவு விற்பனை பற்றியது**

1. காணி விற்பனவுகள் பற்றியவை.
2. ஆடு, மாடு விற்பனவுகள் பற்றியவை.
3. பிள்ளைகள் விற்பனவு பற்றியவை. பிள்ளைகளை அடிமைகளாக (வாரங்களாக) விற்கும் முறைமையும் மீட்கும் முறைமையுமிருந்தது.



எட்டாம் பிரிவு

**ஆண் பெண் அடிமைகள் பற்றியது.**

(1844ம் ஆண்டின் 20ஆம் கட்டளைச்சட்டத்தின்படி அடிமை முறை நீக்கப்பட்டது. அடிமைக்கும் குடிமைக்குமிடையில் வேறுபாடு காட்டாது 'Slave' என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது).

1. பல்வேறு தரமும் வகையுமான அடிமைகள் பற்றியது நான்கு சாதிகளின் பெயர்கள் தரப்பட்டுள்ளன (கோவியர், நளவர், பள்ளர், சிவியார்).
2. அடிமை, குடிமைகளின் விவாகம்.
3. பிள்ளைகளில்லாது இறக்கும் அடிமை குடிமைகளின் சொத்து பிரிக்கப்படும் முறைமை.
4. பிள்ளைகள் இறக்குமிடத்து அவர்களின் சொத்துக்கள் பிரிக்கப்படும் முறைமை.
5. விவாகஞ் செய்த அடிமை குடிமைகளின் கடமைகள்.
6. அடிமை, குடிமைகளை அவர்களின் கட்டிலிருந்து விடுவித்தல்.
7. அவ்வாறு கட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட (இஷ்டம்போன) வர்களின் சொத்துக்களுக்கான உரிமை பற்றியவை.

ஒன்பதாம் பிரிவு

**வட்டிக்குக் கடன் கொடுத்தல் பற்றியது**

1. குறிப்பிட்ட நிபந்தனைகள் உள்ள கடன்கள்.
2. கடனுக்குக் கொடுக்கப்படும் ''பிணைகள்'' எந்த அளவுக்குக் கடனுக்கு பொறுப்பு என்பது.
3. கணவனின் கடனுக்கு மனைவி பிள்ளைகள் எந்த அளவுக்குப் பொறுப்பாளிகள் ஆவர் என்பது.
4. வட்டி முதலுக்கு மேலே போகாதிருத்தல்.
5. நெல்லுக்கடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நெல் கொடுத்து மாறல்.

7. கடனுக்காகக் கொடுக்கப்பட வேண்டிய விளைபொருளின் அளவு குறிப்பிடப்படாது கடன் கொடுக்கப்பட்ட விடத்து, (காணியிலிருந்து) பெறப்படும் இலாபத்திலிருந்து கொடுக்கப்பட வேண்டிய விகிதம் பற்றியது.

இந்தச் சட்டத்தலைப்புகளை நோக்கும் பொழுதே தேசவழமை என இவ்விதிகள் பதியப்பட்டிருந்த காலத்து யாழ்ப்பாணச் சமூகத்தின்,

அ. பொருளாதார அடித்தளம் (பிரதான பொருளாதார முயற்சி, அதன் அமைப்பு, அதில் ஈடுபடுவோர், அவர்கள் பெறும் ஊதியம் என்பன) யாது, யாவை என்பதையும்,

ஆ. இந்த பொருளாதார அடித்தளத்தைப் பேணும் சமூகக் கட்டமைப்பு (குடும்பம், அக்குடும்பங்கள் உருவாக்கப்படும் முறைமை (விவாகம்), அதற்கான நிபந்தனைகள், அச்சமூகத்தின் பிற நிறுவனங்கள் ஆகியன) யாவை என்பதையும்,

இ. அந்த முறைமைகளின் தொடர்ச்சி எவ்வாறு ஊர்ஜிதப் படுத்தப்பட்டிருந்தது என்பதையும் நாம் அறிந்து கொள்ளக் கூடியதாகவிருக்கின்றது.

இந்தச் சட்டங்கள் பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்து கின்றன:

1. குறிப்பிட்ட காலத்தில் இச்சமூகத்தின் பொருளாதாரத் தளமாக அமைந்த உற்பத்தி முறைமைகள்.

2. இந்த உற்பத்தி முறைமையின், முறைமைகளின் தொடர்ச் சிக்கு உதவும் அந்தச் சமூகத்தின் தனிமங்கள்.

3. இந்த உற்பத்தி முறைமைகளுள் மேலாண்மையுடையதாக விருப்பது.

4. இவற்றின் நடைமுறைத் தொழிற்பாட்டுக்கான கருத்து நிலை உந்துதல்கள் (Ideologial motivations).

''சமூக உருவாக்கம்'' (Social Formation) என்னும் கோட்பாடு மேற்கூறிய நான்கு விடயங்கள் பற்றிய தெளிவேயாகும்.



''சமூக உருவாக்கம் என்பது சமூக உறவுகளின் பன்முகப்பட்ட கட்டமைவினைச் சமூகத்தின் பொருளாதார கருத்து நிலை மட்டங்களினதும் சிலவிடயங்களில் அரசியல் மட்டத்தினதும், ஒழுங்கிணை நிலையைக் குறிப்பதாகும். இந்த ஒருங்கிணை நிலையில் பொருளாதாரத்தின் தொழிற்பாட்டு பங்கு முக்கியமான ஒன்றாகும். மேலாண்மையுடையதாகவுள்ள உற்பத்தி உறவுகளின் நடைமுறை நிலைப்பாடு ஒவ்வொரு மட்டத்திற்கும் ஒவ்வொரு வகையான செயல் வன்மை நிலையினையும் ஒன்று மற்றொன்றில் தலையிடுவதற்கான முறைமையையும் வழங்குகின்றது. இதனால், அந்த மேலாண்மையுடைய உற்பத்தி உறவுகள், நிர்ணய சக்தி உடையனவாக அமைகின்றன'' (ஹிண்டஸ், ஹேர்ஸ்ற் 1975:13)

யாழ்ப்பாணத்தின் நிலவுடைமை எத்தகைய அமிசங்களைக் கொண்டிருந்தது என்பது இந்த உருவாக்கத்தின் மூலம் தெளிவாகின்றது. அத்துடன் கொலோனியசிய அமைப்பினுள் பாரம்பரிய நிலவுடைமை எவ்வாறு தொடர முடியும், முடியாது என்பதனையும் நாம் இந்த முறைமையின் தொடர்ச்சி, தொடர்ச்சியின்மையிலிருந்து அறிந்து கொள்ளலாம். இந்தப் பொருளாதாரம் விவசாயத்தையே பிரதானமாகக் கொண்டிருந்தது. நிலம் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட சாதியினரின் சொத்தாகவே இருந்தது. நிலத்தில் ''உழைப்போர்'' அடிமை, குடிமைகளாக வைக்கப்பட்டிருந்தனர். அவர்களின் உழைப்பு முழுவதும், நிலத்தை உடையவர்களின் ''சொத்து'' ஆக்கப்பட்டிருந்தது. இந்த உடைமை முறைமையின் இயல்புகள் பற்றி இங்கு ஆராயமுடியாது. ஆனால் அத்தகைய ஓர் ஆய்வு மேற்கொள்ளப்படுவது அவசியமாகும். ஆயின், ''யாழ்ப்பாண வரலாறு'' பற்றி நம்மிடையே இன்று நிலவும் பார்வைகள் இத்தகைய ஆய்வுகளுக்கு இடம் கொடுப்பதில்லை.

மேலே பார்த்த அமைப்பானது இன்று எத்துணை மாறியுள்ளது என்பதனையும், இன்னும் மாறாமல் இருப்பவை யாவை என்பதையும் நாம் குறித்துக் கொள்ளல் வேண்டும். அடிமை குடிமை முறைமை இன்று இல்லை. ஆனால் அந்த முறைமை வழி வந்த ஒடுக்கு முறைகள் யாவும் அழிந்துவிட்டனவெனக் கூறுதல் முடியாது. அதேபோன்று இன்று ''ஒற்றி'' முதலிய பொருளாதார முறைமைகளின் செயற்பாட்டிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. முன்னர் ''ஒற்றி வைத்தல்'' என்பது சமூக அகௌரவத்தைத் தரும் ஒரு கடன் முறைமையாகும். ஆனால் இன்றோ ஒற்றியினால் பெறப்படும் முற்பணத்தை வங்கியிற் போடுவதனால் வரும் லாபம் காரணமாக, ஒற்றிக் கடன்கள் ஏற்புடைமையுள்ள கடன் முறையாகியுள்ளது (பாலகிருஷ்ணன், 1984). இந்த மாற்றங்களி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னூடாக யாழ்ப்பாணச் சமுதாயம் என இன்று நாம் கொள்கின்ற ''சமூக உருவாக்கத்தின்'' தொடக்கம், நிலைபேறு, மாற்றத்தினைக் கண்டு கொள்ளலாம்.

## III. யாழ்ப்பாணச் சமூகத்தின் இயல்புகள்

தேசவழமைச் சட்டம் ஒரே நேரத்தில் ஒரு சமூகவியற் சான்றாகவும், ஒரு வரலாற்று ஆவணமாகவும் அமையும் தன்மையை அவதானித்தோம். இந்தத் தேச வழமைச் சட்டத்தின் அடிப்படையிலும், இந்த நூற்றாண்டில் எழுதப்பெற்றுள்ள, யாழ்ப்பாணம் பற்றிய மானிடவியல் ஆய்வுகளின் அடிப்படையிலும் (Pfaffenberger, David, Holmes, Banks) யாழ்ப்பாணச் சமூகத்தின் இயல்புகளை நோக்குவோம். இந்தச் சமூகம் நிலம் சம்பந்தமாகத் தடைகளெதுவுமற்ற முறையிலே, தனியார் சொத்து முறைமையினை (System of private property) க் கொண்டு வந்துள்ளது. இத்தனியார் சொத்துரிமை முறைமை முன்னர் அடிமை குடிமைகளையும் கூட உட்படுத்தி நின்றுள்ளது. படிப்படியாக வந்த மாற்றங்களின் வழியாக அது இன்று ''காணியாட்சி'' முறைமையிலேயே காணப்படுகின்றது (றயிதவரி).

அடுத்து இச்சமூகம், ஒரு சமூக அதிகாரப் படிநிலை முறைமையினை (Social hierarchy) உடைய ஒன்றாகும். அதாவது, மேலேயுள்ளது உயர்ந்தது, படிப்படியாகக் கீழே வரும் பொழுது கீழேயுள்ளது தாழ்ந்தது என்ற ஒரு எடுகோள் இங்கு உண்டு.

இந்தப் படிநிலை சாதியமைப்பை அடிப்படையாகக் கொண்டதாகும். சாதி ஆய்வினை மேற்கொள்ளும் பொழுது, சாதிகளின் பட்டியலையும் அவற்றின் அதிகாரப்படி நிலைகளையும் பற்றி அறிந்து கொள்வது மாத்திரம் போதாது. இந்தச் சாதிகள் ஒவ்வொன்றும் தத்தம் சமூக உறவுகளில் ஒன்றிணைந்து எவ்வாறு ஒரு சமூக அமைப்பினை (caste as a social system) உருவாக்கியுள்ளன என்பதை அறிந்து கொள்ளல் வேண்டும். கால மாற்றங்களுக்கேற்ப அமைப்பு மாற்றங்களும் ஏற்பட்டு வந்துள்ளன என்பதை நாம் மனதிருத்திக்கொள்ளல் அவசியமாகும்.

ஆரம்பத்தில் சாதியே சகல சமூக உறவுகளையும் நிர்ணயிக்கின்ற சக்தியாக விளங்கிய ஒரு நிலையிலிருந்து இப்பொழுதோ விவாகத்திலும், சமூகச் செல்வாக்கு அதிகாரத்திலுமே சாதி முறைமையின் தொடர்ச்சியைக் காணலாம். விவாகம் என்பது குடும்ப உருவாக்கத்



துக்கு (family formation) அச்சாணியாக அமைவதாலும் குடும்பம் எமது சமூகத்தின் மிகமுக்கியமான அலகான படியினாலும் (இது பற்றிச்சற்று பின் நோக்குவோம்) சாதி இன்னும் அச்சாணியான ஓர் இடத்தையே பெறுகின்றது.

யாழ்ப்பாணத்தின் சாதியமைப்பில் சில விசேட பண்புகள் உள்ளன (சிவத்தம்பி 1989). முதலாவது இங்கு, தமிழகத்திலுள்ளது போன்று பிராமண மேலாண்மை இல்லை. சடங்காசாரமாக நோக்கும் பொழுது பிராமணர்கள் சைவக்குருக்கள்மார் முதலிலே வைத்துப் பேசப்படும் மரபு உண்டெனினும் உண்மையான சமூக அதிகாரம் வெள்ளாளரிடமேயுண்டு. இந்த வெள்ளாள மேலாண்மை காரணமாக இன்னொரு கருத்து நிலையும் வளர்ந்துள்ளது. வருண அடிப்படையில் வேளாளரும் சூத்திரரே. சூத்திரரே இறுதிக் குழுமத்தினர். இந்த இக்கட்டு நிலையிலிருந்து விடுபடுவதற்காக, இங்கு சூத்திரரை இரு வகையாக வகுத்து நோக்கும் ஒரு முறைமையுண்டு. அவை:

1. சற்சூத்திரர்
2. அசற்சூத்திரர்

சற்சூத்திரர் என்போர் உயர்ந்தோர். இந்தக் கொள்கையினை யாழ்ப்பாண மட்டத்தில் மிகவும் வற்புறுத்தியவர் ஆறுமுகநாவலர் ஆவார் (பிரபந்தத்திரட்டு).

மேலும் சற்சூத்திரரின் மேலாண்மைக்கு ஒரு கருத்துநிலை முக்கியத்துவம் வழங்குவதற்காக, வருண தர்மத்திலே பேசப்படாத இன்னொரு குழுமத்தைப் பற்றி (ஐந்தாவது வருணத்தைப் பற்றி) அழுத்திப் பேசவேண்டிய நிலையேற்பட்டது. ''பஞ்சமர்'' என்னும் கோட்பாடு யாழ்ப்பாணத்திற் சமூக வன்மையுடைய ஒன்றாகும்.

யாழ்ப்பாணத்தின் சாதியமைப்பில் தொழிலே (Vocation) பிரதான அடிப்படையாகின்றது. இதனால் இங்கு சாதி நிலைப்பட்ட தொழிற் பிரிவுக்கு அதிக அழுத்தம் கொடுக்கப்படுகிறது. இதனால் இங்கு அடிநிலையினரின் சமூக மேனிலைப்பாடு என்பது பாரம்பரியத் தொழிலைக் கைவிடுவதிலேயே தங்கியுள்ளது. யாழ்ப்பாணச் சமூக அமைப்பில் சாதி முறைமை இரு வகையாகத் தொழிற்படுகின்றது என்று கெனத் டேவிட் கூறுவர்:

1. கட்டுப்பாடுள்ள சாதிகள் (Bound Caste)
2. கட்டுப்பாடற்ற சாதிகள் (Unbound Caste)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளாளரை மேலாண்மையுடையோராகக் கொண்டு மற்றைய சாதியினரின் இடம், வகிபாகம், பணியினை ஆராய முற்படும் பொழுது இம் மரபு காணப்படுவது இயல்பே. முன்னர் அடிமை குடிமை மர பினராகக் கொள்ளப்பட்டவர்கள் கட்டுப்பாட்டுக்குள் (Bound mode) வருவதாகவும் பொருளாதார சீவியத்தில் வெள்ளாள மேலாண்மைக்குள் நேரடியாக வராதவர்கள் கட்டுப்பாடற்ற முறைமைக்குள் (Unbound mode) வருவதாகவும் அவர் கூறுவார். கெனத் டேவிட் இந்த அடிப் படையில் யாழ்ப்பாணச் சாதிகளை அவற்றின் சமூக உறவின் அடிப் படையில் பின்வருமாறு வகுப்பர்:

**கட்டுப்பாட்டு முறைமைக்குள் வருவோர்**

குருக்கள்மாரும் விவசாயத் தொழிலில் ஈடுபட்ட சாதியின ரும்; பிராமணர், சைவக் குருக்கள், வெள்ளாளர், கோவியர், வண்ணார், அம்பட்டர், பள்ளர், நளவர்; பறையர், துரும்பர்.

**கட்டுப்பாட்டு முறைமைக்குள் வராதவர்கள்**

வணிகர்கள், உள்ளூர்க் கைவினையாளர், சைவசெட்டி, ஆசாரி, தட்டார், கைக்குளர், சேணியர், முக்கியர், திமிலர்.

**கலப்பு முறைமை - பிரதானமாகக் கட்டுப்பாட்டு உடையது**

பண்டாரம், நட்டுவர் (இசை வேளாளர்).

**கலப்பு முறைமை - பிரதானமாகக் கட்டுப்பாடற்றது**

கரையார், தச்சர், கொல்லர், குயவர்.

கட்டுப்பாட்டு மரபு பற்றிப் பேசும் பொழுது யாழ்ப்பாணச் சாதி யமைப்பில், வரலாற்றுப் பின்புலத்தில் காணப்படும் ஒரு முக்கிய உண்மையைப் பதிவு செய்தல் வேண்டும். அதாவது இங்கு, முன்னர் ''கட்டுப்பாடு'' உள்ளவர்களாக இருந்த பல குழுமத்தினர் தங்களைத் தாங்களே தமது சமூகத்தளைகளிலிருந்து விடுவித்துக் கொண்டுள்ளனர். இது 1844க்கு முன்னர் நடைபெற்றதாகும். அத்தகையோரை ''இட்டம் போன'' (இஷ்டம் போன)வர்கள் என்று குறிப்பிடும் மரபு உண்டு. ஒல்லாந்தர் காலத்திலிருந்தே இந்தப் பண்பினை நாம் காணலாம் (Zwaadracoon).

யாழ்ப்பாணச் சமூக அமைப்பின் இன்னொரு பிரதான அமிசம் வன்மையான (சிலவேளைகளில் கூர்மைப்பட்ட) பிரதேசவாதமாகும்.



வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப்பகுதி என்ற பாரம்பரிய செல்வாக்கு வட்டங்கள் உண்டு. இந்தப் பிரதேசப் பாரம்பரிய உணர்வு சாதி முறைமையையும் ஊடறுத்துச் செல்வதுண்டு. உதாரணமாகத் தீவுப்பகுதியில் பஞ்சமர் தம்மை வடமராட்சிப் பகுதிப் பஞ்சமரிலும் பார்க்க அந்தஸ்து நிலை கூடியோராக நோக்குவது வழக்கம்.

யாழ்ப்பாணச் சமூக அமைப்பின் இன்னொரு முக்கிய அமிசம் இங்கு நிலவும் குடும்ப ஒருங்கு நிலையாகும். இச்சமூகத்தின் இறுதி அலகு குடும்பமேயாகும். தனி மனிதரன்று. மனிதர்கள் குடும்ப அங்கத் தவர்களாக இயங்கும் முறைமையுண்டே தவிர அவர்கள் மேற்குலகிற் கொள்ளப்படுவது போன்று ''தனி'' மனிதர்களாகக் (Individual) கொள் ளப்படுவதில்லை. "Individual" என்னும் மூலக் கருத்துப்படி நோக்கி னால் ("in+ dividual" அதற்கு மேல் பிரிக்கப்பட முடியாதது) அந்தப் பிரிக்கப்பட முடியாத அலகு ''குடும்பமே''யாகும். குடும்பம் எனும் பொழுது முன்னர் விஸ்தரிக்கப்பட்ட (Extended Family) கருத்திற் கொள்ளப்பட்டது (சிறியதாய் பெரியதாய் பிள்ளைகள், மாமன் மாமி பிள்ளைகள், சிறிய தகப்பன் பெரியதகப்பன் பிள்ளைகள்). ஆனால் இப்பொழுது ஒரு தாய் தந்தையரின் பிள்ளைகள், அவர்களின் பிள்ளை கள் வளர்ந்தவர்களாகும் நிலைவரை (அதாவது விவாகத்தின் பின்னரும் சில காலங்களுக்கு) ஒரு குடும்பமாகவே பார்க்கப்படும் ஒரு நிலைமை யுண்டு.

இந்தக் குடும்ப உணர்வு காரணமாக விவாகம் (கலியாணம்) மிக முக்கியமானதாகின்றது. ஏனெனில் கலியாணம் முன்னர் கூறியது போன்று, குடும்ப உருவாக்கத்துக்கான மையப்புள்ளியாகும். தங்கள் பிள்ளைகள், சகோதரர்களின் ''குடும்ப''மாக வருபவர்கள் நல்ல 'குடு ம்ப'மாக இருத்தல் வேண்டுமென்ற கருத்துக் காணப்படுவது இயல்பே. இதனால் சாதியும் சாதியின் கூறாகிய ''பகுதி''யும் முக்கியமாகின்றன. காதற் கலியாணம் தவிர்க்கப்பட முடியாத நிலையிலே தான் செய்யப் படும். அப்படிக் காதல் கலியாணம் செய்யுமிடத்திலும் புதுத் தம்பதியினர் ஏதோ ஒரு குடும்பத்தினரிடையேயே அந்நியோந்நியமாக பழகும் நிலைமை ஏற்படும். இந்தக் குடும்ப இணைவு நிலை அண்மைக் காலத் தில் புலப்பெயர்வு நடைமுறையிலும் காணப்படுகின்றது. பிரான்ஸ், நோர்வே, கனடா போன்ற நாடுகளுக்கு முதன் முதலிற் புலம் பெயர்ந்து சென்றவர்கள், அவ்விடங்களிலிருந்து கொண்டு தத்தம் குடும்பத் தினரையும், பின்னர் பிரதேசத்தினரையுமே அழைத்துக் கொண்டனர். இதனால் நோர்வேயில் தீவுப் பகுதி, அரியாலை முதனிலைப்பாட்டையும், பிரான்சில் வடமராட்சி முதனிலைப்பாட்டையும் அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணச் சமூகம் படிநிலைப்பட்ட ஒன்றாக அமைந்திருந்தால், அச்சமூகத்தினரின் வாழிட அமைவில், பிரதேச - குழும / உறவினர் இணைவினைக் காணக்கூடியதாகவிருந்தது. அதாவது ஒரு கிராமத்தில் ஒவ்வொரு சாதிக்குமான ஏறத்தாழ வரையறுக்கப்பட்ட வாழிடப் பகுதிகளும், அதன்மேல் சாதிக்குள் ஒவ்வொரு உறவினர் குழாமும் - ஒவ்வொரு ''பகுதி''யினரும் பிரதானமாக வாழும் பகுதிகளும் அமைந்தன. இந்தப் பிரதேச / உறவினர் குழுமத்துக்கான ஓர் அடிப்படைப் பொருளாதாரக் காரணியும் உண்டு. குடும்ப குழுமத்தினரின் காணிகள் ஒரு இடத்திலேயே செறிந்திருக்கும். மேலும் ''தொழி''க்கான பரஸ்பர உதவியும் ஒரு காரணமாகும். குறிப்பாகத் தோட்டக் காணிகளைப் பொறுத்த வரையில் இந்த நிலைப்பாட்டின் தொழிற்பாட்டைக் காணலாம். தமிழகக் கிராம அமைப்பிலும் உறவுக்குழும ஒருங்கு நிலையினைக் காணலாம். ஆனால் அங்கு, அக்ரகாரம் கோயில் என்பனவே பிரதான இடம்பெறும்.

**வரலாற்றுப் பின்புலத்தில் இச்சமூக உருவாக்க, சமூகப் பேணல் சமூக அசைவியக்க நடவடிக்கைகள் பற்றிய ஒரு கண்ணோட்டம்**

யாழ்ப்பாணச் சமூகத்தின் உருவாக்கத்தினுள் நிற்கும் சமூக அதிகார மையம் யாது என்பது சுவாரசியமான ஒரு வினாவாகும். ஏனெனில் இப்பகுதி ஒரு குறிப்பிட்ட சமூக உருவாக்கத்தைக் கொண்டிருந்தது மாத்திரமல்லாமல் இங்கு ஒருவகையான ''அரச உருவாக்கமும்'' (State formation) நிகழ்ந்தேறியுள்ளது. ''யாழ்ப்பாண இராச்சியம்'' (Kingdom of Jaffna) என வரலாற்று ஆசிரியரால் போற்றப்படும் அரச அமைப்பு, 14ஆம் நூற்றாண்டு முதல் 1619 இல் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்படும் வரை நிலவியது. இந்த அரசியலமைப்பின் தோற்றம் யாழ்ப்பாணத்தினை அதன் சமூகத் தனித்துவங்களுடன் பேணுவதற்குப் பெரிதும் உதவிற்று எனலாம். ஆயினும் இந்த அரச அமைப்பு எந்த அளவுக்கு ஒருமுகப்படுத்தப்பட்ட அதிகாரத்தினைக் கொண்டிருந்தது என்பது இன்னும் ஆராயப்படாத ஒரு விடயமாகும்.

யாழ்ப்பாணத்தின் சனவேற்றம் பற்றி (Peopling of Jaffna) யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய வரலாற்று மூலங்களான ''கைலாயமாலை'', 'யாழ்ப்பாண வைபவ மாலை'' ஆகியவற்றை நோக்கும் பொழுது, அந்நூல்கள் யாழ்ப்பாணத்தில் அரசோச்சிய அரசருக்குக் கொடுக்கின்ற அளவு முக்கியத்துவத்தை யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் குடியேற்றப்பட்ட முதலிமாருக்குக் கொடுப்பதை எவரும் அவதானிக்கத் தவறமுடியாது. யாழ்ப்பாணத்தின் இலக்கிய உருவாக்கத்தை (Literary Formation) அவதானிக்கும் பொழுதும், இவ்வுண்மை வலுப் பெறுகின்றது. ''கரவை வேலன் கோவை'', ''தண்டிக்கைக்கனகராயன் பள்ளு'' முதலிய நூல்கள் எடுத்துக்காட்டாக அமைகின்றன. மேலும் நமது வரலாற்றுச் சமூகவியலை நோக்கும் பொழுது யாழ்ப்பாணத்தின் சனக்கண்ணோட்ட நிலையில், யாழ்ப்பாண மன்னர்களிலும் பார்க்க அவ்வப்பிரதேச முதலிமாரே முக்கிய இடம் பெறுவதை அவதானிக்கலாம். கண்டி மன்னன் சம்பந்தமாக சிங்கள மக்களிடையே நிலவி வந்துள்ள வரலாற்றுப்பிரக்ஞை யாழ்ப்பாண அரசர்கள் பற்றி யாழ்ப்பாண மக்களிடையே நிலவிவரவில்லை.

இதற்குக் காரணம் பிரதேச முதலிகளின் நிலவுடைமை முக்கியத்துவமேயாகும். ஒவ்வொரு பிரதேசத்திலும் அவ்வவ் முதலிகளின் குடும்பத்தை மையமாகக் கொண்டு அங்கு நிலவிய சமூகக் கட்டமைப்பு ஒழுங்கமைப்புப் பெற்றிருந்தது. யாழ்ப்பாணத்து வரலாற்று மூலகங்களும் இந்த நிலவுடைமை மேலாண்மையையே வற்புறுத்துகின்றன எனலாம்.

தமிழ்த் தேசிய வாதத்தின் எழுச்சியுடன் தமிழர்களுக்கு இங்கு ஆட்சியுரிமை வழங்கப்பட வேண்டுமென்னும் அரசியற் கோஷமெழுந்த பின்னர் தான் யாழ்ப்பாண அரசு பற்றிய வரலாற்றியல் ஆர்வம் அதிகரிக்கின்றது. 1957இல் வெளிவந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் சங்கிலி நாடகமும், அதற்கு முன்னுரையாக வந்த ''இலங்கை வாழ் தமிழர் வரலாறு'' எனும் கட்டுரையும் இத்துறையில் மிக முக்கியமானவையாகும். அதற்கு முன்னர் வந்த நூல்களில் பெரும்பாலும் இலங்கை முழுவதிலும் தமிழர்களுக்கிருந்த இடமே அழுத்தம் பெறுகின்றது.

மேற்கூறிய வரலாற்று மூலநூல்களை இக்கண்ணோட்டத்தில் நோக்கும் பொழுது, உண்மையில் இந்நூல்கள் யாழ்ப்பாணச் சமூக அமைப்பின் உயர்மட்டச் சமூகக் குழுமத்தினரின் மேலாண்மையை அங்கீகாரப்படுத்துவதற்கான இலக்கிய முயற்சிகள் என்றே கொள்ளப்படல் வேண்டும். இந்த நூல்கள் இந்த மேலாண்மையை இவ்வாறு நிலைநாட்ட, இன்னொரு மட்டத்தின் பல்வேறு சாதிக்குழுமங்கள் தங்கள் தங்கள் சாதிப்பெருமைகளைத் தமது சாதி வரலாறுகளில் பதித்து வைத்துள்ளனவெனக் கூறலாம். அத்தகைய ஒரு சாதி வரலாற்று நூலே அண்மையில் வெளிவந்த ''விஷ்ணு புத்திர வெடியரசன் வரலாறு'' ஆகும். சாதி வரலாறுகள் பல இன்னும் வாய்மொழியாகவே கையளிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு சமூக உருவாக்கத்திலும் அதன் மேல் நிலையிலுள்ள வர்கள் தங்கள் மேலாண்மையை நியாயப்படுத்தவும் அறவலியுடைய தாகக் காட்டவும் முக்கியமாக அதைப் பேணவும் முனைதல் இயல்பே. இப்பண்பு தமிழில் சங்க இலக்கியத் தொகுப்பு முதல் தொழிற்பட்டு வருவதை நாம் அறிவோம். அத்தகைய ஓர் அதிகாரப் பேணுகை முறைமை யாழ்ப்பாணத்தில் எவ்வாறு தொழிற்பட்டு வந்துள்ளது என்பதை அடுத்து நோக்குவோம்.

யாழ்ப்பாண இராச்சியம் தோன்றிய காலம் முதல், இச்சமூக உருவாக்கத்திலிடம் பெற்று வந்துள்ள முதலிமார் குடும்பங்கள் தாங்கள் அதிகாரத்துடனும் செல்வாக்குடனுமிருந்து வந்த பிரதேசங்களில் தங்களுக்கு மேலேயுள்ள அதிகார சக்தி மாறியவிடத்தும் தங்கள் அதிகார செல்வாக்கு நிலைமைகளைப் பேண முயன்றே வந்துள்ளனர். இந்தப் பேணுகை முயற்சிகளைத் தாம் தனித்தும் ஒருமித்தும், காலத்துக்கு காலம் மேற்கிளம்பும் சமூகக் குழுமங்களுடனும் இணைத்தும் பேணியும் வந்துள்ளனர்.

இந்தச் சமூக அதிகார பேணுகையை அவர்கள் சமூகக் கட்டுப்பாடு (Social Control) மூலம் நடத்தி வந்தனர். இந்த சமூகக் கட்டுப்பாடு தனியே அதிகார பலத்தின் மூலம் நிலைநிறுத்தப்படுவதில்லை. அந்த வட்டத்தினுள் இயங்கும் சகல நிறுவனங்களும் அதற்கப் பயன்படும் என்பது கிறாம்சி (Gramsci) வலியுறுத்தியுள்ள உண்மையாகும். அத்தகைய ஒரு பயன்பாட்டுக்குக் கோயில்கள் பெரிதும் உதவின (சிவத்தம்பி 1990). இது பற்றிச் சற்றுப்பின்னர் விரிவாகப் பார்ப்போம். இங்கு யாழ்ப்பாணத்தின் மேலாண்மைச் சக்திகள், சமூக அதிகார மட்டத்தில் தங்கள் ''ஆட்சி''யினை எவ்வாறு பேணிவந்துள்ளனர் என்பதைப் பார்ப்போம்.

யாழ்ப்பாண மன்னர்களின் ஆட்சியின் பொழுதே இம் முதலிமார்கள் யாழ்ப்பாண அரசின் இறுதி அரசனின் வீழ்ச்சியிற் கணிசமான பங்கேற் றிருந்தனர் என்பது ஏற்கனவே தெரிந்ததே. யாழ்ப்பாணம் குடியேற்ற நாட்டாட்சி முறைக்கு (கொலோனியலிச முறைமைக்கு) வந்ததன் பின்னர், ஒவ்வொரு காலகட்டத்திலும் இந்த, அதிகார பேணுகைக்கான முயற்சி நடைபெற்றே வந்துள்ளது. ஒரு புறத்தில் தமக்கு மேலேயுள்ள அதிகாரத்தினருடன் இணைந்து நின்று கொண்டு மறுபுறத்தில் தமது ஆதிக்கத் தளத்தில், தம்மையறியாது அல்லது தம்வழியாகச் செல்லாது, எந்த ஓர் ஊடுருவலோ உள்ளீடோ ஏற்படுவதற்கு இடமளிக்காது தமது அதிகாரத்தளத்தை மேலாண்மையாளர் பேணிவந்துள்ளனர்.



போர்த்துக்கேய ஆட்சியின் பொழுது முதலிமாரின் உள்ளூர்ச் செல்வாக்கு போர்த்துக்கேய ஆட்சியின் வன்மைக்குத் தடையாகவிருந்த முறைமை பற்றி அபேசிங்க எடுத்துக் கூறியுள்ளார் (அபேசிங்க, 1988 :24). ஒல்லாந்த ஆட்சிக்காலத்தில் இது ஒரு நிர்வாகப் பிரச்சினை யாகவே வளர்ந்திருந்தது. சுவாட்றக்கூன் (Zwaardracoon) என்னும் பொறுப்பதிகாரி 1697இல் விட்டுச் சென்றுள்ள நினைவுக்குறிப்பின் படி மேலாண்மையிலுள்ள சாதியினர், மற்றைய சாதியினரை ஒடுக்குகின் றனர் என்றும், ஏழை மக்களைத் துன்புறுத்தி அல்லற்படுத்துகின்றனர் என்றும், அம்மக்கள் ஒல்லாந்த ஆட்சிக்கு இக்குறைபாட்டைத் தெரிவிப் பதைத் தடுக்கின்றனர் என்றும் கூறுகின்றார் (பக்.25). இதன் கார ணமாகச் செல்வாக்குள்ள பதவிகளை வெள்ளாளருக்கு மாத்திரமல் லாது அவர்களுக்குச் சமமான மற்றச் சாதியினருக்குக் கொடுப்பதன் அவசியம் பற்றியும் அவர் குறிப்பிடுகிறார். இத்தகைய நியமனங் களினால் நிர்வாகப் பிரச்சினைகள் வரக்கூடுமென்றும் கூறுகின்றார்.

ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் இந்த அதிகாரப் பேணுகை நடந்ததற்கான பல உதாரணங்கள் உள்ளன. ஆங்கிலேயர் நிறுவிய நிர்வாகத்தில் முக்கிய இடம் பெற்ற மேலாண்மையினர், அந்தப் பதவிகளின் அதிகார வலிமை கொண்டே, பாரம்பரியமாகத் தமக்குக் கீழ்ப்படக் கிடந்தோரை அடக்கி வந்துள்ளனர். ஆங்கில ஆட்சியின் கீழ் ஏற்பட்டு வந்த கல்வி, பண்பாட்டு மாற்றங்களுக்கு முகம் கொடுத்த ஆறுமுகநாவலர், ஆங்கிலேயே ஆட்சியினரால் ஏற்பட்ட கருத்துநிலை ஆபத்துக்களுக்கெதிரான ஒரு கொள்கையையே வகுத்து விடுகின்றார்.

''(நாவலரின்) கோரிக்கை ஆங்கிலக் கல்வி காரணமாகச் சைவசமய வாழ்க்கைப் பாரம்பரியத்திலிருந்து யாழ்ப்பாண மக்கள் பிழைக்கக்கூடாது என்பதுதான்.................. அவற்றுக்கான பதிலைத் தேட முனைவதற்கு முன்னர், நாவலர் பிரித்தானிய ஆட்சியை ஏற்றுக் கொண்டார் என்பதும், பிரித்தானிய வழிவந்த சமூக மாற்றங்களை - அவை மேற்குறிப்பிட்ட அறநெறி ஒழுக்கத் தாக்கங்களை தெளிவாக ஏற்படுத்தாதுவிடின் - அவர் அவற்றை ஏற்கத் தயங்கவில்லை என்பதும் தெட்டத் தெளிவாக விளங்கு கின்றன. சமூகவியற் பரிபாஷையிற் கூறுவதானால் அவர் நவீனமயப் படுத்தலை எதிர்க்கவில்லை. ஆனால் நவீனமயவாக்கம் (Modernization) பாரம்பரியத்தை உடைப்பதாக இருத்தல் கூடாது என்று கருதினார் என்பது தெரிய வருகின்றது'' (சிவத்தம்பி 1979).

நாவலருக்குப் பாரம்பரியப் பேணுகை என்பது பாரம்பரியச் சமூக அமைப்பைப் பேணுவதாகவே இருந்தது என்பது அவர் எழுத்துக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாக நன்கு புலப்படுகின்றது. நாவலரின் கல்விக்கொள்கையும் அமைப்பும் கல்வியைக் குறிப்பிட்ட ஒரு சமூக வட்டத்துக்கு அப்பாலே கொண்டு செல்லவிடவில்லை. இவை யாவற்றினூடே நாவலரிட மிருந்து அறநிலைப்பட்ட ஓர் எண்ணத் துணிபு (Conviction) இருந்தது. நாவலருக்குப் பின்வந்த காலத்தில், இந்தப் பேணுகை முறைமையானது அதிகாரப்பரவலைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்பட்ட திட்டமிடப்பட்ட நடவடிக்கையாகவிருந்தது.

சேர். பொன்னம்பலம் இராமநாதன் சம்பந்தப்பட்ட மூன்று நட வடிக்கைகளை உதாரணத்துக்கு எடுத்துக் கூறலாம். 1920- 30களில் பாடசாலைகளிற் சாதியமைப்பை ஊறு செய்யும் வகையில், பள்ளிப் பிள்ளைகளுக்குச் சமாசனம், சமபோசனம் வழங்கப்படுவதற்கு எதிரான இயக்கம் இருந்தது. கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சேர்க்கப்பட்ட வெள்ளாளரல்லாத மாணவர்களுடன், வெள்ளாள மாணவர்களுக்கு சமபோசனம் வழங்குவதை எதிர்த்து 1930 இல் சேர் பொன்.இராமநாதன் தேசாதிபதியைச் சந்தித்தார் (ஜேன்றசல் 11).

தேசவழமைப்படி உயர்ந்த சாதியினரின் இறுதிக் கிரியை முறைக ளுக்குப் பாத்தியதையற்ற சாதியைச் சேர்ந்த ஒருவர், தமது மனைவியின் இறுதி ஊர்வலத்தைப் பறை முதலியவற்றுடன் கொண்டு சென்று, சட லத்தை எரிக்க முற்பட்ட பொழுது, அதனை எதிர்த்தவர்கள் ''சட்ட விரோதமற்ற'' வகையில் எதிர்த்தனர் என அவர்களுக்கெதிராகப் போடப் பெற்ற வழக்கில் அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். வழக்கு மேன்முறையீட்டுக்குச் சென்ற பொழுது இராமநாதன் எதிரிகள் தேச வழமைப்படி அந்த மரண ஊர்வலத்தை நிறுத்த உரிமையுடையவர் என்று வாதிட்டார் என்று தேசவழமை பற்றி நூல் எழுதியுள்ள சிறிராம்நாதன் எடுத்துக்கூறியுள்ளார் (பக்.19); (இராணி எதிர் அம்பலவாணர் வழக்கு).

சர்வஜன வாக்குரிமை வழங்கப்படக்கூடாது என இராமநாதன் கருதினார்.

''இராமநாதனும் மற்றும் பல பழமை பேண் வாதிகளும் (செல்லத் துரை, சிறிபத்மநாதன், ஆர். தம்பிமுத்து இதற்கு புறநடையானவர்கள்) வெள்ளாளரல்லாத சாதியினருக்கும் பெண்களுக்கும் வாக்குரிமை அளிப்பது கும்பலாட்சி (Mobrule) க்கு இடம் கொடுக்கும் ஒரு பாரிய பிழையென்று நம்பினர், வாதிட்டனர். சிறப்பாக இராமநாதனோ, அவ்வாறு வாக்குரிமை வழங்குவது இந்து வாழ்க்கை முறைக்குப் பழிகேடு விளைவிப்பது என்று கருதினார்'' (ஜேன்றசல் 16).

இத்தகைய அதிகாரப் பேணுகை முறைமை நடந்த அதே வேளை



யில், அந்த அதிகாரப் பேணுகையை எதிர்த்துப் சமூக சமத்துவக் கருத்துக்களை ஆதரித்தவர்களும் யாழ்ப்பாணத்திலே இருந்து வந்துள் ளனர். கல்வி வசதி விஸ்தரிப்பில், இந்து போட் தலைவர் இராசரத் தினத்தின் பங்கு மிகக் கணிசமானதாகும். யாழ்ப்பாணத்தில் தோன்றிய வாலிப காங்கிரஸ், சமத்துவ அடிப்படையிலான ஒரு சமூக மாற்றத் துக்குப் போராடியது (கதிர்காமர் - 1980).

இந்த இருகிளைப்பாடு (பழைமை பேண்வாதமும், மாற்றத் துக்கான ஆதரவும்) யாழ்ப்பாணச் சமூகத்தின் கருத்துநிலைத்தளத்திலும் நன்கு தெரிகின்றது. போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலங்களிலும் சமூக மாற்ற நடைமுறைகள் காணப்படுவதை நிர்வாக ஏடுகள் குறிப்பிடு கின்றன (சுவாட்றக்கூன் : 29). யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பின் இயல்பும் (சூத்திர மேலாண்மை) தென்இந்தியா மட்டக்களப்புச் சமூகத்தினிலே காணப்படுவது போன்ற நன்கு வேரூன்றிய ஒரு நில வுடைமை இல்லாமையும் இந்த அசைவியக்கத்துக்கு இடம் கொடுத்தன எனச் சிந்திக்க இடமுண்டு.

அடுத்து யாழ்ப்பாணச் சமூக அமைப்பின் கருத்துநிலை அடிப்படை களை நோக்குவோம்.

## IV. இச்சமூக அமைப்பின் பண்பாடும் கருத்து நிலையும்

யாழ்ப்பாணச் சமூக முறைமையின் இயல்புகள் தன்மைகள் பற்றி ஆராயும் நாம், அச் சமூகமுறைமையின் தொடர்ச்சிக்கான காரணிகள் பற்றிச் சிந்திக்க வேண்டுவது அவசியமாகும்.

ஒரு சமூக முறைமையின் தொடர்ச்சிக்கு அதன் தனித்துவம் பற்றியும், அந்தத் தனித்துவத்தின் சிறப்புக்கள் பற்றியும், அதனைப் பின்பற்றுவோரிடத்துக் காணப்படும் பிரக்ஞை (Consciousness) முக்கிய மானதாகும். அந்தப் பிரக்ஞை அதன் பண்பாடு பற்றிய பிரக்ஞை யாகவும் அந்தப் பண்பாட்டினது பெருமைகள் பற்றிய பிரக்ஞையாகவும் தொழிற்படும். அதாவது ''யாழ்ப்பாணச் சமூகம்'' என்பதன் தொடர்ச்சி, அந்தச் சமூகத்தின் பண்பாடு பற்றிய பிரக்ஞையினதும், அப்பண் பாட்டின் பெறுமானங்களாகக் கொள்ளப்படுவன பற்றிய பிரக்ஞை யினதும் வலிமையிலேயே தங்கியுள்ளது.

இத்தகைய ஒரு சிந்தனை நம்மைக் ''கருத்துநிலை'' (Ideology) பற் றியும் பண்பாடு (Culture) பற்றியும் இவ்விரண்டுக்குமுள்ள உறவு பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், எண்ணக்கரு மட்டத்திலும், பிண்டப்பிரமாணமாக யாழ்ப்பாண மட்டத்திலும் வைத்து விளங்கிக் கொள்வதற்கான ஒரு தேவையை ஏற்படுத்துகின்றது (சிவத்தம்பி 1984).

கருத்து நிலை என்பது பற்றிய பின்வரும் விளக்கத்தினை நோக்கு வோம்.

''சமூக ஊடாட்டம் வளரத் தொடங்க (அந்த ஊடாட்டத்தில் ஈடுபடும்) மனிதர்கள், உலகம் பற்றியும், தமது சொந்த சமூக வாழ்க்கை பற்றியும், தெய்வம் பற்றியும், சொத்து, அறம், நீதி ஆகியன பற்றியும் பொதுவான எண்ணக்கருக்களையும் நோக்குக்களையும் உண்டாக்கிக் கொள்கின்றனர். இத்தகைய சிந்தனை வழியாக சமூகம் பற்றியும், அரசியல், சட்டம், சமயம், கலை, தத்துவம் பற்றியும் கருத்துப்பிரமாண மான நோக்கு வளரத் தொடங்குகின்றது. அந்தச் சிந்தனை நோக்கே கருத்துநிலை எனப்படும்'' (ஜேம்ஸ்கிளக்மன்).

மார்க்ஸீயச் சிந்தனைப் பாரம்பரியத்தில் புதிய பரிமாணங்களை ஏற்படுத்திய அல்தூஸர் ''கருத்துநிலை என்பது (தனக்குரிய தர்க்கப் பாட்டினையும் இறுக்கத்தையும் கொண்ட) ஓர் அமைப்பு முறையாகும். இந்த அமைப்பு (System) சில குறியீடுகளைக் கொண்டது (படிமங்கள், ஐதீகங்கள், கருத்துக்கள், எண்ணக்கருத்துக்கள் என தேவைக்கும் இடத்துக்கும் ஏற்பவருவன). இதற்குக் குறிப்பிட்ட அந்தச் சமூகத்திலே வரலாற்று நிலைப்பட்ட ஓர் இருப்பும் (Existence) ஒரு கடமைப்பாங்கும் உண்டு. சமூகங்களின் வரலாற்றுச் சீவியத்துக்கு இந்தக் கட்டமைப்பு அவசியமானதாகும்'' என்று கூறுவர். மேலும் எந்த ஒரு சமூகத்திலும் மனிதர்கள், தங்கள் சீவியத்தின் தேவைகளுக்கியையத் தம்மை உரு வாக்கிக் கொள்வதற்கும், மாற்றிக் கொள்வதற்கும் கருத்துநிலையானது (அது வெகுசன குறியீடுகளின் ஓர் அமைப்பு என்ற முறையில்) முக்கிய மானது என அவர் கூறுவர்.

''பண்பாடு'' (culture) என்பது மனித சமூகத்தின் குறியீட்டு அமிசங் கள் பற்றியதும், அச்சமூகம் கற்றறிந்து கொள்ளும் அமிசங்கள் பற்றியது மாகும். கருத்துநிலை என்பது (இதனால்) பண்பாட்டினுள்ளிருந்து மேற் கிளம்புவதாகவேயிருக்கும். அதாவது எந்த ஒரு கருத்து நிலையும், தனது பண்பாட்டினை எடுத்துக்காட்டுவதாகவே இருக்கும். ஆனால் ஒன்று, அவ்வாறு எடுத்துக்காட்டும் கருத்து நிலையானது அப்பண்பாட்டினுள் இடம்பெறும் சகல நடைமுறைகளையும் ஒருங்கு திரட்டிப் பிரதிபலிக் காது. அந்தப் பண்பாட்டினுள் மேலாதிக்கம் செலுத்தும் குழுமத்தினது கருத்துக்களின் பிரிவு ஆகவே இருக்கும். எனவே ஒரு சமூகத்தின்



கருத்துநிலை என்பது அச்சமூகத்தின் பிரதான சக்திகளினை எடுத்துக் காட்டுவதாகவே இருக்கும்.

இவ்வேளையில் நாம் இன்னுமொரு விடயத்தையும் மனத்திருத் திக் கொள்ளல் வேண்டும். இந்தக் கருத்து நிலையினில், சமூக மேலாண் மையுள்ள சக்திகளின் மேலாதிக்கம் (Hegemony) காணப்படும். அதாவது அந்தச் சமூகத்திலுள்ள மேலாதிக்கமான சிந்தனைப் போக்குக்கு அங்கீகாரம் வழங்குவதாக இந்தக் கருத்து நிலை அமையும். அன் ரோனியோ கிறாம்ஸ்சியின் இந்த மேலாண்மைக் கொள்கை மிக முக்கிய மான ஒன்றாகும். குறிப்பிட்ட சமூகத்தின் மேலாண்மைக்குழு தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்தி அதனை இயல்பான, ஏற்புடைமை யுள்ள ஒன்றாக ஆக்குவதற்கு பண்பாட்டின் பல்வேறு அமிசங்களைப் பயன்படுத்தும் பாடசாலைகள், ஆலயங்கள், புதினப்பத்திரிகைகள், கட்சிகள் எனப்பல இப்பணிக்குப் பயன்படும்.

இந்த அடிப்படையிலே பார்க்கும் பொழுது யாழ்ப்பாணச் சமூகத் தின் பிரதான கருத்து நிலை யாது என்று இனங்காணுவதும் இந்தக் கரு த்து நிலை எவ்வாறு அந்தச் சமூகத்தின் பிரதான மேலாதிக்கச் சக்தி களின் தேவையாக அமைகின்றது என்பதையும், அதன் கருவியாகப் பயன்படுகின்றதென்பதையும் கண்டறிந்து கொள்ளல் அவசியமாகும்.

யாழ்ப்பாணச் சமூகத்தின் பிரதான கருத்துநிலையானது அந்தச் சமூகத்தின் அதிகாரபடி நிலைத்தன்மையை (Hierarchical character) நியாயப்படுத்துவதாக அமைவது அவசியமாகும். ''அதிகாரப்படி நிலை'' என்பது மதஞ்சார்ந்த ஒரு கருத்தாகும். அந்த அளவில், அந்த அதிகாரப் படி நிலைமை ஏற்றுக் கொள்ளும் மதம் முக்கிய இடம் பெறுவது தவிர்க்க முடியாததாகின்றது. இவ்வாறு சிந்திக்கும் பொழுது, யாழ்ப்பாணத்தின் ஒரு குறிப்பிட்ட மட்ட சமூக அங்கீகாரத்துடன் எடுத்துப் பேசப்பெறும் ''சைவமும் தமிழும்'' என்ற கருத்து நிலை முக்கியத்துவம் பெறுகின்றது.

அதே வேளையில், யாழ்ப்பாணச் சமூகத்தின் அசைவியக்கத்தி னைச் சுட்டுவதும் ''சைவமும் தமிழும்'' என்ற கருத்து நிலைப்பாட்டின் மறுபுறத்தைக் காட்டுவதாகவும் உள்ள ஒரு கருத்து நிலையும் ஒன்று ண்டு. அது யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசினால் முனைப்புற எடுத்துக் கூறப்பட்டதான தராண்மைவாதச் சீர்திருத்த கோட்பாடாகும். இந்த இரண்டு கருத்து நிலைகளும் ஒன்றுக்கொன்று முரணானவையாகும். ஆனால் இவை யாழ்ப்பாணச் சமூகப் பிரக்ஞையின் இருவேறு பிரக்ஞை மட்டங்களைக் (Levels of Consciousness) குறிப்பவையாகவும் கொள்ளப் படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத் தமிழ்க் கருத்து நிலை என்பது யாழ்ப்பாணத்தின் பிரதான மதமரபினையும் மொழிப் பண்பாட்டையும் இணைத்து நோக்குகின்ற ஓர் ''உலக நோக்காகும்'' இதன்படிக்குச் சைவமும் தமிழும் ஒன்றிலிருந்து மற்றது நீக்கப்படமுடியாததாய், ஒன்று மற்றதில்லாமல் பூரணத்துவம் அடைய முடியாததாய் இருக்கும். ஒரு மதபண்பாட்டு இணைவு நிலை யாகும். இந்த நோக்கு சைவத்தினதும், தமிழினதும் முழு வரலாற்றையும் உள்ளடக்கியதாகும். இந்நோக்கின் உள்ளார்த்தங்கள் மிக ஆழமானவை.

இதன்படிக்குத் தமிழ் மனிதன், அவன் மொழி, அதன் பண்பாடு ஆகியவற்றின் உருவாக்கத்தில் வேறு எந்த மதத்துக்கும் இடமில்லை எனும் எண்ணத்துணிபு முன்வைக்கப்படுகின்றது. சமணம், ஆசீவகம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களின் தமிழ்சார் பங்க ளிப்புகளை இக்கருத்துநிலை முற்றுமுழுதாக மறுதலிக்கின்றது. (இந்த உட்கிடக்கையை ''பல்வேறு மதத்தினரின் தமிழ்த் தொண்டு'' எனப் பெறும் கருதுகோளிலே காணலாம். இதன்படிக்குச் சமணம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகியன தமிழுக்கு ஆற்றிய தொண்டு பற்றிப் பேசலாம் ''சைவம் தமிழுக்கு ஆற்றிய தொண்டு'' என்று பேசப்படுவதில்லை.)

''சைவமும் தமிழும்'' என்ற இக்கருத்துநிலை, வைணவத்தைத் தானும் உள்வாங்குவது என்று கூற முடியாது. அத்துடன் யாழ்ப்பாணத்து மக்களின் அன்றாட மதவாழ்க்கையிற் காணப்பெறும் சாஸ்திர அங்கீகார மற்ற வழிபாட்டு முறைமைகளாவன குளுத்தி, மடை போன்றவற்றை யும் மறுதலிப்பதாகவேயுள்ளது. இக்கருத்துநிலை, சைவசித்தாந்தத் தினையே தமிழர் வாழ்க்கையின் மெய்யியல் தளமாகக் கொள்கின்றது. இங்கு பேசப் பெறும் சைவம், காஷ்மீர சைவம், வீரசைவம் ஆகியன வற்றைக் குறிப்பிடாது, தேவார திருவாசகங்களிலும் பண்டார சாஸ் திரங்களிலும் எடுத்துக் கூறப்படும் சைவத்தினையே உண்மையான சைவம் எனக் கொள்வதாகும். இந்தக் கருத்து நிலையினை, இது இன்று எடுத்து பேசப் பெறும் நிலையில், உருவாக்கியவர் ஆறுமுகநாவலர் (1822 - 1879) அவர்களாவார். அவர் இதனை ஒரு குறிப்பிட்ட வரலாற் றுச் சூழலிலேயே உருவாக்கினார் என்பது எமக்குத் தெரிந்ததே. கிறிஸ் தவத் தேவ ஊழியப்பணியினரின் செயற்பாடுகளினால், யாழ்ப்பாணச் சமூகத்தின் உயர் மட்டத்தினர் மதம்மாறும் நிலையை எதிர்ப்பதற்காக அவர் இக்கோட்பாட்டினை உருவாக்கினார். இதனால் நாவலரின் எதிர்ப்பு, புரட்டஸ்தாந்தக் கிறித்தவத்தையே முக்கியமாகப் பாதித்தது.

தமிழரிடையே பிற மத பண்பாட்டுத் தாக்கங்கள் முன்னர் வந்த வேளைகளிலும் இத்தகைய ஒரு சைவ, தமிழ் இணைப்புப் பேசப்பட்



டுள்ளது உண்மையாகும். திருஞானசம்பந்தரிலும், அருணகிரியாரிலும் இக்கருதுகோளைக் காணலாம். ஆனால் யாழ்ப்பாண நிலையில் இது உருவாக்கப் பெற்று, வியாக்கியானஞ் செய்யப்படும் பொழுது இது ஒருபுறத்தில் பிராமணர்களின் இந்து மத மேலாண்மை நிலையினை மறுதலிப்பதாகவும் (சைவக் குருக்கள்மாரை நியாயப்படுத்துவதாகவும்) மறுபுறத்தில் வேளாள மேலாண்மையை நியாயப்படுத்துவதாகவும் அமைகின்றது. சத் - சூத்திரக் கோட்பாடு இதனடியாகவே வருகின்றது. மேலும், சைவசித்தாந்தம் படிநிலைப்பட்ட அமைப்பினை ஏற்றுக் கொள்வதாகும். அது தனது சரியை, கிரியை, ஞானம், யோகம் என்னும் கோட்பாடு மூலம் ஆன்மாக்களின் முதிர்ச்சி நிலையில் வேறுபாடு காண்பது மாத்திரமல்லாமல் முக்தி நிலையில் கூட இந்தப் படிநிலையை வற்புறுத்தும் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியும் என முத்தி நிலையையே அது வகைப்படுத்தும். இந்த உலகத்திலே மாத்திர மல்லாமல் அடுத்த உலகத்திலும் அது சமத்துவத்தை மறுதலிக்கும் (சிவத்தம்பி 1983).

சைவமும் தமிழும் என்ற கோட்பாட்டின் அரசியல் உட்கிடக்கைகள் மிகமிக முக்கியமானவையாகும். மொழி வழிப் பண்பாடு வற்புறுத்தும் தமிழ் ஒருமையை இது மறுதலிக்கின்றது. சேர் பொன். இராமநாதன் அவர்களை இந்தக் கருத்துநிலையின் அரசியல் பண்பாட்டுச் சின்ன மாகப் போற்றும் மரபுண்டு. அவரது சகோதரரான சேர் பொன். அருணா சலத்துக்கு அந்த இடம் வழங்கப்படுவதில்லை.

சைவமும்- தமிழும் இணைத்து நோக்கப்படுதற்கான வரலாற்றுப் பின்புலத்தினைப் புரிந்து கொள்வது அவசியமாகும். இக்கருத்து நிலை யினை மேற்கொள்பவர்கள் ஒன்று மற்றது இல்லாது தொழிற்படாது என்ற கருத்தினையே வலியுறுத்துவர். யாழ்ப்பாணப் பண்பாட்டினை இந்தக் கருத்துநிலையின் அடிப்படையில் விளக்கும் பொழுது ''கந்த புராணக் கலாசாரம்'' என்ற கருதுகோள் முக்கியமாகின்றது. இந்தக் கருத்து நிலை தமிழின் இலக்கிய உருவாக்கத்தையும் இந்தக் கண் ணோட்டத்திலேயே பார்க்கின்றது.

யாழ்ப்பாணச் சமூகத்தின் பாரம்பரிய அமைப்பினைப் பேணு வதற்கான புலமை நோக்கின் வெளிப்பாடாகச் ''சைவமும் தமிழும்'' என்ற இக்கருத்து நிலையைக் கொள்வோமானால், இதன் மறுபுறத்தில் இத்தகைய சமூகப் பழமை பேண் வாதத்தினூடேயும் தொழிற்பட்டு வரும், தவிர்க்க முடியாத, அசைவியக்கத்தினை அவதானிக்கலாம். அதற்கான அடிப்படைத் தாராண்மை வாதத்தினை அடிப்படையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட சமூகச் சீர்திருத்தம் பற்றிய கருத்து நிலையாகும். 1920 களின் பிற்கூறுமுதல் 1930 கள் வரை முக்கிய இடம் பெற்ற வாலிபர் காங்கிரஸ் ''தேசிய வாதம்'', ''சமூக சமத்துவம்'' எனும் எடுகோள்களின் அடிப்படையில் முன்வைத்த இந்த அரசியல் -சமூகக் கருத்துநிலை கடந்த நாற்பது வருடகால யாழ்ப்பாண வரலாற்றில் ஏற்பட்டு வந்துள்ள சமூகச் சீர்திருத்தங்களுக்குத் தளமாக அமைந்து வந்துள்ளது. சாதி ஒடுக்குமுறையொழிப்பு, தீண்டாமை எதிர்ப்பு ஆகிய துறைகளில் இக்கருத்து நிலையினர் ஆற்றிய பணிகள் மிக முக்கியமானவையாகும். இக்கருத்து நிலை வளர்ச்சியின் வரலாற்றில் எஸ். ஹண்டி பேரின்பநாயகம், ஒறேற்றர் சுப்பிரமணியம், திரு.ந.சபாரத்தினம் ஆகியோர் மிக முக்கியமானவர்களாவர்.

சைவத்தமிழ்க்கருத்து நிலையையும் தாராண்மைவாதச் சமூக சீர்திருத்தக் கருத்து நிலையையும் எவ்வாறு ஒருங்கு சேர வைத்து நோக்குவது என்பதிற் சிக்கற்பாடுகள் உள்ளன. இந்த இரண்டு கருத்து நிலைகளையும் ஒன்றிணைத்து நோக்க முனையும்பொழுது யாழ்ப்பாணச் சமூகத்தின் அடிப்படையான முரண்பாடுகள் வெளிப்படத் தொடங்கும். இதனாலேயே இன்று, மத்திய தர தொழில் முறை வர்க்கத்தினர் (Middle class Professional) மத்தியில் ''சமூக முன்னேற்றம்'', ''சமூக ஒருமைப்பாடு'' பற்றிய விடயங்கள் பேசப்படும் பொழுது சாதியமைப்பின் முக்கியத்துவத்தைக் குறைத்து நோக்கும் முறைமை ஒன்று வளர்ந்துள்ளது. தொழில் முறைப்பட்ட மத்திய தர மட்டத்திலே இந்நிலை (அதாவது சாதியமைப்பு வன்மையான ஒரு சமூக பொருளாதார சக்தியாகத் தொழிற்படும் தன்மை) மிகக் குறைவே. ஆனால் கிராம மட்டங்களிலும் மரபு நிலைத் தொழில்கள் உள்ள சமூக மட்டங்களிலும், பாராம்பரிய சமூக நோக்குத் தொடர்ந்து நிலவுவதையும் வன்மை குறையாதிருப்பதையும் அவதானிக்கலாம்.

மேலும் ஒரு வகையிலும், இந்தக் கருத்துநிலைகளின் இன்றியமையா முரண்பாட்டு மோதல் தவிர்க்கப்பட்டு வருகின்றது. அதாவது இந்த இரண்டு கருத்துநிலைகளையும் இரண்டு வேறுபட்ட பிரக்ஞை மட்டங்களுக்குரியனவாகக் கொள்ளும் ஒரு நிலைப்பாடு காணப்படுகின்றது. தாராண்மைவாதச் சமூக மாற்றக் கருத்து நிலையினைப் பண்பாட்டு மட்டத்திலும் வைத்து நோக்கும் ஒரு சைவநெறியினையும் அவதானிக்கலாம். ஆனால் அண்மைக்காலத்தில் மிக முக்கியமான சமூக அரசியற் சக்தியாக மேள்கிளம்பியுள்ள இளைஞர் தீவிரவாதம் யாழ்ப்பாணச் சமூகத்தின் கருத்துநிலைப் பரிமாணத்திலே சில விஸ்தரிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. அரசியல் நிலையில் தமிழர் கோரிக்கை



களுக்கு முன் எக்காலத்திலும் இல்லாத ஒரு முனைப்பினை வழங்கியுள்ள இவ்வாதம் சமூக நிலையில் இரு முக்கிய செல்நெறிகளைத் தொடங்கி வைத்துள்ளது:

1. இளைஞரின் சமூகத் திறமை, வெற்றித் தொழிற்பாடு ஆகியன பற்றிய சிந்தனை மாற்றம். (இது உயர் தொழிற் கல்விக்கானதும் பரீட்சைச் சித்திகளை உரைகல்லாகக் கொண்டதுமான ஒரு கல்வி முறையின் மேலாண்மையைச் சிதைப்பதாக அமைந்துள்ளமை).
2. பெண்கள், குறிப்பாக யுவதிகள், அரசியற் போராட்டத்தில் ஈடுபடல். இது நடக்கும் அதே வேளையில் உயர்கல்வியில் பெண்கள் ஆண்களிலும் பார்க்க அதிக தொகையினராக ஈடுபடல். (இச்செல்நெறி குடும்பம், தாய்மை போன்ற கருத்து நிலைகளில் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளது).

இவையிரண்டும் செயற்பாட்டு நிலைமைகளாகத், தொழிற்பாடுகளாக முனைப்புறும் இவ்வேளையில், கிறிஸ்தவத்தின் தமிழ் மயப்பாடும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நடைமுறை காரணமாகத் தமிழ்ப் பண்பாட்டுச் சின்னங்களிற் கிறிஸ்தவரிடையே காணப்பட்டு வந்த ஒதுங்கு நிலைப்பாடு உடைந்து கொண்டு வருவதைக் காணலாம் (குறிப்பாக சந்தனப் பொட்டினைப் போடுதல்). இவற்றினூடாக ''தமிழ்'' குறிப்பிடும், சமயங்களுக்கப்பாலான ஒரு மொழிப் பண்பாட்டை வற்புறுத்தும் தன்மை ஒன்று வளர்க்கின்றது.

ஆனால் இவை யாவும் இன்னும் சமூகச் சிந்தனையை முற்றுமுழுதாகத் தம்வசப்படுத்தும் கருத்துநிலையாக்கப்படவில்லை. ஆனால் நிச்சயமாக அரசியல்-சமூக-நவீனத்துவக்கும், பழைமை பேண் வாதத்துக்குமிடையிலான முரண்பாட்டுணர்வு படிப்படியாக முனைப்புப் பெறுவதை நாம் உணரக்கூடியதாக உள்ளது. இந்த முரண்பாடு பற்றிய பிரக்ஞை அதன் இயங்கியல் தன்மை மூலம் சில அசைவியக்கங்களுக்கு இடமளித்துள்ளது. சமகால யாழ்ப்பாணச் சமூகத்தின் போக்குகளை விளங்கிக் கொள்வதற்கு அந்த அசைவியக்கங்களை அறிந்து கொள்வது அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V. யாழ்ப்பாணச் சமூகத்தின் சமகால அசைவியக்கங்கள் சில

நாம் எத்துணை முயலினும் அசைவியக்கமற்ற சமூகம் (Non-dynamic society) என்பது உண்மையில் ஒரு இல்-பொருளேயாகும். எந்த ஒரு சமூகமும், அது உயிர்ப்புள்ளதாக இருக்கும்வரை அதனுள் ஒரு அசைவியக்கம் காணப்படுவது இயல்பே. சமூகப் பேணுகை என்பது கூட சமூக மாற்றத்தின் பெறுபேறே. ஏற்படும் மாற்றங்களால் தோன்றும் முன்னர் நிலவாச் சூழ்நிலைகள் காரணமாக உண்டாகும் அசௌகரியங்களிலிருந்து விடுபடுபவதற்கும், முந்திய செல்வாக்கு, அதிகாரங்களைப் பேணுவதற்குமே சமூகப் பேணுகை நடைபெறுகின்றது.

அண்மைக் காலத்தின் நாட்டு நிலைப்பட்ட சர்வதேச நிலைப்பட்ட காரணிகளின் தொழிற்பாடுகளினால் ''சமூக மாற்றம்'' நிகழ்ந்து கொண்டே வந்திருக்கின்றது. கடந்த நான்கு ஐந்து வருடங்களாக உள்ளூரில் ஏற்பட்டிருக்கும் அரசியல் கொந்தளிப்புகளினால் இந்த ''மாற்ற'' வேகம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இங்கு இறுதியாகக் குறிப்பிட்ட மாற்றங்கள் பற்றி இங்கு விரிவாக ஆராய்வது முடியாது. ஆனால் அவற்றைக் கணக்கெடுத்துக் கொண்டு கடந்த 15 தொடக்கம் 20 வருட காலமாக ஏற்பட்டு வரும் சமூக அசைவியக்கங்களைப் பற்றிச் சிறிது நோக்குவோம். சமூக அசைவியக்கத்தின் முக்கியமான அமிசங்களில் ஒன்று சமூக ஸ்தானப் பெயர்வு அசைவு ஆகும். இது இருவகையாக நடைபெறும்:

1. ஒருவர் ஓரிடத்தில் இருந்து இன்னோரிடத்துக்குப் பெயர்தல் அன்றேல் ஒரு சமூகக் குழுமத்திலிருந்து இன்னொரு குழுமத்துக்குப் பெயர்தல். இது கிடைநிலையான (horizontal) பெயர்வசைவு ஆகும்.
2. மற்றது ஒரு குறிப்பிட்ட சமூக மட்டத்திலிருந்து (Level) இன்னொரு மட்டத்துக்குச் செல்வதாகும். இது நிமிர் நிலை (Vertical) யானது. அது மேல் நோக்கியதாகவோ கீழ் நோக்கியதாகவோ இருக்கலாம்.

பொதுவான மனித இயல்பு மேனிலைப்பாட்டுக்கான பெயர்வசையேயாகும். யாழ்ப்பாணச் சமூகத்தில் நிகழும் மேனிலைப் பெயர்வு அசைவுகளின் தன்மைகளை நோக்குவோம்.



அதற்கு முன்னர் முக்கிய குறிப்பு ஒன்றினைக் கூற வேண்டியுள்ளது. இப்பொழுது நடைபெறும் பெருமளவிலான புலப்பெயர்வானது உண்மையிற் சில அடிப்படையான சமூகக் காரணங்களுக்காகவே நிகழ்கின்றது என்பதை மறந்து விடுதல் கூடாது. இந்த அமைப்பினுள் அவர்கள் பெறவிரும்பும் மேனிலைப் பெயர்வசைவினை இந்தச் சமூகத்தின் பௌதீக பிரதேசத்தில் வைத்து செய்ய முடியாதிருப்பதாலும் மேனிலைப் பெயர்வசைவினால் வரும் சௌகரியங்களைத் அநுபவிக்க முடியாதிருப்பதாலும் இந்த அமைப்புக்கு வெளியே சென்று அவற்றைத் துய்ப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கையே இன்றைய அடிநிலை, இடைநிலைச் சமூக மட்டத்துப் புலப்பெயர்வுகள் என்பதை நாம் விளங்கிக் கொள்ளல் வேண்டும். புலம்பெயர்ந்த பின்னர் தமது தற்போதைய சௌகரியங்களை தமக்கே அர்த்தப்படுத்திக் கொள்வதற்காகப் புலம்பெயர்ந்துள்ள இடங்களில், தாம் விட்டு வந்த சமூக பண்பாட்டுச் சூழலை மீள் உருவாக்கம் (Reproduce) செய்ய விரும்புகின்றனர். இந்த மீள் உருவாக்கத்துக்கான பௌதீக வாய்ப்புக்களைப் (பண்பாட்டு, பயன்பாட்டுப் பொருட்களை, நடவடிக்கைகளை) பெறுவதற்கு நவீன தொழில்நுட்ப சாதனங்கள் உதவுகின்றன. இந்த மீள் உருவாக்கத்தில் கருத்து நிலைக்கு முக்கிய இடம் உண்டு. ஆனால் சிக்கல் யாதெனில் இந்த மீள் உருவாக்கத்தை இவர்கள் அங்கு மேலாண்மையுடன் நிலவும் கருத்து நிலை வட்டத்துக்குள்ளேயே செய்ய வேண்டும். இதனால் இந்த மீள் உருவாக்கம் ஒரு நாற்று நடவாக (Transplanting) அமைய இடமே இல்லை. அடுத்த தலைமுறை அந்தப் பண்பாட்டினுள் உள்வாங்கப்படுவது தவிர்க்கப்பட முடியாததாகும். அதேவேளையில் அங்கு இவர்களது சமூக அந்தஸ்து மிகக் குறைவானதாகவே இருத்தலால் இவர்கள் தனித்துப் பேணுகைக்கும் மேலாண்மை பண்பாட்டின் உள்வாங்குதலுக்குமிடையே தத்தளித்து இறுதியில் இரண்டும் கெட்டான் ஆகிய ஒரு உடன்பாடாகவே முடிய வேண்டிய நிலை (Creolization) ஏற்படலாம்.

ஆனால் இங்கு நாம் இங்குள்ள அமைப்பினுள்ளே, இந்த அமைப்பின் பண்பாட்டு எடுகோள்களை ஏற்றுக் கொண்டு, ஆனால் அதற்குள்ளே தமது மேனிலைப் பெயர்வினை உறுதிப்படுத்துகின்ற சமூக அசைவியக்கங்கள் பற்றியே நோக்குவோம்.

அண்மைக்கால யாழ்ப்பாணச் சமூக அமைப்பினுள் சமூக அசைவியக்கம் இரு முக்கிய தன்மைகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

1. அகப்பிரிவுகள் குறைந்த சாதிப் பெருக்குழுமத் தோற்றம் (Formation of mega Castegroups).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சமஸ்கிருத நெறிப்பாடு (Sanskritization).

முதலாவதை எடுத்துக் கொள்வோம். அண்மைக் காலத்தில் ஏற்பட்டு வந்துள்ள சமூக அசைவியக்கங்கள் காரணமாகவும், மேனிலைப் பெயர்வசைவு (Upward social mobility) காரணமாகவும், சிறிய சாதிக் குழுக்கள் ஒழிந்து, சுலபமாக இனங்கண்டறியப்படத்தக்கதாக, பெருங் குழுமங்களுள் இவை கொண்டுவரப்படுகின்றன. உதாரணமாக அகம் படியார், மடப்பள்ளி, தனக்காறர், செட்டிமார், எண்ணெய் வாணிகர் போன்ற சாதியினரும் சில பின்தங்கிய பிரதேசக் கமக்காரர்களும் இப்பொழுது படிப்படியாக ''வெள்ளாளர்'' என்ற பெருங்குழுமத்தினுள் வந்துள்ளனர். வந்து கொண்டிருக்கின்றனர். இத்தகைய ஒரு அசை வியக்கம் முன்னரும் நிகழ்ந்துள்ளது.

''கள்ளர் மறவர் கனத்த அகம்படியார்
மெள்ள மெள்ள வந்து வெள்ளாளர் ஆனார்கள்''

என்ற பழமொழி இதனை உறுதிப்படுத்துகின்றது. அதேபோன்று மீன்பிடித் தொழிலைப் பாரம்பரியமாகச் செய்கின்ற சாதி குழுமங்களான கரையார், திமிலர், முக்குவர் முதலானோர் கரையார் என்ற பெருங் குழுமத்தினுள் வைத்துப் பார்க்கப்படுகின்றனர். தச்சர், கொல்லர், தட்டார் ஆகிய விஸ்வகருமப் பாரம்பரியத்தினரிடையேயும் இத்தகைய ஒரு இணைவு காணப்படுகின்றது. இந்தப் பெருங்குழுமச்சாதி உருவாக்கம், கல்விவளர்ச்சி, விவாகத் தேவைகள் காரணமாக உந்தப் பெற்றதென்றே கூறல் வேண்டும்.

உண்மையில் இது சாதிக்குள் நடக்கும் வர்க்க இணைவேயாகும். (காதல் கலியாணங்களினால் ஏற்படும் சாதிகளின் இணைவின் பொழுது, அத்தம்பதியினர் இறுதியில் யாராவது ஒருவரது சாதிக்குழுமத் துடனேயே இணைவர். இந்த இணைவின் மட்டம் உத்தியோக பலம், சொத்துப் பலம் என்பவற்றினாலே தீர்மானிக்கப்படும்). மேற்குறிப்பிட்ட இந்தப் பெருங்குழுமச்சாதி உருவாக்கத்தினால், ஒவ்வொரு சாதியின தும் அசைவு வட்டம் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

அடுத்தது சமஸ்கிருத நெறிப்படுகையாகும். இது யாழ்ப்பாணச் சமூகத்தின் பண்பாட்டுக் கோலத்திலே பெரியதொரு விஸ்தரிப்பினை ஏற்படுத்தியுள்ளது (சிவத்தம்பி, 1989). முதலில் ''சமஸ்கிருத நெறிப் படுகை'' (Sanskritization) என்பது யாது என்பதனை நோக்குவோம்.

''இந்திய சூழலில் மேனிலைப்பட்ட அசைவியக்கத்திற்கு ஆளாகும் ஒருகுடும்பம் அன்றேல் குழுமம், தமது நடைமுறைகளைப் படிப் படியாக உயர் இந்துமத நெறியில் கூறப்படுகின்ற, அதாவது சமஸ்கிருத இலக்கியங்களில் (எழுத்துக்களில்) உள்ளது என நம்பப்படுகின்ற முறைமையில் அமைத்துக் கொள்கின்றது. இப்படிச் செய்கின்ற பொழுது, தாம் இதுவரை கடைப்பிடித்து வந்தனவற்றைச் சமஸ்கிருத நிலைப்படுத்தி அல்லது சமஸ்கிருதமயப்படுத்தி அவற்றையும் உயர் மரபுக்குரியன போன்று போற்றுதல் மரபாகும்.''

இந்தச் சமஸ்கிருத நெறிப்படுகை பின்வரும் முறைகளிலே தொழிற்படுகின்றது.

1. வழிபாட்டிடங்களில் வழிபடப்படும் தெய்வங்கள் மாற்றப் படுகை

(உ+ம்)

| | | |
|---|---|---|
| அண்ணன்மார் | - | பிள்ளையார் |
| விறுமர் | - | பிள்ளையார் |
| நாய்ச்சிமார் | - | காமாட்சி அம்மன் |
| கண்ணகியம்மன் | - | ராஜராஜேஸ்வரி |
| முனி | - | முனிஸ்வரர் (சிவன்) |
| வைரவர் | - | ஞானவைரவர் |

2. வழிபாட்டு முறைமைகள் மாற்றப்படுகை

| | | |
|---|---|---|
| மடை | - | பொங்கல் |
| குளிர்த்தி | - | பொங்கல் |
| பொங்கல் | - | சங்காபிஷேகம் |

3. கோயில்களின் அந்தஸ்து மாற்றப்படுகை

i. ''விளக்கு வைத்தல்'' நடந்த இடத்தில் பிராமணர் சைவக்குருக்கள் பூசை செய்தல்.

ii சங்காபிஷேகம் நடந்த இடத்தில் மகோற்சவம் நடத்தல்.

iii. பெயர் மாற்றம்: காரைநகர் சிவன் கோவில், ஈழத்துச் சிதம்பரம் எனப்பட்டமை.

iv. தேர்த்திருவிழா அன்று (நல்லூரில் நடப்பது போன்று) பச்சை சார்த்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. பெருங்கோயில்களோடு சம்பந்தப்படல் (அக்கோயில் களுக்கான விரதம் பிடித்தல் முதலியன).

vi. பஞ்சாங்கத்திற் கோயிலின் பெயர் இடம்பெறல்.

திருப்பணி செய்யப்பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப் பெறுதலும், கும்பாபிஷேக மலர் வெளியிடப்படுதலும் முக்கிய நடவடிக்கைகளாகி யுள்ளன. கோயில் நிலைப்பட்ட நடவடிக்கைகளுக்குக் காரணம், கோயில் ஈடுபாடு வழங்கும் சமூக உயர் அந்தஸ்து ஆகும். இக்கட்ட த்திலே இரு முக்கிய சமூக வரலாற்று உண்மைகளைப் பதிவு செய்தல் அவசியமாகும். ஆலயப் பிரவேசம் முக்கியமான கோயில்களிலேயே நடைபெற்றது. தாழ்த்தப்பட்ட மக்கள் உட்செல்ல அனுமதிக்கப்படாத கோயில்கள் இப்பொழுதும் உள்ளன.

இரண்டாவது ஆலயப் பிரவேசம் நடந்த கோயில்களின் நிர்வ்ாக த்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. அந்தக் கோயிலின் தானீசர் குழுக்களில் மாற்றங்கள் ஏற்படவில்லையெனலாம். அதாவது ஆலயப் பிரவேசத்தினாற் கோவில் நிர்வாகமுறைமை மாறவில்லை. இதனால் ஏற்கனவேயுள்ள கோயில்களில் நிர்வாகப் பங்கு அற்றவர்களாக விருந்தோர், தமக்குத்தமக்கென கோயில்களை வளத்தெடுக்கத் தொடங் கினர். இது சாதி மட்டத்திலும், ''பகுதி'' மட்டத்திலும் நிகழத் தொடங் கிற்று. இந்த இரு அசைவியக்கங்கள் காரணமாக இச்சமூகத்தினரின் பண்பாட்டுச் சீவிய வட்டம் விஸ்தரிக்கப்படலாயிற்று. அத்துடன் இவ்விஸ்தரிப்புக் கோயிற்கலைகளிலும், கோயில்கலைப் பயில்வோர் கள் நிலையிலும் (குறிப்பாக இசைக்கலைஞர்கள் நிலையில்) முக்கிய மான மாற்றங்கள் ஏற்படலாயின. இவற்றால் பண்பாட்டு பங்கெடுப்பு (Cultural Participation) அதிகரிக்கலாயிற்று. அரசியல் நிலைமைகள் காரணமாக வளரும் பண்பாட்டுப் பிரக்ஞை இந்த வளர்ச்சியின் காரண மாக ஒரு புதிய பரிமாணத்தைப் பெறத் தொடங்கிற்று.

கிறிஸ்தவ ஆலயங்களும் இந்தப் பண்பாட்டுப் பங்கெடுப்பிற் பங்கு பற்றின. சந்தனப் பொட்டுப் போடுதல், நாதஸ்வரம் தவில் வாசிப்பித்தல், பட்டுவேட்டி கட்டுதல் போன்ற பல நடவடிக்கைகளை இங்கு குறிப்பிட லாம். யாழ்ப்பாணச் சமூகத்தின் சமகால அசைவியக்கங் களின் பிரதான மாக எடுத்துக்கூறப்பட வேண்டுவது, இளைஞர் தீவிர வாதப் போக்கினா லும், போராட்டத்தினாலும் ஏற்பட்டுள்ள ''நியம'' மாற்றங்களாகும். நியமங்கள் (Norms) என்பவை ஒவ்வொரு பண் பாட்டிலும் அப்பண் பாட்டு வட்டத்தினுள் வரும் நடத்தை முறைகளை (Behavioural Patterns) நிர்ணயிப்பனவாகும். தீவிரவாதப் போராட்டத்தின் காரணமாகப் பொது



நடவடிக்கைகளுக்கான முன்னுரிமை முறையிற் பல மாற்றங்கள் (Priorities) ஏற்பட்டு ள்ளன இவை புதிய நியமங்களைத் (Norms) தோற்று விக்கின்றன. இந்த நியமங்கள் காரணமாகப் புதிய முன்னுரிமைகள் வந்துள்ளன. (மாவீரர் குடும்பங்களுக்கு முக்கியத்துவம்). இவை அடிநிலை மட்டங்களிற் சில மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

மேற்கூறிய அசைவியக்கங்கள் காரணமாக சமூக நடைமுறைச் செயல்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. முன்னர் நிலவிய பொருளாதாரக் கட்டமைப்பும் இப்பொழுது படிப்படியாக மாறி வருகின் றது. பாரம்பரிய கைத்தொழில்களைப் பாரம்பரிய இடங்களிற் செய்யமுடி யாமை, அகதி முகாம்களில் நீண்ட காலம் இருக்க வேண்டிய தேவை, எதிர்பாராத வகையில் ஏற்படும் நிலப்பகிர்வு ஆகியன பல பொருளாதார முயற்சிகளையும் சமூகக் கண்ணோட்டங்களையும் மாற்றி வருகின்றன.

யாழ்ப்பாணச் சமூக அமைப்பின் மாற்றச் செல்நெறிகளுள் மிக முக்கியமானதாக எடுத்துக் கூறப்பட வேண்டியது ''இரண்டாம் நிலைத் தொழினுட்பத்தின்'' (Secondary Technology) சமூக ஒருங்கமைப்பாகும். யாழ்ப்பாணப் பாரம்பரியச் சமூக அமைப்புக்குப் புறம்பான நவீன மயவாக்க நெறிப்பட்ட ஆனால் கீழ்நிலைப்பட்ட தொழில்நுட்பங்கள் இச்சமூகத்தினுள் வந்த பொழுது அவற்றை மேற்கொண்டோர் அடி நிலைகளைச் சார்ந்தாரே. உதாரணமாக மோட்டார் கார்ப் பாவனை வந்ததும் அதுவழியாக வந்த மோட்டார் திருத்த வேலைகள் படிப் படியாக அடிநிலைப்பட்டாராலேயே மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக, 1960 களில் நடைமுறைப்படுத்தப்பட்ட இறக்குமதித் தவிர்ப்புப் பொருளாதார முறைமையின் பொழுது, இந்த இரண்டாம் நிலைத் தொழில்நுட்பம் முன்னிலைக்கு வந்தது. கராஜ்கள், வெல்டிங் நிலை யங்கள் ஆகியன முக்கியமாகின. இவை சிறு தொழிற்சாலைகளாகவே இயங்கின. இந்தத் துறையில் ஈடுபட்டோர் அடி நிலைப்பட்டோரே.

இக்காலத்தில் நடந்தேறிய விவசாய நவீனமாக்கமும் இந்த இரண் டாம் நிலைத் தொழில் நுட்பத்தை ஊக்கிற்று. உழவு இயந்திரங்களின் வருகை அது தொடர்பான ஓட்டுதல், திருத்தல் ஆகியன ஏற்படுத்திய தொழில்நுட்ப வாய்ப்புகளும் இவர்களிடத்தேயே சென்றன. மிகவிரை வில் இவை அதிக உழைப்பைத் தரும் தொழில்களாயின. இத்தொழில் முயற்சிகளால் கீழ்நிலைச் சாதியினரின் பொருளாதார பலம் அதிகரித் தது. அத்துடன் சாதி பற்றிய சில சமூக ஒதுக்கு நிலைகள் உடையத் தொடங்கின. இந்தச் செல்நெறி காரணமாக முன்பில்லாத செல்வந்தர் குழாம் ஒன்று யாழ்ப்பாணச் சமூகத்தில் உலாவத் தொடங்கிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டு வரும் சமூக ஏற்புடைமை உணர்வுக்கு அத்திவாரமாக அமைந்தது 1930, 1940 களில் இடது சாரி இயக்கம் தொடக்கி வைத்த சமூக சமத்துவப் போராட்டங்களே சமாசன, சமபோசனப் போராட்டம் (பஸ் முதல் பள்ளிக்கூடம் வரை சமாசனப் போராட்டம் பரவிற்று), தீண்டாமை எதிர்ப்பியக்கம் ஆகியன இப்போராட்டத்தின் முக்கிய மைல்கற்களாகும். இந்த வரலாற்றில் பவுல், செல்லத்துரை, சுப்பிரமணியம், தர்மகுலசிங்கம், நாகரத்தினம், டானியல் முதலியோர் முக்கிய இடம் பெறுவர்.

இந்த வரலாறு பற்றி இன்னும் எந்தத் தொழில்முறை ஆராய்ச்சியாளரும் கவனம் செலுத்தவில்லை.

## VI. நிறைவுரை

இதுவரை யாழ்ப்பாணச் சமூக அமைப்பின் கட்டமைப்பு தன்மைகளையும், அதன் உருவாக்க முறைமையினையும் பிரதானமாகத் தேச வழமைச் சட்டம் மூலம் நோக்கி, அதன் மேல், மேலாண்மைச் சக்திகளின் பேணுகைத் தொழிற்பாடுகளையும், அதேவேளையில் நடைபெறும் அசைவியக்கங்களையும் அவதானித்தோம்.

1706இல் உருவாக்கப் பெற்று, 1806இல் பிரித்தானிய ஆட்சியினால் பூரணமான ஒரு சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பொழுது அது சமூக முழுமையையும் பிரதிபலிக்கும் ஒரு சட்டக்கோவையாகவே (Code) இருந்தது. ஆனால் இன்றோ அதன் சமூகச் சமவீன உள்ளீடுகள் அகற்றப்பட்டு வெறுமனே, ஒரு சொத்துரிமைச் சட்டமாகவே, அதுவும் பல்வேறு வரையறைகளைக் கொண்ட ஒரு சட்டமாகவே கொள்ளப்படுகின்றது.

இந்த மாற்றத்தினூடே இச்சமூகத்தில் நடந்த அசைவியக்கங்கள் காரணமாகவே இம்மாற்றம் ஏற்பட்டது. இந்த அசைவியக்கத்தினதும் சமூகப் பேணுகையினதும் தன்மைகள் இங்கு தொட்டுக் காட்டப்பட்டனவேயல்லாது, வரலாற்றுப் பின்புலத்தில் வைத்து விளக்கப் பெறவில்லை. அவ்வாறு செய்யும் பொழுது யாழ்ப்பாணத்தின் சமூக வரலாறு எழுதப்படும். யாழ்ப்பாணத்தில் வணிகமும், கைத்தொழில் முதலீடும் செயற்படாத காரணத்தினால் ஏற்பட்ட பலாபலன்கள் பல. அவற்றுள் முக்கியமானது கல்வி, ஒரு முக்கிய தொழில் முனைப்பு (Entrepreneurial Activity) ஆகிற்று. இதனால் ஒரே சமயத்தில் பாரம்பரியமும் நவீனமயமாக்கமும் நமது சமூகத்திலே தொழிற்படுவதைக் காணலாம். இந்த இணைவின், இணைவின்மையின் வரலாற்றுக்குள்ளேயே இன்றைய இனப்போராட்டமும் உள்ளது.

இதுகால வரை நடைமுறையிலில்லாத அரசியல் உரிமைகளுக்காகப் போராடும் பொழுது, அந்த அரசியல் உரிமைகள் கிடைக்கும் பொழுது அவற்றின் ஜனநாயக ரீதியான, பகிர்வுக்கு உத்தரவாதம் செய்யப்படுவதற்குச் சமூக மாற்றம் மிக மிக அவசியம்.

படிநிலை அதிகாரத்துக்குப் பழகிப்போன, அதனைப் பேணுவதற்குப் பல்வேறு முயற்சிகளை எடுத்த, எடுக்கின்ற சமூகம் வரவிருக்கும் அரசியலுரிமைகளைச் சகலருடனும் பகிர்ந்து கொள்வதற்கான சமூகக் கண்ணோட்டத்தை, நிலைப்பாட்டை வளர்த்துக் கொள்ள வேண்டும். அரசியல் மாற்றத்துக்கான போராட்டங்கள் நடைபெறுகின்ற பொழுது அந்தப் போராட்டத்தின் பெறுபேறுகளைப் பேணுவதற்கானச் சமூகக் கட்டமைப்பு மாற்றங்கள் அவசியம்.

இதனை நான் எடுத்துக் கூறிய முறையில், தந்த தரவுகளினால் யார் மனதையாவது சஞ்சலப்படுத்தியிருந்தால் தயவு செய்து மன்னிக்கவும். என்னைப் பேச அழைத்த செல்வநாயகம் நினைவுப் பேருரைக் குழுவினரையும் மன்னிக்கவும்.

''பேசாப்பொருளைப் பேச நான் துணிந்தேன்
கேட்கா வரத்தை கேட்க நான் துணிந்தேன்;
மண்மீ துள்ள மக்கள், பறவைகள்,
விலங்குகள், பூச்சிகள், புல்பூண்டு, மரங்கள்,
யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்ததே.
இன்ப முற் றன்புடன் இணங்கி வாழ்ந் திடவே
செய்தல் வேண்டும், தேவதேவா!
ஞானா காசத்து நடுவே நின்று நான்
''பூ மண்ட லத்தில் அன்பும் பொறையும்
விளங்குக; துன்பமும், மிடிமையும், நோவும்
சாவும் நீங்கிச் சார்ந்தபல் லுயிரெலாம்
இன்புற்று வாழ்க'' என்பேன்! இதனை நீ
திருச்செவி கொண்டு திருவுளம் இரங்கி,
''அங்ஙனே யாகுக'' என்பாய் ஐயனே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணைகள்


1. R.M.Maclver and Charle H.Page - Society - London, 1961.
2. Jane Russel - Communal Politics under the Donoughmor Constitution (1931 - 1947) - Colombo, 1982.
3. Barry Hindess and Paul Q. Hirst -precapitalist modes of production- London, 1975.
4. N.Balakrishnan - A Note on the Peasanty -IDS/SSA Seminar, 1983.
5. B.Pfaffenberger - Caste in Tamil Culture -Vikas, New Delhi, 1982.
6. Kenneth David -Spatial Organization and Normative Schemes in Jaffna, Northern Sri Lanka - Modern Ceylon Studies, Vol. 4 No. 1&2, 1973.
7. ........................... Hierarchy and Equivalense in Ceylon - Normative Code as mediater in Kenneth David (ed.), The New wind: Changing Identities in South Asia-Hagve, Moutoa, 1974.
8. S.J. Tambiah - Bridewealth (ed.) -- Cambridge University Press.
9. P. Baldeus - Ceylon-Reprint with Introduction, 1959.
10. Michael Banks -"Caste in Jaffna" in Aspects of Caste in India, Ceylon and North -West Pakistan - Cambridge, 1960.
11. R.W.Holmes -Jaffna - 1980.
12. K.Sivathamby -The Ethnography of the Sri Lankan Tamils - Lanka No. 5 (ed.P.Sehalk), Uppsala, 1989.
13. ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு.
14. S.Arasaratnam -Historical Foundation of the Economy of the Tamils of North Sri Lanka - Chelvanayakam Mermorial Lecture, 1982.
15. யாழ்ப்பாண வைபவமாலை - (பதிப்பு). குல.சபாநாதன், கொழும்பு, 1953.
16. சிவானந்தன் - யாழ்ப்பாணக் குடியேற்றம், முதலாம் பாகம்- கோலாலம்பூர், 1933.
17. வையா பாடல் (க.செ.நடராசா பதிப்பு) - கொழும்பு, 1980.
18. முத்துராசக்கவிராயர் - கைலாயமாலை (செ.வே.ஜம்புலிங்கம் பிள்ளை பதிப்பு) சென்னை, 1939; (பி.நடராசன் பதிப்பு) யாழ்ப்பாணம், 1983.
19. Simon Casie Chitty - The Caste, customs, manners and Literature of the Tamils-Colombo, 1934.
20. மு.க.சிவப்பிரகாசம் (பதிப்பு) - விஷ்ணுபுத்திர வெடியரசன் வரலாறு - தொல்புரம், 1988.
21. S.Pathmanathan - The Kingdom of Jaffna - Colombo, 1978.
22. க.கணபதிப்பிள்ளை - இலங்கை வாழ் தமிழர் வரலாறு- யாழ்ப்பாணம், 1956. (இரண்டாம் பதிப்பு 1989).
23. Tikiri Abeysinghe - Jaffna Under the Pottuguese - Colombo, 1986.
24. C.Rasanayagam - Ancient Jaffna - 1926.
25. C.S.Navaratnam - Tamil and Ceylon -Jaffna, 1958.
26. K.Sivathamby-Divine Person and/or Social Prominence -An Inquiry into the social role of the place of worship in Yalppanam Tamil Society -Lanka No. 5 (1990), uppsala.
27. Hendrick Zwaardracoon - Memoirs - 1697 (Tr.Sophia Peter) - Colombo, 1917.
28. கா.சிவத்தம்பி - சமூகவியல் நோக்கில் நாவலர் - நாவலர் நூற்றாண்டு மலர், பதிப்பு க.கைலாசபதி 1979.
29. வெகுஜனன் - இராவணா சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் - யாழ்ப்பாணம், 1989.
30. S.Kadirgamar -Handy Perinbanayagam -A Memorial, 1980.
31. K.Sivathamby -Towards an Understanding of the Culture and Ideology of the Tamils of Jaffna, Commemorative Souvenir of the rebuilt Public Library of Jaffna - 1984.
32. K.sivathamby - The Ideology of Saiva - Tamil Integrality: it Socio - historical Significance in the study of Yalppanam Tamil Society - Lanka No. 5 (1990), Uppsala.
33. கா.சிவத்தம்பி -தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும்- சென்னை, 1983.
34. Charles Abeyasekara -Neuton Gunasinghe (ed.) - Facets of Ethnicity - Colombo, 1989.
35. கா.சிவத்தம்பி - யாழ்ப்பாண இந்து மக்களிடையே சமூக மேன்நிலைப்பாட்டு அசைவியக்கமும் வழிபாடும், தலங்காவற் பிள்ளையார் கோவில் கும்பாஷேகமலர் - யாழ்ப்பாணம், 1989.
36. Ethnicity and Social change in Sri Lanka - SSA, Colombo, 1984.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. வட இலங்கையில் ஆலயப் பிரவேச இயக்கம் - சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை.
38. A Revised Edition of the Legislative Enactments of Ceylon - 1917.
39. T.Sri Ramanathan - Tesavalamai - Colombo, 1962.
40. R.S.Perimpanayagam - The Karmic Theatre - New York.

(பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுப் பேருரை - ஆனி 1992)



# யாழ்ப்பாணத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும் பற்றி விளங்கிக் கொள்வதற்கான ஓர் அறிமுகக் குறிப்பு

*"இந்த நூலின் நாயகன் யாழ்ப்பாணத்தானே எனினும் அவன் தன்னை நாயக நிலையில் வைத்து சிந்திப்பவனல்லான். மனித இனத்தின் இந்தப் பிரதிநிதியை புகழ்வது பிறரே; சிக்கனமானவன், பழமைபேண்வாதி, மதபக்தி உடையவன், பிடித்ததை விடாதவன், ஒரு விடயத்தை ஆற அமரப் பார்ப்பவன், பொதுவான கல்வி அறிவுடையவன், வரப்போவதெல்லாம் ஆபத்தானதே எனப் பார்ப்பவன் ஊழில் நம்பிக்கை உடையவன், கிண்டல் கேலிக்காரன், சந்தேகப் பிராணி, போட்டியிடுபவன், விடாது வழக்காடுபவன், உணர்ச்சி வசப்படுபவன், கலந்து நடந்து கொள்பவன், மற்றவர்களைப் பற்றித் தெரிந்திருப்பதில் நிபுணன், தான் பேச விரும்புபவன், சாதிக் குணம் உடையவன், மூட நம்பிக்கைகள் உள்ளவன், ''கிளரிக்கல் மனோபாவம்'' கொண்டவன், குடும்பமயப்பட்டவன், அடக்குமுறைகளைத் தாங்கிக் கொள்பவன், மற்றவர்களோடு கூடி வாழும் பண்புடையவன் அல்லன், எதேச்சாதிகாரப் போக்குக் குணமுடையவன், ஆண் ஆதிக்கக்காரன், பொருள் நலத்தையே நோக்குபவன் என வரும் இந்தக் குண வியல்புகள் சில இயல்பானவை. சில ஒன்றுக்கொன்று முரணானவை - யாழ்ப்பாண மனிதர்களுள் பெரும்பகுதிக்கான விவரணமாகும். எந்த ஒரு மனிதனிடத்தும் இவையெல்லாம் இருப்பதில்லை.''*

*(ரொபொட் ஹோம்ஸ், யாழ்ப்பாணம் 1980: பக் 04)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் யாழ்ப்பாண தீபகற்பத்தில் உள்ள தமிழர்கள் இந்தத்தீவின் மேலாண்மையுடைய தமிழர் குழுமமாக இருந்து வந்துள்ளது. தேசிய மட்டத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட அநுபவங்களும், சிங்களவர்கள் பற்றிய அவர்களது புலப்பதிவுகளும் அவர்களது ஊக்கப்பாடுகளுமே இலங்கைத் தமிழ் மக்களின் அரசியற் குறைபாடுகளையும், அவற்றைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் தீர்மானித்துள்ளன.

இக் கட்டுரையில் யாழ்ப்பாண மனிதனை அவன் தன்னைப் பற்றித் தான் கொண்டிருக்கும் இரண்டு கருத்துநிலைப் புலப்பதிவுகளின் அடியாக நோக்கும் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது, ஒன்று சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தைப் பேணுபவன், இரண்டு, மேற்கின் தாராண்மைவாதப் பாரம்பரியங்களையும் காந்தியின் சீர்திருத்த பாரம்பரியங்களின் வாரிசாகத் தன்னைக் கருதிக் கொள்பவன். இரண்டாவதைக் குறியீடு செய்து நின்றது யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் இயக்கமாகும்.

யாழ்ப்பாண மனிதனைப் பற்றிய இலங்கை நிலை, குறிப்பாக சிங்கள மனப்பதிவு, அவர்களின் தேசியத் தினசரிகளில் வரும் 'கார்ட்டூன்'' படங்களிலிருந்து தெரியவருகிறது. ''நசனல்'' சட்டை போட்டு, வேட்டி கட்டி, மடித்த கரையுள்ள சால்வை போட்டு நெற்றியில் ஒரு முனைப்பான பொட்டு வைத்திருக்கின்ற ஒருவராக யாழ்ப்பாணத் தமிழர் சித்திரிக்கப்படுவது வழக்கம். இது யாழ்ப்பாணத்தான் ஒரு இந்து எனக் கணிக்கப்படுவதனைக் காட்டுகின்றது. 1971ம் ஆண்டுக் கணக்கெடுப்பின் போது யாழ்ப்பாண மாவட்டத்தின் இந்துக்கள் 85.2% றோமன் கத்தோலிக்கர்கள் 11.1% முஸ்லிம்கள் 1.5% புரட்டஸ்தாந்திகள் 1.3% பௌத்தர்கள் 0.8% எனும் விகிதாசாரத்தில் காணப்பட்டனர். அண்மைக் காலத்துச் சமூக அரசியல் போராட்டம் காரணமாகவும் ரோமன் கத்தோலிக்கர்களின் மனித அவல நிலை பற்றிய மதநிலைச் சிரத்தை காரணமாகவும், இப்பொழுது மதத்துக்கு முதன்மையான இடம் தரப்படாது, தமிழர் என்ற அடையாளமே வற்புறுத்தப்படுகின்றது. மதத்திற்கு அப்பாலான ஓர் அரசியல் போராட்டம் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் நடைபெறத் தொடங்கியுள்ளது. யாழ்ப்பாணத்து முஸ்லிம்கள் இலங்கை முஸ்லீம்களுக்கிடையே உள்ள உப பண்பாட்டுக் குழுவாகக் கொள்ளப்படுகின்றனர். இவர்கள், யாழ்ப்பாணத் தமிழர்களாக ஒடுக்கப்படுவதோ, பார்க்கப்படுவதோ இல்லை. (இலங்கையின் இனப் போராட்டத்தில் ஏற்பட்ட ஒரு திருப்பம் காரணமாக 1991ல் முஸ்லீம்கள் தங்கள் வாழிடங்களிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டனர்.)



**பதங்கள் பற்றிய வரைவிலக்கணம்**

கருத்துநிலை என்ற பதம் ஆங்கிலத்திலேயே அதன் இயல்பான மொழி வழக்குக்குள் வந்தது மிகப் பிந்தியே ஆகும். எண்பதுகளிலேயே அது ஆங்கிலத்தில் படிப்படியாகப் பரிச்சயப்படுத்தப்படுகின்றது. அந்த நிலையில் ஆங்கில மொழிமூலமே நவீன உலகத்தைத் தரிசிக்கின்ற யாழ்ப்பாண மனிதனுக்கு இச்சொல் இன்றும், இன்னும் தொலைவிலுள்ள ஒரு பதமாகவே காணப்படுகின்றது. ஐடியலோஜீ (idiology) என்னும் பதத்திற்கு இன்னும் பூரணமான ஒப்ப முடிந்த ஒரு தமிழ்ப்பதம் இல்லையென்றே கூறல் வேண்டும். 'கருத்துநிலை' என்ற மொழிப்பெயர்ப்பினை இக்கட்டுரை ஆசிரியர் பரிச்சயப்படுத்த எடுத்துக் கொண்ட முயற்சிக்கு வெகுவரவேற்பு இருந்ததாகக் கூறமுடியாது. ''கருத்தியல்'', ''சித்தாந்தம்'' என்ற பதங்கள் இன்றும் பயன்படுத்தப்படுகின்றன. ''ஐடியோலாகி'' பற்றிய இந்த சிந்தனைப் போக்கு இது ஒரு மட்டத்திற்கு மேல் மார்க்ஸீய உள்ளார்த்தம் உடைய அரசியல் கனமிக்க ஒரு சொல்லாகவே கருதப்படுகின்றது.

கருத்துநிலை என்னும் இவ்விடயம் பற்றிய ஆய்வு பிரெஞ்சு செருமானிய மார்க்சியர்களால் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. ஆயினும் இது முற்று முழுதாக ஒரு மார்க்சிய சார்புடையது என்றும் கூறுவது பொருந்தாது. ஏனெனில் லூயி துமொங் (Lovis Dumont) போன்றவர்களும் இவ்விடயம் பற்றி ஆராய்ந்துள்ளனர். ஜேம்ஸ் கிளக்மான் பின்வருமாறு விளக்குகின்றார்:

''சமூக ஊடாட்டம் வளர வளர மனிதர்கள் பொதுவான எண்ணக் கருத்துக்களையும், உலகம் பற்றியனவும் தமது சமூக வாழ்க்கை பற்றியனவும், தெய்வம், சொத்து, தர்மம், நீதி ஆகியன பற்றியனவுமான நோக்குகளை வளர்த்துக் கொள்கின்றார்கள். இவ்வாறாக இவை சமூகம், அரசியல், சட்டம், மதம், கலைத்துவம், தத்துவ நோக்கு ஆகியன பற்றிய கருத்துநிலைப்பட்ட எண்ணங்களை உருவாக்கிக் கொள்ளுகின்றனர். இவையே ''கருத்துநிலை'' என்று பெரும்பாலும் குறிப்பிடப்படுகின்றது. மனிதர்கள் புற இயற்கையோடும் தம்முள் ஒருவருக்கொருவரிடையேயும் கொண்டுள்ள செயல் முனைப்புள்ள நடவடிக்கைகள் பயனாக இந்த நோக்குகளும் நோக்க முறைமைகளும் உருவாகின்றன''.

அல்தூஸர் ''கருத்து நிலை என்பது வரலாற்று இருப்பும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினுள் வகிபாகம் (role) கொண்டதுமான சித்திரிப்புக்களின் (படிமங்கள், ஐதீகங்கள், கருத்துக்கள், எண்ணக்கருக்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறைமை'' என்று (அந்த அளவில் தனக்கே உரிய தர்க்கத்தையும் கொண்டதான ஒன்று என்று) வரைவிலக்கணம் கூறுகின்றார்; மேலும் அவர் இக்கருத்துநிலை சமூகங்களின் வரலாற்று வாழ்விற்கு அத்தியாவசியமான ஓர் அமைப்பு என்று கூறி, அதற்கும் மேலே சென்று ''தங்களுடைய இருப்புக்களின் நிலைமைகள், நிபந்தனைகளின் தேவைக்கேற்ப மனிதர்கள் மாற்றப்படுவதற்கும் மாற்று உருவப் படுவதற்கும் மிக அத்தியாவசியமானது கருத்து நிலையாகும். இது வெகுசனச் சித்திரிப்புகளின் ஒரு முறைமையாகும்'' என்று கூறுகிறார்.

பண்பாடு என்பதோ மனிதன் தனது சமூக வரலாற்று வளர்ச்சியினூடே தோற்றுவித்துக் கொள்கின்ற பௌதீக, உயிர்ப்பு நிலைப் (ஆன்மீகம்) பெறுமானங்களின் ஒட்டுமொத்தத் தொகையாக சமூக வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட படிநிலையில் ஈட்டப்பெற்றுள்ள தொழில் நுட்ப முன்னேற்றம், உற்பத்தி, கல்வி, விஞ்ஞானம், இலக்கியம் ஆகிய கலைகளின் வளர்ச்சி மட்டத்தைக் காட்டுவதாகவும் அமையும் (ஓசிப் போவ் : 1969: பக் 91). பண்பாட்டுக்கும் கருத்து நிலைக்குமுள்ள தொடர்பை அறிந்து கொள்வது அதிக சிரமமில்லாத ஒன்றல்ல. கருத்துநிலை என்பது பெறுமானங்கள், கருத்துகளின் முறைமை ஆகும். அது ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுக்குள்ளே இருந்தே கிளம்ப முடியும். அது மனித சீவியத்தின் மாறுகின்ற சூழல் பற்றியும் சிரத்தை கொள்ளுமேல் அது புதிய பண்பாடு பற்றிய சிரத்தையைக் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகின்றது. இவ்வாறு நோக்கும்போது கருத்துநிலை என்பது ஒரு பண்பாடு முழுவதினதும் கருத்தியல் கருத்துருவாக்கம் ஆகும். எந்தவொரு கருத்து நிலையும் தன் பண்பாட்டை வெளிக்காட்டும். ஆனால் அதில் ஒரு வேறுபாடு உண்டு. அந்தக் குழுவினால் வற்புறுத்தப்பட்டு அதன் பிரதிநிதியாக எடுத்துக்கூறப்படும் பண்பாடும், கருத்து நிலையும் அக்குழுமத்திடையே நிலவும் பௌதீக, ஆன்மீக இருப்புகளின் பல்வேறு வடிவங்களினது வெறும் கூட்டுத்தொகையல்ல. அது அந்தக் குழுமத்தினுள்ளே மேலாண்மை வகிக்கும் சமூகக் குழுவினது சமூக வாழ்க்கையினது கருத்துநிலை அம்சமாகவே இருக்கும்.

எனவே, ஒரு சமூகக் குழுவின் பிரதான கருத்து நிலையை இனங் காணும் பொழுது அந்தக் குழுவினரிடையே உள்ள மேலாதிக்கங்களை அது காட்டும். சமூக மாற்றம் பற்றிய ஒரு பார்வை பற்றி அறிய வேண்டுமானால் அந்தக் குழுவின் உள்ளேயுள்ள மேலாதிக்கங்களின் மாற்றங்களுக்கான தேவை பயிற்சி மிக நுணுக்கமாக நோக்குதல் வேண்டும்.



எந்த ஒரு சமூகத்தினதும் பண்பாடு கருத்துநிலை பற்றி ஆய்வு மேற்கொள்ளப்படும் பொழுதும் அந்தப் பண்பாடும் அதன் நிறுவனங்களும் எந்தளவிற்கு மேலாதிக்கம் உள்ள குழுவின் கருத்து நிலையினுள்ளே தோய்ந்து கிடக்கின்றன என்பதையும், எவ்வாறு இந்த மேலாண்மை (Hegemony) அதிகாரத்தில் உள்ள அந்தக்குழுவிற்கு ஒரு நியாயப் பாட்டை வழங்குகிறது என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

''மேலாண்மை'' என்ற இந்தக் கோட்பாடு பற்றி அன்ரோனியோ கிராம்ஸ்சி முதலில் எடுத்துரைத்தார். தொழிலாளர் வர்க்கம் முதலாளித்துவத்தை ஏற்றுக் கொண்டமை பற்றி பகுப்பாய்வு செய்யும் பொழுது முதலாளித்துவம் தான் மேலாதிக்கம் செலுத்தும் வெகுசனங்களிடையே இருந்து கருத்து இசைவினைப் பெற்றுக் கொள்ள இந்த அதிகார மேலாண்மை முறைமையை எவ்வாறு பயன்படுத்தி உள்ளது என்பதனை எடுத்துக் காட்டியுள்ளார், மேலாண்மை என்பது பூர்ஷுவா வர்க்கம் தொழிலாளர் வர்க்கத்தின் மீது தனது கருத்துநிலைச் செல்வாக்கைப் பதித்து, அந்தத் தொழிலாளர் வர்க்கத்தைத் தனது ஆதிக்கத்துக்கு உட்படுத்தும். (*பெரி அண்டர்சன் : 1976 : பக்: 27).*

''இந்த இசைவினைப் பெற்றுக் கொள்வதற்கு அது வைத்திருக்கும் கருவிகளாவன பாடசாலைகள், தேவாலயங்கள், பத்திரிகைகள், கட்சிகள், சங்கங்கள் ஆகியனவாகும். இவை மேலாதிக்கமுள்ள வர்க்கத்திற்கு துணையாகவுள்ள புலமைக் குழுக்களால் கையளிக்கப்பட்டு, வரலாற்றுப் பழைமையில் இருந்து உருவாக்கப்பட்ட கருத்து நிலைகளின் தொகுதிகள் வழியாக சுரண்டப்படும் மக்கள், செயல் முனைப்பற்ற கீழ்ப்படிவுக்கு ஆளாக்கப்படுகின்றார்கள்.'' *(பெரி அண்டர்சன்: 1976:பக்:79-80)*

''மேலாண்மைக்'' கோட்பாடு மூன்றாம் உலகச் சமூகங்கள் பற்றிய ஆய்வுக்கு முக்கியமான ஒன்றாகும். தங்களுடைய தனித்துவத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் முயற்சியில் பெரும்பாலான சமூகங்கள் நவீன காலத்திற்கு முற்பட்ட பண்பாட்டுச் சின்னங்களை இன்று முனைப்புப்படுத்துகின்றன. இந்தக் குறியீடுகளுக்குள்ளே நிலமானிய முறைமைக்குரிய சமத்துவ நோக்கற்ற கருத்துக்கள் தொக்கு நிற்கின்றன. தெற்கு தென்கிழக்காசியப் பிராந்தியங்களில் உள்ள பலநாடுகள், தங்கள் தங்கள் நாடுகளில் காலனித்துவம் வருவதற்கு முன் நிலவிய கலை வடிவங்களைப் பேணுவதற்கான அவாவினாலே அவர்களது பாரம்பரியச் சமூகத்தில் நிலவிய ''புரவலர் பெறுநர்'' முறைமையை மீள வலியுறுத்தும் புதிய கொள்கைகளை மேற்கொண்டுள்ளன. அரசே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் புதிய 'புரவலர்' ஆகும். இதனால் நடைமுறை நிலையில் கலைஞர்கள் அதிகாரத்தில் இருப்போருக்கு அரசியல் இயைபு காட்ட வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டுவிடுகிறது. அரச ஆதரவின் குணாம்சம் காரணமாக, கலைகளூடே எதிர்ப்புப் போக்கு மரபு வளராது தடுக்கப்பட்டு வருகிறது.

இவை காரணமாக, பாரம்பரியச் சமூகத்தின் கருத்து நிலையும் அது சமகாலச் சமூகத்திற்குக் கையளிக்கப்படும் முறைமைகள் பற்றியும் ஆராய வேண்டுவது அவசியமாகின்றது.

## யாழ்ப்பாணம் பற்றிய சமூக ஆய்வுப் போதாமை

நமது சமூகத்தைப் புரிந்து கொள்வதற்கு முயலும் பொழுதுதான் யாழ்ப்பாணம் பற்றிய சமூகவியல் மானிடவியற் பகுப்பாய்வுகள் சிங்கள மக்கள் பற்றிச் செய்யப்பட்ட பகுப்பாய்வுகள் அளவிற்கு இல்லை என்ற உண்மை தெரியவருகின்றது. பௌதீக, தொழில்நுட்ப அறிவியலும், மருத்துவமும் கவர்ந்த அளவிற்கு சமூக விஞ்ஞானம் நமது திறன் உடைய மூளை உழைப்பாளிகளைக் கவரவில்லை. எம்மிடையே இருந்து தோன்றி மிகப் பெருநிலை எய்தியுள்ள சில சமூகவியலார் - மானிடவியலார் உள்ளர் எனினும், இவர்கள் இலங்கைத் தமிழர் பற்றிய ஆய்வினைத் தமது விசேட சிரத்தையாகக் கொள்ளவில்லை. கணநாத் ஒபேசேகர, நியுற்றன் குணசிங்க போன்ற புலமைத்துவம் உள்ள ஆய்வாளர்கள் இலங்கைத் தமிழ்ச் சமூகம் அதன் பண்பாடு பற்றி ஆராய்வதற்கு இல்லையென்பது மனவருத்தத்திற்குரிய ஒரு விடயமாகும். உலகப்புகழ்பெற்ற சமூக மானிடவியலாளரான பேராசிரியர் எஸ்.ஜே.தம்பையா 1983க்குப் பின் இலங்கையின்.சிங்கள - தமிழ் இனப்பிரச்சினை பற்றி எழுதியுள்ள, யாழ்ப்பாணத்தில் வழங்கும் சீதன முறைமை பற்றிய, அவர் கட்டுரை ஒன்று உண்டு என்பது உண்மையே. ஆனால் யாழ்ப்பாணத் தமிழர் பற்றிய ஒரு வரன்முறை ஆய்வாயில்லை. எண்பதுகளின் நடுக்கூற்றிலிருந்தே சமூகவியல் ஒரு பாடமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயிற்றப்படுகின்றது.

இலங்கைத் தமிழர் பற்றி ஆராயும் பிறநாட்டு அறிஞர்கள் தொகையை நோக்கும் போது சிங்கள சமூகம் பற்றி ஆராயும் அறிஞர் தொகையிலும் பார்க்க மிகக் குறைந்த தொகையினரே யாழ்ப்பாணச் சமூகம் பற்றி ஆராய்ந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது. முக்கியமானவர்களாக பின்வருவோரைக் குறிப்பிடலாம்: எம்.டீ.ராகவன், மைக்கல் பாங்க்ஸ், கெனெத் டேவிட், பிறயன் ஃபாஃபன்பேகர், ஸ்ஷியோன்பேக் .



இவர்கள் யாழ்ப்பாணத் தமிழர்களின் சமூக அமைப்பை, அது இயங்கும் முறையை எழுதியுள்ளனர். ஷேர்ன் பேக்கின் ஆய்வு சீநோர் செய்திட்டத்தில் வேலை செய்த பெண் தொழிலாளர்கள் பற்றியதாகும். இவ்வாய்வுகள் எதுவும் யாழ்ப்பாணச் சமூக உருவாக்கம் பற்றிய பிரச்சினைகள் பற்றி ஆராயவில்லை. யாழ்ப்பாணச் சமூகம் பற்றிய ஆய்வில் இன்றுள்ள மிக அவசரமான புலமைப்பணி சமூக உருவாக்கம் பற்றிய ஆய்வேயாகும். நியுட்டன் குணசிங்க, இலங்கையின் விவசாய, கமச் செய்கை முறைமைகளும் அவற்றின் அமைப்பியல் மாற்றுருவாக்கமும் பற்றி மேற்கொண்ட ஓர் ஆய்வில் யாழ்ப்பாணத்தில் நிலவும் நில உடைமைகள் பற்றிய ஒரு சிறு குறிப்பினை எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து எழுதுவோருள் நா.பாலகிருஷ்ணன், நித்தியானந்தன், சிவத்தம்பி ஆகியோர் பொருளாதார -சமூக- அரசியல் அம்சங்கள் பற்றிச் சிற்றாய்வுகள் செய்துள்ளனர். முதலிருவரும் பொருளாதாரம் பற்றியும் மூன்றாமவர் சமூக அரசியல் பற்றியும் எழுதியுள்ளனர்.

இவ்வாய்வு யாழ்ப்பாணம் பற்றிச் செய்யப்பட்டுள்ள எல்லா ஆய்வுகளையும் பயன்படுத்தவில்லை. இப்பிரச்சினை பற்றி இத்துறைப் புலமையாளர்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்குடனேயே இது எழுதப்படுகின்றது.

## யாழ்ப்பாணச் சமூகத்தின் சமூகப் பொருளாதார விவரணம்

யாழ்ப்பாணத்தைத் தாக்குப் பிடிக்கும் சமூக பொருளாதார அமைப்பின் அடிப்படை அமைவினை பாலகிருஷ்ணன் பின்வருமாறு விவரிக்கின்றார்:

''இந்தப் பிரதேசத்து மக்கள் ஈடுபடுகின்ற பொருளாதார நடவடிக்கைகளில் பெரும் கூறுகள் விவசாயம், வியாபாரம், வணிகம், தொழில் முறை உத்தியோகங்கள், மீன்பிடி ஆகியனவாகும். பிரதான பொருளாதாரச் செயற்பாடுகளும் அவற்றுக்குரியனவாக சமூக உறவுகளும் பெருமளவில் பாரம்பரிய சாதியமைப்பு முறையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளன. பெரிய பொருளாதாரச் செயற்பாடுகளின் அபிவிருத்தி மேற்கிளம்புகின்ற வர்க்க வேறுபாட்டைப் பிரதிபலிக்கின்றன. இதனால் உற்பத்தியின் சமூக உறவுகளில் சாதி வர்க்க உறவு, மேலாதிக்கமுடைய அம்சமாக வந்துள்ளது'' *(பாலகிருஷ்ணன்: 1983).*

யாழ்ப்பாணச் சமூக அமைப்பின் மிகமுக்கியமான அம்சமாக சாதி முறைமையையே எடுத்துக் கூறல் வேண்டும். ''சாதி முறைமை'' (caste system) எனும் பதத்தின் உள்ளார்த்தம் முக்கியமானது. லூயி துமொங் எடுத்துக் கூறியது போன்று இது கருத்துக்கள், பெறுமானங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமையாகும். விதிமுறையான, விளங்கக்கூடிய ஒரு நியம அமைப்புள்ள முறைமையாகும். அதாவது முறைமை (System) என்பதன் புலமைக்கருத்தில் உள்ள ஒன்றாகும். இதில் முக்கியம் என்னவென்றால் இந்த முறைமையைப் புரிந்து கொள்ளல் வேண்டும். இதுபற்றிய ஆய்வு என்பது ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட பல்வேறு சாதிகள் பற்றிய பகுப்பாய்வு அன்று; இது யாழ்ப்பாணத்திற்கே உரியதான ஒரு சமூக முறைமையை ''உண்டாக்குகின்ற'' சாதிகளிடையே நிலவுகின்ற ஊடாட்ட உறவுகளை ஆய்வு செய்தலாகும்.

யாழ்ப்பாண முறைமையை ஆராய்ந்துள்ள எல்லா சமூகவியலாளர்களும் பிரதான இயல்பென ஒன்றை இனங்கண்டுள்ளனர். அது வெள்ளாளச் சாதியின் மேலாதிக்கம் ஆகும். ஃபாஃபன்பேகர் இந்தச் சூத்திர மேலாதிக்கம் பற்றிய உள்ளார்த்தங்களை ஆராய்ந்துள்ளார். (வர்ண அதிகாரப் படிநிலை அமைப்பில் வெள்ளாளர் சூத்திரர்களே - ஃபாஃபன் பேகர்:1982).

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆறுமுகநாவலர் வெள்ளாளரின் சடங்கு நிலைமுக்கியத்துவத்தைப் பேணுவதற்கு வற்புறுத்திய சற்சூத்திரர் என்ற எண்ணக்கருவை மனங்கொள்ளல் வேண்டும்.

இது ஒரு அதிகாரப் படிநிலைச் சமூகம் என்பது மிகமுக்கியமான உண்மையாகும். சாதி முறைமை விதிக்கும் அதிகாரப் படிநிலை

(அ) துடக்கு, தீண்டாமை

(ஆ) அதிகாரம், ஆள்புலம்

சம்பந்தப்பட்டது ஆகும். இந்த அதிகாரப் படிநிலையின் முக்கியத்துவம் யாதெனில் இதற்குச் சமய அங்கீகாரம் உள்ளமையே ஆகும். தூமோங் மொழியில் கூறுவதானால் ''இந்த அதிகாரப் படிநிலை மத இயல்பு கொண்டது'' .

இந்த அதிகாரப் படிநிலை உள்ளுறுத்தும் அந்தஸ்து நிலைப்பாடானது சாதி - தொழில் தொடர்புப்பாடு இருக்கும் போதே நன்கு தெரிகின்றது. மதம் அதனை சில வேளைகளில் அத்தியாவசியமான ஒன்றாக்குகின்றது. உதாரணம்: மரண வீடுகளில் முடிதிருத்துபவர், சலவைத் தொழிலாளர்கள் ஆகியோரின் வகிபாகம் (role) ஆகும். யாழ்ப்பாணத்தின் வரலாற்றுநிலைமைகள் (கிறிஸ்தவ தேவ ஊழிய (மிசனறி) நிறுவனங்கள் மூலம் கல்வி வாய்ப்பு கிடைத்தமை) காரணமாக, பல்வேறு சாதிக்குழுமத்தினர் சமயநடைமுறைகளுடன் சம்பந்தப்படாத ''நொதுமல்'' (neutral) உத்தியோகங்களைப் பெறக் கூடியதாக இருந்தது.



அரசாங்க சேவை உத்தியோகங்கள் இத்தகைய ''நொதுமல்'' உத்தியோகங்களுக்கான நல்ல உதாரணங்களாகும். அதாவது இந்த உத்தியோகங்களுக்கும் சாதித் தொழிலுக்கும் சம்பந்தம் கிடையாது.

கென்னத் டேவிட் யாழ்ப்பாணத்தின் சாதி உறவுகளை

(அ) கட்டுப்பாட்டு இணைப்புள்ள முறைமை

(ஆ) கட்டுப்பாட்டு இணைப்பற்ற முறைமை

என வகுத்துள்ளார். நில உரிமை உள்ள சாதிக்கும் சேவைச் சாதிகளுக்குமுள்ள உறவுகளை கட்டுப்பாடுள்ள முறைமையென்றும், கைவினையாளர்களுக்கும், கரையாருக்கும் மற்றவர்களுடன் உள்ள உறவை கட்டுப்பாடற்ற முறைமை என்றும் டேவிட் கூறுவர். *(கெ.டேவிட்: 1973: பக்:31-33)*

மேனாட்டு மயவாக்க ''நடைமுறைகள்'' (கிறித்துவ தேவ ஊழியப் பாடசாலைகள் வழியாகவும், சட்டத்தின் முன் சமம் என்ற கொள்கை வழியாகவும்) பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. இதனால் மேலாதிக்கம் உள்ள சாதியை ''நம்பியிருக்கும்'' தன்மை அறுக்கப்பட்டது. கட்டுப்பாடற்ற குழுக்கள் மேலாதிக்கம் உடைய சாதிக்குழுமத்துடன் சமனாக இருக்கும் தன்மையைப் பெற்றன.

காலனித்துவ அமைப்பில் சமூக அதிகாரம், அரசாங்க உத்தியோகம் மூலம் கிட்டிற்று. அரசாங்க உத்தியோகம் கிடைத்த எவருக்கும் இந்த அதிகாரம் கிடைத்தது. அந்த உத்தியோகத்துக்கான அடிப்படைத் தகுதியாக கல்வி அமைந்தது. இந்தப் புதிய வாய்ப்புகள், பயன்கள் அடிநிலைக் குழுக்களுக்குப் போகாமல் இருப்பதைப் பார்த்துக் கொள்வதே சலுகையுடைய குழுக்களின் பிரதான பணியாயிற்று. இதன் காரணமாக தாழ்த்தப்பட்டோர் என்று கருதப்படுபவர்களின் குழந்தைகளை ''நல்ல'' பாடசாலைகளில் சேர்ப்பது கடினமாயிற்று. அதாவது, கிராம மட்டத்தில் கல்வி பற்றிய சமூகக் கட்டுப்பாட்டுக்கான ஒரு முயற்சி காணப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் வணிகமுதலும், கைத்தொழில் முதலும் இல்லாது இருந்தமையால் கல்வி கற்றவர்கள் பெரும்பாலும் அரசாங்க சேவைக்குள் சென்றனர். அவ்வாறு செல்லும் பொழுது தொழில்முறை உத்தியோகங்களான பொறியியல், மருத்துவம் ஆகிய உயர் நிலையினவாகக் கொள்ளப்பட்டன.

சாதி அதிகாரப் படிநிலை முறை சம அந்தஸ்துள்ள குழுவினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிடையே அக மணமுறைமையை நிலைநிறுத்தியது. ஏறத்தாழ 1950 வரை சாதிகளுக்குள்ளிருந்த ''பகுதி''களே அகமனத்திற்கான அலகுகளாக விளங்கின. ஆனால் இப்பொழுது பகுதி (lineages) வேறுபாடுகள் மறக்கப்பெற்றுப் பெருஞ்சாதிக் குழுமங்கள் தோன்றியுள்ளன. இதன் காரணமாக அகம்படியார், மடப்பள்ளியார் எனும் உபசாதிகள் மறக்கப்பட்டு ஒரு பெரும் வெள்ளாளர் குழுமத்தினுள்ளே அவர்கள் எல்லோரும் வருகின்றனர். அதுபோலவே முக்குவர், கரையார் ஆகியோர்களுக்கிடையே இருந்த வேறுபாடுகள் மறையத் தொடங்கிக் கரையாரப் பெரும் குழுமம் ஒன்று மேற்கிளம்புகின்றது. அதிகாரப் படிநிலை முறைமையில் இடம் பெறுகின்ற போது இந்நடுக்குழுமங்கள் தங்களின் வரிசையை (Rank) நிர்ணயிப்பது பிரச்சினையாக இருந்தது. சாதாரணமாக ஒரு கிராமத்தினுள் வரிசை முறையானது சமூக பொருளாதார அதிகாரங்கள் கொண்டே நிர்ணயிக்கப்படுவதாயிற்று. இதனால் பல சாதிச் சண்டைகள் ஏற்பட்டன.

மத மாற்றங்களினாலும் சாதிச் சண்டைகள் அதிகரித்தன. ஏனெனில் கிறித்தவத்திற்கான மதமாற்றம் குறைந்தபட்சம் கொள்கை அடிப்படையில் சமூக சமஅந்தஸ்து என்று கூறியது. கத்தோலிக்கச், புரட்டஸ்தாந்து தேவாலயங்கள் பின்னர் சாதியமைப்பில் யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய துன்பம் நிறைந்த பல சம்பவங்கள் நிகழ்ந்தன. பெரும்பாலும் கிறித்துவர்களும் சாதி பாகுபாட்டை ஏற்றுக் கொள்ளவேண்டியதாயிற்று. சகல தமிழர்களும் ஒரு இனக்குழுமம் எனும் வகையில் அரசியல் பிரச்சினைகளை எதிர்நோக்கும் தன்மை அதிகரிக்கத் தொடங்கத்தான் சாதி முரண்பாடுகள் பற்றி எடுத்துக்கூறல் குறைந்தது; குறைந்துள்ளதே தவிர ஒழியவில்லை.

இந்த விவரணத்தின் பின்புலத்திலேயே நாம் யாழ்ப்பாண சமூகத்தில் நிலவும் முக்கிய கருத்துநிலைகள் பற்றி ஆராய்தல் வேண்டும்.

## சைவமும் தமிழும் என்ற கருத்துநிலை

''சைவத் தமிழ்'' கருத்துநிலை என்பது சைவத்தினதும் தமிழினதும் ஊடாட்டமே. இவை இரண்டினதும் அடிப்படைகளைத் தீர்மானிக்கின்றதென்றும், ஒன்று இல்லாமல் மற்றது இருக்கமுடியாது (அதாவது சைவராகவோ, தமிழராகவோ இல்லாமல் தமிழராகவோ சைவராகவோ இருக்க முடியாது) என்று எடுத்துக் கூறும். தமிழர்களினதும் சைவர்களினதும் வரலாறு முழுவதையும் விளக்க இக்கண்ணோட்டம் முயல்கிறது. இந்த நோக்கின் உள்ளார்த்தங்களும் அவற்றின் அடியாகத் தோன்றுகின்ற செயற்பாடுகளும் பாரதூரமான முக்கியத்துவங்களைக் கொண்டவை.



இந்த வாதம் தமிழர்களினதும் அவர்களது மொழிப் பண்பாட்டினதும் வளர்ச்சியில் வேறு எந்த மதத்திற்கும் செல்வாக்கு உரிமை கிடையாது என்ற நிலைப்பாட்டை ஏற்படுத்துகிறது. தமிழுக்குச் சமணர்கள், பௌத்தர்கள், ஆசீவகர்கள், முஸ்லிம்கள், கிறித்தவர்கள் ஆகியோர் செய்த பங்களிப்புக்களை முற்றாக நிராகரிக்கின்றது. அத்துடன் தமிழர் பாரம்பரியத்தில் வைணவம் பெறும் இடத்தையும் இது மறுதலிக்கின்றது. இந்த கருத்துநிலைப்படி சைவம் ஒன்றே தமிழ் மக்களுக்குரிய குணாம்சங்கள் கொண்ட மதம் என்றும் வைணவமோ அன்றேல் பல்வேறு சாதிக்குழுக்களின் சமூக மதவாழ்வில் முக்கியத்துவம் செலுத்தும் சிறு பாரம்பரியச் சடங்குகளோ முக்கியம் அற்றவை என்று ஐயம் திரிபறக் கூறுகின்றது.

இக்கருத்துநிலை சைவ சித்தாந்தத்தை தமிழர் வாழ்வின் மெய்யியல் தளமாகக் கொள்கின்றது. இவ்வேளையில் சைவத் தமிழ்க் கருத்துநிலையிற் கருதப்படும் சைவமானது காஷ்மீரச் சைவத்துடனோ அன்றேல் வீரசைவத்துடனோ சம்பந்தப்படவில்லை என்றும் சைவம் என்ற மதத்தின் உருவாக்கத்தில் இச் சிந்தனைகளுக்கு இடமில்லை எனக் கொள்கின்றதென்றும் அழுத்தம் திருத்தமாக கூறல் வேண்டும். இக் கருத்துநிலையின் படி தேவார திருவாசகம் வழியாக வருவதும் மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியார் ஆகிய சந்தானகுரவர்களால் உருவாக்கப்பெற்றதுமான சைவ சித்தாந்த கோட்பாடே சைவத்தின் தளமும் களமுமாகக் கொள்ளப்படுகின்றது. இந்த மெய்யியல் நோக்கு சங்கரரால் எடுத்துக் கூறப்பட்ட அத்வைதக் கோட்பாட்டை எதிர்க்கின்றது. இந்த அத்வைதக் கண்ணோட்டமே பிராமணர்களின் மத நோக்கு ஆகும். இதனால் தமிழ் நாட்டிற்குள் சைவ சித்தாந்தம் பிராமண எதிர்ப்பு நிலை கொண்ட ஒரு தரிசனமாகவே கொள்ளப்படுகின்றது. இந்நோக்கு தேவாரங்களையும், திருவாசகங்களையும் பிரதானமாகக் கொண்டு அவற்றினை வேதபாடங்களுக்கு இணையாகக் கொள்ளும் தன்மை கொண்டது. சமஸ்கிருத முதன்மையை விரும்பும் பிராமணர்கள் இந்த நோக்கினைப் பெரிதும் விரும்புவதில்லை. இந்த மெய்யியல் கோட்பாடு தமிழ்ச் சார்புத் தன்மை கொண்டதாகும்.

பிராமணருக்கு முக்கியத்துவம் அளிக்க மறுப்பதன் மூலம் இந்த மெய்யியற் கோட்பாடு சைவப் பாரம்பரியத்தின் பாதுகாவலர் என வெள்ளாளச் சாதியினருக்குரிய மேன்மையை நியாயப்படுத்துகின்றது.

சைவ சிந்தாந்தக் கோட்பாடு அதிகாரப்படிநிலை முறைமையை ஓம்புகிறது. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நிலைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளோருக்கு முக்தி உண்டு என ஒத்துக் கொள்ளும் இந்தக் கோட்பாடு இந்த ஒவ்வொரு நிலையினரும் தத்தம் நிலைகளில் வெவ்வேறான நிலைகளிலேயே இருப்பர் (தங்குவர்) என்று கூறும். ஆன்மாக்கள் தாம் தாம் செய்த வினைகளுக்கியைய ஒன்றிலிருந்து மற்றது வேறுபட்டதான சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய நிலைகளில் இருக்கும். தெய்வத்தின் இராச்சியத்திலும் ஒருபடிநிலை உண்டு. அத்துடன் தனித்தனியேயும் இருக்கும். *(கா.சிவத்தம்பி: 1983: பக்: 128)*

சைவத் தமிழ்க் கருத்து நிலை யாழ்ப்பாணச் சூழலில் முதன் முதலில் வன்மையுடன் முன்வைக்கப்பட்டது, யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் (1822 - 1879) அவர்களாலேயே ஆகும். அவர் இதனை கிறிஸ்தவ மிசனரிமார்களின் தாக்குதல்களுக்கு எதிராக சைவத்தைப் பேணவும் யாழ்ப்பாணத்து மேல்சாதி இந்துக்களை கிறித்துவராக மதம் மாற்றும் முயற்சிகளைத் தடுக்கவும் முனைந்த போது இந்தக் கோட்பாட்டினை ஒரு வரன்முறையான கொள்கையாக முன்வைத்தார். யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தில் இவ் எண்ணக்கரு வளர்த்தெடுக்கப்பட்ட சமூக பொருளாதாரச் சூழலையும் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

ஆறுமுகநாவலர் கிறித்துவ மிசனறிமார்களின் கல்விக் கொள்கைகளுக்கும், நடைமுறைகளுக்கும் எதிராகத் தொழிற்பட்டார். ஆங்கிலத் திருச்சபையினரும் மெதடிஸ்த திருச்சபையினரும் அமெரிக்க மிச்னரிமாரும் காலனித்துவ அரசு ஆங்கிலத்தை நிர்வாக மொழியாக்கிய வசதியைப் பயன்படுத்தி கல்விக் கொள்கையையும் பாடவிதானத்தையும் வகுத்தனர்.

இதனூடே ஆங்கில மொழிப்பயில்வின் அத்தியாவசிய அங்கமாக விவிலியம் போதிக்கப்பட்டது. புவியியல், வானசாஸ்திரம் போன்ற இதுவரை பயிற்றுவிக்கப்படாதனவும் அறிமுகம் செய்யப்பட்டன. இக்கல்விமுறையிற் பாரம்பரியம் பற்றிய அறிவுக்கு எவ்வித இடமும் கொடுக்கவில்லை எனினும் அமெரிக்க மிசனரிமார் தாம் உருவாக்கிய கல்வி முறைமையில், உயர் மட்டத்தில் சுதேசிய கல்விப் பாரம்பரியங்களுக்கு இடம் வழங்கினர். தமிழ் மொழி மூலம் கற்பிக்கவும் முனைந்தனர்.

கிறித்துவ மயமாக்கும் இந்தக் கல்வி முறையினை நாவலர் எதிர்த்து சைவத்தின் மதப் பின்னணியில் தமிழைப் பயிற்றுவிக்கும் ஒரு முறைமையை உருவாக்க முயன்றார். புதிய பாடங்களைத் தன்னுடைய பாடவிதானங்களிற் சேர்த்துக் கொண்டார். அவரின் கல்விமுறைமையில் ஆங்கிலத்திற்கு இடம் இருந்தது. வண்ணார்பண்ணையில் அவர் நிறுவிய பாடசாலையில் வில்லியம் ஹியூஸ் ஆங்கிலம் கற்பித்தார்.



நாவலர், கல்வி பயிற்றல் தேவைகளுக்கு வேண்டிய சைவத் தமிழ், இலக்கண, இலக்கிய, மெய்யியல் நூல்கள் சுலபமாகக் கிடைக்கப் பெறாமை கண்டு முக்கியமானவற்றை பதிப்பித்து வெளியிட்டார். நாவலர் பதிப்புகள் இன்றுவரை நம்பகமானவையாகக் கொள்ளப்படுகின்றன. சைவத் தமிழ்ப்பாரம்பரியத்தில் பெரும் முக்கியம்பெறும் நூல்கள் எல்லாவற்றையும் பிரசுரித்தார்.

இவ்வேளையில் யாழ்ப்பாணப் பாரம்பரியத்தில் சில அறிஞர்கள் காய்தல் உவத்தல் அற்றமுறையில் எடுத்துக்கூறும் ஒரு கருத்தினைப் பதிவு செய்தல் வேண்டும். அதாவது நாவலரும் அவர் வழி வந்தோரும் யாழ்ப்பாண இலக்கியப் பாரம்பரியத்தின் சைவத் தமிழ்த்தன்மையை நிலை நிறுத்துவதற்காக யாழ்ப்பாணத்தில் தோற்றுவிக்கப்பெற்ற சமயச்சார்பற்ற இலக்கியங்களை கவனிக்காதும் ஒதுக்கியும் விட்டனர் என்று கூறப்படுகின்றது.

இத்தகைய ஓர் இலக்கியக் கண்காணிப்புப் பார்வையிலிருந்து தப்பிய சில நூல்கள் உள்ளன. உதாரணம்: கனகி புராணம் ஆகும். யாழ்ப்பாணத்தில் நாவலரின் தூய்மைவாதப் போக்கிற்குச் சமாந்திரமான ஒரு அங்கதப்பாங்கான, கலகலப்பான ஓர் இலக்கியப் பாரம்பரியமும் நிலவிற்று என்பதை இந்நூல் காட்டுகின்றது. இந்த சமயச் சார்பற்ற இலக்கியப் பாரம்பரியத்திற்கு முக்கியம் கொடாது விட்டமைக்குக் காரணம் சைவ உந்துதல் இன்றிச் செம்மையான இலக்கியச் செயற்பாடுகள் எதனையும் மேற்கொள்ள முடியாது என்பதை நிலைநிறுத்துவதற்காக இருக்கலாம்.

நாவலர் தமிழகத்தில் ஆறுவருடம் (1864- 1870) தொடர்ச்சியாக இருந்த காலத்திலேயே இக்கல்வி முறைமைக்கு தளமாக அமையும் பிரசுர முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார். தமிழகத்திலே பிராமணர் அல்லாத தமிழ் இலக்கிய நிறுவனங்களின் ஆதரவு இருந்தது என்பதும் பிராமணர்களும் இந்துத் தாராண்மைவாதிகளும் (வடலூர் வள்ளலார்) இவரின் கோபத்திற்கு ஆளாயினர் என்பதும் குறிக்கப்பட வேண்டிய விடயங்களாகும். சைவத் தமிழ் ஒருமைப்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பெற்ற இந்தக் கல்வி அமைப்பினுள்ளே தொக்கி நிற்கும் சமூக உள்ளார்த்தங்கள் மிக முக்கியமானவையாகும். தீண்டப்படாத சாதி முறைமைகளில் உள்ள பிள்ளைகளுக்கு அவர்கள் தொடர்ந்தும் இந்துக்களாக இருப்பினும் கல்வியற்றவர்களாகவேயிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. கிறித்தவர்களாயின் எல்லோருக்கும் கல்வி கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தின் சராசரி சைவத் தமிழ்ப் பிள்ளையின் கல்வி அதற்குரிய பண்பாட்டுச் சூழலிலேய நடத்தப்பெறல் வேண்டும் என்ற எண்ணக்கரு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும் நாவலர் நடத்திய பாடசாலை வெற்றியளிக்கவில்லை. அது மதக்கல்விக்கு மித மிஞ்சிய அழுத்தத்தைக் கொடுத்தது. ''சைவப் பிரகாச வித்தியாசாலை'' என்ற பெயரின் அர்த்தத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே நாவலர் மறைந்ததன் பின்னர் அவரின் கல்விக் கொள்கையில் பிரதானமான மாறுதல் செய்யப்பட்டது. அதாவது எல்லாப் பாடங்களும் ஆங்கில மொழிவழியாக ஓர் இந்துச் சூழலில் நடத்தப்பட வேண்டும் என்றும், அந்த இந்துச் சூழலும் மதநடை முறைகளை ஒரு குறிப்பிட்ட மட்டத்திற்கு மேல் திணிப்பதில்லை என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. சைவ ஆங்கில கலாசாலைகள் தொடங்கி இயங்கிய கட்டமைப்பு இதுவேயாகும். இவ்வகைக் கல்விமுறை 1883-ல் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி தொடங்கப்பட்டதுடன் ஆரம்பமாகிறது எனலாம்.

இது ஒரு சுவாரசியமான ஒரு சூழலை உருவாக்கிற்று. அதாவது, சைவச் சூழலில் அதற்கான அடிப்படைப் பாடப்புத்தகங்கள் படிப்பிக்கப்பட்டன. உண்மையில் நாவலரின் புத்தகங்களே படிப்பிக்கப்பட்டன. ஆனால் ஒட்டுமொத்தமான கல்வி வளர்ச்சியில் ஆங்கில மொழி வழிக் கல்வி தங்கு தடையின்றி சென்று கொண்டிருந்தது.

இவ்விடத்தில் முக்கியமாக அமைவது கிராம மட்டங்களில் காணப்பட்ட கல்வி பற்றிய சமூக கட்டுப்பாடாகும். சைவ ஆங்கிலக் கலாசாலைகள் கிராமங்கள் தோறும் பரவின. ஆனால் தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்களுக்கு அப்பாடசாலைகளில் இடம் இருக்கவில்லை. அவர்கள் தங்களுக்கெனக் கட்டப்பட்ட ஆரம்பநிலைப் பாடசாலைகளில் கல்வி பயின்றனர். பெரும்பாலோர் கல்வி பெறவில்லை. கட்டாயக் கல்வி முறை வந்தவுடன் ஐந்தாம் தரம்வரை படித்துவிட்டு க்ல்வியை நிறுத்திக் கொண்டனர்.

உண்மையில் யாழ்ப்பாணச் சமூகத்தில் ஏற்படும் பெரும் சமூக மாற்றம் பாடசாலைக் கட்டண முறைமை நீக்கப்பட்டமையுடனும் (இலவசக் கல்வி) 1944இல் சகல மட்டங்களிலும் தமிழ் மொழி கல்வி மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னருமேயாகும்.

தலைசிறந்த இலங்கைத் தமிழ்த் தலைவர் எனப் போற்றப்படுபவரும், படித்த இலங்கையர் சார்பாக இலங்கை சட்டசபையில் முதற் பிரதிநிதியாக இருந்தவருமான சேர். பொன்னம்பலம் இராமநாதன் நாவலரது பண்பாட்டுப் பேற்றின் அரசியல் வாரிசு ஆவார். அரசியலிலும் கல்வியிலும் சமூகக் கட்டமைப்பை உடைக்காத நவீனமயமாக்க நடைமுறையின் வளர்ச்சிக்கு அவர் உதவினர். அதாவது பாரம்பரியமான அதிகார படிநிலை பேணப்படும் அதேவேளையில் பிரித்தானிய ஆட்சியின் பலாபலன்களை உயர்மட்டத்தினரே அனுபவிக்கும் ஒரு சமூகக் கல்வி, அரசியல் நடைமுறையைத் தொழிற்படுத்தினர். (இது பற்றி விபரங்களை யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல் எனும் பகுதியில் பார்க்க).

இராமநாதனுடன் சைவத் தமிழ் கருத்து நிலையின் அரசியற் பரிமாணங்கள் உருவாகத் தொடங்குகின்றன. அதாவது அரசியல் என்பது உயர்ந்த சைவக்குழுமங்களுக்கேயுரியது; மேற்கல்வியும், உயர்கல்வியும் அக்குழுமத்திற்கேயுரியது என்பதாகும். சைவத்தமிழ்க்கருத்து நிலையினை ஆங்கிலத்தில் விளக்குவதாக அவரது ஆங்கில எழுத்துக்கள் அமைந்தன. அவருக்கு அக்காலத்திலிருந்த புகழ் காரணமாக தென் இந்தியாவில் நடத்தப் பெற்ற முதலாவது சைவ சிந்தாந்த மகாநாட்டில் அவருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இராமநாதன் தாழ்த்தப்பட்டோருக்கு வாக்குரிமையை எதிர்த்தமை தொடர்பாக தாழ்த்தப்பட்டோர் சங்கம் ஒன்று அவரை வன்மையாக எதிர்த்தது.

1920களின் பிற்கூற்றிலும் முப்பதுகளிலும் மேற்கிளம்பிய இளைஞர் காங்கிரஸ் தேசியவாதம், சமத்துவம் என்ற அதன் கொள்கைகள் காரணமாக (இவை காந்தியத்தின் வழிவந்தமை) சைவத் தமிழ் கருத்து நிலைக்குப் பெரும் சவால் எற்பட்டது. ஆனால் அது இழைத்த அரசியல் தவறு காரணமாக அது பின்னிலை எய்த சைவத் தமிழ்க் கருத்துநிலை மேலாதிக்கம் பெற்றது. ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் எழுச்சி இதனைக் குறிக்கின்றது எனலாம். ஆரம்பத்தில் பொன்னம்பலத்தின் அரசியல் தளம் அத்துணை சுலபமாக இனங்காணப்படவில்லை. சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் என்ற கிறிஸ்தவரின் தலைமையில் நிறுவப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தோற்றமும் (1949) இந்தச் செல்வநாயகம், இராமநாதனின் மருமகனாகிய (மகளின் கணவன்) சு.நடேசபிள்ளையை தோற்கடித்தமையும் சைவத் தமிழ்க்கருத்து நிலைக்குப் பெரும் சவாலாகின. செல்வநாயகம் நடேசனைத் தோற்கடித்தபோது யூ.என்.பி.யைச் சார்ந்திருந்திருந்தார் என்றாலும் கூட நடேசன் ஒரு கிறித்துவரால் தோற்கடிக்கப்படுவதை பாரம்பரியச் சைவர் விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ளவில்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தோற்றம் சைவத் தமிழ்க் கருத்துநிலை மீது விழுந்த முதலாவது பிரதான அடியாகும். ஆரம்பத்தில் சைவத் தமிழ்க் கருத்து நிலைவாதிகள் தமிழரசுக்கட்சியைச் சைவத் தமிழுக்கெதிரான கிறிஸ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவச் சூழ்ச்சியாகவே கருதினர். ''தமிழ் பேசும் மக்கள்'' என்ற தமிழரசுக் கட்சியின் கோட்பாட்டைக் கிண்டல் செய்தது. அதாவது கிறிஸ்தவர் தமிழ் பேசுபவர்களே தவிர உண்மையான தமிழர்கள் அல்ல என்று எள்ளி நகையாடப்பட்டது. (இந்த தமிழ் பேசும் மக்கள் என்ற எண்ணக் கரு முஸ்லீம்களையும் தமிழர்களையும் அரசியல்ரீதியாக இணைக்க வேண்டும் என்ற கருத்துடனேயே முன்வைக்கப்பட்டது). தமிழரசுக் கட்சி பற்றிய இந்தக் குற்றச்சாட்டு அக்கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரும் யாழ்ப்பாணத்தின் உயர் வெள்ளாள குடும்பங்களுள் ஒன்றைச் சேர்ந்தவருமான கு.வன்னியசிங்கம் அவர்களால் மிக வன்மையாக கண்டிக்கப்பட்டது. அவர் மிகச் சிறந்த ஒரு தலைவராக விளங்கினார்.

அரசாங்கத்தின் தமிழ் எதிர்ப்பு நடைமுறைகளின் வளர்ச்சி காரணமாக 1972ல் தமிழர் ஐக்கிய முன்னணியும் 1976-ல் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும் தோற்றுவிக்கப்பட்டபோதும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவராக மு.சிவசிதம்பரம் மேற்கிளம்பும் வரை சைவத்தமிழ் கருத்துநிலைவாதிகள் அதிகம் தொழிற்படவில்லை. ஆனால் இந்த காலகட்டத்தினைத் தொடர்ந்து இன்னொரு செல்நெறி மேற்கிளம்புவதைக் காணலாம். பௌத்த சிங்களவர்களுக்கும் இந்துத் தமிழர்களுக்குமிடையே மோதல்கள் இருக்க முடியாது என்றும் கிறிஸ்தவர் தங்களது மேலாண்மையை தொடர்ந்து பேண விரும்புவதாலேயே இந்தச் சண்டைகள் உண்டாக்கப்படுகின்றதென்று எடுத்துரைக்கப்பட்டது. யோகேந்திர துரைசாமி என்பவர் இந்தக் கருத்தோட்டத்தின் முக்கிய பிரதிநிதி ஆவார்.

தமிழ் இளைஞர்களிடையே அரசியல் தீவிரவாதம் தோன்றியமை சைவத் தமிழ் கருத்துநிலைக்கு ஏற்பட்ட மிகப் பெரிய பின்னடைவாகும். இந்த தீவிரவாதிகள் எல்லா வரிசைநிலைகளிலிருந்தும் வந்தனர்.

தலைமையும் சாதி அடிப்படையில் அமையவில்லை. தீவிரவாத தலைமையின் சமூகப்பின்புலத்தை நோக்கும் போது சாதி அமைப்பு முக்கியத்துவம் பெறவில்லை என்பது தெரிகிறது. அண்மைக்காலத்தில் நடேசன் சத்தியேந்திராவின் எழுத்துக்கள் சிலவற்றை ஈழப்போராட்டத்தினுள் சைவத் தமிழ் கருத்துநிலையைக் கொண்டுவரும் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இது மிக வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. இவ்வேளையில் இளம் கத்தோலிக்கக் குருமார் பலர் விடுதலை மறையியல் கொள்கை காரணமாக தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்டமை குறிப்பிடவேண்டிய ஒன்றாகும். இவர்கள் மனித உரிமைத் துறையிலும், நிவாரணத்துறையிலும் பல பணிகள் புரிந்துள்ளனர். இதன் காரணமாக தீவிரவாத இளைஞரிடையேயும் மக்கள் சிலரிடையேயும் சைவத் தமிழ் கருத்து நிலையைப் பலவீனப்படுத்துவதாகவுள்ளது.



ஆனால் சைவத்தமிழ் கருத்து நிலையானது பலவீனப்பட்டுள்ளதே தவிர முற்றிலும் நிராகரிக்கப்படவில்லை. இதன் தளமாக அமைகின்ற பணக்கார விவசாயப் பிரிவினர் இன்னும் பலமாகவே உள்ளனர். தீவிரவாதிகளின் சமூகத் தளமாற்ற நடவடிக்கைகளின் வேகத்தை இந்தக் கருத்து நிலை தடுப்பதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை என்று கூறிவிட முடியாது.

### இளைஞர் காங்கிரசின் தாராண்மை வாதக் கருத்துநிலை

மரபுப் பாரம்பரியப் பேணுகையில் சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தை அழுத்திக் கூற முனையும் ஒரு செயற்பாடு சமூகத்தின் ஒரு மட்டத்தில் காணப்படும் அதேவேளையில் இன்னொரு புறத்தில் அரசியல் அரங்கத்தில் தாராண்மைவாதப் போக்கினை வற்புறுத்துகின்ற ஒரு சமூக-புலமைச் செல்நெறி ஒன்று யாழ்ப்பாணத்தில் உள்ளது. ஹண்டி பேரின்பநாயகம் இந்தச் செல்நெறியின் ஒரு குறியீடு ஆகின்றார். உண்மையான தேசிய விஞ்ஞான பூர்வமான பகுத்தறிவுப் போக்கினை கொண்டிருந்த இக்கருத்துநிலை இலங்கை முழுவதையும் ஒரு தேசிய அலகாகக் கொண்டிருந்தது (சீலன் கதிர்காமர்: 1980).

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் இயக்கமானது இலங்கையின் மிக முக்கியமான தளமாற்றவாத இயக்கங்களில் ஒன்றாகும். இந்த இயக்கத்தினூடாகவே தமிழ் இடது சாரி இயக்கத்தினர் பலர் வந்தனர். இந்த இயக்கத்தினை ஈழத்துத் தமிழரின் முதலாவது இளைஞர் இயக்கம் என்று கூறலாம். ஆனால் இந்த இயக்கத்திற்கு ஏற்பட்ட அரசியல் தோல்வி காரணமாக புலமை நிலைப்பட்டதாயினும் அரசியல் நிலைப்பட்டதாயினும் சரி தளமாற்றம் வலுவிழந்து போயிற்று.

எனினும் இந்த இயக்கத்தினதும் பின்வரும் காந்திய மார்க்சிய இயக்கங்களினதும் செயற்பாடுகள் காரணமாக சமூக சமத்துவம் பற்றிய இயக்க நிலை வன்மைப்பட்டது. சமூக சமத்துவத்திற்கான இயக்கம் அரசியல் முக்கியத்துவம் உடையதாக விளங்கிற்று. ஆனால் பிரதான அரசியல் நீரோட்டத்தில் 1983 -கள் வரை இது பெரிய தாக்கத்தினை ஏற்படுத்திற்று என்று கூறமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள்**


1. Althusser, Louis - for Marx (Tr. B. Brewster) - penguin Press, London, 1965.
2. Anderson, Perry - Consideration of Western Marxism - verso Edition, London, 1976.
3. "The Antinomies of Antonio Gramsci" in New Left Review 100th Issue - London, 1977.
4. Balakrishnan, N. - A Note on the Jaffna peasantry paper presented at SSA/ISS Seminar, Economic, political and Social Development in Sri Lanka, December, 1983.
5. David, Kenneth - Spatial organisation and Normative Schemes in Jaffna, Northern Sri Lanka in Modern Ceylon Studies - Vol. 4 No. 1&2 1973.
6. ........................ - The New Wind - Changing Identies in South Asia - Hague, 1977.
7. Dumont, Louis - Homo Hierarchial - London, 1980 on Ideology London, 1987.
8. Holmes, R. W. - Jaffna 1980 - Jaffna 1980.
9. Kadirgamar, Silan. - Handy Perinbanayagam: A Memorial Volume - Jaffna, 1980.
10. Klugman, James - In Essays on Socialist Realism and the British Cultural Tradition - London, (Undated).
11. Osipov, G. - Sociology - Moscow, 1969.
12. Pfaffenberger, B. - Caste in Tamil Culture - Vikas, New Delhi, 1982.
13. சிவத்தம்பி, கா. - தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும் - சென்னை, 1983.


**(யாழ்ப்பாண பொதுநூல் நிலையம் மீளமைக்கப்பட்ட பொழுது வெளிவந்த நினைவு மலரில் இடம்பெற்ற ஆங்கிலக் கட்டுரையின் விரிவாக்கம் - 1990)**



# யாழ்ப்பாண வரலாற்றுக் கருத்துநிலையின் அகற்சியை வேண்டிநிற்கும் ஒரு பிரசுரம்

## 'விஷ்ணுபுத்திர வெடியரசன்' வரலாறு பற்றிய ஒரு குறிப்பு

திரு.சுப்பிரமணியம் சிவப்பிரகாசம் அவர்களால் எழுதப்பெற்று, தொல்புரம் அகில இலங்கை வெடியரசன் கலாமன்றத்தினரால் வெளியிடப்பெற்றுள்ள (1988) 'விஷ்ணு புத்திர வெடியரசன் வரலாறு' என்னும் இந்நூல் மிகுந்த சுவாராசியமான ஒரு வெளியீடு ஆகும்.

ஈழத்தில் தமிழ் மக்களின் மொழியின் அடிப்படையிலேயே அவர்களின் ஒருமைப்பாடு வற்புறுத்தப்பட்டு, அந்த அடிப்படையில் அவர்கள் யாவரும் தனியொரு மனித இனக் குழுமம் (ethnos) என்பது மேலாண்மையுடைய கருத்துநிலை (ideology) யாக வற்புறுத்தப்படும் இந்நாட்களில் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட சாதியின்/ குலத்தின் தோற்றம், பரவல் பற்றிய ஐதீகங்களைக் கொண்டதான இந்நூல் வெளிவருவது கவனிக்கப்பட வேண்டிய ஒரு சமூகவியல் நிகழ்வு ஆகும்.

இந்த நூல் கூடத் 'தமிழினம்' என்ற எடுகோட் கட்டுக்கோப்புக்குள்ளேயே தொடங்குகின்றது என்பது அதன் நூன் முகத்தின் மூலம் தெரிய வருகின்றது.

உலகப் பின்புலத்தில் தமிழர் பற்றிக் கூறிப் பின்னர் இந்தியப் பின்புலத்தில் இராமாயணக் கதையுடனான தொடர்பினை வற்புறுத்தி, அதனை அடுத்து இலங்கைக் களத்துக்கு வந்து, அங்கு ஆரியருக்கு முன்வந்தவர்கள் என மகாவம்ச ஐதீகத்திற் குறிப்பிடப் பெறும் இயக்கர் நாகருள் நாகருடனான தொடர்பை வற்புறுத்தி அதன் பின்னர் யாழ்ப்பாணப் பிரதேசத்தினுள் நின்று, அப்பிரதேசத்தில் வாழ்ந்து வரும் 'முக்குவர்', 'முக்கியர்' எனக் குறிப்பிடப் பெறும் சாதிக் குழுமத்தின் வரலாறு ஐதீகங்களை இந்நூல் தொகுத்துத் தருகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தருவதற்கு முன்னர் ஏற்கனவே யாழ்ப்பாணத்து வர லாற்றின் மூலச் சான்றுகளில் ஒன்று எனக் கருதப்பட்டுவரும் 'வையா பாடல்' என்னும் நூலின் குறைபாடுகளையும் குளக்கோட்டன் பற்றிய குறிப்புகளிலும், மேற்கோள்களிலும் காணப்படும் வரலாற்றுப் பிரச் சினைகளையும் இந்நூல் குறித்துக் கொள்கிறது.

யாழ்ப்பாணச் சமூகத்திற் சாதி என்பது எவ்வாறு ஒரு சமூக நிறுவன மாக மாத்திரமல்லாமல் இம்மக்களின் சிந்தனைகளைப் பதனப்படுத்தும் ஒரு கருத்து நிலையாகவும் (conditioning ideology) அமைந்துள்ளது என்பதனை அறிந்து கொள்வதற்கு இப்பிரசுரம் ஒரு நல்ல சான்றாகும்.

இந்நூலிலே தரப்பட்டுள்ள ஐதீகங்கள் மிகச் சுவாரசியமானவை யாகும்.'

ஒரு குழுமம் பற்றிய ஐதீகங்கள் (mytho) எவ்வாறு அதன் தனித் துவத்தை நிலை நாட்டுகின்றன என்பதையும், அதேவேளையில் அதன் சமகால நிலை பற்றிய விளக்கங்களைத் தன் கண்ணோட்டத்தின்ாலே தருகின்றன என்பதையும் அக் குழுமத்துடன் தொடர்புடையோரை அக்குழுமம் எவ்வாறு நோக்குகிறது என்பதையும் எடுத்துக் காட்டி நிற்கும் என்பது ஐதீகங்கள் பற்றிய மானிடவியல் (anthropology) சமூகவியல் வல்லுநர்களின் முடிவு ஆகும்.

சமூக மானிடவியல் (Social anthropology) அடிப்படையில் யாழ்ப் பாணத்துச் 'சமூகம்' எவ்வாறு உருவாக்கப் பெற்றது என்பதையும், அதனுள் வரும் சாதிக் குழுமங்கள் ஒன்றையொன்று எவ்வாறு நோக்கி வந்துள்ளன என்பதையும் ஆராய்ந்து கூறும் ஆராய்ச்சிகள் நம்மிடையே மிகமிகக் குறைவே. இதற்கான பிரதான காரணம் அவ்வச் சாதிக் குழுமங்கள் தங்கள் தங்கள் கண்ணோட்டத்திற் கூறும் 'வரலாறுகள்' பெரும்பாலும் அவ்வக்குழு மக்களுக்குள்ளேயே வாய்மொழிக் கையளிப் புக்களாகப் போற்றப்படுகின்றனவேயன்றி எழுத்துவடிவிற் கொண்டு வரப்படாமையாகும். சிலவேளைகளில் இதுபற்றிய ஏட்டுப்பிரதிகள் கூடச் சிலரிடம் இருக்கலாம். அவைகூட அச்சிற் பதிப்பிக்கப்பட வில்லை. மேலாண்மையுடைய குழுமங்களின் உயர்நிலையை வற்புறுத் தும் ஐதீகங்கள், பாரம்பரியக் கதைகளே வெளியிடப்பெற்று, வரலாற்று மூலங்களாகக் கொள்ளப்படுகின்றன.

(உ+ம்) யாழ்ப்பாண வைபவமாலை, கைலாய மாலை, வையா பாடல் ஆகியன பற்றிய ஆய்வுகள் சில வந்துள்ளனவெனினும் அவற் றைச் சமூக மானிடவியல், சமூகவியற் கண்ணோட்டங்களில் நோக்கும் ஆராய்ச்சிகள் இன்னும் வெளிவரவில்லை.



இத்தகைய ஓர் 'ஆராய்ச்சியின்மைச் 'சூழலிலேதான், திரு.சிவப் பிரகாசம் அவர்கள் முக்குவ குலத்தினரின் சாதி ஐதீகங்களைத் தொகுத் துத் தனது கண்ணோட்டத்துக்கியைந்த முறையில் 'வரலாறாகத்' தருகின்றார். இது உண்மையில் யாழ்ப்பாண வரலாற்றுக்கான இன் னொரு மூலம் (Source) ஆகும். அந்த ஐதீகங்களை இவ்வாசிரியர் விவரிக்கும் பொழுது தரும் மேற்கோட்பாடல்கள் மிகமிக முக்கிய மானவையாகும்.

திரு.சிவப்பிரகாசம் விடுகின்ற இடத்திலேதான் சமூக வரலாற்றா சிரியனின் (Social historian) பணி தொடங்குகின்றது எனக் கருதுகிறேன்.

திரு.சிவப்பிரகாசம் அவர்கள் தருகின்ற தரவுகளையும் இவை போன்றுள்ள, ஆனால் இதுவரை அச்சிடப் பெறாத தரவுகளையும் ஒன்று சேர்த்து 'யாழ்ப்பாணத்தானின் மானிடவியல்' (The anthropology of the Jaffna man) என்பது பற்றிக் காய்தல் உவத்தலின்றி ஆராய வேண்டுவது தொழில்முறை மானிடவியல், சமூகவியல் ஆராய்ச்சியாளரின் கடமை யாகும்.

திரு.சிவப்பிரகாசம் இந்த ஐதீகங்களைத் தொகுத்துத் தருவதன் மூலம் நாம் இதுவரை யாழ்ப்பாணத்தின் வரலாற்றின் சமூகத்தளம் எனக் கொண்டிருந்த ஆதார நூல்களில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கப்பால் வேறும் சில தரவுகள், கண்ணோட்டங்கள் உள்ளன என்பதைத் துணிவு டன் எடுத்துக் காட்டியுள்ளார்.

அதற்காகத் திரு சிவப்பிரகாசம் அவர்களை நாம் மெச்சுதல் வேண்டும்.

இந்நூலின் வெளியீடு யாழ்ப்பாணம் பற்றிய விஞ்ஞானபூர்வமான ஒரு சமூக மானிடவியலாய்வினை இனிமேலும் பின்போட முடியாத அத்தியாவசியத்தினை வற்புறுத்துகின்றது.

**பிற்குறிப்பு**

இந்நூலின் வெளியீடு யாழ்ப்பாண வரலாறு பற்றிய மற்ற இலக் கியச் சான்றுகள் பற்றிய மிக அடிப்படையான பிரச்சனைகள் பலவற் றைக் கிளப்புகின்றது. அந்நூல்களாவன யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை, வையாபாடல் என்பனவாகும். இவற்றுள் கைலாய மாலை யாழ்ப்பாணத்திலுள்ள கைலாச பிள்ளையார் கோவில் தோற்றம் பற்றிய வரலாறு ஆகும். நல்லூர் முருகன் கோவில் முதனிலைக்கு வரு வதற்கு முன்னர் யாழ்ப்பாண நல்லூர் பிரதேச மக்களின் பிரதான கோவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாக விளங்கியது இதுவே. ஆறுமுக நாவலருக்கும் இக்கோயிலுக்கும் தொடர்பு உண்டு. நாவலர் பரம்பரையைச் சார்ந்தவர்களே இக்கோயிலினதும் சிதம்பரத்தில் உள்ள நாவலரின் பாடசாலை, சொத்துக்கள் ஆகியனவற்றினதும் நிர்வாகஸ்தர்களாக இருந்து வந்துள்ளனர்.

யாழ்ப்பாண வைபவமாலை இவற்றை விடச் சுவாரசியமான நூல். அது யாழ்ப்பாண மாவட்டத்தில் பாரம்பரியமான நிலப்பிரபுத்துவ முதலிமார்களுடைய வருகையையும் வரலாற்றையும் கூறுவதாகும். வடமராட்சி, மாதகல், கோப்பாய், தீவுப்பகுதி, இருபாலை முதலாம் இடங்களில் நிலப்பிரபுத்துவ மேலாண்மை கொண்டிருந்தவர்களின் வரலாறே இதில் எடுத்துக் கூறப்படுகின்றது. இந்த முதலிமார்கள் ஒல்லாந்தர் காலத்தில் முக்கியமான இடம் வகித்தார்கள் என்பது தேசவழமை உருவாக்கத்தின் மூலமாகத் தெரியவருகிறது. தேசவழமைச் சட்டத்தை முதல் நிலையில் தொகுத்துக் கொடுத்தவர்கள் இந்த முதலியார்களே. இவ்வாறு நோக்கும் பொழுது, இந்த இலக்கியச் சான்றுகள் சமூக அதிகாரம் உடையவர்கள் தங்களைப் பற்றிச் செய்து வைத்த பதிகைகளாகவே உள்ளன.

இப்பிரபுக்கள் தங்களை முதல்நிலைப்படுத்தியே தேசவழமைகளைச் சட்டங்களாக்கினர் என்பது அடிமை குடிமைகள் பற்றிய தேசவழமைக் குறிப்புக்களால் தெரியவருகிறது.

மேற்கூறிய இலக்கியச் சான்றுகள் மற்றைய சாதியினருக்கும் வெள்ளாளருக்குமிருந்த உறவுகளை எடுத்துக் கூறவில்லை. வெடியரசன் கதையிலிருந்து எவ்வாறு முக்குவர்களது வரலாறு தெரிகிறதோ அவ்வாறு மற்றைய சாதிகளுக்கும் அல்லது சாதிகளைச் சார்ந்த குடும்பங்களுக்கும் வாய்மொழி வரலாறு உண்டு என்பது நமக்குத் தெரிந்த ஒன்றே. இத்தகைய வரலாறுகள் கரையாரக் குடும்பங்களிடையே காணப்படுகின்றன.

உதாரணமாக மாதகல்லில் உள்ள கரையார் சாதியின் ஒரு பிரிவினர் தங்களை வீரமாணிக்கத் தேவன் பரம்பரையினர் என்று கூறுவர். வீரமாணிக்கத் தேவர் என்பவர் தமிழகத்தில் உள்ள மறவர் குலத் தேவர்கள் வழிவந்தவர் என்பது அவர்கள் நம்பிக்கை. கரவெட்டியில் உள்ள கரையார் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஒல்லாந்தர் காலத்தில் வருடாந்தம் வரியாக அளவிடப்பட்ட நெல்லை அளந்து வாங்குகின்ற பணியில் ஒல்லாந்த நிர்வாகங்களுக்கு உதவியாக ஈடுபட்டிருந்தனர் என்று கொள்ளப்படுவதற்கான சான்றுகள் உள்ளன. ஒல்லாந்த காலத்திலிருந்த கரவெட்டி வேலாயுத முதலியாரின் வதிவிடத்தையடுத்த நாகி



தோட்டத்தில் இவர்கள் குடியமர்த்தப்பட்டிருத்தல் வேண்டும். நாகி தோட்டம் கிராமத்தின் நடுவில் உள்ள ஓர் இடம். கடற்கரை இல்லாதது. இந்தச் சனவேற்றம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது உள்ளூர் வரலாற்றில் தெளிவுற வேண்டும்.

இதே போன்று மற்றைய சாதியினருக்கும் சாதி வரலாறுகள் உண்டு. ஆனால் இவை எதுவும் பதிவு செய்யப்படவில்லை. பதிவு செய்யப்படாமைக்கு இரண்டு காரணங்கள் தொழிற்பட்டிருக்கலாம். முதலாவது சமூக அதிகார வலுவின்மை அல்லது வலுக்குறைவு காரணமாக இவர்களுடைய வரலாறுகளுக்கு எழுத்துப்பதிவு இல்லாது போயிருக்கலாம். அன்றேல் சாதிகள் தங்கள் தாழ்நிலை காரணமாக அத்தாழ்நிலை ஏற்பட்ட வரலாற்றை பதிவு செய்யத் தயங்கியிருக்கலாம். எனினும் தாழ்த்தப்பட்ட சாதியினர் ஒவ்வொருவரிடத்தேயும் தாம் ஒரு காலத்தில் உயர் நிலையில் இருந்து பின்னர் தாழ்நிலைக்குத் தள்ளப்பட்டதாகக் கூறும் ஐதீகங்கள் உண்டு. இந்த ஐதீகங்கள் அவ்வச் சாதிகளை இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களுடன் தொடர்புபடுத்துவதும் உண்டு. உதாரணமாக பறையர் குலத்தினரிடையே தாங்கள் முன்னர் அரசர்களாக இருந்ததாகவும் கிருஷ்ணருக்கும் சிசுபாலனுக்கும் ஏற்பட்ட போரில் தாம் சிசுபாலன் பக்கம் நின்றதால் தாம் இழிநிலை எய்தினர் என்றும் கூறுவர்.

இந்நூலில் குறிப்பிடப்படும் முக்கிய சமூக உண்மையை வலியுறுத்திக் கூறல் வேண்டும். அதாவது யாழ்ப்பாண அமைப்பிலே சாதிகள் உள்ளமை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அதில் ஓர் ஒழுங்கமைதி முறைமை உண்டு (Caste as a system).

அதாவது சாதிகளுக்குள்ளே ஓர் உறவு அமைதி உண்டு. அது ஒரு முறைமை (system) ஆகும். ஒன்று உயர்ந்தது மற்றது தாழ்ந்தது என்ற கருத்து நிலவுகின்ற அதேவேளையில் ஒவ்வொரு சாதிக்கும் உரிமைகளும் கடமைகளும் உண்டு. இந்த உரிமை கடமை ஊடாட்டத்தினை யாழ்ப்பாணத்தின் கிராமப் புறங்களில் உள்ள கிராமக் கோயில்கள் ஒவ்வொன்றிலும் காணலாம். கோயிலுக்குள்ளே செல்லத் தடுக்கப்பட்டவர்களுக்கும் கோயில்களில் திருவிழாக்கள் உண்டு.

இவ்வாறு நோக்கும் பொழுது யாழ்ப்பாணப் பகுதியின் சனவேற்ற முறைமை பற்றிய (Peopling of Jaffna) வரலாறு எம்மிடம் இதுவரை இல்லை என்பது கண்கூடு. யாழ்ப்பாணக் கிராமங்களில் பாரம்பரிய அமைப்பு முறைமை இன்று முற்றிலும் தகர்ந்துவிட்டது. நவீனமயப்பாட்டு முறைமைகளின் வருகை காரணமாக இந்த மாற்றங்கள் ஏற்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டதைக் காணலாம். குறிப்பாக நவீன வீதிகளின் வருகையுடனும் புதிய பயிர்ச்செய்கை பகுதிகளின் மேற்கிளம்புகையுடனும் இந்த அமைப்புக்கள் மாறியுள்ளன. இவற்றால் முன்னர் நிலவிய கிராம ஒழுங்கமைப்புப் பற்றிய பூரண நிலைமையை அறிய முடியவில்லை.

இவற்றை அறிய வேண்டுவதற்கான காரணம் இவற்றைப் பற்றி மீள நினைவுறுத்துவதற்காக அன்று. யாழ்ப்பாணத்தின் நவீன மயவாக்கம் எவ்வாறு நிகழ்ந்தது என்பதைப் பற்றிய வரலாற்றை அறிவதற்கே. அத்துடன் யாழ்ப்பாணப் பாரம்பரியச் சமூகத்தின் பொருளியல் அடிப்படைகள் யாவை என்பதையும் அவை எத்துணை வலுவுடையனவாக அல்லது வலுவற்றனவாக இருந்தன என்பதையும் அறிவது அவசியமாகின்றது. உதாரணமாக யாழ்ப்பாணத்தின் நிலவுடைமை அமைப்பைப் பற்றி எடுத்துக் கூறலாம். யாழ்ப்பாணத்து நிலவுடைமை அமைப்பில் அடிமை குடிமை என்பது ஒரு மிக முக்கியமான அமைப்பு ஆகும். சில சாதியினர் அடிமைகளாகவும் சில சாதியினர் குடிமைகளாகவும் இருந்தனர். இந்தக் குடிமைகளைக் கொண்டு நடத்துவதற்கான உபரி வருமானம் (பிரதேசத்தின் சீதோஷன நிலைமை காரணமாக) எல்லா வேளைகளிலும் இருந்தது கிடையாது. இதைவிட சட்டத்துக்கு முன் சமம் என்ற கோட்பாடு நடைமுறைப்படுத்தப் பட்டதும் அடிநிலை மக்களைச் சமூகக் கட்டுப்பாட்டுகளால் பின்தள்ள முடிந்ததேயன்றி அவர்களுடைய மேல்நிலை அசைவியக்கத்தை முற்றிலும் மறுதலிக்க முடியவில்லை. கிறிஸ்தவமும் கல்வியும் ஏற்படுத்திய தாக்கத்தின் தன்மைகளை, அவற்றின் பெறுபேறுகளை இங்கு மனங் கொளல் வேண்டும். உண்மையில் யாழ்ப்பாணத்தில் நிலவுடைமை பலம் கொண்டதாகவோ சந்தேகமற்ற மத அங்கீகாரம் கொண்டதாகவோ இருக்கவில்லை. கோயில்களுக்கான முகாமை முறைமைகளில் இதனைக் கண்டு கொள்ளலாம்.

ஆனால் இந்த நவீனமயப்பாட்டு மாற்றங்களின் பின்னரும் சாதி முறைமை நிலவுகின்றமையையும் நோக்குதல் வேண்டும். இவ்வாறு நோக்கும் பொழுதுதான் நவீனகாலத்துக்கு உரிய யாழ்ப்பாணத்தின் வரலாறு எழுதப்படாமை நன்கு பளிச்சென்று தெரியவருகிறது.

பிரித்தானிய ஆட்சியின் தாக்கம் பற்றிய சமூக வரலாறு இன்னும் எழுதப்படவேயில்லை. அரசியல் வரலாற்றுக்குச் சமாந்தரமாக அதற்குத் தளமாகவும் களமாகவும் அமைந்த சமூக மாற்றங்கள் பற்றிய பதிகைகளும் விளக்கங்களும் இன்னும் வரலாறாகப் பதிவு செய்யப்படவில்லை. யாழ்ப்பாணத்தின் சாதியொழிப்பு வரலாறு ஒரு பேரியக்கமாகவே நடைபெற்றது என்பது நமக்குத் தெரியும், ஆனால், அதுபற்றிய வரன் முறையான வரலாறு இன்னும் எழுதப்படவில்லை. தொடர்புற்றிருந்த இயக்கங்கள் தங்கள் தங்கள் கண்ணோட்டங்களில் இந்த வரலாற்றுத் தரவுகளைக் குறித்துள்ளன. ஆனால் காலஞ்சென்ற திரு. அருமை நாயகம் தவிர்ந்த வரலாற்று ஆய்வாளர் எவரும் இதுபற்றி ஆராய வில்லை. இது நடந்தேறிவிட்ட விடயம், இதனைப் பற்றி ஏன் எழுதி எதற்காக அதனை மீள நினைவுறுத்த வேண்டும் என்று சில புலமையாளர்கள் கூறுவது உண்டு. ஆனால் இதேவேளையில் யாழ்ப்பாணத்தின் தொன்மை வரலாறும் தமிழருடைய தொன்மை வரலாறும் மிகுந்த கவனத்துடன் ஆராயப்படுவதைக் காணலாம். அதற்கான அரசியற் காரணம் உள்ளங்கை நெல்லிக்கனியாகும். ஈழத்தில் தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயப்பாட்டை வலியுறுத்துவதற்கு அவர்களின் புராதனத் தன்மையை வலியுறுத்துவது அவசியம். ஆனால் இதனூடே அந்தத் தமிழர்கள் சைவர்களாக இருந்தார்களென்றும் ஈழத்தின் புராதனத் தமிழ்ப் பாரம்பரியம் சைவத் தமிழ்ப் பாரம்பரியமே என்பதும் கருத்துநிலைக் கனதியுடைய கூற்றுக்களாகும்.

இவ்வாறு நோக்கும் பொழுதுதான் சமூக மாற்றங்களை அவற்றின் இயல்பான பின்னணியில் வைத்துப் பார்ப்பதற்கான அத்தியாவசியம் ஏற்படுகிறது. அந்த இயல்பான வரலாறு எழுதுகை இன்னும் ஈழத் தமிழரிடையே நிலையூன்றவில்லை. ஆனால் இதேவேளை சிங்கள மக்களிடையே வரலாறு எழுதுகை, அரச அங்கீகாரத்துடன் எழுதப் படுவதும் அவற்றிற் சில மட்டங்களில் எழுதப்படுவனவற்றிற் சிறு பான்மையினரின் இடம் முற்றாக மறுதலிக்கப்படுவதும் நன்கு தெரிகிறது.

சற்று உற்று நோக்கினால் இலங்கையின் சமூக அரசியல் போராட்டங்களின் ஒரு களமாகவே வரலாறெழுதியல் (Historiography) அமைந்துள்ளது.

**1988**

**பிற்குறிப்பு - 1999**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு

## - ஓர் இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டம்

*"வரலாற்றுச் செயற்பாடுகள் என்பன வெறும் சம்பவங்களல்ல. அவற்றுக்கு ஓர் உட்புறம், அதாவது ஒரு சிந்தனைப்புறம் உள்ளது"*

***ஆர்.சி.கொலிங்வூட்***
***வரலாற்றியலறிஞர்***

பெரிதும் விவாதிக்கப்பட்டுள்ள இந்த மேற்கோள் எமக்கு இங்கு இயைபுடைய ஒன்றாகின்றது. வரலாற்று முகவர்களின் "சிந்தனைப் பக்கத்தை" அறிவது வரலாற்றாசிரியரின் கடமையெனின், இலக்கிய வரலாற்றாசிரியனின் பணியோ, இலக்கியங்கள், வாதவிவாத எழுத்துக்கள் ஆகியவற்றில் எடுத்துக் கூறப்பட்ட கருத்துக்கள் வரலாற்றை எவ்வாறு வெளிப்படுத்துவனவாயுள்ளன என அறிவதாகும்.

எந்த எழுத்தும், சம்பந்தப்பட்டவரின் அறிகை முறையின் (Way of cognition) அடியாக வருவதாகும். எந்த அறிகையும் ஏதோ ஒரு வகையில் குறிப்பிட்ட எழுத்தாளனின் சமூக நிலைப்பாடுகளோடு சம்பந்தப்பட்டதாகும்.

இந்த அறிகை முறை அவ்வச் சமூக- பொருளாதார மரபுகளினூடாக வரும் அறிவுமுறைமையோடு (Knowledge System) சம்பந்தப்பட்டதாகும். அறிவுமுறைமை என்பது கல்வி, கேள்வி மரபு, பயிற்சி மரபு, அவை பற்றிய கருத்து நிலைகள் ஆகியனவற்றை உள்ளடக்கி நிற்பதாகும். உயர் அங்கீகாரம் பெறும் அறிவு முறைமை, சம்பந்தப்பட்ட சமூகத்தின் நிலைப்பாடுகளை நியாயப்படுத்தும் ஒரு "நிறுவன" மாகவே அமையும்.



யாழ்ப்பாணச் சமூகத்தின் வரலாற்றோட்டத்தில் மேலாண்மையுடையனவாக விளங்கியனவும், மேலாண்மையடைய விரும்பியவையுமான சிந்தனை மரபுகள் யாவை என்பதையும், அந்தச் சிந்தனை மரபுகள் எவ்வாறு நடந்தேறிய சமூக வரலாற்று மாற்றங்களின், அன்றேல் மாற்ற முயற்சிகளின் பட்டெறிவாக (Reflection) இருந்தன என்பதையும் கோடிட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு சமூகத்தின் சிந்தனைகள், அதன் புலமையாளரால் (Intellectual) வெளிக்கொணரப்படுகின்றன. "புலமையாளர்" (சற்று இலக்கியமயப்படுத்திக் கூறினால் 'புலத்துறை போகியோர்') என்னும் பதம் அறிவு, காரணி விளக்க ஆற்றலையுடையோரைக் குறிக்கும். இந்தப் புலமையாளர் அறிவினாலும், அறிவு தரும் கற்பனைத் திறனாலும் ஆற்றலாலும் வாழ்க்கையை நடத்துபவர் ஆவர். புலமைத்துவ (Intellectual) மரபு என்பது இப்புலமைச் செல்நெறி பாய்ந்தோடிய பாங்கினை விளக்குவதாகும். இந்தப் புலமைத்துவ மரபினை எழுத்துக்களிலும் மற்றைய ஆக்கங்களிலும், இயக்கங்களின் செயற்பாடுகளிலும் கண்டு கொள்ளலாம்.

## II

யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபினை அதற்குரிய பின்புலத்தில் வைத்து விளங்கிக் கொள்வதற்கும் நாம் இரு அமிசங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளுதல் அவசியமாகும். முதலாவது, யாழ்ப்பாணத்தின் இயல்புகளை அறிந்து கொள்ளல். இரண்டாவது, புலமைத்துவ வெளிப்பாட்டு முறைமைகளான எழுத்துக்கள், சமூக சீர்திருத்த முயற்சிகள் போன்றவற்றின் தளமாக அமையும் சிந்தனைச் செல்நெறிகள் யாவை என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளல்.

யாழ்ப்பாணம் இலங்கையின் வடக்கிலுள்ள தீபகற்பப் பகுதியாகவும், இந்தியாவின் தென்பகுதிக்கு மிக அண்மையானதாகவும் அமைந்துள்ளது. இத்தீபகற்பத்தன்மை காரணமாக ஓர் ஒதுக்கற்பாட்டுணர்வு நிலவுவதையும் நாம் மனங்கொள்ளல் அவசியமாகும்.

ஆனால், அதே வேளையில் தமிழ் நாட்டுக்கு வெளியே தோற்றுவிக்கப் பெற்ற தமிழருக்கான ஓர் அரச உருவாக்கம் இப்பிரதேசத்திலேயே நிகழ்ந்தேறியது. அந்த அளவுக்கு இது முக்கியமான ஒரு தமிழ்க் குடியிருப்பாக அமைகின்றது. இந்த முக்கியத்துவம் இலங்கை, இந்தியா, தென்னாசியா ஆகிய மூன்று நிலைகளிலும் உணரப்படுவதொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேசம் பிரதானமாக சைவமும், தமிழும் என்ற ஒரு மேலாதிக்கக் கருத்து நிலையோடு சம்பந்தப்பட்டிருந்தாலும், இங்கு சிறுபான்மையினராக முஸ்லிம்கள் வாழ்ந்து வந்துள்ளனர். மத அடிப்படையில் நோக்கும் பொழுது கிறிஸ்தவர்களும் கணிசமான தொகையினர் உள்ளனர். கிறிஸ்தவர்களுள் றோமன் கத்தோலிக்கரே பெருந் தொகையினரெனினும், புரட்டஸ்தாந்திகள் கல்வி முதலாம் புலமைத்துவத்துறையில் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றனர். யாழ்ப்பாணத்து அறிவு முறைமையின் ஓர் அங்கமான உயர் பாடசாலை வளர்ச்சியில் இவர்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் மிக முக்கியமானவையாகும்.

யாழ்ப்பாணத்தின் பொருளாதார வரலாற்றின் பண்புகளை எடுத்துக்கூறிய பேராசிரியர் அரசரத்தினம்,

The strength of the Jaffna settlement has been this concentration of population and their density. This has enabled them to develop viable economic relationship among themselves and has encouraged regional specializations and exchange of commodities. It has also enabled the region to grow in isolation from the rest of the island and sheltered it from vicissitudes else where.............. ................................. .............................. **Within peninsula itself patterns of settlement have continued with relatively little change over last 400 years.** There has been little internal movement of population except within small distances in areas of little productivity and areas subject to salination.

குடியேற்றம், சனநெருக்கம் பற்றிய இந்த ஸ்திரப் பண்பு ஏறத்தாழ 1984 வரை காணப்படுகின்றதெனலாம். அதன்பின்னர் இனக்குழுமப் போர் காரணமாக பெருமளவில் சனத்தொகை மாற்றம் ஏற்படுகின்றது. எனினும் இதற்கு முன்னர் ஏறத்தாழ 14, 15 ஆம் நூற்றாண்டிலிருந்து ஒரு நிலையான சமூக - பொருளாதார அமைப்பு உருவாகி நிலைபெற்று வந்துள்ளது.

இந்த ஸ்திரப்பாட்டிற்கு இம்மக்களிடையே நிலவிய சீரான பொருளாதார நடவடிக்கை மரபும், சட்ட ஒழுங்கு மரபும் காரணமாக அமைகின்றன. இதனை யாழ்ப்பாணத்தில் நிலவிய தேசவழமைச்சட்டமும், சாதியமைப்பும் வழங்கின. தனியார் சொத்துக்கு வழங்கப்பட்ட மரியாதையும், அவை பேணப்பட்ட முறைமையும் (வேலியிட்டுப் பிரித்து வைத்துக் கொள்ளல்) இந்த ஸ்திரப்பாட்டுடன் காரணகாரியத் தொடர்பு கொண்டவையாகும்.

யாழ்ப்பாணத்தின் சமூக, பொருளாதார ஸ்திரப்பாடு பற்றியும் மேன்மைச் சக்திகள் பற்றியும் அரசரத்தினம் அவர்கள் தொகுத்துக் கூறுவது நோக்கப்பட வேண்டியது.



There was then the institution of caste which evolved in ways differrent from the original home lands of the Tamils. The absence of a large group of Tamils weakend the Brahminie norms which the Tamils had brough from south India. Castes did not have to strictly adhere to traditional occupations and there was some socio - economic mobility. There occupations did not and could not have the same social values attached to them as in South India. Agriculture and Agricultural persuits continued as the most valued occupations but seafaring and the industries associated with sea produce achieved a value greater than in South India and provided the means to upward social mobility. The numerical preponderance of the major agricultural caste, which soon became the dominant caste in society gave a stability to society. This also contributed to the orderly progress of economic relationship in society. (S.Arasaratnam, Historical foundation of the Tamils of North Sri Lanka, Fourth Chelvanayagam Memorial lecture, Jaffna 1982).

மாற்றங்கள் அதிகம் ஏற்படாது தொடர்ந்தமைக்கும், அதேவேளை மேனிலை நோக்கிய சமூக -பொருளாதார அசைவியக்கத்துக்கான (தென்னிந்திய சாதி மரபில் இருக்காத சில) சாத்தியப்பாடுகளும் இங்கு நிலவியமைக்கான காரணங்கள் இப்பொழுது துல்லியமாகின்றன. யாழ்ப்பாணச் சாதியமைப்பு வழங்கிய மேலாண்மையுடன் விவசாயம் பிரதான இடத்தை வகிக்கத் தொடங்கிற்று.

இந்த விவசாய மேலாண்மைக்கான இன்னொரு காரணம் இங்கு ஒரு வன்மையான வணிக வர்க்கமோ, முயற்சியாளர் குழாமோ (entrepreneurial groups) இல்லாது போனமையாகும். சிறு வியாபாரிகள் ஆன வணிக குழுவினரைத் தவிர இங்கு எடுத்துப் பேசக்கூடிய வணிக மரபினர் மிகக் குறைவானோரே. வல்வெட்டித்துறை, பருத்தித்துறை கடலோடிகளால் நடத்தப் பெற்று வந்த ஒரு வர்த்தகப் பாரம்பரியம், பாய்க்கப்பல் முறைமையின் ஒடுங்குதிசையின் பின்னர் (இதே காலத்திலேற்பட்ட சுங்கத் திணைக்கள வளர்ச்சியுடன்) மங்கிப் போயிற்று. வணிக முனைப்பும், பெருந்தொகை வணிக முதலீடுமில்லாது இருந்தமையும், இச்சமூகத்தில் ஒரு வகையான மாற்றமின்மையைத் தவிர்க்க முடியாததாகிற்று எனலாம்.

இவ்வாறான ஒரு ''பாரம்பரிய''ச் சூழலில், பாரம்பரியப் பேணுகை முக்கிய இடம் பெற்றது ஆச்சரியத்தைத் தருவதன்று.

இத்தகைய சமூகங்களில் மதம் முக்கியம் பெறுகின்றது. அதனை மையமாகக் கொண்டே பாரம்பரியப் பேணுகை நடப்பதும் இயல்பே.

இத்தகைய சமூகத்தில் நிலவும் அறிவு - முறைமையும், சமூகப் பாரம்பரியங்களைப் பேணுவதாகவே அமையும். இங்கு வரன் முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான கல்வி என்பது மதஞ்சார்ந்ததாகவும், சமூகத்தின் சகல ஆக்கங் களையும் உள்ளடக்காததாகவும் உண்மையில் இச்சமூகத்தின் அடி நிலையினருடன் சம்பந்தப்படாததாகவே இருக்கும்.

அடுத்து, இந்தச் சமூக பொருளாதாரப் பின்புலமுள்ள இச்சமூகத் தில் எழுத்துக்களும் புலமைத்துவச் செல்நெறிகளும் எவ்வாறு அமைந் திருந்தன என்பதை வரலாற்றுப் பின்னணியில் வைத்து நோக்குவது அவசியமாகின்றது.

அதனைப் பின்வரும் வகையில் மிகச் சுருக்கமாக எடுத்துக் கூறலாமெனக் கருதுகிறேன்.

## மேனாட்டு வருகைக்கு முந்திய காலம் (Pre - Western)

அ. யாழ்ப்பாண அரச உருவாக்கம் நடந்தேறிய காலம் (14ஆம், 15ஆம் நூற்றாண்டு) பெரும்பாலும் 'வரலாறு' சார்ந்த எழுத் துக்களே காணப்படுகின்றன. இவை இந்துப் பாரம்பரியத்தில் வரலாறு எடுத்துக் கூறப்படும் பௌராணிக, ஐதீக மரபை ஒட்டியே அமைந்துள்ளன. தக்கிண கைலாசபுராணம், கோணேசர் கல்வெட்டு, வையாபாடல், கைலாயமாலை ஆதியன. மற்றையவை மதம், மருத்துவம் சார்ந்தவை.

ஆ. முஸ்லிம்களின் வருகை: மேனாட்டார் வருகைக்கு முந்திய காலத்து முஸ்லிம் இலக்கியப் படைப்புக்கள் எதுவும் இல்லை யென்றே கூறல் வேண்டும்.

## பிரிட்டிஷ் ஆட்சிக்கு முற்பட்ட காலம் (1505 - 1796)

அ. போர்த்துக்கேய, ஒல்லாந்தர் காலங்கள் - கிறிஸ்தவத்தின் வருகை - கத்தோலிக்கம், இறப்பிறமாதுக் கிறிஸ்தவம்.

இந்து மதமும் இஸ்லாமும் பலத்த பாதிப்புக்குள்ளாக்கப்படல் இக்காலத்துக்குரியனவாக உள்ள கிறிஸ்தவ, இந்து எழு தாக்கங்கள்.

ஆ. அந்நியக் கல்விமுறை நிறுவப்படல் - டச்சு ஆட்சியின் கல் முறைமை. பாரம்பரியக் கல்வி முறையின் தொடர்ச்சி தமிழகத் தொடர்புகளின் தொடர்ச்சி.



## பிரிட்டிஷ் காலம் (1796 - 1948)

பிரித்தானிய ஆட்சியின் மதநெகிழ்ச்சிக் கொள்கைகள்; சமூக -பண்பாட்டுத் தலைவர்கள் பிரித்தானிய ஆட்சியை ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவம் சாராத ஒரு கல்வி முறையைக் கோரியமை; கிறிஸ்துவத் திற்கான இவ்வெதிர்ப்பு கல்வி முறைமைக்குள் கிறிஸ்தவம் முனைப்புப் படுத்தப்பட்ட முறைமை பற்றியிருந்ததுவே தவிர அந்தக் கல்வி முறைமைக்கு அது கொண்டு வந்த உள்ளடக்கம், அமைப்பு ஆகிய வற்றுக்கு எதிரானதன்று.

இந்தக் கல்விமுறைமையை ஏற்பது பற்றி நடந்த போராட்டங்கள் முக்கியமானவையாகும். தமிழ்க்கல்வி மரபையும், ஆங்கில மொழிப் பயில்வையும் எவ்வாறு இணைப்பதென்பது ஒரு பிரச்சினை மையமாக விளங்கியது. ஆறுமுக நாவலரின் இயக்கம் இது சம்பந்தப்பட்டதாகவே அமைந்தது. இறுதியில் சமூகத் தேவைகளையும் மதத் தேவைகளையும் இணைக்கும் சைவ ஆங்கிலப் பாடசாலை மரபு தோற்றுவிக்கப்பட்டது.

இந்த இணைப்பு ஏற்பட்டதும் பாரம்பரியப் பேணுகையையும் புதிய தேவைகளையும் அநுசரிக்கும் ஒரு சமூக அசைவியக்க முறைமை யையும் கடைப்பிடிப்பது சுலபமாயிற்று.

இந்துமத மட்டத்தில் இவ்விணக்க இயைபு முயற்சி மேற்கொள்ளப் பட்ட வேளையில் புதிய கல்வி மரபு கிறிஸ்தவ முகாமையின் கீழ் வளர்த்தெடுக்கப்படலும், விஸ்தரிக்கப்படலும் நடைபெறுகின்றன.

இதனை முதன் முதலில் ஏற்படுத்தியவர்கள் புரட்டஸ்தாந்துப் பிரிவினர்களே. (அமெரிக்கன் மிஷன், வெஸ்லியன் மிஷன், ஆங்கிலத் திருச்சபை மிஷன் ஆதியன முதலிலும் கத்தோலிக்கம் பின்னருமே வந்தன).

பிரித்தானிய ஆட்சி ஏற்படுத்திய மாற்றங்களின் பின்னர், நவீன மயப்பாடு ஆங்கிலக்கல்வி முறைமை மூலமே வந்தது. இந்த நவீன *மயப்பாடு இல்லாது சமூக அந்தஸ்துப் பேணுகையோ, சமூக மேனிலைப் பாடோ சாத்தியமற்றதாகிற்று.* இதனால் இந்த நவீனமயப்பட்ட கல்வி சமூக முன்னேற்றத்துக்கு அவசியமான ஒன்றாகிற்று. அதனால் இக் கல்வியை மிகச் சிறந்த சூழலிற் பெறக்கூடிய கல்வி வாய்ப்புக்கள் முக்கியமானவை யாகின்றன. யாழ்ப்பாணத்தில் நடந்தேறிய நவீன மயமாக்கம் ஏறத்தாழ 1950 கள் வரை தொழில்நுட்ப மயவாக்கத்துடன் (technologization) சம்பந்தப்படவில்லை . கல்வி மூலமாகவே இந்த நவீன மயவாக்கம் ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தில் பிராமணிய முறைமையில்லாததனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியமைப்பில் தமிழகத்திற் காணப்படாத ஒரு நெகிழ்ச்சி இங்கு இருந்தது. இடைநிலைச் சாதியினர் தங்கள் அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளவும், தங்கள் இடம் நன்கு வரையறுக்கப்படாதிருந்த சாதிக் குழுமங்கள் (அகம்படியார், தனக்காரர், சாயக்காரர் போன்றோர்) உயர் நிலையினருடன் தம்மை இணைத்துக் கொள்ளவும் கல்வி பயன்பட்டது இந்த நெகிழ்ச்சியினைப் பயன்படுத்திய நவீனமயவாக்கம், கல்வியை ஒரு முக்கிய பொருளாதார முயற்சியாக்கிற்று.

ஆங்கிலக் கல்வி வாயில்களாக அமைந்த நிறுவனங்களினுள் அமெரிக்க மிஷனரிமார் நடத்திய யாழ்ப்பாணக் கல்லூரி, இருந்த ஆங்கிலக் கல்லூரிகளிலும் பார்க்க உயர் வகுப்புக்களை நடத்தியபடியாலும், பிரிட்டிஷ் காலனித்துவ மேலாண்மைக்குக் கட்டுப்படாதிருந்தமையாலும், பாடசாலை நிர்வாகத்திற்கு அரச நிதியுதவியை எதிர்பாராதிருந்தாலும் 19ஆம் நூற்றாண்டு அமெரிக்கத் தாராண்மைவாதக்கல்வி முறைமையை பின் பற்றியதாலும் மற்றைய கல்வி நிலையங்களில்லாத ஒரு தாராண்மை வாதப் (liberal) போக்கைக் கடைப்பிடிக்கக்கூடியதாக இருந்தது.

இந்தத் தாராண்மைவாதச் சூழலில் அக்கல்லூரி மாணவர்கள், யாழ்ப்பாணத்தில் எல்லாக் காலத்திலும் நிலவி வந்துள்ள இந்தியச் செல்வாக்குக் காரணமாக வந்தஇந்திய சுதந்திரப் போராட்டத்தின் சமகாலப் போக்குகளை உள்வாங்கி முற்றிலும் புதிய தளமாற்றவாத (radical) சமூக, அரசியற் கோட்பாட்டை முன்வைக்கின்றனர்.

இது நடந்தது 1924 காலப்பிரிவிலாகும். இதுவே யாழ்ப்பாணத்தின் மாணவர் பேரவை இயக்கமாகும். அதனைத் தொடர்ந்து 1939 முதல் மார்க்ஸியச் சிந்தனை பரவத் தொடங்குகின்றது. அடிப்படைப் பொருளாதார உறவுகள் மாறாத ஒரு சூழலில் மார்க்ஸியம் இங்கு வன்மையான சமூக பொருளாதாரக் கோட்பாடாக கிளம்பாது புல்மை நெறியாகவே வளரத் தொடங்குகின்றது. புலமை நெறியாகத் தொடங்கியது நிறுவன அமைப்பாக மாறத் தொடங்கி சமூகச் சுரண்டல்கள் இடம் பெறும் இடங்களில் வேரூன்றத் தொடங்கிற்று. அரசியலில் இது இலங்கையை ஒரே தேசியக் கூறாகக் கொண்டது.

## சிங்களத் தேசியவாதக் காலம் (1948)

இந்தப் புலமைத்துவ நெறிப்பரவலைத் தொடர்ந்து, மிக முக்கிய மான சிந்தனை மரபாக மேற்கிளம்புவது இலங்கையை முற்று முழுக்கத் தனது என உரிமை கொண்டாடிய சிங்களத் தேசியவாதமாகும். இது 1920களில் தொடங்கி 1930களில் முக்கியமாகி, சுதந்திரத்தின் பின்னர் தன்னைப் புவியியல் ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் நிலைநிறுத்தத் தொடங்கிற்று. சிங்களத் தேசிய எழுச்சியின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கள், தமிழரின் சமூக மேனிலைப்பாட்டுக்கான பிரதான வாயிலான கல்வியுரிமைகளைப் பாதிக்கத் தொடங்கவே, அதற்கெதிரான இனக்குழுமத் தனித்துவ வெளிப்படுத்துகை தொடங்குகின்றது. இது 1949இல் நிகழ்ந்த தமிழரசுக் கட்சியின் தோற்றத்துடன் தொடங்குகின்றதெனலாம். 1956இன் பின்னர் இது வளரத் தொடங்கி 1972இல் ஓர் அரசியல் திருப்புமுனையை எய்துகின்றது. 1972 ஆட்சியமைப்பில் தமிழர்களுக்கான இடம் பேசப்படாமலே விடப்பட்டது. இலங்கைத் தமிழ்ப் போராட்டம், அது எதிர்நோக்க வேண்டிய சிங்களத் தேசியத்தின் அரச நிலைப்பட்ட ஒடுக்குமுறைகள் காரணமாக வன்முறைப்பட்டதாகவும், புதிய தலைமையை நாடுவதாகவும் அமைந்தது. 1970களின் பின்னர் தமிழ்த்தேசியம் முக்கிய அரசியற் சக்தியாகி மேற்கிளம்புகின்றது.

அடுத்து மேற்கூறிய காலகட்டங்களில் தோன்றிய எழுத்துக்களையும் பிற புலமைத்துவ வெளிப்பாடுகளையும் சற்று விரிவாக நோக்குவோம்.

அவ்வாறு ஆராய்வதற்கு முன்னர், ஒரு அவதானிப்பினைப் பதிவு செய்து கொள்ளுதல் அவசியமாகின்றது. யாழ்ப்பாணத்தில் பாரம்பரிய அமைப்புக்குச் சவால்கள் கிளம்பிய காலகட்டங்களிலேயே முக்கியமான புலமைத்துவ நடவடிக்கைகள் தோன்றின என்பது உய்த்தறியப்படத் தக்கதாகவுள்ளது. அவ்வாறு நோக்கும் பொழுது புலமைத்துவ நடவடிக்கைகள் இருநிலைகளில் வைத்துப் பார்க்கப்படலாம்.

ஒன்று - நிலவும் அமைப்புக்குச் சவால் விடுவன யாவை என்பதும் அவை எவ்வெவ்வகையில் சவாலை விட்டன என்பதும்,

இரண்டு- நிலவும் அமைப்பு புதிய சவால்களை எவ்வாறு ஏற்றுக் கொண்டது என்பதும், அதனால் அவ்வமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை என்பதும்.

இவ்வாறு நோக்கும்பொழுது மேனாட்டார் வருகைக்கு முற்பட்ட புலமைத்துவ மரபானது பிரதானமாக, சமூக அமைப்பின் உருவாக்கத்துக்கு உதவுவனவாகவும் அந்த அமைப்பினை நியாயப்படுத்துவனவாகவும் காணப்படும். இது பற்றி ''ஈழத்துத் தமிழ் இலக்கியத்''தில் விரிவாக விளக்கியுள்ளேன் (2 ஆம் பதிப்பு 1987 : பக்கம் 10-11, 163-5). வையாபாடல், கைலாயமாலை, தட்சண கைலாசபுராணம், பரராஜசேகரனுலா, கதிரைமலைப் பள்ளு ஆகிய நூல்களின் தோற்றத்தை மனங்கொள்ளல் வேண்டும். அவை தோன்றிய அந்தக் காலப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவிலேயே வைத்திய நூல்களும் (செகராசசேகரம்) தோன்றின. இந்த நூல்களின் தோற்றத்துக்கும், ஆட்சியதிகாரத்துக்கும் தொடர்பு இருந்த தென்பது இந்நூல்கள் பற்றிய தகவல்கள் வழியாகத் தெரியவருகின்றன. மக்கள் நிலைப்பட்டதான இக்கால இலக்கியமென்று கூறப்படத் தக்கதாக அமைவது கண்ணகி வழக்குரையே. இந்நூல் கோயில் ஏடுகள் வழியாகப் பேணப்பட மற்றைய நூல்களோ வரன்முறையான உயர் நிலைப் பேணுகை வழியாக கையளிக்கப்பட்டனவாகும்.

யாழ்ப்பாண அரசின் ஆட்சியம்சங்களின் முக்கியமான ஒன்று பிரதேச முதலிகளின் முக்கியத்துவமாகும். யாழ்ப்பாண அரசு ஒருமுகப் படுத்தப்பட்ட ஓர் ஆட்சி முறைமையை நடைமுறைப்படுத்தியிருந்தது என்பதற்குப் போதிய சான்றுகளில்லை. அத்துடன் தென்னிந்தியாவில் நிலவி வந்த கூறாக்க முறைமைக்கு (segmentary state tradition) மாறான ஒழுங்கமைக்கப்பட்ட ஓர் ஆட்சி முறைமை யாழ்ப்பாணத்தில் நிலவிற்று என்றும் கொள்ள முடியாது. யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சிக்கு பிரதேசப் பிரதானிகள் சூழ்ச்சி முக்கியமான ஒரு காரணியாக விளங்கிற்று என்று கொள்ளப்படுவதிலிருந்து இந்த உண்மை நன்கு புலனாகிறது.

மேனாட்டார் வருகைக்கு முன்னர் நிலவிய கல்வி முறைமை பாரம்பரிய தமிழ்க் கல்வி முறைமையாகவே இருத்தல் வேண்டும். அதாவது குரு - சிஷ்ய மரபினைப் பேணியதாகவும், உயர்நிலைப்பட் டோருக்கு உரிய ஒன்றாகவும், மதச்சார்புடையாகதவுமே இருந்திருத்தல் வேண்டும். அந்த அளவில் இச்சமூகத்தில் இயல்பான அடுக்கமைவு முறைக்கு (hierarchical nature) இயைந்ததாகவே அமைந்திருத்தல் வேண்டும். ''உலகம் என்பது உயர்ந்தோர்மேற்றே'' எனும் கருத்துநிலை இத்தகைய சமூகங்களின் இயல்புநிலையாகும்.

இக்கால இலக்கியங்களில் முக்கியமானதும், யாழ்ப்பாணத்தின் சிந்தனை மரபில் முக்கியமானதாக எடுத்தோதப்பட வேண்டிய நூல் இரகுவமிசமாகும். காளிதாஸனது மூலநூலின் மொழி பெயர்ப்பாக அமைந்த இந்த ஆக்கம், அரசகேசரியினுடையது. அரசகேசரி யாழ்ப்பாண அரசர்களில் ஒருவராகப் போற்றப்படுபவர். சமஸ்கிருத மரபுவழிவரும் ஓர் இந்து முறைமையை யாழ்ப்பாணத்து மரபின் தளமாகக் கொள்ளும், ஒரு செயற்பாடு இதனுள் தொக்கு நிற்கின்றது. தனியொரு நூலினை வைத்துக் கொண்டு பொதுப்படையான ஒரு வரலாற்றுச் செல்நெறியை வகுத்துக் கொள்வது சிரமமெனினும் பின்வரும் யாழ்ப்பாணத்தில் வளர்ந்த சைவசித்தாந்த மரபினை நோக்கும் பொழுது (சைவசித்தாந்தத்தை வேதாகமத்தின் பிழிவாகக் கொள்வது) இரகுவமிசத்தின் தமிழ்ப்



படுத்துகைக்கான புலமைத்துவச் செல்நெறி மிக உன்னிப்பாக நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆட்சிக்காலங்கள் இப்பிரதேசத்தின் வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பு முனையாக அமைகின்றன. மேனாட்டாட்சி முறையும் கிறிஸ்தவமும் இலங்கை நாட்டினதும் இப்பிரதேசத்தினதும் வரலாற்றையே மாற்றியமைக்கின்றன. இங்கு நிலவிய விவசாய அமைப்பும், அடுக்கமைப்புச் சமூக முறைமையும், கூறாக்க ஆட்சியமைப்பும் வந்த ஆட்சியை எதிர்ப்பதற்கோ அன்றேல் அதற்கு எதிராகக் கிளம்புவதற்கோ வேண்டிய ஒரு கருத்துநிலையை மக்களிடத்தே ஏற்படுத்தக்கூடியனவாக அமையவில்லை.

கிறிஸ்தவத்தின் வருகையும், அது அரசயந்திரத்தின் ஒரு பகுதியாக நடைமுறைப்படுத்தப்பட்டமையும் இங்கு நிலவிய சமூக - மத மேலாண்மைக்குப் பெருஞ் சவாலாக அமைந்தன. இந்த வருகையுடன் பாரம்பரிய அமைப்பு அதனைப் பேணுவதற்கான ஆட்சியதிகார ஆதரவை இழந்தது. திருச்சபையோடிணைந்த ஒரு கல்வி மரபு இச்சமூகத்தின் பாரம்பரிய புலமைத்துவ மரபுக்குச் சவாலாக விளங்கிற்று. இந்த வருகையின் காரணமாக பாரம்பரிய புலமைத்துவ நிறுவனங்களிடையே ஓர் ஒதுக்கற்பாடு (Exclusiveness) காணப்பட்டது. இப்பிரதேசத்தின் மத பண்பாட்டு ஊற்றின் தளமான தமிழகத்திற்குச் செல்லும் ஒரு செல்நெறியும் காணப்பட்டது.

கிறிஸ்தவம் இத்தகைய ஒரு பாதிப்பை ஏற்படுத்திற்று என்றாலும் அந்த ஆரம்ப நிலையில் கிறிஸ்தவம் பாரம்பரிய அமைப்பினை அது ஜீவமரணப் போராட்டம் நடத்தும் ஒரு நிலைக்கு தள்ளவில்லை. ஏனெனில் முதலில் வந்த கத்தோலிக்க மதத்தினர், இச்மூகத்தின் உயர்மட்டத்திற்கு எத்தகைய ஒரு பெருஞ்சவாலையும் ஏற்படுத்தவில்லை. இந்தப் பிரதேசத்தின் பாரம்பரியப் பண்பாட்டினைப் பேணும் அதன் களஞ்சியமாக விளங்கிய சமூகமட்டத்தில் ஒரு மிகச் சிறிய பகுதியினரே கத்தோலிக்கத்திற் சேர்ந்திருந்தனர். பெரும்பான்மையான கத்தோலிக்கர் அடிநிலைப்பட்ட சாதிக்குழுமங்களைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர்.

போர்த்துக்கேய ஆட்சிக்காலத்தில் அவ் ஆட்சிவழிவந்த மத பண்பாட்டமிசங்களை புறக்கணிக்கும் ஒரு மனோபாவமே உயர் குழாத்தினரிடம் நிலவிற்று. ஒல்லாந்தர் ஆட்சியில் குறிப்பாக அதன் பிற்பகுதியில் கிறிஸ்தவத்தின் பரப்புகை பற்றிய அவர்களது சிரத்தை, பொருளாதாரத் துறையில் காட்டப்பட்ட அளவு காட்டப் பெறவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனலாம். கிறிஸ்தவ மதத்தை ஊக்குவிப்பதென்பது ஒல்லாந்தராட்சியில் இரண்டாம் பட்ச இடத்தையே பெற்றிருந்ததெனினும், ஒல்லாந்தக் கல்வி முறையானது திருச்சபையுடனேயே இணைக்கப்பட்டிருந்தது.

Youth with some education had career openings in the company's Junior administrative service. They were employed as translators in the company's offices, in the revenue services in a wide range of duties, and as school masters and catechists. (S.Arasaratnam *op.cit,* p.17)

போர்த்துக்கேயர் காலத்தில் மேற்கொண்ட ஒதுக்கல்.நிலைப்பாட்டை யாழ்ப்பாணச் சமூகத்தின் உயர் குழாத்தினர் ஒல்லாந்தர் காலத்தில் மேற்கொள்ளவில்லை எனலாம். தங்களைக் கிறிஸ்தவர்களாகக் காட்டிக் கொள்ளவும் அவர்கள் தயங்கவில்லை. யாழ்ப்பாணத்தில் 1758இல் 37 தேவாலயங்களும், 200, 233 இறப்பிறமாதுக் கிறிஸ்தவர்களுமிருந்தனரென்று கூறப்படுகின்றது. ஒல்லாந்தர் ஆட்சியில் கத்தோலிக்கர்களும் இன்னல்களுக்காளாக்கப்பட்டனர்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் போர்த்துக்கேய ஆட்சியே மோசமாகவிருந்தது.

கத்தோலிக்கர்களைப் பொறுத்தவரையில் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் தங்கள் மதத்தைப் பேணுவதற்கு தங்கள் அடிநிலைத் தொடர்புகளை வற்புறுத்திக் கொண்டனர் எனலாம்.

ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் உள்நாட்டு நிலப்பிரபுக்களும், வியாபாரிகளும், தரகர்களும் நல்ல நிலையிலிருந்தனர் என்பர். இலக்கியத்தின் மூலம் இந்த உண்மை நிரூபிக்கப்படுகின்றது. உள்ளூர்ப்பிரபுத்துவ பரம்பரை பற்றித் தோன்றிய முதலாவது நூல் - கரவை வேலன் கோவை - ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்ததாகும். யாழ்ப்பாண வைபவ மாலை கூட,

'' உரராச தொழுகழன் மேக்றூனென்றோதும்
உலாந்தேசு மன்னன் உரைத் தமிழாற் கேட்க''

என மயில்வாகனப் புலவரால் எழுதப்பட்டதாகும் என்பர்.

யாழ்ப்பாணத்தின் பாரம்பரியச் சமூக அமைப்பு அந்நிய ஆட்சியுடனும் கிறிஸ்தவத்துடனும், ''உடனுறைய''ப் பழகிக் கொண்டு விட்டது எனலாம்.

பிரித்தானிய ஆட்சி வருகையுடன் ஆட்சியாளரின் மதக் கொள்கையில் மேலும் நெகிழ்ச்சி காணப்படுகிறதெனினும், இக்கால பிரிவில் புரட்டஸ்தாந்து மதங்களின் பரவல் (வெஸ்லியன் மிஷன், அமெரிக்க மிஷன், சேச் மிஷனரிக் கழகம்) பாரம்பரிய சமூக அமைப்புக்கான பெரிய



சவாலாக அமைந்தது (K.Sivathamby, Hindu Reaction to Christian Proselytization and Westernization in 19th century Jaffna, Social Science Review, No.1, 1979, Colombo).

முதலாவதாக இந்த மூன்று தேவ ஊழியச் சபைகளினிடையேயும் ஒரு பருமட்ட நிலையில் ஒருங்கிணைப்பு நிலவிற்று.

இரண்டாவது - இது முக்கியமானது- இவர்கள் உயர் சமூகத்தினரிடையே தங்கள் மதத்தினைப் பரப்பினர். அடிநிலைச் சமூக மக்களிடையே மதத்தைப் பரப்புவதில் அதிக ஆர்வம் காட்டவில்லை எனலாம். புரட்டஸ்தாந்திகளாக மதம் மாறிய அடிநிலைப்பட்டோர் மிகச் சிலரே.

மூன்றாவது அரச உத்தியோகங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஆங்கிலக் கல்வி பிரதானமாக இந்த நிறுவனங்கள் மூலமே போதிக்கப்படலாயிற்று.

நான்காவது இந்தத் திருச்சபைகள் வழிவந்த கல்வி முறைமை, நவீனமயவாக்கத்துக்கான 'முகவர்' (agency) நிறுவனமாகக் கணக்கிடப்பட்டது. இதனால் கிறிஸ்துமயப்பாட்டினை எதிர்த்த சுதேசிகள் புதிய கல்வி முறைமையைக் கையேற்று அதன் மூலமே தமது பண்பாட்டுப் பேணுகையை நடத்த வேண்டியதாயிற்று.

ஆங்கில ஆட்சியும், மிஷனரிமார்கள் அறிமுகப்படுத்திய கல்வி முறைமையும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. கிறிஸ்தவத்தின் நேரடித் தாக்கமில்லாத கல்வியை உயர்மட்டத்தினர் விரும்பினர். அதாவது பாரம்பரியச் சமூகச் செல்வாக்கையும் அதிகார மேலாண்மையையும் ஊறு செய்யாத வகையில் புதிய கல்விமுறை அமைந்தால் அது ஏற்றுக் கொள்ளப்படும் என்பதைப் பட்டவர்த்தனமாகத் தெரிவித்தனர்.

இந்த விடயம் பற்றிக் கணிசமான ஆராய்ச்சி நடந்துள்ளது. ஆறுமுக நாவலர் பற்றிய ஆய்வுகள் பலவற்றில் இவ்விடயம் பேசப்பட்டுள்ளது. (நாவலர் நிறைவு நூற்றாண்டு விழா மலர் - பதிப்பு க.கைலாசபதி 1979). எனவே அவற்றை மீண்டும் இங்கு எடுத்துக் கூறாமல், கிறிஸ்தவக் கல்வியை இந்துக்கள் நோக்கிய முறைமை பற்றியும், கிறிஸ்தவ வழிக் கல்விக்கான எதிர்ப்புக்கான காரணங்கள் யாவை எனக் கிறிஸ்தவர்கள் கருதினர் என்பது பற்றியும் சில முக்கியமான தரவுகளை அருகருகே **வைத்து**ப் பார்ப்பது இவ்விடயம் பற்றிய ஒரு தெளிவான புலப்பதிவுக்கு உதவுவனவாகும்.

தனது பாடசாலைக்கு நிதிக்கொடை கேட்டு ஆறுமுகநாவலர் எழுதிய முறையீடு பின்வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The petitioner in common with the best informs portion of the Tamil Community is bound to acknowledge with gratitude the important advantage which his countrymen have derived from Her Majesty's government under whose protection a gracious providence has placed the inhabitants of this land.

The petitioner is equally bound to acknowledge that by the labours of the different Missionaries in the Northern Province the state of society has been considerably informed. It would however be disingenuous on his part, were he to hesitate respectfully and with deference express his own conviction that, had the influence of the Missionary schools been exacting of the renunciation of the conscientious attachment to the religions predilections entertained by the Tamil Youths instructed there in, the latter would have driven morally greater advantages from the tution imparted to them. The desire to acquire a competent knowledge of the English language and other information afforded in those seminaries induced many to conform for a time to the rules to which however they paid little respect after the completion of their studies. (Appendix -in 'Navalar Appeals for state Aid' நாவலர் பணிகள் - தனஞ்செயராசசிங்கம் பேராதனை, 1969).

ஆங்கில ஆட்சியை வரவேற்கும் நாவலர், மிஷனரிகளின் தேவையையும் ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டு ஆங்கிலம் கற்க வருபவர்கள் மீது கிறிஸ்தவ மதக் கருத்துக்களைத் திணிக்கக் கூடாது என்று சொல்கிறார். அந்தக் கல்வியைப் பெறும் வரையில் தான் அவர்கள் மிஷனரிமார் சொல்வதை ஏற்றுக் கொள்கிறார்கள். கல்வி முடிந்த பின்னர் அதற்குக் கிஞ்சித்தேனும் மதிப்புக் கொடுக்கவில்லை என்று கூறுகிறார். இங்கு நாவலர் தமிழ் மாணவர் எனக் கொள்வது அக்காலக் கல்வி முறைமைக்குள் வரக்கூடிய சைவத் தமிழ் மாணவரையே.

நாவலரின் இந்த நிலைப்பாட்டை ஒரு கிறிஸ்தவ மிஷனரி எவ்வாறு பார்த்துள்ளார் என்பது சுவாரசியமானதாகும்.

வெஸ்லியன் மிஷனரியைச் சேர்ந்த றொபின்சன் என்பவர் நாவலர் கல்வி இயக்கத்தின் நோக்கம் பற்றிக் குறிப்பிடும் பொழுது பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"As long ago as 1842, the gentry of Vannarpanne showed themeselves very uneasy at the appearance which saivaism as exhibited by the Missionaries and their assistant, was assuming; the hold Christianity had the true castes of talent, were and learining asserting themeselves above the hereditary rules of the country" (E.J.Robinson Hindu, Pastor, London, 1869) (K.Sivathamby *op.cit.*)



கிறிஸ்தவம் சாதாரண மக்களிடையே பரவுவதனாலும், திறமையும் கல்வியுமுடையோர் தமது பாரம்பரிய அதிகார அடுக்கமைவு மேலாளரை மீறி முன்னேறுவதனாலுமே உயர்மட்டத்தினர் தங்களுக்கென ஒரு பாடசாலையை 1842 இல் நிறுவினர் என றொபின்சன் பாதிரியார் கூறுகின்றார்.

மேலிருந்து வரும் சமூகச் சலுகைகளை அடிநிலைக்குச் சுவறவிடாது தமது நிலையினுள் அமைத்துக் கொள்வது யாழ்ப்பாணத்துச் சமூக மேலாண்மை மரபின் ஒரு பண்பு என்பதனை எனது ''யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளலில்'' (1993) எடுத்துக் கூறியுள்ளேன்.

கிறிஸ்தவம் ஏற்படுத்திய பண்பாட்டுத் திரைவுக்கு எதிராக இந்தியாவின் சில பாகங்களில் பாதிக்கப்பட்ட மக்கள் சகலரையும் உள்ளடக்கிய இயக்கங்கள் தோன்ற, இங்கோ சமயப் பேணுகை என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் நலன்களின் பேணுகையேயே வற்புறுத்தி நின்றது.

கிறிஸ்துமதத் தாக்கத்தினதும் நவீனமயவாக்கத்தினதும் தாக்கங்களிடையே பாரம்பரியப் பேணுகையானது இரண்டு கருத்து நிலைத் தளத்திலிருந்து தொழிற்பட்டது.

1. நவீனமயவாக்க உத்திகளையே பயன்படுத்தல்
   - அச்சுப்பதிப்பு
   - செய்யுளிலக்கியங்களை உரை வடிவில் தரல்
   - துண்டுப்பிரசுரங்களைப் பயன்படுத்தல்
2. பாரம்பரியக் கல்வி முறையையும் சில நடவடிக்கைகளையும் பேணுதல்.
   - புராணபடன மரபு
   - குரு - சிஷ்ய முறையைப் பேணல்
   - பாரம்பரியச் சமூகக் கொள்கைகளைப் பேணல்.
   - அதில் எவ்வித அசைவியக்கத்தையும் காண விரும்பாமை.

நாவலர் இந்த இரண்டு அமிசங்களையும் இணைத்து நின்றார். ஆனால் அவரது காலத்தின் பின்னர் வந்த இந்து ஆங்கிலப் பாடசாலை முறைமையானது பாரம்பரியக் கல்வி முறைத் தொடர்ச்சியினைப் பேணும் முறையைக் கைவிட்டு, இந்து மதச் சூழலில் புதிய பாடத்திட்டத்தினைப் பயிற்றுவிக்கும் முறைமையை ஏற்றுக் கொண்டது. அந்தப் பெருமாற்றத்தைக் குறிப்பதே யாழ்.இந்துக் கல்லூரியின் தோற்றமாகும் (1889). இந்த மாற்றம் நாவலரின் பின்னரே நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுக நாவலரின் பின்னர் சைவப் பேணுகை சம்பந்தமாக இரு சிந்தனைப் போக்குகள் தொழிற்படுவதைக் காணலாம். ஒன்று சைவ ஆங்கிலப் பாடசாலைகளைக் கட்டும் மரபு; மற்றது மேனாட்டு நாகரீக இணைவு சற்றுமின்றிப் பாரம்பரிய சைவத் தமிழ் கல்வியைப் பேணும் முறைமை.

1889 யாழ் இந்துக் கல்லூரியின் தோற்றத்தின் பின்னர் ஆங்கிலக் கல்வியை சைவச் சூழ்நிலையில் பயிலும் பண்பு அதிகரிக்கத் தொடங்கியது. இதனால் சைவ ஆங்கிலக் கலாசாலைகள் தோன்றத் தொடங்கின.

அதே வேளையில் மறுபுறத்தில் நாவலர் தோற்றுவித்த இலக்கிய மரபைப் பின்பற்றும் பாரம்பரிய இலக்கிய இலக்கணப் பயில்வும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்த மரபின் தன்மையைப் பற்றி வல்வை.சி.வைத்தியலிங்கம்பிள்ளை எழுதியுள்ள சிறு நூலில் குறிப்பிட்டுள்ளேன் (1978). யாழ்ப்பாணத்துத் தமிழரிடையே காணப்பட்ட இந்த மரபுப் பேணுகை முயற்சிகள் போன்ற ஒரு பேணுகை முயற்சியினை யாழ்ப்பாணத்து முஸ்லிம்களிடையேயும் காணலாம். ஹக்கீம் மீரு முகிய்யதீன் புலவர், யாழ்ப்பாணம் சேகுத்தம்பிப்புலவர், சுலைமான் லெப்பை, சுல்தான் தம்பிப் புலவர் பாவலர் முதலியோர் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவர்களாவர் (அப்துல் ரகீம்- யாழ்ப்பாண முஸ்லிம்கள் -வரலாறும் பண்பாடும் -1979). ஆனால் இந்துக்கள் ஆங்கிலக்கல்வியை தமது மதச்சூழலில் படிப்பிக்கத் தொடங்கிய அந்த முறைமையினை முஸ்லிம்கள் மேற்கொள்ளவில்லை. இதனால் அவர்கள் கல்வியில் பின்தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவர்கள் யாழ்ப்பாணம் சோனக குடியிருப்புக்கு அருகே இருந்த பாடசாலைகளில் ஆங்கிலம் படித்தனர். இவ்வகையில் வைத்தீஸ்வராக் கல்லூரி முக்கிய இடம் வகித்ததெனலாம். அப்பாடசாலையின் நிர்வாகம் இராமகிருஷ்ண மிஷனை சார்ந்திருந்தமை அனுமதி நெகிழ்ச்சிக்கு காரணமாக இருந்திருக்கலாம்.

கிறிஸ்தவம் யாழ்ப்பாணப் பாரம்பரியத்துக்கு ஊறுசெய்ததா என்பது ஒரு முக்கியமான விடயமாகும். நாவலரும் அவர் தம் மரபினரும், குறிப்பாக நாவலர் மரபினைப் போற்றியோர் எடுத்த நிலைப்பாடும், பற்றிய கிறிஸ்தவக் கண்ணோட்டத்தை நோக்குவது கடமையாகின்றது.

எஸ்.ஜெபனேசனின் அமெரிக்க மிஷனும், இலங்கையில் தமிழ் வளர்ச்சியும் (1983) என்னும் நூலுக்கு முன்னுரை வழங்கிய முன்னாள் பிஷப்பான கலாநிதி எஸ்.குலேந்திரன்,



"To say that the cultural activities of the missionaries destroyed our culture is not due to (as some of us think) malice but to a mistake. There are many who say the Bristish destroyed the ancient culture of India; but few of them, if given the chance, would like to live in India before the British, with it suttee system, its thuggery, child widows and the high handed behaviours of the Brahmins.

A culture that shuts itself to all new influences, new ideas and new insights, does not express itself to new experiences but is handed down from generation to generation, wrapped up as in a parcel is a dead thing. It is new influences and experiences that renew a culture and make it live.

The mistake made by those who denounce the cultural activities of the missions as having dealt out death to the old culture of Jaffna are actually denouncing if for having given it a new life" எனக் குறிப்பிடுகின்றார்.

புதிய பண்பாட்டு அநுபவங்களுக்கு முகங்கொடுத்ததனாலேயே தமிழ்ச் சமூகம் விழிப்படைந்து புத்தூக்கத்துடன் வரும் காலத்தை எதிர்நோக்கியதென்று கூறும் ஆயர் குலேந்திரன் தேவ ஊழியச் சபைகள் மரபு வழிப்பண்பாட்டை மரணிக்கச் செய்யாமல் அதற்குப் புத்துயிர் வழங்கினர் என்றும் கூறுகின்றார். கலாநிதி குலேந்திரனின் இக்கருத்து சற்று நிதானமாகவே நோக்கப்படல் வேண்டும்.

கிறிஸ்தவப் பங்களிப்புப் பற்றிப் பேசும் இக்கட்டத்தில், அவ்வழியாக வந்த இரு முக்கிய செல்நெறிகளைப் பதிவு செய்து கொள்வது அவசியமாகும்.

அ. கிறிஸ்தவர்கள் தம் தமிழ் வழிப்பேற்றைத் தமிழில் பதிவு செய்து கொண்டமை.

ஆ. தமிழின் புராதன இலக்கிய வளத்தை ஆங்கிலத்தில் எழுதியமை.

முதலாவதற்கு உதாரணமாக பாவலர் ஆணல்ட் சதாசிவம்பிள்ளையின் பாவலர் சரித்திர தீபகத்தைக் (1886) குறிப்பிட வேண்டும். ஆங்கிலத்தில் தமிழ் இலக்கிய வரலாற்றை மேனாட்டு மரபுக்கியைய எடுத்துக் கூறியவர் (1859) புத்தளத்தைச் சேர்ந்த சைமன் காசிச் செட்டியாவார். கிறிஸ்தவர்கள் தங்கள் தமிழ்ப் பாரம்பரியத்தை விதந்து கூறும் பண்பு தமிழகத்திலும் காணப்படுவதொன்றாகும் (தமிழில் இலக்கிய வரலாறு 1888 - 1898). இருபதாம் நூற்றாண்டின் முற்கூற்றில் சுவாமி ஞானப்பிரகாசர் ஆற்றிய ஆராய்ச்சிகளின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவத்தின் தாக்கம் ஏற்பட்டதன் பின்னர், அதற்கு முகங் கொடுக்கத் தக்கமுறையில் நாவலரால் வளர்த்தெடுக்கப்பட்ட சைவ மானது மெதடிஸ்த தூய்மை வாத அணுகுமுறையைக் கொண்டது என்பது ஏற்கனவே எடுத்துக் கூறப்பட்டுள்ளது (Sivathamby, 1979).

நாவலரின் பாரம்பரியப் பேணுகை முயற்சியின் பின்னர், யாழ்ப் பாணத்துப் புலமைத்துவப் போக்கில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத் தியது யாழ்ப்பாண மாணவ காங்கிரசாகும் (The student congress).

1924 டிசெம்பரில் நடைபெற்ற அதன் முதலாவது மகாநாட்டில் அது நிறைவேற்றிய தீர்மானங்கள் அது எத்துணைத் தளமாற்றத்தன்மை (radical) உடையதாயிருந்தது என்பதை எடுத்துக்காட்டுகின்றன. அத்தீர்மானங்கள் பின்வருமாறு :

1. ''தாய்நாட்டின் சேமநலத்திற்கும், அதன் நலன்களை எல்லாச் சமயங்களை சார்ந்தவர்களாலும் சமமான நேர்மையுடனும், விநயத்துடனும் ஊக்குவிப்பது முடியும் என்று இந்த காங்கிரஸ் நம்புவதால், இக்காங்கிரஸானது அதனைப் பொறுத்தவரை யில் நாட்டிலுள்ள பல்வேறு சமயநிறுவனங்களிடையே வேறு பாடு காட்டுவதில்லையென்றும், எந்த ஒன்றுக்கும் முதலிடம் கொடுப்பதில்லையென்றும், காங்கிரஸின் பொதுக் கூட்டங் களிலோ, செயற்குழுக்கூட்டங்களிலோ அல்லது செய்யும் பிரச்சார வேலைகளின் பொழுது எந்தவொரு மதம் சார்ந்த எந்த விடயமும் கிளப்பப்படக்கூடாதென்றும், இதற்கான ஒரு வாசகம் ஆட்சியமைப்பு விதிகளில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும்,

2. .........................

3. தற்போது நாட்டில் நிலவிவரும் சாதி வேறுபாடுகள் தேசத்தின் முன்னேற்றத்திற்குத் தடையென இக்காங்கிரஸ் கருதுகிற தென்றும், நம்மிடையே இருந்து தீண்டாமை என்னும் காய த்தை இயன்றளவு அகற்றுவதற்கு காங்கிரஸ் அங்கத்தவர் முயல்வாரென்றும்,

4. தேசிய இலக்கியத்தைப் படிப்பதற்கும், பயன்படுத்துவதற்கும் வாரத்தில் குறைந்தது மூன்று மணித்தியாலங்களையாவது செலவிடுவதென காங்கிரஸின் அங்கத்தவர்கள் தம்மைக் கட்டுப்படுத்தும் வாக்குறுதியொன்றைச் செய்து கொள்வ தென்றும்,



5. தேசிய இலக்கியம், கலை, இசைத்துறைகளில் அவற்றின் மீட்பிற்கு வேண்டிய தன்னாக்கப்படைப்பினைத் தோற்று விக்கும் எவருக்கும் பரிசு, பதக்கம் அன்றேல் யாதுமொரு ஊக்குவிப்பினை காங்கிரஸ் கொடுக்க வேண்டுமென்றும்,

6. விஞ்ஞானம், புனைகதை, சமூகவரலாறு, வாழ்க்கை வர லாறு ஆகிய துறைகளில் தேசிய இலக்கியத்தை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய வழிவகைகளை உண்டாக்குவதற்கு செயற்குழுவினால் ஐந்து அங்கத்தினரைக் கொண்ட ஒரு குழுவை நியமிப்பதென்றும்,

7. தென்னிலங்கையில் தமிழும், வட இலங்கையில் சிங்களமும் படிப்பிப்பதற்கான நடவடிக்கைகளை விரைவாக காங்கிரஸ் எடுக்க வேண்டும் என்றும்,

8. 1925 ஏப்ரலில் நடத்தப்படவுள்ள காங்கிரஸ் அமர்வுடன் எல்லா இனங்களினதும் (பிரதானமாக சிங்களவர்களினதும் தமிழர்களினதும்) கொள்கைகளையும் நலன்களையும் பிரதி நிதித்துவம் செய்யும் வகையில் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென இந்தக் காங்கிரஸ் செயற்குழுவைக் கேட்டுக் கொள்வதென்றும்,

9. இந்தக் காங்கிரஸ் இயக்கத்தின் நோக்குகளை வெகுசனத் திற்கு விளக்கவும், மது ஒழிப்பு, கூட்டுறவு ஆகிய துறை களினை அவர்களுக்குப் புகட்டவும் வேண்டிய துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு வெளியிடுவதற்கென பிரசுரக்குழு வொன்றைத் தோற்றுவிப்பதென்றும்,

10. காங்கிரஸ் அங்கத்தவர்கள் இயன்றளவு உள்ளூர் வர்த்த கத்தையும், கைத்தொழில்களையும் ஆதரிக்க வேண்டும் என்றும், அவர்கள் குறிப்பாக அந்நிய சவர்க்காரம், வாசனைத் திரவியங்கள், பூசல் மா, மது, சிகரெட் ஆகியவற்றை வாங்காது தவிர்க்க வேண்டுமென்றும், இக்காங்கிரஸ் தீர்மானிக்கிறது'' எனப் பிரகடனப்படுத்திற்று.

சைவமும் தமிழும், கிறிஸ்தவமும் தமிழும், சமூக ஒதுங்கற்பாடு, பாரம்பரிய மரபுப் பேணுகை என இதுவரை பேசப்பட்டு வந்த அரங்கில் இது முற்றிலும் புதுமையான பார்வையையும் கண்ணோட்டத்தையும் முன்வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கிரஸில் மொழியும், இலக்கியமும், மொழி வளர்ச்சியும் பேசப்பட்டு வந்த முறைமையானது இதற்கு முன்னர் மொழி, இலக்கியம் பற்றி நிலவிய கண்ணோட்டங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்ட தாகும். மதங்களைக் கடந்த ஒரு மனிதாயத நோக்கில் கலை இலக்கியங் கள் பேசப்படத் தொடங்குகின்றன. பாரம்பரியப் பண்பாட்டை மத நோக்குக்குள் வரையறை செய்துவிடாது தேசியப் பண்பாடு என்ற பரிமாணத்தில் நோக்கும் மாற்றம் மிக முக்கியமானதொன்றாகும்.

பாரம்பரியத்தின் மேன்மையை தேசிய கண்ணோட்டத்தில் வலி யுறுத்தும் அதேவேளையில் பாரம்பரியச் சமூகத்தில் நிலவிய ஒடுக்கு முறையை - சாதி வேறுபாட்டை -அது முற்றாக நிராகரித்தது.

மேனாட்டாட்சி எதிர்ப்பு இந்தக் கண்ணோட்டத்தில் முக்கிய இடத்தை வகித்தது. இதன் காரணமாக சனநாயகம், விடுதலை, சுதந் திரம் என்ற கோட்பாடுகள் முன்னிலை எய்தத் தொடங்குகின்றன. மாணவர் காங்கிரஸ் முன்வைத்த சுதந்திரம் சனநாயக அடிப்படையில் இயங்கும் ஒன்றாகும்.

பாரம்பரிய அடுக்கமைவுச் சமுதாயத்தின் பாகுபாட்டுக் கொள் கைக்குப் பழகிப் போயிருந்தவர்களுக்கு இந்தக் கோரிக்கைகள் சமூகத் தின் அடித்தளத்தையே மாற்றுவனவாகக் காணப்பட்டன.

இந்தத் தாராண்மைவாத தளமாற்ற அணுமுறையானது ஆங்கிலக் கல்வி வழியாகவும், இந்திய சுதந்திரத்திரப் போராட்ட உந்துதல் வழியாக வந்தனவாகவும், அத்துடன் 1920 முதல் இந்திய சுதந்திரப் போராட் டத்தின் உந்துசக்தியாகவிருந்த காந்தீயத்தினடியாகவும் வந்ததாகும்.

இந்தப் புதிய கண்ணோட்டத்தின் இலக்கியநிலைப் பிரதிபலிப் பாக 'ஈழகேசரி' (1930) பத்திரிகையும் பின்னர் 1942இல் தோன்றிய 'மறுமலர்ச்சி' இலக்கிய இயக்கமும் அமைந்தன.

இந்த உந்துதல் காரணமாகவே வட இலங்கைச் சங்கீத சபை (1931) தோன்றுகின்றது. தாகூரின் வருகை கலை அபிமானிகளுக்கு புத்தூக் கத்தை அளித்தது. இச்சந்தர்ப்பத்தில் பாரம்பரிய சமூக அமைப்பிலும், நாவலரியக்கக் கண்ணோட்டத்திலும் கலைகள் உயரிய இடத்தைப் பெறுவனவாக அமையவில்லை எனும் உண்மையைக் குறிப்பிடவேண் டும். இது பற்றிய விபரங்களை காரைசுந்தரம்பிள்ளையின் இசைநாடக வரலாற்றுக்கு (1986) எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளேன்.

கலை இலக்கியம் பற்றிய இந்தக் கண்ணோட்டம் எத்தகைய பயனுள்ள சாதனைகளுக்கு காரணமாயிருந்தது என்பதற்கு ஐசாக்



தம்பையாவினதும், அவரது மனைவி மங்களநாயகி தம்பையாவினதும் புலமைத்துவப் பங்களிப்புக்கள் சான்றளிக்கின்றன. கிறிஸ்தவரான ஐசாக் தம்பையா தாயுமானவர் பாடல்கள் ஐரோப்பிய சிந்தனை மரபில் வைத்து நோக்கும் பொழுது மிக நுண்ணிதானவை என்பதை எடுத்துக் காட்டியுள்ளார். அவர் அந்நூலுக்கு (1926) எழுதியுள்ள முன்னுரையில் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பியல்புகளை பெருமித உணர்வுடன் எடுத் துக் கூறுகின்றார். ஐரோப்பிய சிந்தனை மரபு வழியாக வந்த புதிய நோக்குகள் தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் விளங்கவும் புது முறையில் வியாக்கியானிக்கவும் உதவும் முறையினை இந்நூலிலே காணலாம். மங்களநாயகி தம்பையாவே ''நொறுங்குண்ட இருதயம்'' என்ற நாவலை எழுதியவர். இப்புதிய கண்ணோட்டச் சமூகச் சிந்தனை யில் ஏற்படுத்திய விஸ்தரிப்பினை இந்த ஆக்கங்களில் காணலாம்.

1920 களிலிருந்து நவீன தமிழிலக்கியம் ஈழத்துத்தமிழ்ப் பாரம்பரி யத்துடன் இரண்டற இணைகின்ற தன்மையை அவதானித்துக் கொள் ளல் வேண்டும். ஆங்கிலத்தின் தாக்கம் இரண்டறச் சுவறத் தொடங் கியமையால் இப்பண்பு காணப்படுகின்றதெனலாம். வந்த மேனாட்டுப் பண்பாட்டுப் பண்புகளை தளமாகக் கொண்டு எமது சமூகத்தைப் பார்க்கத் தொடங்கும் செல்நெறி தொடங்குகின்றதெனலாம். இது அரசியலில் மாத்திரமல்லாமல் சமூக பண்பாட்டுத் துறைகளிலும் காணப்படுவதையே இப்பண்பு காட்டுகின்றது. இதற்கான உதாரணங் களாகவே இலங்கையர்கோன், வைத்திலிங்கத்தின் சிறுகதையாக்கங் களைக் கருத வேண்டும். மேனாட்டுத் தாக்கங்களை உள்வாங்கி மேற்கிளம்பிய இன்னொருதுறை நாடகமாகும். கலையரசு சொர்ண லிங்கம் இத்துறையில் முன்னணியில் நிற்கின்றார்.

இப்பண்பின் வெளிப்பாட்டைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது யாழ்ப்பாணத்தின் கலை, இலக்கிய வரலாற்றில் அதிக முக்கியத்துவ மளிக்காதுள்ள ஒருவர் -கலைப் புலவர் க.நவரத்தினம் -பற்றிக் குறிப் பிடல் அவசியமாகும். தாகூர் வழிவந்த இந்தியக்கலை மறுமலர்ச்சியின் யாழ்ப்பாணக் கலை வெளிப்பாடு கலைப்புலவரதும் அவரது மனைவி யர்ரினதும் கலைத் தொழிற்பாடுகளில் தெரிய வருகின்றதெனலாம்.

ஆறுமுக நாலவரால் கண்டிக்கப் பெற்ற இசை, நடனக் கலைப் பயில்வினை யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்கத்தினரிடையே கொணர் ந்த பெருமை இக்குடும்பத்தைச் சாரும். சாஸ்திரீய இசைப்பயில்வினை இவர்கள் ஊக்குவித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் சமகாலத்தவர்களாக விளங்கிய கனகசபை போன்றோரே யாழ்ப்பாணத்தின் சமய சார்பற்ற ஓவிய மரபை வளர்ப்பதில் முன்நின்றனர்.

நாவலர் பாரம்பரிய வழியே நின்று யாழ்ப்பாணத்துக் கலை இலக்கிய வரலாற்றினை நோக்கும் பொழுது வலியுறுத்தப்படாத இந்தப் புலமைப் பாரம்பரியத்திற்குரிய இடத்தை வழங்குதல் அவசியமாகும்.

மேற்குறிக்கப்பெற்ற இவர்கள் தாம் வாழ்ந்த காலத்தின் சமூகப் பண்பாட்டு விடயங்களில் முக்கிய பங்கெடுத்தனர்.

1920 -30களிற் காணப்படும் இன்னொரு முக்கிய பண்பு இக்காலத்தில் முற்றிலும் ஆங்கிலத்திலேயே யாழ்ப்பாண வாழ்க்கையின் வளத்தைச் சித்திரிக்கும் ஆற்றலுடையவர்கள் தோன்றியமையாகும். அழகு சுப்பிரமணியம், தம்பிமுத்து ஆகியோர் இதற்கான உதாரணங்களாவர். தம்பிமுத்துக்கவிஞர், அழகு சுப்பிரமணியத்தின் எழுத்துத் திறன் காரணமாக யாழ்ப்பாண வாழ்க்கையின் செழுமை ஆங்கில இலக்கியத்தின் ஆற்றலுடன் பொறிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மேனாட்டுச் சூழலில் வாழ்ந்தே, இந்த இலக்கியச் செயற்பாட்டினில் ஈடுபட்டனர் என்பதும் உண்மையாகும்.

சைவப் பாரம்பரியத்தில் வந்தோரும் தங்கள் சிந்தனைகளை ஆங்கிலத்தில் பொறிக்கும் ஒரு மரபு இருந்தது என்பதையும் இங்கு குறிப்பிடல் வேண்டும். இந்தச் செல்நெறியின் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள் சேர். பொன்னம்பலம் இராமநாதனும் அவரது சகோதரர் சேர். பொன்னம்பலம் அருணாசலமுமாவார்கள்.

மாணவர் காங்கிரஸின் சனநாயக நோக்கு சாதி முறைமை பற்றிய அவர்களது கண்ணோட்டத்தில் நன்கு புலனாகிறது. மாணவர் காங்கிரஸினர் அக்காலத்தில் நடத்தப் பெற்று வந்த சமாசன சமபோசனப் போராட்டத்தில் முக்கிய பங்களிப்பைச் செய்தனர். இதனால் அவர்களது 1930 மகாநாடு பெரிதும் பாதிக்கப்பட்டது.

சமாசன சமபோசனக் கிளர்ச்சி காரணமாக யாழ்ப்பாணத்தின் கல்வி வரலாற்றில் ஒரு முக்கியமான மாற்றம் ஏற்படுகின்றது. இந்த நடவடிக்கையுடன் தாழ்த்தப்பட்டோருக்கு விதிமுறையான கல்வி பெறுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கின்றது. கட்டாயக்கல்விச் சட்டம் ஆகியவற்றினை இணைந்து நோக்கும் பொழுது இது ஒரு முக்கிய செயற்பாடாகும். இவர்களுக்கான ஆங்கிலக்கல்வி பெரும்பாலும்



கிறிஸ்தவக்கல்வி நிலையங்கள் மூலமாகவே கிடைக்கின்றது. சமாசன இயக்கம் மூலம் கல்விவசதி தமிழ்ப்பாடசாலைகளில் கிட்டிற்று.

மாணவர் காங்கிரஸை இளைஞர் காங்கிரஸ் என 1931 இல் பெயர் மாற்றம் செய்து கொண்டனர். யாழ்ப்பாணச் சமூகச் சிந்தனையின் வரலாற்றில் இவ்வியக்கம் பெருத்த மாற்றங்களை ஏற்படுத்தியது. டொனமூர் ஆணைக்குழு பூரணசுயராட்சியத்தை வழங்கவில்லையென்பதால் அதற்கான தேர்தலையே பகிஷ்கரிக்கும் முயற்சியில் அது ஈடுபட்டது. அதன் பின்னர் அதன் செல்வாக்கு குன்றத் தொடங்கிற்று.

எழுத்துநிலையில் பார்க்கும் பொழுது மாணவர் காங்கிரஸ் இயக்கம் திடீரென பாரிய மாற்றங்களைக் கொண்டு வரவில்லை என்பது உண்மையே. சமூகப் படிநிலை அடுக்கமைவு காரணமாக எழுத்தறிவு வரையறுக்கப்பட்டிருந்த ஒரு சமூகத்தில் அந்த அறிவுமுறையை மாற்றுவதற்கான முயற்சிகளை முன்வைத்ததே இவ்வியக்கத்தின் முக்கியமான பணியாகும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசிய பண்பாடுகளில் மறுமலர்ச்சி, சனநாயக மயவாக்கம் ஆகிய துறைகளில் இவ்வியக்கம் மிக முக்கியமான பங்களிப்பைச் செய்துள்ளது.

இவ்வாறு கூறுகின்ற பொழுது மாணவர் இளைஞர் காங்கிரஸ் யாழ்ப்பாணத் தமிழர்களிடையே பூரணமான தளமாற்றத்தினை ஏற்படுத்திவிட்டதாக கூறிவிட முடியாது. இது அரசியல் துறையில் அது பெற்ற தோல்வியால் நன்கு தெரியவருகின்றது. மேலும் இந்த இயக்கத்தினால் யாழ்ப்பாணத்தின் அடிப்படைப் பொருளாதார அமைப்பில் எவ்வித மாற்றத்தையும் செய்ய முடியவில்லை. ஆயினும் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வும் இந்திய சுதந்திரப் போராட்டமும் தந்த உந்துதல்கள் காரணமாக இந்தியாவின் பாரம்பரிய நவீனத்துவ நோக்குகள் இலங்கைத் தமிழரிடையே சனநாயக அடிப்படையில் பரவுவதற்கான ஒரு வாயிலாக அமைந்தன.

இதன் செயற்பாடு காரணமாக யாழ்ப்பாணத்தில் இரண்டு கருத்துநிலைகள் நிலவத் தொடங்கின. ஒன்று, நாவலர் இயக்கம் வழிவந்த பாரம்பரியப்பேணுகை. அதாவது மேலிருந்து கீழ்வரும் புதிய நடவடிக்கைகளை சமூகத்தின் அடிப்படை அமைப்பு மாறாத முறையில் ஏற்றுக் கொள்ளல். இது பெரும்பாலும் சமூக-மத விடயங்களில் காணப்பட்டது. இன்னொன்று தாராண்மைவாத நோக்காகும். இது பிரதானமாக அரசியலில் தொழிற்பட்டதாகும். இத்தாராண்மைவாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலரால் சமூக - மத மட்டங்களுக்கும் பயன்படுத்தப்பட்டன. சிலர் அவ்வாறு சொல்லவில்லை. முற்றும் முழுதாக நோக்கும் பொழுது சமூகத்தில் நெகிழ்ச்சி ஏற்பட்டதெனலாம். இளைஞர் காங்கிரஸின் செல்வாக்கு ஏறத்தாழ 1922 முதல் 1938 வரை நீண்டதென சீலன் கதிர்காமர் குறிப்பிடுவர். இளைஞர் காங்கிரஸ் தோற்றுவித்த தளமாற்ற நோக்கு அதில் ஈடுபட்டிருந்தோர் பலரை காங்கிரஸின் ஒடுக்கு திசையின் பின்னர் மாக்ஸியத்தை நோக்கி நகரச் செய்தது (சீலன் கதிர்காமர் 74, 99, 102).

"By the mid thirties the youth congress members began to go their several ways. Some joined the left movoment. Among them were P.Nagalingam, Tharmakulasingam- whose premature death robbed the Lanka Sama Samaja Party of an able leader in the North- S.Sellamuthu and K.Satchithanandam. T.Duraisingam and others were involved with the Suriya Mal Movement in the South and later became consistent supporters of the communist party. Handy Perinbanayagam himself admitted later that his political sympathies were "leftish and that by and large without special connection, be sympathised with the LSSP" (Silan Kathirkamar p. 102.)

யாழ்ப்பாணத்தில் இளைஞர் காங்கிரஸ் வலுக்குன்றத் தொடங்கிய கட்டத்தில் இலங்கை மட்டத்தில் மார்க்சீயச் சிந்தனை மேலெழும்பத் தொடங்குகின்றது. சிங்களப் பிரதேசங்களிலும் மார்க்சீயச் சிந்தனை இளைஞர் இயக்கமாகவே தொடங்குகின்றது. 1935இல் லங்கா சமசமா ஜக் கட்சி தொடக்கம் பெறுகின்றது. இலங்கையில் மார்க்சீய வளர்ச்சி யால் ''சூரியமல் இயக்கம்'' (1939) முக்கியமான ஒரு கட்டமாகும். சூரியமல் இயக்கம் யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் மார்க்சீயம் ஆரம்பத்தில் இரண்டு நிலைகளிற் தொழிற்பட்டதெனலாம். முதலாவதாக அது ஒடுக்குமுறைக்கெதிரான ஒரு சக்தியாகத் தொழிற்பட்டமையாகும். ஏற்கனவே தொழிற்பட்டு வந்த ஒடுக்கப்பட்டோர் ஊழியர் சங்கத்துடன் (Depressed Class Service league; இதன் முதன்மையாளராக ஜோன் பவுல், ஜேக்ஸ் ஆகியோர் தொழிற்பட்டனர்) இயைபினை ஏற்படுத்திக் கொண்டது. இரண்டா வதாக அக்காலத்து இலங்கை மட்ட முக்கிய மார்க்சீயச் செயற்பாடு ஒன்றுக்கிணங்க தொழிற்சங்க நடவடிக்கையிலீடுபட்டமையாகும். பஸ் தொழிலாளர் இயக்கம், சுருட்டுத் தொழிலாளர் இயக்கம் என முக்கிய தொழிற் சங்க நிறுவனங்கள் வளர்ந்தன.

நிறுவன ரீதியாக நோக்கும் பொழுது முதலில் தோற்றுவிக்கப்பட்ட மார்க்ஸிஸ்ட் கட்சி லங்கா சமசமாஜக்கட்சியாகும் (1935). பின்னர்



இரஷ்ய நாட்டில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் காரணமாக (டிரொஸ்கி - ஸ்டாலின் பிணக்கு, ஸ்டாலினின் மேலாண்மை ஆகியன) பிளவுகள் ஏற்பட்டு முதலில் (1941) ஐக்கிய சோஷலிசக் கட்சி உருவானது. அது 1943 யூலையில் பொதுவுடமைக்கட்சியாக நிறுவப்பட்டது. ஆரம்ப காலத்தில் லங்கா சமசமாஜக்கட்சியிலும் பொதுவுடைமைக்கட்சியிலும் தமிழர்கள் முக்கிய இடம் வகித்தனர். தர்மகுலசிங்கம் உத்தியோகபூர்வ அங்கத்தவராக இருக்கவில்லையெனினும் சமசமாஜக்கட்சி ஆதர வாளராகவே விளங்கினார். கம்யூனிட் கட்சியில் பொன்.கந்தையா, அ.வைத்தியலிங்கம் ஆகியோர் முக்கிய இடம் பெற்றனர்.

யாழ்ப்பாண மட்டத்தில் மார்க்சீய இயக்கங்களில் ஈடுபட்டோர் இருவகைப்படுவர். முதலாவது குழுவினர், தமது கல்வி காரணமாக மார்க்சீயம் சுட்டும் சமத்துவம், சுரண்டலெதிர்ப்பு ஆகியவற்றில் புலமைத்துவ ஈடுபாடு கொண்டவர்களாக, இவர்கள் பெரும்பாலும் உயர் குடும்பங்களைச் சார்ந்தவர்களாக, இருந்தமை வரலாற்றின் தவிர்க்க முடியாத நியதியாகும். ஆரம்ப காலத்தில் இந்தப் புலமைத்துவ நிலைப்பாட்டுடன் கட்சி அங்கத்துவம் அன்றேல் கட்சிச் சார்பும் தொழிற் பட்டது. இரண்டாம் குழுவினர் ஒடுக்குமுறைக்கு ஆளான சமூக மட்டங்களைச் சேர்ந்தவர்களாவார். இவர்கள் தமது சமூக எதிர்ப்புணர்வு காரணமாக சேர்ந்து பின்னர் கட்சி நிலைப்பட்ட இலக்கியங்களையும் பிற எழுத்துக்களையும் வாசித்தமையால் புலமைத்துவ பரிச்சயமுடை யோராகிக் கொண்டவர்களாவர்.

இத்தகைய அணியினரைக் கட்டிவளர்ப்பதில் சமசமாஜக கட்சி யிலும் பார்க்க கம்யூனிஸ்ட் கட்சி அதிக ஆதரவைப் பெற்றிருந்த தெனலாம். யாழ்ப்பாணக் கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தில் இந்த இரண்டாவது குழுவினர் 1948 அளவில் இலக்கிய ஆர்வமுடையோராய் வளர்ந்திருந்தனர். டொமினிக்ஜீவா, டானியல் முதலியோர் இவ்வாறு வளர்ந்தவர்களே. இவர்கள் கார்த்திகேசனால் வழிப்படுத்தப்பட்ட வர்களாவர்.

இளைஞர் காங்கிரஸ் வழியாக வந்த ஊக்கத்தினால் வளர்ந்த மறுமலர்ச்சி இயக்கத்தில் இடதுசாரிச் சிந்தனையாளர்கள் (அ.ந.கந்த சாமி) இந்த இலக்கிய இயக்கத்தில் முக்கிய இடம் பெறத் தொடங்கினர்.

இந்த இடதுசாரி இலக்கியக் களமாக 1953முதல் இலங்கை முற் போக்கு எழுத்தாளர் சங்கம் திகழ்ந்தது. கொழும்பை மையமாகக் கொண்டியங்கிய இது யாழ்ப்பாணத்தில் ஒரு வன்மையான கிளையைக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்சீய இலக்கியச் சிந்தனைப் பரம்பலில் இந்நிறுவனத்தின் பணி கணிசமானதாகும். பின்னர் 1960 களில் பொதுவுடமைக் கட்சி சீன சார்பு, ரஷ்ய சார்பு என இரு கிளைப்படப் பிரிந்த பொழுதும் எழுத்தாளர் மட்டத்தில் இந்தச் சங்கத்தின் தொழிற்பாடு காரணமாக ஒற்றுமை பேணப்பட்டது.

இலங்கைத் தமிழ் எழுத்தாளரிடையே முற்போக்கு இலக்கியக் கோட்பாடு தொழிற்பட்டமை காரணமாக இருநிலைப்பட்ட எண்ணக் கருக்கள் இலக்கியத்தில் வளர்த்தெடுக்கப்படலாயின. ஒன்று தேசிய இலக்கியக் கோட்பாடு. அக்காலத்து மார்க்சீயக் கட்சிகள் கொண்டிருந்த அரசியல் கோட்பாட்டிற்கமைய இது இலங்கை மட்டத்தேசியத்தையே வற்புறுத்திற்று. ஆயினும் இலங்கைத் தமிழ் இலக்கியம் இந்திய வணிக இலக்கியத்தின் வழிச்சென்று விடக்கூடாது என்பதற்காகவும், முதல் நிலைப்படுத்திப் பேசவேண்டும் என்பதற்காகவும் ஈழத்தின் தனித்துவமான அம்சங்களைக் கொண்ட ஓர் ஈழத்தமிழ் இலக்கியத்துக்காகப் போராடியது. இலக்கிய நிலையில் முன்வைக்கப்பட்ட ஈழத்தமிழ் இலக்கியக் கோட்பாடு 1983 இன் பின்னர் தமிழ்த்தேசிய வளர்ச்சி பற்றிப் பேசப்பட்ட பொழுது, அதன் வளர்ச்சிக்கான பசளையாக அமைந்தது. மற்றது யதார்த்தவாதம் என்னும் கோட்பாடாகும். இந்த அணுகுமுறை காரணமாக எழுத்தாளர்கள் சமூக ஜீவிகள் என்ற வகையில் தம்மைப் பாதிக்கும் சமூகப் பிரச்சினைகளை இலக்கியப் பொருளாக்கினர்.

இவ்விலக்கியச் செல்நெறி பாரிய மாற்றத்தினை ஏற்படுத்திற்று. சலுகைகள் மறுக்கப்பட்டவர்கள் தங்கள் பிரச்சினைகள் பற்றிய தன்மை நிலை அநுபவங்களை எழுதத் தொடங்கிய பொழுதும், சமத்துவக் கருத்துநிலையை வற்புறுத்திய பொழுதும் ஈழத்தில் முதல் தடவையாக பாரம்பரிய மரபுகள் பற்றிய எதிர்ப்புத் தெரிவிக்கப்படத் தொடங்கிற்று. இத்தகைய ஒரு நிலையில் நவீன எழுத்தாளர்களையும், நவீன எழுத்து வடிவங்களையுமே நிராகரித்தது. இதனால் மரபு பற்றிய ஒரு முக்கிய இலக்கிய விவாதம் 1960 களில் நடைபெற்றது.

இந்த மார்க்சீய இலக்கியத்தின் முக்கிய அங்கமாக விளங்கியது அது தோற்றுவித்த விமரிசனம் ஆகும். இலக்கியத்தின் சமூக அடிப்படைகளை வற்புறுத்திய அந்த விமர்சன முறைமை புதிய எழுத்தாளர்களின் ஆக்கங்களை நியாயப்படுத்தியது மாத்திரமல்லாமல் நவீன காலத்திற்கு முற்பட்ட இலக்கியங்களையும் மார்க்சீய நோக்குநிலை நின்று விமர்சிக்கத் தொடங்கிற்று. இது தமிழிலக்கிய ஆய்வுச் செல்நெறியில் ஒரு முக்கிய மாற்றத்தை ஏற்படுத்திற்று. அது மாத்திரமல்லாது இந்த



விமர்சன முறைமை தமிழகத்திலும் கணிசமான செல்வாக்கைக் கொண்டிருந்தது. இந்த விமரிசன மரபுடன் கைலாசபதியின் பெயரும் எனது பெயரும் இணைக்கப்படுதல் வழக்கு. ஆயினும் இக்கால கட்டத்திற் பயின்ற எல்லா எழுத்தாளர்களும் இலக்கியத்தின் விமர்சன அமிசங்கள் பற்றிய தெளிவுடனேயே எழுதினர். இக்கால இலக்கிய வளர்ச்சியில் ஆக்கமும் விமர்சனமும் இணைந்தே சென்றன. இதன் காரணமாக ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் பலர் விமர்சனங்களையும் எழுதினர் (முருகையன், இராசதுரை, இளங்கீரன் முதலியோர்).

இவ்வாறு பெருநிலைப்பட வளர்ந்த மார்க்சீய இலக்கியம் பற்றிய இரண்டு முக்கியமான சமகால விமரிசனங்கள் இருந்தன. முதலாவது இது அன்று நிலவிய தமிழ்த்தேசியத்தை வகுப்புவாதமாகக் கருதியமையாகும். இது இலக்கிய அணி சார்ந்திருந்த அரசியற் கட்சிகளின் நோக்குக் காரணமாக ஏற்பட்ட ஒரு விளைவாகும். அக்காலத்தைய தமிழ்த் தேசியம் சமூகப் பிற்போக்குவாதத்துடன் இணைந்து நின்றமையும் இதற்கு ஒரு காரணமாகும். இரண்டாவது இந்த இலக்கியக் கண்ணோட்டம் 'மார்க்சீயத்திற்கு அப்பாலான' நிலைப்பட்ட விழுமியங்களுக்கு அதிக அழுத்தம் கொடுக்கவில்லை என்பதாகும். இவ்வாதத்தை மு.தளையசிங்கம் முன்வைத்தார். இவருடைய வாதம் இலக்கியம் ஆன்மீக சனநாயகத்திற்கான (Spiritual democracy) ஒரு களமாக அமைய வேண்டும் என்பதாகும். இந்த இரண்டு சமூக முக்கியத்துவம் உடைய மார்க்சீய எதிர்ப்பு வாதங்களைத்தவிர நவீனத்துவத்தின் இயல்பான ஒரு அங்கமான நவவேட்கைவாதத்தின் எதிர்ப்புக் குரலும் காணப்பட்டது. ஆனால் அது சமூகமுக்கியத்துவம் உடையது என்று கூறிவிடமுடியாது.

ஆனால் இந்த விமர்சன முறைகள் யாவுமே நவீன இலக்கியத்தையே இயல்பான இலக்கிய வெளிப்பாடமாகக் கொண்டன.

முற்போக்கு இலக்கிய ஆக்கவீச்சு (1970) தொடக்கத்துடன் ஒடுங்குகிறதெனக் கொள்ளலாம்.

அதனைத் தொடர்ந்து இருகாரணிகள் முக்கியமாகின்றன.

ஒன்று, 1970கள் முதல் தொடங்குகின்ற சிங்கள மேலாண்மை வாதப் போக்கு. 1930கள் முதலே சிங்கள மேலாண்மைவாதம் முக்கிய ஒரு சக்தியாக மேற்கிளம்பிக் கொண்டு வந்ததெனினும் 1956 உடனேயே அது திட்டவட்டமான ஒரு அரசியல் செல்நெறியாகிற்று. தேசிய மறுமலர்ச்சி பற்றிய தெளிவின்மை காரணமாக மார்க்சீஸ்ட் கட்சிகளிலும் சிங்களத் தேசியத்தை இலங்கைத் தேசியமாக மயங்கிக் கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மேலாண்மைவாதம் வெகுவிரைவில் அரசு அடக்குமுறை நடவடிக்கைளுக்கு இடம் கொடுக்கத் தொடங்கியது (பொலிஸ், இராணுவ அட்டூழியங்கள்). அதனை எதிர்த்துத் தமிழ் இளைஞர் தீவிரவாதம் மேற்கிளம்பத் தொடங்கிற்று. இத்தீவிரவாதம் தமிழ்த் தேசியத்தையும் மார்க்சீயத்தையும் இணைத்துக் கொண்டது. அத்துடன் இது தன்னைத்தளை நீக்கக் கோட்பாட்டுடன் (Liberation) இணைத்துக் கொண்டது. தளைநீக்கம் என்பது அரசியல், சமூக, பொருளாதார விடுதலையை உள்ளடக்கிய ஒரு கோட்பாடாகும்.

1970 களில் மேலோங்கத் தொடங்கிய இந்தத் தீவிரவாதத்தில் **1974இல்** நிறுவப்பெற்ற யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத்தின் பங்கு மிக முக்கியமானதாகும். இளைஞர் இயக்கங்கள் ஒவ்வொன்றிலும் பல்கலைக்கழக மாணவர்கள் இடம் பெற்றிருந்தமை மாத்திரமல்லாமல், போராட்டத்தின் சமூக பொருளாதார அம்சங்களிலும் பல்கலைக்கழகம் தொடர்புபட்டது.

இலக்கியத்தைப் பொறுத்தமட்டில் இதுவரை வந்தவற்றைக் கொண்டு நோக்கும் பொழுது இந்தக் கோட்பாட்டு நிலைப்பாடுகள் எடுத்துக்கூறப்படுவதிலும் பார்க்க, அரச நிலைப்பாடு காரணமாக ஏற்பட்ட அடக்குமுறையின் கோரமும், அந்த அடக்குமுறை காரணமாக மேற்கிளம்பும் மானிட அவலங்களுமே (Human tragedy) முக்கிய இடம் பெறத் தொடங்கின. கவிதையில் இது ''மரணத்துள் வாழ்வோம்'' (1983) கவிதைத் தொகுதி முதல் நன்கு தெரியவந்துள்ளது. புனை கதைத்துறையுள் சிறுகதையில் இது நன்கு தெரியவந்துள்ளது. யோக நாதனின் ''இரவல் தாய்நாடு'', ''நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே'' முதலிய நாவல்களிலும் இது தெரிகின்றது. இவ்வாறு வந்து சேர்ந்து வரலாற்று முக்கியத்துவம் உடையனவாகக் காணப்படினும் இவை யாவும் எந்த அளவுக்கு பாரம்பரியச் சமூக அமைப்பினை மாற்றியுள்ளன என்பது முக்கியமான வினாவாகும்.

யாழ்ப்பாணத்தின் உற்பத்தி முறைமைகளை நோக்கும் பொழுது அடிப்படை மாற்றமின்மை தெரியவரும். புதிய விவசாய முறைமைகள் (பயிர் மாற்றம், தொழில்நுட்பப் பயன்பாடு) பாரம்பரிய அமைப்புடன் ஒன்றிணைக்கப்பெற்றுள்ளனவே தவிர இவை காரணமாக அடிப்படை உற்பத்தி உறவுகள் அகற்றப்பட்டு ஒரு புதிய உற்பத்தி உறவோ, உறவுகளோ ஏற்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக ஏற்படும் மாற்றங்கள் மேலோட்டமானவையாகவுள்ளனவே தவிர அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. ஏற்பட்ட சில மாற்றங்கள் காரணமாக மேனிலைப்பட்டோரும் தமது சமூக அந்தஸ்தினை நிலைநிறுத்து வதற்குப் பாரம்பரியத்தையும் பாரம்பரிய முறைமைகளையுமே நம்பி யிருக்க வேண்டியுள்ளது.

இந்த அமிசம் காரணமாக யாழ்ப்பாணத்தின் சமூகத்தளம் மாற்றப் படாதிருப்பதை அவதானிக்கலாம். இதன் காரணமாக மேற்கூறிய கருத்தோட்டங்கள் செல்வாக்குச் செலுத்தி வருகின்ற அதேவேளையில் சமூகத்தில் சமாந்தரமான முறையில் பாரம்பரியமும், மரபு பேணுகையும் முக்கிய செயற்பாடாகத் தொழிற்படுவதைக் காணலாம். மத ஒழுக லாறுகள் முதல் புலமைத்துவ நெறிகள் வரை இந்தச் சமாந்தரத்தன்மை காணப்படுகின்றது. இது காரணமாக ஒரு சுவாரசியப் போக்கு ஒன்று உருவாவது வழக்கம். வருகின்ற புதுமைகள் தம்மைப் பழமையுடன் இணைத்து நிலைநிறுத்த விரும்பும் பண்பும், அதேவேளையில் பழமை யும் புதுமையின் தன்மைகளைக் காட்டித் தன்னை மேலும் வலுப் படுத்திக் கொள்கின்ற ஒரு தன்மையுள்ளது. முதலாவது போக்கின் விளைவாக நாவலரைத் தேசிய வீரராகக் காட்டிய ஒரு செயற்பாடு நிகழ இரண்டாவது போக்கின் நிரந்தரத்தன்மை காரணமாக நாவலரின் கோட்பாடுகள் இன்று பண்பாட்டுப் பேணுகையுடன் இணைந்து பேசப்படுகின்றது.

இந்த இயல்பு காரணமாக, நாம் ஆராய்ந்த எல்லாக் காலப்பகுதி களிலும் பாரம்பரிய இலக்கிய மரபு வன்மையுடன் பேணப்பட்டு வருவதைக் காணலாம். கோயில் சார்ந்த இலக்கியங்கள் இந்தப் பாரம்பரியத் தொடர்ச்சியினை எடுத்துக் காட்டுவனவாக அமைகின்றன.

1984க்குப் பின் ஏற்பட்டுள்ள சனவேற்ற மாற்றம், வாழ்க்கைக் குலைவு ஆகியன புதிய ஒரு சமூகப் போக்குக்கு வழிசமைப்பனவாக அமையும் சாத்தியப்பாடுகள் உள்ளன. ஆனால் அது நிகழ நாட்கள் செல்லும். அதுவரை ஒரே கிராமத்திலிருந்தே தசைச் சிலேடை வெண்பாவும், கோசலையும் தோன்றுகின்ற நிகழ்வினை நாம் கண்டு கொண்டேயிருப்போம்.

**(ஈவ்லின் ரத்தினம் நினைவு ஆய்வு நிறுவனத்தில்**
**சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை - 1994)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தின், எழுதவிடப்படாத கலை வரலாறு பற்றி....

**காரை. சுந்தரம்பிள்ளையின் ''ஈழத்து இசை நாடக மரபு'' எனும் நூலுக்கு எழுதிய முன்னுரை**

## I

காரை.சுந்தரம்பிள்ளையின் இந்த நூல், யாழ்ப்பாணக் கலை வாழ்க்கையில் மிகமுக்கியமான இடம் பெற்றுவந்ததும், சங்கரதாஸ் சுவாமிகள் முதல் எம்.கே.தியாகராஜபாகவதர், எம்.எஸ்.சுப்புலட்சுமி, என்.எஸ்.கிருஷ்ணன், எம்.வி.கிருஷ்ணாழ்வார், பொன்னாலைக் கிருஷ்ணன், வி.வி.வைரமுத்து என நீளும் பெருங்கலைஞர் பட்டியலைத் தன்னுள்ளடக்கியதுமான ஒரு நாடக வடிவத்தினது இலங்கை நிலைப்பட்ட வரலாற்றைக் கூற முனைகின்றது.

ஈழத்தின் நாடக வரலாற்றில் இந்த நாடக வடிவம் மிக முக்கியமானது. பிரித்தானிய ஆட்சியின் கலைப்பெறுபேறுகளில் ஒன்று என்று சொல்லத் தக்க முறையில் தோற்றமுற்று, பம்பாயிலிருந்து சென்னை மாநிலத்துக்குள் வந்து கன்னட, தெலுங்கு மொழியூடாட்டங்களின் பின் தமிழோடிணைந்து கொண்டு அந்த இணைவினுள் தென்னகத்தின் செந்நெறிச் சங்கீத பாரம்பரியத்தையும், தமிழின் இலக்கிய, நாடகப் பாரம்பரியங்களையும் இணைத்து வளர்த்த சனரஞ்சகமான ஒரு நாடக வடிவம் இது,

அதற்குமுன் நிலவிய கூத்துமரபின் தன்மைகளையும் கர்நாடக சங்கீதத்தின் நாடகநிலை ஆற்றலையும் பின்வந்த தென்னிந்தியச் சினிமாவின் வரலாற்றையும் உள்ளடக்கியுள்ள இந்தக் கலைவடிவம் தமிழில் தனக்கென ஒரு திட்டவட்டமான பெயரைக் கொண்டிருக்கவில்லை, (இந்நூலாசிரியர் ''இசைநாடகம்'' என்கிறார்; இந்தவகை நாடகங்களினது எழுத்துருக்களின் அச்சு வடிவ அட்டைகளில் ''ஸ்பெஷல் நாடகம்'' என்று சொல்லப்பட்டுள்ளது).



இந்த நாடக வடிவம் இலங்கையினும் ''செறிந்த'' முறைமையினுள் இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில், அதன் அதிகார வரன் முறைமைகளையும், சமூக- கலைக் கட்டிறுக்கங்களையும் திமிறிக் கிளம்பிய ஒரு ''கலைப் புரட்சி'' தொக்கி நிற்பதை அவதானிக்க நாம் தவறக் கூடாது. (பக் 50- 68)

இந்த நூலுக்கு முன்னுரை எழுதுமாறு எனது மாணவரும், நண்பருமான திரு.காரை.சுந்தரம்பிள்ளை வேண்டியதும், முதலில் அப் பணியேற்பினை இன்று வழக்கிலுள்ள கலை-இலக்கியச் சடங்காசார முறைமையில் நிவர்த்தி செய்து கொள்ளும் எண்ணமே இருந்தது.

ஆனால் எனது வர்த்தமான உத்தியோகப் பொறுப்புக்களுள் ஒன்றான நுண்கலைத்துறைத்தலைமை காரணமாக வன்மையாக ஈடுபடும் மற்றைய சில தொழிற்பாடுகளின் (யாழ்ப்பாணத்துக்குரிய, சிற்பப் பாரம்பரியங்களை அறிவது; ஈழத்தின் கலை கைப்பணிகளை தொகுத்தறிந்து கொள்வது ஆகியனவற்றின்) பின்னணியில் இந்த நூலை வாசிக்கும் பொழுது, எனது பிரதான ஆராய்ச்சித்துறையாக நான் இப்பொழுது பெரிதும் ஈடுபட்டுள்ள ''தமிழர் சமூக, கலை -இலக்கிய வரலாறு'' என்னும் பெரும் பிரிவின் கீழ் இதனை நோக்குதல் வேண்டும் என்ற புலமைத் தீர்மானம் உருவாகிறது.

இந்த முன்னுரையில் இரண்டு வினாக்களை விவாதிக்கவுள்ளேன்.

1. யாழ்ப்பாணத்தில் இத்தகைய கலைவரலாறுகள் ஏன் இது வரை காலமும் எழுதப்படாது போயின?
2. ஈழத்தின் நாடக வரலாற்றில் இந்த நாடக வடிவம் மிகப் பிரபல்யமானதாகவிருந்தும், சொர்ணலிங்கத்தின் கண்டுபிடிப்புக்கும், வித்தியானந்தன் செய்த மீள்கண்டுபிடிப்புக்கும் கொடுக்கப்பட்ட அளவு முக்கியத்துவம் இதற்கு ஏன் கொடுக்கப்படவில்லை?

## II

முன்னுரைக்கான முகவுரையாக ஒரு விடயம் பற்றிக் குறிப்பிடல் வேண்டும்.

நாடகம் என்னும் கலை வடிவத்தின் பயில் வழிப் பயன்பாடுகளில் முக்கியமானது, இக்கலையின் வரலாறு, சமூக வரலாற்றின் தூண்களில் ஒன்று என்பது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மக்கட் கூட்டம் எவ்வெக் கலைகளைப் பயில்கின்றது எனத் தொடங்கி, ஒரு பண்பாட்டு வட்டத்தினுள் இடம் பெறும் நாடகங்கள் யாவை? அவற்றை ஏன் அந்த வட்டத்து மக்கள் ஈடுபாட்டுடன் பார்க்கின்றார்கள்? அந்த நாடகங்கள் எவ்வாறு ''ஒழுங்கமைக்கப்'' படுகின்றன. எவ்வாறு? எவ்வெவ் விடங்களில் எவ்வெச் சந்தர்ப் பங்களில் **யார் யாரால் ஆட**ப்பெறுகின்றன? இவற்றை ஆடாமலிருக்க **முடியாதா**, ஆட்டத்துக்கான உந்தல்களும் கைமாறுகளும் யாவை? இந்த ஆட்டம் ஆடுபவர்களையும், அவர்தம் சமூக உறவுகளையும், பார்ப் பவர்களையும் அவர்தம் சமூக உறவுகளையும் எவ்வாறு ''பாதிக் கின்றது?'', இந்த ஆட்டம் ஏன், எவ்வாறு ''பண்பாடு''(அல்லது ''பண்பாட்டின் ஒரு பகுதி'') என்று போற்றப்படுகிறது?, பண்பாட்டின் மற்றைய ''வெளிப்பாடுகளு''க்கும் இதற்குமுள்ள உறவுகள் யாவை?'' என வரும் வினாக்களை நோக்கும் பொழுது, அவற்றுக்கான விடைகள் நாடகத்தின் வரலாறாக மாத்திரம் அமையாது, சமூக வரலாறாகவும் அமையும் தன்மை தெள்ளிதின் விளங்கும்.

இந்தப் பின்னணியில் நோக்கும் பொழுது முக்கிய ''முன்மொழிவு'' (Proposition) ஒன்று உள்ளது.

*அது, ''யாழ்ப்பாணத்தின் இந்த நாடக வரலாறு, யாழ்ப்பாணத்து மக்களின் சமூக நடைமுறைகளைப் பற்றியும் எடுத்துக் கூறும்'' என்பதாகும்.*

இதன் வழி மேற்கிளம்பும், யாழ்ப்பாணத்தின் அந்த வரலாறு எங்கே? அது எழுதப்படவில்லையா? ஏன்? என்ற வினாக்கள் முக்கிய மானவையாகின்றன.

## III

மேற்கூறப்பட்ட வினாக்கள் கிளப்பப்படும் பொழுதுதான் மிக முக்கியமான, நாம் வெட்கத்துடன் ஒப்புக் கொள்ள வேண்டிய, ஓர் உண்மை, நம்மை நமது முகத்தில் எட்டி அடித்துக் கொள்கிறது.

நாம் இன்னும் யாழ்ப்பாணத்தின் கலை வரலாற்றை எழுதிக் கொள்ளவில்லை. அந்த வரலாற்றுக்கான மூலங்கள் பல உள்ளன. ஆனால் வரன்முறையான ஒரு வரலாறு இன்னும் இல்லை.

திரு.சுந்தரம்பிள்ளையின் இந்த நூலும் அதற்கான மூலங்களில் ஒன்றாகும்.



யாழ்ப்பாணத்தின் கலை வரலாற்றில் விரித்தாராயப்பட வேண்டிய கலைகள் யாவை?

கலைகளை வகைப்படுத்துவதில் பயில்நெறிகளுக்கேற்ப வேறு பாடுகள் உள்ளன. புலப்பயன்பாடு கொண்டு, கட்புலக் கலைகள், வாய் மொழிக்கலைகள் எனவும், வழங்கப் பெறும் முறைமை கொண்டு அவைக்காற்றுகலைகள், அல்லாதவை எனவும், ஆக்கப்படும் முறைமை கொண்டு, வாய்மொழி எழுத்துக்கலைகள், குழைபொருட்கலைகள் எனவும் வகுக்கப்படும் மரபு உண்டு. அத்தகைய வகை முறைகளைச் சற்று விடுத்து, யாழ்ப்பாணத்தில் பயிலப்படும் கலைகளை பின்வருமாறு (தனித்தனியே) நிரற்படுத்துவோம்:

இலக்கியம்
நாடகம்
இசை
நடனம்
ஆபரணக் கலை
கோயிற் சூழலிலே பயிலப்படும் கலைகள்
- சாத்துப்படி
- சப்பறம், தண்டிகை முதலியன
- கோயிற் 'சிகரம்'

பயன்பாட்டுக்கைப்பணிகள்
- பெட்டி (இதில் பல்வேறு வகைகள் உள்ளன)
- பாய் முதலியன
- மட் கலங்கள்

ஆபரணக்கலை பற்றிய பேச்சுத் தொடங்கும் பொழுது நம்மை அறியாமலே நாம் சமூக மானிடவியலிற் பேசப் பெறும் ''பண்பாட்டின் பருப்பொருள், உபகரணங்கள்'' என்றும் ''பருப்பொருட் பண்பாடு'' (Material Culture) என்றும் பேசப்படுவதான பொருட்கள் பற்றிப் பேசத் தொடங்குகின்றோம் என்பது தெரியவரும்.

கலை என்பது ''பண்பாடு'' என்னும் தளத்திலிருந்து அதனூடாகப் பிறப்பது. பண்பாட்டின் தன்மைகள் கலையின் தன்மைகளை நிர்ணயிக் கும் பண்பாட்டு வட்டத்தினுள்ளேயே கலை கருக்கொள்ளப்பட்டு, அறியப்பட்டு, ரசிக்கப்பட்டு பயிலப்பட்டுப் பேணப்பட்டு குறியீடாக் கப்பட்டுத் தொழிற்படும்.

முதலில் வரும் நான்கும் 'உயர் கலைகள்' அல்லது 'நுண்கலைகள்' என வழங்கப்பெறுபவை. இக்கலைகளே பெரும்பாலும் செந்நெறி (Classical) க் கலைகளாகப் போற்றப்படுபவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் வாழ்க்கையோடியைந்து நமது அன்றாட வாழ்க்கையின் ஓரமிசமாக, நமது பொழுது போக்குக்களில் முக்கியமானவையாக, நமது சடங்குகளில், கரணங்களில் முக்கிய இடம் பெறுவனவான, சில கலைப் பொருட்கள் உள்ளன- பெட்டி, பாய், தளபாடம், பட்டம், விளக்கு, மாலை என வருவன. இவற்றுக்குக் கலை மாத்திரமே என்ற ஒரு தனிப்பரிமாணம் மட்டுமே இருக்காது. இவை பயன்பாட்டுப் பொருட் கள்தான். ஆனால் இவற்றின் 'அழகில்' 'கவர்ச்சியில்', 'வடிவில்' நமக்கு அக்கறை உண்டு. 'அழகு', 'கவர்ச்சி', 'வடிவில்' தான் அவை பூரணத் துவம் பெறுகின்றன என்னும் ஒரு திருப்தியுணர்வு இவற்றின் பயன்பாட் டில் முக்கியமானதாகும். இவை சமய வாழ்க்கை, சமயஞ் சாரா வாழ்க்கை எனப்பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு வாழ்க்கையின் முழுமையைக் காட்டி நிற்பனவாகும். யாழ்ப்பாணத்தின் இத்தகைய கலைகள் பற்றிய வன்முறையான பட்டியலே நம்மிடமில்லை. அதாவது யாழ்ப்பாணத்தின் 'கைப்பணிக்கலை' பற்றிய விரிவான தெளிவான அறிவு நம்மிடம் இல்லை.

அந்த ''அறிவு'', ''ஆய்வு'' நம்மிடம் இல்லையே என்று உணர்வதும், சொல்வதும் அவசியம். ஆனால் புலமை மட்டத்தில் முக்கியமானது, அந்த ''அறிவும்'', ''ஆய்வும்'' நம்மிடத்தே ஏன் இல்லாமற் போனது என்பதை அறிவதற்கான புலமை உந்துதலாகும். அந்த நிலை ஏன், எவ்வாறு ஏற்பட்டது என்பதை அறிய முனைகின்ற பொழுது நம்மைப் பற்றி, நமது கண்ணோட்டங்கள் பற்றி, நமது கண்ணோட்டங்களை நிர்ணயிக்கின்ற கருத்துநிலை பற்றி, அக்கருத்து நிலையின் ஊற்றுக்கால்கள் பற்றி நாம் அறிய வேண்டிவரும். அவயங்கள் பற்றிய பட்டியலே மாடு பற்றிய ஆராய்ச்சியினை முதலும் முடிவும் என்னும் கருத்து நிலைப்படி நோக்கும் பொழுது இப்படியான பிரச்சினைகள் இருக்கின்றன என்பதே தெரியாது போய்விடும் (அறியாமை தரும் ஆனந்தங்கள் பல).

கோயிற்கலைகள், கைப்பணிப்பொருட்கள் என வருவன பற்றிய பட்டியலே இல்லாத பொழுது அவை பற்றிய வரன்முறையான வரலாறு எப்படிவரும்? இந்நிலை வரலாறு பற்றிய மிகச் சுவாரசியமான, ஆனால் சிக்கல் மயப்பட்ட ஒரு வினாவைக் கிளப்புகின்றது. நாம் 'வரலாறு' என்று கொள்வது யாது? அந்த 'வரலாற்றில் நாம் இதுவரை விவரித்த விடயங்கள் வராதா'? என்ற மிகமுக்கியமான துணை வினாவொன்றும் இதனூடே கிளம்புகின்றது.

'பருப்பொருட் பண்பாடு' பற்றிய நிலை இதுவாக, வரைவிலக் கண, விளக்கக் கோளாறுகள் எதுவுமேயில்லாத வகையில், இவைகள்



'கலைகள்' தான் (கலைகளே) என்று ஐயந்திரிபற ஏற்றுக் கொள்ளப் படுகின்ற கலைகள் பற்றி நோக்குவோம்.

அவைதாம், இலக்கியம்
நாடகம்
இசை
நடனம் என்பனவாகும்.

முதலில் இலக்கியத்தை எடுத்துக் கொள்வோம். ஈழத்தின் ''தற் கால'' இலக்கியத்துக்கு முந்திய இலக்கியத் தொகுதியினை எடுத்து நோக்கினால், அக்கால இலக்கியத் தொகுதியெனப் பேணப்பட்டுள்ளது ஒரு குறிப்பிட்ட கருத்துநிலைச் சார்பானதே என்பது தெரியவரும். நவீன காலத்துக்கு முந்திய காலகட்டத்தில், முந்திய பண்பாட்டு அசைவியக்க மையமாக இலங்கியது யாழ்ப்பாணம் என்பதில் எவ்வித கருத்து வேறு பாடுமிருத்தல் முடியாது. எனவே மட்டக்களப்பு, வன்னிப்பகுதிக்கில்லாத ஒரு பண்பாட்டு மேலாண்மை யாழ்ப்பாணத்துக்கு வந்தது. (மட்டக் களப்பு, வன்னிப்பகுதி முன்னேறத் தொடங்கியதும், இந்த மேலாண்மைக் கெதிரான நிலைப்பாடுகள் மேற்கிளம்பின.) அந்தப் பண்பாட்டு மேலாண்மைக்கு யாழ்ப்பாண அரசின் வரலாறும், பின்னர் வந்த கிறித்துவப் பரவலின் வரலாறும், மிகப் பிரதானமாக, அந்தக் கிறித்துவப் பரவலுக்கெதிராகக் கிளம்பிய, முக்கியமாகப் புரட்டஸ்தாந்த மதப் பரவலுக்கெதிராகக் கிளம்பிய சமூக மத எதிர்ப்பியக்கத்தின் வரலாறும் வன்மையான பின் புலமாக அமைந்துள்ளன. அவற்றுள் புரட்டஸ்தாந்தக் கிறித்துவத்துக்கெதிராகக் கிளம்பிய, ஆறுமுகநாவலர் தலைமையில் முதன்மை நிலைப்பட்டுத் தொழிற்பட்ட சமூக மத இயக்கம் மிகமுக்கிய மானதாகும். அரசியல் ரீதியாகப் பிரித்தானிய ஆட்சியை ஏற்றுக் கொண்ட இவ்வியக்கம், புரட்டஸ்தாந்தம் மூலமாக யாழ்ப்பாணத்தின் பாரம்பரியச் சமூக அதிகாரமுறைமை ஊனப்படுத்தப்படுவதை எதிர்த்துப் போராடி யது. கத்தோலிக்கப் பரவலால் இதன் சமூக அதிகாரம் அதிகம் பாதிக்கப் படவில்லை. இந்தச் சமூக மதப் பேணுகை இயக்கத்தின் முக்கிய எதிரி களாக விளங்கியவை மெதடிஸ்த மிஷனும், அமெரிக்கன் மிஷனுமே யாகும். இந்த எதிர்ப்பை, மெதடிஸ்த மிஷன் செல்வாக்குக்குட்பட்டு நின்று, பின்னர் அதனை நிராகரித்து மேற்கிளம்பிய கந்தப்பிள்ளை ஆறுமுகம் ஆகிய ஆறுமுகநாவலர் முன்நின்று நடத்தினார்.

கிறிஸ்தவர்கள் தமிழைப் பயன்படுத்தியும் தமிழ் மூலமாகவும் தங்கள் மதக்கருத்துக்களைப் பரப்பத் தொடங்கினர். தமிழ்க் கல்வியில், தமிழ் ஆராய்ச்சியில் புதிய கல்வித்துறைகளைத் தமிழினுட் கொண்டு வருவதில் ஈடுபாடு காட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஆறுமுகநாவலர் தோற்றுவித்த எதிர்ப்பியக்கமும் கிறித்தவர்கள் கையாண்ட அதே வழிமுறைகளைக் கையாண்டு சைவத்தை வளர்க்க முற்பட்டது. அந்த வழிமுறைகள் பின்வருவனவாகும்:

1. புரட்டஸ்தாந்தக் கிறித்தவத்தின் கடுந்தூய்மை வாதக் கருத்து நிலை அடிப்படையைப் பின்பற்றியமை.
2. கிறித்தவர்கள் பயன்படுத்திய அதே தொடர்பு முறைமைகளையும் ஊடகங்களையும் பயன்படுத்தியமை.

இவ்வாறு தொழிற்பட்ட பொழுது அவர்கள் இரண்டு விடயங்களில் மிகமுக்கியமான கவனஞ் செலுத்தினர்.

முதலாவது, தமிழ்ப்பாரம்பரியமானது, சைவப் பாரம்பரியத்தின், பாற்பட்டதே என்பதை, ஓர் அடிப்படை உண்மையாகக் கொண்டமை.

இரண்டாவது, தாம் நிலைநிறுத்த விரும்பிய இந்த ''தமிழ்ப்'' பாரம்பரியம், கிறித்தவர்கள் சைவத்திற் காட்டும் குறைபாடுகள் எதையும் கொள்ளாதது என்பதை வலியுறுத்தல். அதாவது, கிறித்தவக் குற்றச்சாட்டுகளிற் குறிப்பிடப் பெறும் சைவக்குறைபாடுகள் என்பன, உண்மையில், உண்மையான சைவத்தின் அமிசங்கள் அன்று, அவை சைவத்துக்குப் புறம்பானவை என்று வாதிட்டமை.

இதுதான், நாவலர் பரம்பரை சொல்லும் ''சைவமும் தமிழும்'' என்னும் கோட்பாட்டின் உட்கிடக்கை. அதாவது தமிழ் சைவத்துக்குத்தான் உரியது, அந்தச் சைவத்தின் பாதுகாவலர்கள் படித்த சமூக உயர்நிலையினரே. அடிநிலையினரின் மதமரபுகள், சைவத்தை அழுக்குப் படுத்துபவை என்பது அதன் ஆதாரஸ்ருதி. எனவே அந்த மரபுகளை நாம் சைவப் பண்பாட்டின்பாற்பட்டனவாகக் கொள்ளக் கூடாது என்ற ஒரு திட்டவட்டமான மனோபாவம் வளர்த்தெடுக்கப்பட்டது.

அத்துடன் தமிழர் பாரம்பரியம் என்பது இந்தச் ''சைவ''ப் பாரம்பரியம் தான் என்றும் வற்புறுத்தப்பட்டது. இதனால், இந்தச் 'சைவ'ப் பாரம்பரியத்துக்குப் புறப்பான லௌகீக விடயங்களைப் பேசிய, இலக்கிய, கலை மரபுகள் முற்றாக ஒதுக்கப்பட்டன.

இதனால் யாழ்ப்பாணத்தின், சமயஞ்சாரா (Secular) இலக்கிய மரபு, புறக்கணிப்புக்கும், ஒதுக்கலுக்கும் ஆளாகிற்று. அத்தகைய இலக்

* ஆறுமுக நாவலர் பற்றிய சமூக வரலாற்றுநிலை நின்று எழுதப்பட்டுள்ள சில கட்டுரைகள் இவ்வாய்வில் முக்கியமானவையாகும். கைலாசபதி பதிப்பித்த நாவலர் நூற்றாண்டு விழாவில் வரும் கட்டுரைகள் சிலவும் Social Scientist (கொழும்பு) Vol No-1 இல் வெளியாகியுள்ள (1978) எனது கட்டுரையும் இந்நோக்கில் எழுதப்பட்டனவே.



கியங்களை நாவலர் வழிவந்தோர் வேண்டுமென்று புறக்கணித்தனர் என்ற ஓர் இலக்கிய அலர் (Literary gossip) தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கப்பட்டு வந்துள்ளது.* இதனாலேயே யாழ்ப்பாண இலக்கியத் தொகுதியினுள், சமயஞ்சாரா இலக்கியங்கள் பேணப்படாதும் விடப்பட்டுள்ளன என்பது இந்த அலர் கூறும் ''இரகசியமாகும்''. இந்த அலரில் மறுதலிக்க முடியாத ஓர் உண்மை உண்டு. யாழ்ப்பாணச் சைவத்தமிழ் இலக்கிய வரலாற்றில் விதந்தோதப் பெறும் ''புலவர்'' களுடைய ஆக்கங்களுள்ளுங்கூட, மதச்சார்பானவையே பேணப்பட்டுள்ளன. மதச்சார்பற்றவை பேணப்படவில்லை.

இது எல்லா வேளைகளிலும் வேண்டுமென்றே செய்யப்படும் திட்டமிடப்பட்ட காரியமாக அமைவதில்லை. உண்மை என்னவெனில், சமயஞ் சாராதவை உண்மையான இலக்கியங்களல்ல என்ற ஒரு கருத்து நிலை திரட்சி பெற்று வளர்ந்துள்ளமையாகும். அக்கருத்துநிலை வன்மையானவொன்றாகும்.

இந்தக்கருத்துநிலை காரணமாகவே கல்லடி வேலுப்பிள்ளையின் மிகமுக்கியமான ஆக்கங்கள் பேணப்படாது போயின. சுப்பையப் புலவரின் 'கனகி புராணம்' போன்ற பல நூல்கள் முழுமையாகக் கிடைக்காமைக்குக் காரணம் இதுவேயாகும்.

இவ்வாறாக நாடகம், இசை, நடனம் ஆகிய துறைகளுக்கு இக் கருத்துநிலை காரணமாக ஏற்பட்ட பாதிப்பு மிகப் பெரியதாகும்.

நாவலர் வழி வந்த மேற்குறிப்பிட்ட ''ஒறுப்புவாத'', ''அடிநிலை மக்கள் பண்பாட்டு நிராகரிப்பு'' இலக்கியங்களுள் ஒரு பகுதியே வெளிப்படுத்தப்படக் காரணமாகவிருந்ததெனில், கலைத்துறையிலோ ஏறத்தாழ முற்றுமுழுதான ஓர் இருட்டடிப்பே நிகழ்ந்துள்ளது என்று சொல்லலாம்.

மக்கள் கலைகளைப் பொறுத்தவரையில் நாவலர் பரம்பரை அடிநிலை மக்கள் கலைப்பயில்வுகளை மாத்திரம் அல்லாது, கோயிற் கலைகள் சிலவற்றையே கண்டிக்கப் புறப்பட்டது.

''யாழ்ப்பாணச் சமயநிலையில்'' நாவலர் பின்வரும் அறைகூவலை விடுத்தார்:

* இந்த அலரை கேள்விப்பட்டது பேராசிரியர் கணபதிப்பிள்ளை வாயிலாகவே. என்னுடைய தகப்பனார் (அவர் ஒரு பண்டிதர், சைவப்புலவர்) நமக்குத் தரப்பட்டுள்ள இலக்கியப் பாரம்பரியத்தை அப்படிப் பார்க்கக்கூடாது என்று சொல்லுவார். மேனாட்டுக் கல்வி வழிவரும் நோக்குக்கும், மரபுவழிக் கல்வி நோக்குக்குமுள்ள மாறுபாடுகள் இதனால் தெரியவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சைவசமயிகளே! உங்கள் கோயில்களிலே பொது மகளிருடைய நடன, சங்கீதம், வாணவிளையாட்டு முதலிய வைகளை ஒழித்துவிடுங்கள். நிருவாணமாயும், காமத்தை வளர்த்தற்கு ஏதுவாயுமுள்ள, பிரதிமைகளையும், படங்களை யும் அமைப்பியாதொழியுங்கள். கோவில்களிலே சைவப் பிரசங்கம், வேதபாராயணம், தேவார திருவாசக பாராயணம் முதலியவைகளை செய்யுங்கள்.....''

ஏழத்தாழ கி.பி.600 முதல் வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு கோயிற் பண்பாட்டை நாவலர் நிராகரிப்பதையும் புரட்டஸ்தாந்த கிறித்தவ முறைமைகளையே பரிந்துரையாற்றுவதையும் இங்கு குறித்துக் கொள் ளல் அவசியமாகின்றது.

இந்தச் சூழலில் இந்தக் கலைகளைப் பற்றி எழுதுவதே தவறு என்ற ஒரு மனநிலை உயர் சமூக மட்டத்தில் ஏற்படத் தொடங்கிற்று.

நாவலரின் கிறித்தவ எதிர்ப்புக் கொள்கை இந்த ஒறுப்புவாதத்தை நடைமுறைப்படுத்திற்றெனினும் மக்களின் வாழ்வில் இந்தக்கலைகள் மிக வன்மையான ஓர் இடத்தைப் பெற்றிருந்தன.

நாடகம் கோயில் திருவிழாக்களின் ஒரு முக்கிய அமிசமாகவிருந் தது என்பதற்கு, அதனைக் கண்டிக்கும் நாவலரே சாட்சி:

''.......... கைதடியிலே திருவிழா, வேரக்கையிலே திரு விழா, சுதுமலையிலே திருவிழா, மூத்தநயினார் கோயிலிலே திருவிழா, மாவிட்டபுரத்திலே திருவிழா, புன்னாலையிலே திருவிழா, துன்னாலையிலே திருவிழா, மருதடியிலே திருவிழா என்று சொல்லிக் கொண்டு கூட்டங்கூட்டிக் கஞ்சாலேகியம் உட்கொண்டு தாசிகளுடைய வண்டிகளுக்குப் பின்னாக ஓடிக்கொண்டும், சேணிய தெருவிலே இரணியநாடகம், கள் ளியங் காட்டிலே அரிச்சந்திர விலாசம், கந்தர்மடத்தடியிலே தமயந்தி விலாசம், நெல்லியடியிலே ஏதோ ஒரு கூத்து, பறங்கித் தெருவிலே ஏரோது நாடகம், சங்குவேலியிலே இராம நாடகம், மானிப்பாயிலே தருமபுத்திர நாடகம் என்று கேட்ட கேட்ட வுடனே கஞ்சாலேகியத்தின்று வீராவேசத்தோடு ஈட்டி, வளை தடி, கருங்காலித் தண்டு கைப்பற்றி நடந்து நித்திரை விழித்து உலைந்து கொண்டும் நாடோடிகளாய்த் திரிந்து கெடுவதும் திருவிழாக்களால் விளைந்த பிரயோசனங்களன்றோ....'' (நல்லூர் கந்தசாமிகோயில்: 1876)



திருவிழாக்களில் நடைபெறும் பிழைகளைத் திருத்துவதற்கான ஒரு சமூக நடைமுறையினைப் பற்றிப் பேசாது விடுத்துத் திருவிழாவே வேண்டாமென்று வாதிடும் மனோபாவத்தின் அடிப்படைகளை அறிய முனைவது அவசியமாகும்.

நாடகம், இசை, நடனம் ஆகிய கலைகளுள் இசையும் நடனமும் கோயிலைத் தளமாகக் கொண்டு வளர்க்கப்பட்டன. இந்தக் கலைகளின் பயில்வு ஏற்படுவதற்குக் காரணமாகவிருந்தது, பத்தொன்பதாம் நூற் றாண்டு யாழ்ப்பாண நகரத்தின் வணிக வாழ்க்கையைச் சுற்றி நிலவிய சூழலாகும். யாழ்ப்பாணத்தைத் தமது தளமாகக் கொண்டிருந்த நாட்டுக் கோட்டைச் செட்டிமார்கள் தம் மரபுகளுக்கேற்பக் கோயில்களை (யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலை) க்கட்டி ஆதரித்தனர். வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலைச் சுற்றி கோயிற் கலைஞர்கள் (தேவதாசியினர்) வாழ்ந்து வந்தனர்*. யாழ்ப்பாணத்தில் செந்நெறி இசைப் பாரம்பரியம் வளர்வதற்கு வண்ணார்பண்ணையின் இந்தச் சூழல் மிகமுக்கியமான ஒரு மையமாக இருந்திருத்தல் வேண்டும்.

இந்த நாடகக் கலைஞர்களுக்கும், தவில் நாதஸ்வரக் கலைஞர் களுக்கும் பிரிக்கமுடியாத தொடர்புண்டு. 'நட்டுவப்பாரம்பரியம்' என்பது இசை, நடனம் இரண்டையும் இணைத்து நிற்பதாகும். ஆனால் யாழ்ப்பாணத்தில் இத்தொடர், பெரும்பாலும் தவில் நாதஸ்வரப் பயில்வாளரையே குறிக்கும். காரணம் தேவதாசிகளின் நடனம் இரண் டொரு கோயில்களிலே மாத்திரம் நிலவியது. மேலும் கோயில்களில் நடனமாடுவதற்காகத் தேவதாசிகள் திருவிழாக் காலங்களில் இந்தியாவி லிருந்து தருவிக்கப்படுவது வழக்கம். இதனால் ''சின்னமேளப் பாரம் பரியம்'' யாழ்ப்பாணத்தில் ''பெரிய மேள''ங்களின் சமூக அமைப்பைப் பெரிதாக ஊடுருவாதிருந்தது. ஆனால் இக்கலைஞர்களே யாழ்ப் பாணத்திற்கான அவைக்காற்றுக் கலை வாழ்க்கையின் இயக்கமையமாக விளங்கினர். புத்துவாட்டி குடும்பத்தினர் இதன் சிறந்த உதாரணமாகும். புத்துவாட்டி குடும்பத்தினரை விட்டு, யாழ்ப்பாணத்தின் இசை, நாடக, நடன வரலாறுகள் எழுதப்பட முடியாது.

ஆனால் கோயில்கள் பற்றிய நமது ''சைவவினாவிடைக் கண் ணோட்டம்'' கோயிற்கலைகளையும் கோயிற்கலைஞர்களையும் மதித்து நோக்கும் புலமைக் கண்ணோட்டத்தை மறுதலித்தது. கோயில்களில்

* இந்த வாழ்க்கை முறையினை அறிவதற்கு கனகி புராணம் நல்ல உதாரண்ம். நாவலரின் மருகர் வித்துவசிரோன்மணி பொன்னம்பலபிள்ளைக்குத் தாசியொருத்தியின் உறவு இருந்ததென்பது இன்னொரு ''இலக்கிய அலர்''. நாவலர் குடும்பத்துக்கும் செட்டிமார் குடும்பத்துக்கும் திருமண உறவுகள் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிலப்படும் கலைவடிவங்கள் மூலம் இறைவனை உணரும் பாரம்பரிய நிலை கைவிடப்பட்டுக் கடுந்தூய்மைவாதம் வற்புறுத்தும் ஒறுப்பு நிலை (Austerity) முக்கியமாக்கப்பட்டது. கலைகளைச் சூழ்ந்திருந்த சமூகமாசு களைத் துடைத்துக் கலைகளை உண்மையான தெய்வீகத் தொடர்புச் சாதனங்களாக வளர்ப்பது பற்றி யோசிக்காது, கலைகளைப் பற்றி மௌனம் சாதித்துப் புறக்கணிக்கும் ஒரு நிலை ஏற்பட்டது. இதனால் அக்கலைகளைப் பற்றியும், கலைஞர்களைப்பற்றியும் எழுதுவதும், அன்றேல் அவர்கள் தகவல்களைப் பதிவு செய்வதும் கருத்திற்கூடக் கொள்ளப்படாத விடயங்களாயின. இந்த மனோபாவத்தினால், நாம் இன்று யாழ்ப்பாணத்துக் கோயிற்கலைகள் பல பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளக்கூட முடியாதுள்ளது (உ+ம்: சாத்துப்படி, தண்டிகை, சப்பறம், வாண விளையாட்டு முதலியன).

இவ்வாறாக, இக்கலைகள் பற்றி எழுதுவதைத் தடுக்கும் ஒரு கருத்துநிலையும், எழுதப்படாத நிலையுமிருந்தன வெனினும், இக் கலைகள் தொடர்ந்து பயிலப்பட்டே வந்தன.

நாவலர் சுட்டும் வாழ்க்கைமுறை நமது பண்பாட்டு முறையின் ஒரு பக்கமே. மறுபக்கத்தில் இந்தக் கலைகளும், கலைகள் மலிந்த ஒரு கோயிற் பண்பாடும் தொடர்ந்து நிலவியே வந்துள்ளன. ஆனால் அதை நாவலர் வழி வந்த கருத்து நிலை ஆய்வுகளுக்கான ஒன்றாக ஏற்றுக் கொள்ளவேயில்லை. அவ்வாறு கண்டதுண்டு, கேட்டதில்லையாக விருந்த ஒரு நாடகக் கலை வடிவத்தின் வரலாறுதான் இந்த நூலில் எழுதப்பட்டுள்ளது.

நாடகக் கலை இப்பண்பாட்டுச் சூழலில் எவ்வாறு பயிலப்பட்டு வந்தது என்பது ஒரு முக்கியமான வினாவாகும்.

இதற்கான விடையைக் காண முனையும் பொழுது நாடகப் பயில்வு பற்றி யாழ்ப்பாணத்தில் நிலவிய முத்தளத் தொழிற்பாட்டை நாம் கண்டு கொள்ளலாம்.

1. சமயச் சடங்குகளாக - அதாவது வழிபாட்டின் அத்தியாவசிய கரணங்களாக - அமையும் ஆட்டங்கள்.

   இவற்றுள் இரண்டு நிலைகள் உள்ளன.

   (அ) கிரியை நிலையாகச் செய்யப்படும் ''மீளச் செய்யும்'' ஆட்டங்கள், சூரன்போர், மானம்பூ, வேட்டை ஆதியன.

   (ஆ) தெய்வத்தின் மகத்துவத்தைப் பேசும் ஐதீகத்தின் மீள் ஆட்டம், காத்தவராயன் கூத்து.

   ''ஆ'' நிலையில் கூத்தும் நேர்த்திக் கடன்களில் ஒன்றாகக் கொள்ளப்படுவதாகும்.

2. தெய்வ வலிமை (மதப்பின்னணி) மறக்கப்படாதனவாய், ஒரு குறிப்பிட்ட சாதிக் குழுமத்தினர் ஆடுவனவாகவமைந்த கூத்துக்கள். உ-ம்: கோவலன் - கண்ணகி நாடகம்:

3. நாடகத்தைத் தொழில் முறையாகக் கொண்ட நடிகர்கள் ஆடும் நாடகங்கள்.

   இந்த நாடகங்களின் 'கதைகள்' புராண, இதிகாச மரபு வழி வருவனவாக, பெரும்பாலும் வெறுங் கற்பனைகள் என்று கருதப்படாதனவாய் அமைந்த நாடகங்கள்.

இரண்டாவதுக்கும் மூன்றாவதுக்குமிடையே ஊடாட்டங்கள் நிலவின.

தமிழ்ச் சமூகத்தில் நாடகம் வளர்ந்த முறைமையினை ஆராய முனையும் எவரும் கண்டு கொள்ளும் ஒரு முக்கிய அமிசம் யாதெனில், கரண நிலையிலும் கரணம் கலையாகக் கருதப்படும் ஆரம்ப நிலையிலும் கூத்து என்பது சாதிக் குழுமத்தைத் தளமாகக் கொண்டே அமைந்தது எனும் உண்மையாகும். இன்ன 'இன்ன' சாதியினர் 'இன்ன இன்ன' கூத்துக்களை ஆடுவர் என்ற ஒரு வன்மையான மரபு இருந்து வந்தது.

(இந்த நிலைமை மட்டக்களப்பிலும் மிக வன்மையாக நிலவி வந்தது. இலங்கைக் கலைக்கழகத்தின் மூலம் பேராசிரியர் வித்தியானந்தன் தொழிற்பட்டு, மட்டக்களப்புக் கூத்துக்கலையைப் பாடசாலை மட்டத்தில் வளர்க்க வேண்டுமெனத் தீர்மானித்த காலத்துக்கு முன்னர், மட்டக்களப்புக் கிராமப்புறங்களில் நாடகங்களை ஒவ்வொரு சாதியினருமே ஆடிவந்தனர். ஒரு நாடகத்தில் இரண்டு சாதிக்காரர்கள் ஆடும் மரபு இருக்கவில்லை).

இதனால் ஒரு முக்கியமான சமூக - கலை நிலைமையுருவாகிற்று. அதாவது, தமிழக - இலங்கை உறவுகள் காரணமாக யாழ்ப்பாணத்துக்கும் பார்ஸி மரபுவழி வந்த ஸ்பெஷல் நாடக மரபு வந்த பொழுது, அதனைப் பின்பற்றி நாடகம் போடுவதற்கான சமூக ஒருமைப்பட்ட ஒரு பயில்களம் தாழ்த்தப்பட்டோர் நிலையிலேயே காணப்பட்டது.

அதேவேளையில் வந்த இந்த நாடக மரபுடன் இணைந்து கொள்வதற்கான ஆற்றலும் பயிற்சியும் நட்டுவப்பாரம்பரியத்தினரிடத்துமிருந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத்தின் 'ஆட்டக்காரர்' நிலையை விட்டு பார்வையாளர் நிலை நின்று நோக்கும் பொழுது ஆட்டத்திற் காணப்படும் சமூக வரை யறைகள் பார்ப்பதிலே தொழிற்படவில்லை என்பது தெரியவரும்.

நாடகம் ஒரு கலை வடிவம் எனும் பிரக்ஞை இரண்டாவது, மூன்றாவது மட்டங்களிலே தொழிற்பட்டது. அவ்வாறாக ஆடப்பெற்ற நாடகத்தினைச் சாதி சமய பேதமின்றி யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்கள் பார்த்து ரசித்தனர் என்பதற்கு நாவலரே சாட்சி. சேணிய தெருவில் நடந்த வைஷ்ணவக் கதையையும், கந்தர்மடத்தில் நடந்த இதிகாசக் கதையை யும், பறங்கித் தெருவிலே நடந்த கிறித்தவக் கதையையும் ஒரே பார்வை யாளர் கூட்டமே ரசித்தது என்னும் உண்மை நாவலரின் குறிப்பு மூலம் தெரிய வருகின்றது.

நாடகம் வெகுரஞ்சகமான கலைவடிவமாக விளங்கிற்று என்பதில் எள்ளளவுதானும் ஐயப்பாட்டுக்கு இடமில்லை. ஆனால் ஒரு முக்கிய மான வினாவொன்று உள்ளது. அதாவது நாடகம் என்னும் கலையை ரசிக்கும் பொழுது ''கஞ்சா லேகியம்'' உட்கொள்ளும் பழக்கம் (இது நிச்சயமாக எல்லோரிடத்தும் இருந்திருக்க முடியாது. சிலரிடையே தான் இருந்திருத்தல் வேண்டும்) எவ்வாறு வந்தது?

மக்கள் தாங்கள் ஒரு விடயத்தில் (பொருளில்) சுபாவத்தில் கட்டற்ற வகையில் ஈடுபட்டுக் கொள்வதற்காக (எனும் எண்ணத்திலே) போதைப் பொருட்களைப் பயன்படுத்தும் ஒரு வழக்கம் எல்லாச் சமூகங்களிலுமுண்டு.

அப்படி ஈடுபடுகின்ற பொழுது அவர்களை வழமையாகப் பிணிக் கும் சமூகத்தளைகளிலிருந்து தாம் விடுபடுகின்றனர் என்ற உணர்வு அவர்களிடையே உண்டு.

இந்தச் சமூக உளவியல் உண்மையை ஏற்றுக் கொண்டால், நாவலர் கூற்று, யாழ்ப்பாணச் சமூக அமைப்பு, கட்டுப்பாடுகள், இச்சமூகத்தில் கலைப்பெற்ற இடம்பற்றி பல வினாக்களைக் கிளப்பு கின்றன.

உண்மையான கலைவரலாற்றின் களம் என்ன?

பயிலப்பட்ட கலைகள் யாவை?

அவற்றின் அழகியல் அடிப்படைகள் யாவை?

அந்த அழகியல் அடிப்படைக்கும் ரசிகர் கூட்டத்துக்கு மிருந்த இயைபு யாது?



சமூக அமைப்புக்கும் கலைக்குமுள்ள தொடர்பு யாது?

கலைக்கும் மதத்துக்கும் இருந்த தொடர்புகள் யாவை?

இவை ஒன்றை யொன்று எவ்வாறு வளர்த்தன?

என்பன போன்ற வினாக்களே கலைவரலாற்றின் முக்கிய அமிசங் களாகும்.

இவற்றை வினாக்களாகக் கொள்ளும் புலமைச் சூழலையே நமது மரபுக் கண்ணோட்டம் நிராகரித்து வந்துள்ளது. அதனாலேயே யாழ்ப் பாணத்தின் கலைவரலாறு இதுவரை எழுதப்பட முடியாது போய்விட்ட தெனலாம்.

## IV

ஒட்டுமொத்தமான கலை வரலாறு எழுதப்படவில்லையென்பதும், எழுதப்பட முடியாதிருந்தது என்பதும் ஏற்றுக் கொள்ளப்படும் இந்நிலை யில், சிற்சில கலைவரலாறுகள் எழுதப்பட்டு வந்துள்ளன என்பது முக்கியமான வரலாற்றுண்மையாகும்.

நாடகக்கலைத் துறையில் அவ்வாறு பதிவு செய்யப்பட்ட இரண்டு வரலாறுகள் உள்ளன.

ஒன்று கலையரசு சொர்ணலிங்கத்தின் நாடக ஈடுபாட்டு வரலாறு, மற்றது, பேராசிரியர் வித்தியானந்தனின், ஈழத்துத் தமிழ் நாடக மரபு மீட்டுப்பற்றிய வரலாறு.

இவை இரண்டும் முதன்மைப்படுத்தப்பட்டு, அதேவேளையில் நாடகத்தின் வெகுசனப்பிடிப்பினைக் காட்டும் (இந்நூலிற் பேசப் பெறும்) 'இசைநாடக'ப் பாரம்பரியம் இதுவரை முதன்மை பெறாது போயுள்ளமை வரலாறெழுதியலில் (Historiography) வற்புறுத்தப்படும் ஒரு முக்கிய உண்மை புலனாகின்றது.

வரலாறு என்பது, அசைவியக்கமுள்ள சமூகசக்தி தனது நடவடிக் கைகளைப் பதிவு செய்து கொள்வதான ஒரு சமூக நடைமுறையின் வெளிப்பாடே என்பர்.

கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் கலைச்சேவை வலியுறுத் தப்பட்டது 1956க்குப் பின்னரே. உண்மையில் ''கலையரசு'' என்ற பட்டமே அக்காலப் பகுதியிலேதான் கொடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியதர வர்க்கச் சிங்கள மக்கள் தங்கள் கலைவேர்களை நோக்கத் தொடங்கிய பொழுது, அதன் தாக்கம் காரணமாகத் தமிழ் மத்தியதர வர்க்கத்தினரும் தங்கள் கலைவேர்களைத் தேடும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினர். அந்த முதல் தேடலில், அந்த மத்தியதர வர்க்கத்தினரிடையே நாடகக் கலைஞராகத் தொழிற்பட்ட சொர்ணலிங்கம் முதன்மைப்படுத்தப்பட்டார். ஈழத்துத்தமிழ் நாடக வரலாற்றில், தமிழ் நாடகத்தை ஆங்கிலம் தெரிந்த தமிழ் மத்தியதர வர்க்கத்தினரிடையே மதிப்பார்ந்த கலையாக்கிய கலையரசு போற்றப்பட்டார். அவரின் தொண்டினை வலியுறுத்துவதில் இலங்கைக் கலைக்கழகத்தின் தமிழ் நாடகக் குழு முக்கிய பங்கெடுத்தது.

பேராசிரியர் வித்தியானந்தனின் பங்கு முதன்மைப்படுவதற்குக் காரணம், ஈழத்துத் தமிழுணர்வு வளர்ச்சியின் முக்கிய கலை வெளிப்பாடாக அமையும் நாடக வடிவத்தின் மீட்புக்கு அவர் பெரிதும் பாடுபட்டவர் என்பதாகும். இந்த மீட்பில் மூன்று முக்கிய விடயங்கள் உள்ளன.

ஒன்று, இந்த நாடக வடிவம் கிழக்கிலங்கையில் உள்ளது. வடக்கு - கிழக்கு கலையொருமைப்பாட்டின் சின்னம் என்பது மற்றது. இந்த நாடக வடிவம்தான் சிங்கள நாடகத்தின் வளர்ச்சிக்கும் காலாக இருந்தது. மூன்றாவது இந்த நாடக வடிவம் வர்க்க வரையறைக்கப்பாலான சுதேசிய வடிவமாகும்.

இந்த இரண்டு நாடகக்கலை முயற்சிகளுக்கும் கிடைத்த வரலாற்று அழுத்தம் காரை சுந்தரம்பிள்ளை இப்பொழுது தரும் கலைவடிவத்துக்குக் கிட்டவில்லை. ஆனால் அதன், அண்மைக்காலப் பிரதான பயில்வாளரான காலஞ்சென்ற வி.வி.வைரமுத்துவுக்கு இந்தக் கலைவடிவம் பற்றிய சிரத்தையற்ற ஓர் அங்கீகாரமும் கலைக்கணிப்பும் நிலவிற்று. கலையரசு சொர்ணலிங்கத்தில் தொடங்கிய ''கலைஞர் கௌரவிப்பு'' மரபு படிப்படியாக அடிநிலைக் கலைகளுக்கு, கலையின் அடிவேர்களுக்குப் பரவத்தொடங்கிற்று.

1976-78 இல் இவ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருந்தும், 1989-90 லேயே இது நூல் வடிவம் பெறுவதில் ஒருகொடூரமான நியாயப்பாடு காணப்படுகின்றது.

வைரமுத்து என்ற அற்புதக் கலைஞனின், கலைப்பிதிர் வழியைச் சொல்ல முனைவது இந்நூல். அவனது கலைவடிவத்தின் பிதாமகர்களாகவிருந்த கிருஷ்ணாழ்வார், ஜெயராசா, பொன்னாலை கிருஷ்ணன், பபூன் செல்லையாப்பிள்ளை, எம்.ஆர்.கோவிந்தசாமி முதலியோர் பற்றி இந்நூல் கூறுகின்றது. இந்த வரலாற்றினுள் தியாகராஜ பாகவதரும், என்.எஸ்.கிருஷ்ணனும், டி.பி.இராசலட்சுமியும், எம்.எஸ். சுப்புலட்சுமியும் வருகிறார்கள். இன்னொரு மட்டத்தில் சண்டியர்களான பவளக்கால் நடராசாவும் இசைப் பயில்வாளர்களாகிய அண்ணாச்சாமி மாஸ்டரும், நற்குணமும் வருகின்றனர்.

காரை சுந்தரம்பிள்ளை தரும் இந்தக் கலைநிகழ்வுகளின் பின்புலத்தில், யாழ்ப்பாணத்தின் சமூக வரலாறு பளிச்சிடுகின்றது. நமது சமூகத்தின் அழகும், அழகின்மையும், அவலட்சணமும் கூடத் தெரிய வருகின்றன.

கலையைப் போதைப் பொருளாகவும், வரலாற்றைச் சமூகத்தின் புகழ்ச்சிக் கேடயமாகவும் பயன்படுத்தும் நிலை மாறுதல் வேண்டும். கலை அழகின் தேடல்; அதன் சுவைப்பு. வரலாறு என்பது கடந்த காலத்துப் ''போக்குகளை'' அறிந்து கொள்வது. அந்த முயற்சியின் தேவை எதிர்காலத்துக்குட் செல்லும் யாத்திரைக்கான தெளிவைப் பெறுவதேயாகும்.

காரை சுந்தரம்பிள்ளையின் இந்நூல், நமது கலைப் பாதையின் கடந்த காலச் சுவடுகளை எடுத்துக்காட்டுகின்றது. மீண்டும் வலியுறுத்தப்பட வேண்டிய ஒரு கலைப்பாரம்பரியத்தின் வரலாறு இங்கு முதல் தடவையாக எடுத்துக் கூறப்படுகின்றது.

முதற்குரலுக்கு என்றுமே எதிர்க்குரல்கள் உண்டு. ஆனால் முதற்குரல் இல்லையேல் எதிர்க் குரல்கள் கிளம்பவே இடமில்லாது போய்விடும்.

காரை சுந்தரம்பிள்ளை இந்நூலை எழுதியுள்ள முறையில், உண்மையில் எதிர்க்குரல்களிலும் பார்க்கத்துணைக் குரல்களே அதிகம் கிளம்பும் போலத் தெரிகிறது. அதாவது இந்தப் பாரம்பரியம் பற்றியும் மேலும் பல தகவல்களைத் தரவிரும்பும் குரல்களே மேற்கிளம்பும் என்று கருதுகின்றேன். அதற்கு ஒரு முக்கிய காரணம், இவையும் வரலாற்றின் மூலங்களாகக் கொள்ளப்படுகின்றன என்ற மக்கள் நிலைத்திருப்தியாகும்.

திரு.செ.சுந்தரம்பிள்ளை இவ் வரலாற்றை திறம்பட எழுதுவதற்கான புலமைப்பின் புலத்தையுடையவர். காலஞ் சென்ற நடிகமணி வி.வி.வைரமுத்துவின் நண்பர். பாராட்டுப் பெற்ற இலக்கிய ஆக்கவல்லுநர்.

இந்நூலுக்கான தரவுகளை அவர் சேகரித்த முறைமையும், அத்தகவல்களை ஒருங்கிணைத்து நோக்கி இங்கு அளித்துள்ள முறைமையும் பாராட்டுக்குரியவை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தின் வரலாறு என்பது ஒறுப்புவாதத்தின் பேறு மாத்திரம் அன்று; அது செழுமையான கலை வரலாறொன்றின் சிசுவும் தான், என்பதை அறிவதிற் காணப்படும் வரலாற்று முழுமையுணர்வு வளர்வதற்கு இந் நூல் உதவும்; உதவ வேண்டும்.

இதனூடாக இன்னொரு வளர்ச்சியும் வேண்டப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தின் வரலாற்றை ஆட்சிகளின் வரலாறாக மாத்திரம் பார்க்காது ஒரு சமூக உருவாக்கத்தின் வரலாறாகப் பார்க்கும் வரலாறெழுதியல் நோக்கு ஏற்படல் வேண்டும்.

அத்தேவையினை மறைமுகமாக வற்புறுத்தும் காரை சுந்தரம் பிள்ளைக்கு நமது நன்றிகள்.

1986



# யாழ்ப்பாணச் சமூகமும் இளைஞர் எழுச்சியும்

*1985ஆம்ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பின் போது முதன்மை விருந்தினராக அமைந்து ஆற்றிய உரை. அவ்வுரையில் இயைபுரு பகுதியே இங்கு இடம் பெறுகிறது*.*

யாழ்ப்பாணத் தமிழரின் சமூக வரலாற்றில் யாழ்ப்பாணக் கல்லூரி வகிக்கும் இடத்தினை முனைப்புறுத்தி நோக்குதல் அவசியமாகும். இக்குழும்த்தின் கல்வி வரலாற்றில் அது பெறும் இடம் முக்கியமானது எனினும் நான் குறிப்பிட விரும்பும் அந்த சமூக வரலாற்று முக்கியத்துவம் உண்மையில் கல்விக்கு அப்பாலான சமூக நிலைப்பட்ட காரணிகள் சம்பந்தப்பட்டதேயாகும். மற்றைய பாடசாலைகளுடன் ஒப்புநோக்கும் பொழுது யாழ்ப்பாணக் கல்லூரி மிகச் சிறிய தொகையினரான மாணவர்க்கே கல்வி புகட்டி வந்துள்ளதெனினும் அது அறிமுகம் செய்து நடைமுறைப்படுத்திய கல்வியின் தன்மை காரணமாகவும், அந்தக் கல்வியை கையளிக்க அது தோற்றுவித்த சூழல் காரணமாகவும் அங்கு பயின்ற மாணவர்கள் ஏற்படுத்திய சமூக, பண்பாட்டுச் செல்வாக்குக் காரணமாகவும் இக்கல்லூரி இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் நவீனமயவாக்க மையங்களுள் ஒன்றாக விளங்கிற்று. அவற்றுள் இதுவே மிக முக்கியமான புலமை மையமாயிற்று. இக்கல்லூரியிலிருந்து மேற்கிளம்பிய புலமைத்துவத்தின் தன்மை பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அங்கிருந்து ஒரு புதுமையான புலமையாக்கம் வெளியே பாய்ந்து பரவிற்று என்பதையும் அது

* 1972 முதல் கிளர்ச்சிநிலை எய்தியிருந்த இளைஞர் போராட்டம் 1983இல் ஏற்பட்ட தமிழினப் படுகொலைக்குப் பின்னர் உக்கிரமடையத் தொடங்கிற்று. 1984இல் திம்புவில் இலங்கை அரசுக்கும் இளைஞர் இயக்கங்களுக்கும் இந்தியாவின் முயற்சிகள் காரணமாக பேச்சுவார்த்தைகள் நடந்தன. அந்த ஆரம்பநிலையில் எடுத்துப் பரிமாறப்பட்ட கருத்துக்களே இவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத் தமிழரின் சமூக அசைவியக்கத்துக்குப் பங்களிப்புச் செய்தது என்பதையும் மறுக்க இயலாது.

யாழ்ப்பாணக் கல்லூரிக்கு இன்னொரு பரிமாணம் உண்டு. தென்னிந்தியத் திருச்சபையின் நிறுவனம் என்ற வகையில் தமிழகத்திலுள்ள மூன்று முக்கிய கல்வி நிறுவனங்களோடு இக்கல்லூரி தொடர்புகளைப் பேணி வந்துள்ளது. அவை வேலூர் மருத்துவக் கல்லூரி, சென்னை கிறிஸ்தவக் கல்லூரி, பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரி ஆகியனவாகும்.

என் பார்வையில் யாழ்ப்பாணக் கல்லூரி பற்றிய வரலாற்றுத் தரவுகளுள் மிகமுக்கியமானது அது இலங்கையின் முதலாவது தமிழ் இளைஞர் இயக்கத்தின் தொட்டிலாக அமைந்தமையே. அந்த இளைஞர் இயக்கம் 1920களின் முற்பகுதியில் சமனான, சமத்துவமான சுதந்திர இலங்கையைக் கோரி நின்றது. ஹன்டி பேரின்பநாயகம் பின்வருமாறு கூறுவார்: ''1920களில் இந்தியாவில் நிலவிய (சுதந்திர) இயக்கம் யாழ்ப்பாண இளைஞர் மீது மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. மற்றைய இடங்களுடன் ஒப்புநோக்கும் போது வட்டுக்கோட்டையில் நிலவிய சுதந்திரம் காரணமாக இந்தத் தாக்கம் யாழ்ப்பாணக் கல்லூரியில் மிக முனைப்பாக இருந்தது. சீலன் கதிர்காமர் எடுத்துக் கூறுவதற்கிணங்க இந்தச் சுதந்திர உணர்வு யாழ்ப்பாணத்து அன்றைய இளையதலைமுறையினரிடத்தே முக்கிய இடம் பெற்றது. அந்த இளைஞர்கள் கார்ல் மார்க்ஸ் பற்றியோ வரலாற்றுப் பொருள் முதல் வாதம் பற்றியோ அல்லது உழைக்கும் வர்க்கத்தினரின் சர்வாதிகாரம் பற்றியோ எதுவும் கேள்விப்படாமல் இருந்துங் கூட தங்களுடைய மூத்தோர்கள் தங்களுக்குத் தவறு இழைத்துவிட்டார்கள் என்றும் தங்களுடைய எதிர்காலம் தங்கள் கையிலேயே உள்ளது என்றும் எண்ணினார்கள். பிரித்தானிய ஆட்சியினால் அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் சாதிப் பாகுபாடு கொண்ட நிலவுடைமைச் சமுதாயத்தைத் தாங்கள் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை கொப்புளிக்கும் நெஞ்சினராய் காணப்பட்டனர்''.

இலங்கையின் வரலாற்றிலும் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றிலும் இந்த இளைஞர் இயக்கம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தன்னுடைய ஆதர்ச இலட்சியங்கள் மூலமும் தனது தோல்வி மூலமும் அது எதற்காகப் போராட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டியது. அந்த இயக்கத்தின் வழிவந்த வரலாற்றுப் படிப்பினைகளை நாம் சரியாக உள்வாங்கிக் கொள்ளாததால் இலங்கைத் தமிழரிடையே



இரண்டாவது இளைஞர் இயக்கம் ஒன்று இப்பொழுது ஆரம்பமாகியுள்ளது.

நாம் எம்மையறியாமல் இன்று நம்மைச் சூழ்ந்துள்ள மிகப் பெரிய பிரச்சனைப் பற்றி பேசும் நிலைக்கு வந்துள்ளோம்.

இன்றைய இளைஞர் இயக்கம் கால ஒழுங்கின் படி இரண்டாவதே. ஆனால் இன்றைய இளைஞர்களின் கருத்துநிலையையும் செயல்முறைமைகளையும் இவற்றின் சர்வதேசத் தாக்கத்தையும் நோக்கும் பொழுது இது முதலாவது இயக்கத்திலிருந்து பல முக்கிய விடயங்களில் வேறுபடுகிறது என்பதனை உணருகின்றோம்.

முதலில் இது ஒரு போராக ஒரு யுத்தமாக அமைந்துள்ளது. இன்னொரு நாட்டின் தலையீட்டை அத்தியாவசியப்படுத்துகிற உள்நாட்டுப் போர். நான் பிறிதொரு இடத்தில் குறிப்பிட்டது போல அரச வர்த்தமானியின் மொழியாக இருக்க வேண்டும் என்பதுடனும், சுருட்டுக் கடைகள் தோசைக் கடைகள் மீதான தாக்குதலுடனும், பல்கலைக்கழக புகுமுகத்துக்கான கல்வி மொழி பற்றியும் புள்ளிகள் பற்றியதுமாகத் தொடங்கிய ஒன்று, இன்று சர்வதேசப் புவி அரசியலுடன் சம்பந்தப்பட்ட ஒன்றாக வளர்ந்துள்ளது. பரீட்சைப் பிரச்சினை முனைப்புப் பெற்றிருந்த காலத்திலேயே இளைஞர்கள் பலர் இதன் பால் ஈர்க்கப்பட்டனர்.

இந்தப் பிரச்சினைக்குப் பல்வேறு கட்டங்களில் வெவ்வேறு முனைப்புகள் இருந்ததுண்டு. ஒரு கட்டத்தில் அது மொழிப் பிரச்சினையாக இருந்தது. அடுத்த கட்டத்தில் தரப்படுத்தல் மாவட்டக் 'கோட்டா'க்கள் பற்றியதாகவும் வேறுசில வேளைகளில் பாரம்பரியப் பிரதேசம் என்கின்ற முனைப்பையும் கொண்டிருக்கின்றது. இனப்பிரச்சினையும் பாடசாலை மட்டத்தில் தீர்க்கப் பார்க்கும் முயற்சி தோல்வியடைந்து இன்று ஒரு உக்கிரமான போராட்டம் எழுந்துள்ளது. அரசியற் பிரச்சனையை கல்வி நிறுவன மட்டத்தில் தீர்க்கப்போய் கடைசியில் அம்மட்டத்து இளைஞர்கள் எல்லோரையும் அரசியல் மயப்படுத்திய கதையாகவே முடிந்துள்ளது. இன்று அது ஒரு விடுதலைப் போராட்டமாக மேற்கிளம்பியுள்ளது.

இந்தப் போராட்டத்தை நாங்கள் இரண்டு மட்டங்களில் கண்டு உணருகின்றோம். ஒரு மட்டத்தில் இது இலங்கையின் அதிகாரக் கட்டமைப்பினுள் சிங்களவருக்கும் தமிழருக்கும் உள்ள உறவினை வரையறை செய்து கொள்வதாகும். இது அரசியல் நிலைப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு மட்டத்தில் இது நமது சமூகத்தின் இயங்கியல் பற்றிய, அதன் கட்டமைப்புகளின் முனைப்புகள் பற்றிய, இவற்றில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய விடயமாகும். நமது பாரம்பரியச் சமூகத்தின் மரபுவழியமைப்பும் அதன் தோற்றப்பாடுகளும் நம் கண்முன்னே மாறிக் கொண்டிருக்கின்றன.

அடிப்படையில் இது நமது சிறார்களும் இளைஞர்களும் சமூக மய வாக்கப்படுத்தப்படும் (மரபு வழி) முறைமைக்கு எதிரான ஒரு புரட்சியாகும். எமது குழந்தைகள் அவர்கள் குழந்தைகளாக இருக்கும் காலம் முதல் அவர்கள் தமக்கென ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்ளும் காலம் வரை வாழ்க்கையைத் திட்டமிடுவது பெற்றோர்களாகிய எமது வழக்கமாகிவிட்டது. அவர்களின் கல்வி பற்றி, அவர்கள் எதைப் படிக்க வேண்டும் என்பது பற்றி, என்ன உத்தியோகம் பார்க்க வேண்டும் என்பது பற்றி, யாரை விவாகம் செய்ய வேண்டும் என்பது பற்றி, சீதனம் எவ்வளவு பெற வேண்டும் என்பது பற்றி, எங்கே வாழவேண்டும் என்பது பற்றி, இறுதியில் தங்கள் குழந்தைகளை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பது பற்றிப் பெற்றோர்களாகிய நாமே தீர்மானித்து வந்துள்ளோம்.

நாம் இவை யாவற்றையும் செய்யக் கூடியதாக இருந்ததற்கான எடுகோள் ஒன்று உண்டு. அதாவது அவர்கள் எங்கள் நியமங்களைப் பின்பற்றினால் அவர்களுடைய பாதுகாப்பான வாழ்க்கைக்கு உத்தரவாதம் உண்டு என்பதே அது. ஆனால் இன்று எங்கள் இளம் தலைமுறையினருக்கு, அவர்கள் எதிர்காலம் பற்றி எந்த உத்தரவாதத்தையும் வழங்க முடியாதவர்களாக உள்ளோம். பல்கலைக்கழகத்தில் ஓர் இடம் கிடைக்குமென்றோ, விரும்பிய தொழிலை அவர்கள் செய்யலாமென்றோ எம்மால் உத்தரவாதம் தரமுடியாதுள்ளது. அவர்களுடைய உயிருக்கே உத்தரவாதம் இல்லை. அதனாலேயே அவர்கள் எம்மிடமிருந்து விலகி, தூரச் செல்லுகிறார்கள். அவர்கள் பெறுமானங்கள் பற்றிய எங்கள் கண்ணோட்டங்களை நிராகரிக்கிறார்கள். ஏனெனில் இவை அவர்களுக்குச் சமூகத்தில் எதையும் நிச்சயப்படுத்துவனவாக இல்லை. இதனால் அவர்கள் முழு சமூக அமைப்பையுமே நிராகரிக்கிறார்கள். தம்மைத் தோற்றுவித்த அமைப்பை மறுதலிக்கிறார்கள்.

இதனால் பிணைப்புகள் அறுகின்றன. பந்தங்கள் கிழிகின்றன.

இன்னுமொரு முக்கியமான மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. நமது மூத்த தலைமுறைச் சமூகத்தில் கல்வி பெறுவோர்களுக்கும் உழைப்பூதியத்தின் அளவுக்கும் ஒரு தொடர்பிருந்தது. உயர்ந்த படிப்பு உயர்ந்த சம்பளத்தைத் தந்தது. குறைந்த படிப்பு குறைந்த சம்பளத்தைக் கொடுத்தது. ஆனால் இப்பொழுதோ கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள மயக்கங்கள் காரணமாகவும், கல்வித்துறைக் கண்காணிப்பின் மூலம் தொழிற்துறை ஆட்சேர்ப்பைக் கட்டுப்படுத்த முனைவதாலும், பிற நாடுகளில் உடல் உழைப்புப் பெரும் பண ஊதியத்தைத் தருவதாலும் நமது சமூக நியமங்களில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. பாரம்பரியமாக நிலவிய ஏழை பணக்காரப் பிரிகோடுகள் அழிகின்றன. கல்விவழித் தொழில்கள் மூலமாகக் கிடைக்கும் தொகையிலும் பார்க்க உடல் உழைப்பு அதிக வருமானத்தைத் தருகிறது. இது சமூக மதிப்பீடுகளை மாற்றுகிறது.

இவற்றைவிட இன்னுமொரு மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பாரம்பரிய மரபுவழிச் சமூகத்தில் வயது முக்கியமானது. ஏனெனில் அநுபவம் வயது வழியாக வருகிறது. யாருக்கு அதிக வயதோ அவரது அநுபவம் அதிகமாகும். அதன் காரணமாக அவர் வார்த்தைக்கு ஒரு முக்கியத்துவம் ஏற்படுகிறது. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தமாகிறது. ஆனால் இன்றோ சமூக அநுபவங்கள் திடீரென்று ஏற்படுகின்றன. வயதுக்கும் அவற்றுக்கும் தொடர்பே இல்லை. உண்மையில் இன்று நம் சமூகத்தில் இளைஞர்கள் படும் இன்னல்களிலிருந்து முதியவர்களாகிய நாங்கள் தப்பி விடுகிறோம். அவர்கள் இளைஞர்கள் என்பதற்காகவே தாக்கப்படுகின்றனர். அழிக்கப்படுகின்றனர்.

இன்று ஏற்பட்டுள்ள இந்த இடைவெளி வெறுமனே தலைமுறை இடைவெளி அன்று. இது சமூக அநுபவங்களில், சமூக உறவுகளில் ஏற்பட்டுள்ள ஒரு இடைவெளியாகும்.

இவை யாவும் நீண்ட காலமாக, நிச்சயமாக கடந்த 200, 300 வருடங்களாக எந்தவொரு பெரும் தளமாற்றத்திற்கும் ஆட்படாதிருந்த ஒரு சமூகத்தின்மீது திணிக்கப்படுகின்றன.

இக்கட்டத்தில் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழ் சமூகத்தின் ஒரு சிறு விவரணம் அவசியமாகிறது.

இலங்கையின் வடக்கிலிருக்கும் எம்முடைய பிரதேசம் இலங்கையில் மிக நீண்ட கால காலனித்துவ அநுபவங்களைக் கொண்டது (கோட்டை அரசின் ஆள்நிலப் பகுதியை விட்டே இதனைக் கூறுகிறேன்). நாம் போத்துக்கேயர் ஆட்சியின் கீழ், ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ், பிரித்தானிய ஆட்சியின் கீழ் குடியேற்ற நாடாக இருந்து வந்துள்ளோம். நாம் ஒரு நல்ல காலனித்துவ சமூகமாக மாறியிருந்தோம். அதாவது நாம் ஒவ்வொரு காலனித்துவத்தையும் ஏற்றுக் கொள்ளப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகியிருந்தோம். ஒவ்வொரு காலனித்துவத்திடமிருந்தும் எவ்வளவு பெறக்கூடியதாக இருந்ததோ அதைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளில் கவனமாயிருந்தோம். போர்த்துக்கேய ஆட்சி முறையை எதிர்க்க முனைந்தோம். அது வெற்றி பெறவில்லை.

இந்தக் காலனித்துவ அம்சத்தைத் தவிர நமது சமூகத்தின் இன்னொரு முக்கிய பண்பு இது அதிகார படிநிலைவரன்முறைச் சமூகம் ஆகும் (hierarachical society). இந்த அதிகாரப் படிமுறை சாதியமைப்பினால் ஏற்படுத்தப்பட்டதாகும். சாதிகள் இருப்பதென்பது மாத்திர மல்ல, அவை ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட ஒரு அமைப்பு முறையாகவும் இருக்கின்றன. இதனால் சமூக உறவுகளில் இவற்றுக்கொரு முக்கிய பங்கு கிடைக்கிறது.

காலனித்துவமும் சாதியமைப்பும் இணைந்து போகத்தக்க ஒரு சமூக நடைமுறையையே நாம் ஏற்படுத்த, கொண்டு நடத்த முயன்றுள்ளோம். விளிம்புகளில் ஏற்படும் கீழ்நோக்கிய மேல்நோக்கிய சில அசைவுகளுக்கு இடம் கொடுத்து. ஆனால் அந்த அமைப்பின் ஜீவ மையத்தைப் பேண முயன்றுள்ளோம். அதாவது உள்புகும் மேற்கத்திய முறைமையினால் வரும் நற்பலன்கள் நமது பாரம்பரிய அதிகாரப் படிநிலையை ஊறுபடுத்தாத வரையில் காரியங்களைக் கொண்டு செல்லும் முறைமையைக் கையாண்டோம். இந்தக் காலனித்துவத்துக்கும் மரபுவழி அதிகாரப் படிநிலைக்குமிடையில் ஒரு சமநிலையைப் பேணும் முறைமையை ஆறுமுகநாவலர் அவர்களே தொடக்கி வைக்கிறார். நாவலரைப் பொறுத்த வரையில் அவர் கிறிஸ்தவப் பாதிரிமார்களிலும் பார்க்க காலனித்துவ நிர்வாகஸ்தர்களைப் பெரிதும் விரும்பினார். ''இந்துக் கட்டமைப்புக்குள் ஆங்கிலக் கல்வி'' என்ற நடைமுறை இந்தச் சாதி - காலனித்துவ சமநிலைப் பேணலுக்கு உதவிற்று. இந்தப் பண்பாட்டு நடைமுறையின் அரசியல் வாரிசு சேர்.பொன்னம்பலம் இராமநாதன் ஆவார். அவர் சர்வஜன வாக்குரிமையையும், ஆசிரிய கல்லூரி விடுதியொன்றில் சமபோசனத்தையும் எதிர்த்தவர். புதிய அரசியல் வரவுகள் பழமைக்குச் சவாலாக அமைவதை அவர் விரும்பிவில்லை.

பல்வேறு தேர்தல்களிலும் போட்டியிட்டவர்கள் வென்றவர்களை நோக்கும் பொழுது யாழ்ப்பாணத்தின் சமூகக் கட்டுப்பாட்டு முறைமை நன்கு தெரியவருகிறது.

நடைமுறை மொழியில் கூறுவதானால் நாம் சாதி முறைமையின் தொடர்ச்சியை கைவிட விரும்பவில்லை. சாதி முறைமை மூலம் சமூகக் கட்டுப்பாட்டை நடத்தி வந்துள்ளோம்.



இப்பொழுது அந்த முறைமை அறுகிறது. இந்த அறுகைக்கான எல்லாக் காரணங்கள் பற்றியும் நான் ஆராய விரும்பவில்லை. இங்கு நான் அழுத்திக் கூறவிரும்புவது ஒரு பாரம்பரியச் சமூக முறைமை அறுந்து கொண்டிருக்கிறது என்பதே ஆகும். இந்த அறுகை நமது சமூகத்தின் மிக நொய்த இடங்களுள் ஒன்றான இளைஞர் மட்டத்தில் ஏற்பட்டுள்ளது. பொருளியல் சமூக அரசியல் கல்விக் காரணிகள் இந்த நிலைமையை ஏற்படுத்தியுள்ளன.

இவற்றை நோக்கும் பொழுது இன்னும் ஒரு உண்மை தெரிய வருகிறது.

இலட்சியதாகம் கொண்ட, தளமாற்ற நோக்கமுடைய ஒரு இளைஞர் கூட்டம் போராட்டத்தில் ஈடுபடுகின்ற அதேவேளையில், சிலர் இந்தச் சூழலிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக பிறநாடுகளுக்குச் செல்கின்றனர். சிலர் அரசியல் தேவைகளுக்காகச் செல்ல, பலர் தங்கள் சொந்த நலனை விருத்தி செய்வதற்காகச் செல்கின்றனர்.

இங்கு நான் மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், சுவீடன் போன்ற மேனாடுகளுக்குச் செல்லும் பெருந்தொகையினர் பற்றியும், இந்தியாவுக்குச் செல்லும் சுய வெளியேறிகளையும் குறிப்பிடுகிறேன். (உண்மையான அகதிகள் பற்றி இங்கு நான் குறிப்பிடவில்லை.) மேனாடுகளுக்குச் செல்லும் பலர் அவ்வநாடுகளிற் பெறும் வார/ மாதப் படியினை (dole) யாழ்ப்பாணத்துச் சீதனக் கோரிக்கைகளுக்கான முதல் ஆக்குகின்றனர். தாங்களாகவே வெளியேறுபவர்கள் முக்கியத்துவம் பெறுகிறார்கள். தங்கள் குழந்தைகளின் படிப்புக்காகவே இவ்வாறு தாம் செல்வதாகக் கூறுகின்றனர். கல்விக்கான செலவு இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் அதிகரிக்கவே,இவர்கள் பெரும்பகுதியும் இந்தியாவுக்கே செல்கின்றனர். இவர்களிற் பலருக்கு இந்தியாவிற் பல்கலைக்கழகப் புகுமுகத்துக்கு முன்னர் உள்ள கல்விமுறை இலங்கையிலுள்ள கல்விமுறையிலிருந்து வேறுபட்ட தென்பதும், அங்கு சிறு வகுப்புகளிற் சேரும் குழந்தை, பட்டப்படிப்பின் பின்னரே இலங்கை முறைமைக்குள் பிரச்சனையின்றி இணையலாம் என்பதும் தெரியாது. உத்தியோகத் தெரிவிலும் கூடப் பிரச்சினைகள் ஏற்படும். பிரக்ஞைப் பூர்வமாகச் செய்யப்படாத ஆனால் உண்மையில் முற்று முழுதான ஒரு குடிப்பெயர்வு (migration) ஆகவே இது அமைகின்றதென்பது என் அபிப்பிராயம்.

இவர்கள், மாற்றத்தை விரும்பாதவர்கள். இன்றுள்ள நிலைமையை நோக்கும் பொழுது, ஓர் உண்மையைச் சொல்லலாம். அதாவது குடி பெயராது இருப்பவர்கள் எந்தவொரு இடத்துக்கும் செல்ல முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களே. போகக் கூடியவர்கள் எல்லோரும் போகிறார்கள் அல்லது போய்விட்டார்கள்.

இந்த குடிப்பெயர்வுகளில் அதிக மனச் சஞ்சலத்தை ஏற்படுத்துவது மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்றுறையினரது குடிப்பெயர்வே. ஒருகட்டத்தில் இக்குடிப்பெயர்வு இனக் குழுமப் பாகுபாட்டுச் செயல்களாகவும் ஏற்பட்டன. இலங்கைத் தமிழர் பிரச்சனையைச் சர்வதேசியமயப்படுத்துவதற்கு உதவுபவர்கள் இவர்களே.

இப்பொழுது நாம், இங்கு வேலை செய்ய முடியாத அளவுக்கு இன்னல்களை எதிர்நோக்கும் தொழிற்றுறையினர் நாட்டைவிட்டு வெளியேறும் நிலைமையைக் காண்கின்றோம். இது மிகவும் கவலைக்குரிய ஒரு நிலையாகும். இலங்கையின் இனக்குழுமப் போராட்டத்தின் ஒரு முக்கிய கட்டம் இது.

இந்தக் கட்டத்திலாவது, இந்தச் சமூகத்திலுள்ள புலமையாளர்கள், அடுத்து என்ன, ஏது நடக்கும் நடக்க முடியும் என்பது பற்றிய சாத்தியக் கூறுகளை எடுத்துக்கூற முன்வருவது அவசியமாகும்.

தங்களின் பிரச்சினைகள் பற்றிய காய்தல் உவத்தலற்ற, ஒளிவு மறைவற்ற, உண்மையான புலமைத்துவ நெறிப்பட்ட கலந்துரையாடல் வழிவரும் நற்பலன் இந்தச் சமூகத்திற்கு மறுதலிக்கப்பட்டே வந்துள்ளது. தொழிற்றுறைக் கல்வியில் எமது சமூகம் அதிக ஆர்வமும், சிரத்தையும் காட்டியதால் வேண்டிய அளவு சமூக அறிவியலாளரை (Social Scientists) நாம் தோற்றுவிக்கவில்லை. தப்பியொட்டிப் படித்தவர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார்கள். வெளிநாடு சென்றிருப்போர் பற்றிய ஒரு பிரச்சினை என்னவென்றால் தமிழ்ப் பிரதேசங்களின் சென்ற காலத்துக் குறைபாடுகள் மனதில் நிற்கின்ற அளவுக்கு, நிகழ்காலப் பிரச்சினைகள் அவர்களுக்குத் தெரிவதில்லை.

நான் எடுத்துக் கூறிய பிரச்சினைகளுக்கான பதில்கள்/ தீர்வுகள் பற்றி நான் எதுவும் கூறவில்லை. பதிலுக்கான தேடலுக்கு இன்னும் சிறிது கரலம் பொறுக்க வேண்டும். என் கருத்துப்படி இன்றைய முக்கியதேவை, வினாக்களைச் சரியாக உருவாக்கிக் கொள்வதுதான். பிழையான வினாக்களுக்குப் பிழையான விடையே வரும். சரியான வினாவுக்கே சரியான விடை கிடைக்கும். இன்னும் ஒன்று உண்டு. வினாவுக்குள்ளேயே விடையும் கரந்து நிற்கும்.

1985



# யாழ்ப்பாணத்து இந்து மக்களிடையே சமூக மேனிலைப்பாட்டு அசைவியக்கமும் வழிபாடும்

***யாழ்ப்பாணத்திற் சமஸ்கிருத நெறிப்படுகை தொழிற்படும் முறைமைகள் சில பற்றிய ஒரு பிராரம்பக் குறிப்பு. வாக்கிய பஞ்சாங்கத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதப் பெற்றது)***

சமூக வாழ்க்கை என்பது எப்பொழுதும் ஒரே தன்மைத்தவாகவோ, அல்லது மாற்றத்துக்கான முயற்சிகள் அற்றதாகவோ இருப்பதில்லை. சமூக வாழ்க்கை வட்டத்தினுள் எப்பொழுதும், இடையறாத அசைவியக்கம் இருந்து கொண்டேயிருக்கும். குறிப்பிட்ட அந்தச் சமூகத்தின் பாரம்பரியங்கள், நியமங்கள், ஆதர்சங்கள், விழுமியங்களுக்கேற்ப ஒவ்வொருவரும் (இது தனிப்பட்ட ஆள் என்ற அடிப்படையில் நடப்பது அன்று; பெரும்பாலும் குடும்ப அலகு அடிப்படையிலேயே நடப்பதாகும்) ஏதோ ஒரு வகையில், இருப்பதிலும் பார்க்க மேல்நிலைப்பட முயன்று கொண்டிருப்பார்கள். வேறு சிலர் அந்தச் சமூக அமைப்பு முழுவதையும் மீறிய மாற்றத்துக்காக முயன்று கொண்டிருப்பார்கள். அவ்வாறு மாற்றத்தை விரும்புவோர் தமது இலட்சிய சமூக அமைப்பாக, வேறொரு அமைப்பினையே ''மாதிரி''யாகக் கொண்டிருப்பார்கள். அது சமூக மாற்றத்துக்கான முயற்சியாகும். இக்கட்டுரையில் அத்தகைய மாற்ற முயற்சிகள் பற்றி நோக்கப்படாது, முதலிற் குறிப்பிடப் பெற்றதான, சமூகத்தினை ஏற்றுக் கொண்டு அதற்குள் தமது நிலையை மேனிலைப்படுத்துவதற்கான முயற்சி பற்றியே நோக்கப்படவுள்ளது.

சமூக அசைவியக்கம் (Social Mobility) என்பது இருவகையாகத் தொழிற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) ஒருவர் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு அன்றேல், ஒரு சமூகக்க் குழுமத்திலிருந்து இன்னொரு சமூகக் குழுமத்துக்குச் செல்லுதல். இதனைக் கிடைநிலையான (Horizontal) அசைவியக்கம் எனலாம்.

(2) ஒருவர் ஒரு குறிப்பிட்ட சமூக மட்டத்திலிருந்து இன்னொன்றுக்குச் செல்வது. இது நிமிர்நிலை (Vertical) யானது கீழும் செல்லலாம். மேலும் செல்லலாம். ஆனால் அந்தச் செயற்பாட்டோடு அவரது சமூக நிலை மாறும்.

இங்கு நாம் பேசவிருப்பது இரண்டாவது அசைவியக்கம் பற்றியே.

இவ்வாறான மேனிலைப்பாட்டு அசைவியக்கம் ஏற்படுகின்ற பொழுது, குறிப்பிட்ட ஒருவரின் அல்லது ஒரு குடும்பத்தின் அல்லது குழுமத்தின் வாழ்க்கையில் முக்கிய இடம் பெறும் பல விடயங்களும் புதிய நிலையினை எய்தும். முந்திய நிலையிலிருந்த சில விடயங்கள் கைவிடப்படலாம். அல்லது முந்திய நிலையிற் காணப்பட்ட அன்றேல் கடைப்பிடிக்கப்பட்ட விடயங்கள் புதிய நிலைமைக்கேற்ப புது மெருகுடன், புது விளக்கங்களுடன் (தொடர்ந்தும்) போற்றப்படலாம். எவ்வாறாயினும் ஒரு ''தொடர்ச்சி'' இருப்பது தவிர்க்கப்பட முடியாததாகும்.

மூன்றாவது உலக நாடுகளில் இத்தகைய சமூக அசைவியக்கம் ஏற்படும் பொழுது சிக்கற்பாடுடைய பல காரணிகள் தொழிற்படுவதை நாம் அவதானிக்கலாம். நவீனமயப்பாடு (Modernization) ஒரு காரணியாகும். இது பெரும்பாலும் மேனாட்டு மாதிரியமாக (Western Model) அமைத்துக் கொள்வதாகும். ஆனால் அதேவேளையில் இந்த நவீனமயப்பாடு என்பது பாரம்பரியத்தையும் மரபையும் நிராகரிப்பதாக இருக்காது. அதாவது தமது சமூகத் தனித்துவம், பண்பாட்டுத் தனித்துவம் ஆகியன பேணப்படும் முறையிலேயே இந்தச் சமூக அசைவியக்கம் இருத்தல் வேண்டுமென்ற நிலைப்பாடு காணப்படும். மேனாட்டுத் தாக்கத்தினை மறுதலிக்க எடுத்த முயற்சிகள் மூலம், இவர்கள் தமது பாரம்பரியத்தினதும் (Tradition) பண்பாட்டினதும் (Culture) 'மேன்மை'யை, புராதனத் தன்மையை, தமக்கு அது இன்றியமையாததாக இருக்க வேண்டும் என்ற அத்தியாவசியத்தை உணர்ந்து கொண்டனர்.

இந்தியப் பண்பாட்டுச் சூழலில் இந்தச் ''சமூக மாற்றம்'' ஏற்பட்ட பொழுதும், ஏற்படுத்தப்பட்ட பொழுதும் பல சுவாரசியமான நடைமுறைகள் தோன்றின. இந்தியப் பாரம்பரியத்தின், பண்பாட்டின் புராதனத் தன்மை, சிறப்பு ஆகியனவற்றை உணர்ந்து அவற்றைப் பேணியவாறே மேனிலைப்படுதல் என்பது அம் மரபுக்குள் நின்று செய்யப்படக்கூடிய



ஒன்றன்று. ஏனெனில் இந்தியச் சமூக அமைப்பு அதிகாரப் படிநிலை வைப்பு முறைப்பட்டது (Hierarchical) ஆகும். அந்த வைப்பு முறையில் சமத்துவம் கிடையாது. ஆனால் நவீன சமூக மாற்றமோ ஏதோ ஒரு வகையில் சமத்துவத் தன்மையை வற்புறுத்துவதாகும். அதேவேளையில் இந்த அசமத்துவங்களினூடேயும், இந்தியப் பண்பாட்டின் புராதனத் தன்மையும், அதன் தனித்தவமும் அழுத்திக் கூறப்பட்டன.

இத்தகைய ஒரு நிலையில், நவீன சூழலில் ''முன்னேற்றமான'' சமூக ''மாற்ற''த்துக்குட்படும் குழுமங்கள், இந்தியப் பண்பாட்டு வட்டத்தினுள் எவ்வாறு தொழிற்படுகின்றன என்பது முக்கியமான ஒரு விடயமாகின்றது.

எந்த ஒரு பண்பாட்டுச் சூழலிலும், அதன் விழுமியங்கள், மரபுகள், ஆதர்சங்கங்கள் போற்றப்படுவதில்லை. அந்தச் சமூக இயக்கம் தொடருவதில் மதத்துக்கு முக்கியமான இடமுண்டு. பண்பாடு என்பது குறிப்பாக தொழில்நுட்ப முன்னேற்றமில்லாத சூழலில் மதத்தினையே மேலாண்மையுடைய அமிசமாகக் கொண்டிருக்கும். அச்சூழலில் மதமின்றி தனி மனிதனது, அன்றேல் குடும்பத்தினது, அன்றேல் குழுமத்தினது சமூக உறவுகள் சீராக ஒழுங்கமைக்கப்படுவதில்லை. மதத்தின் முத்திரை அந்தச் சமூகத்தின் இயங்கு நிலையில் வன்மையாகப் பொறிக்கப்பட்டிருக்கும்.

மதம் என்பது அடிப்படையில் நம்பிக்கையும் சடங்குகளுமே (கரணங்களுமே) யாகும். நம்பிக்கை காரணமாகச் சடங்குகள், சடங்குகள் காரணமாக நம்பிக்கை என அவை ஒன்றையொன்று மேவி, மருவி நிற்கும். இந்தச் சடங்குகள் நம்பிக்கைகள் காரணமாக ஒரு குறிப்பிட்ட ''வாழ்க்கை நோக்கு'', 'உலகநோக்கு'', ''தரிசனம்'' (Vision) வரும். அந்தத் தரிசனம் தான், அதற்குரிய எடுகோள்களுடன், மத ஞானமாக, இறையியலாக (Theology) பின்னர் ''மெய்யியலாக'' (Philosophy) முகிழ்க்கும்.

நம்பிக்கையும் சடங்குமின்றி அவற்றுக்கான குறியீடுகள், ஆற்றுவோர் ஆற்றப்படும் முறை, ஆற்றப்படுவதற்கான அமைப்புக்கள் ஆதியனவின்றி சமூக இயக்கம் நடைபெறுவதில்லை.

மேனிலைப்பாடான சமூக அசைவியக்கம் ஏற்படுகின்ற பொழுது, உயர்நிலை எனக் கருதப்படுகின்ற ஒரு முறைமைக்கமைய அமைந்து கொள்ளும் தன்மையும், அதேவேளையில் முன்னர் காணப்பட்டவற்றின் தொடர்ச்சியும் முக்கியமானவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியச் சூழலில் சமூக மாற்றத்தின் பொழுது மதம் (நம்பிக்கைகள், சடங்குகள்) எத்தகைய இடத்தைப் பெறுகின்றது? எவ்வாறு தொழிற்படு கின்றது? என்பதைப் பற்றிய ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. அவற்றுள் மிக முக்கியமானது, பேராசிரியர் எம்.என்.ஸ்ரீநிவாஸ் அவர்களாற் செய்யப் பட்ட ஆய்வாகும். குடகு மக்களிடையே (Coorgs) சமயமும் சமூக மாற்றமும் தொழில்படும் முறையை ஆராய்ந்த அவர் நவீன நிலைப்பட்ட சமூக மாற்றத்தினிடையே காணப்படும் சமயத் தொழிற்பாட்டை சமஸ் கிருத நெறிப்படுகை (Sanskritization) எனக் குறிப்பிட்டார்.

அக் கொள்கையின் அடிப்படை இதுதான். இந்தியச் சூழலில் மேனிலைப்பட்ட அசைவியக்கத்துக்கு ஆளாகும் ஒருவர் அன்றேல் குழுமம், தமது மத முறைமைகளைப் படிப்படியாக உயர் இந்துமத நெறியில் கூறப்படுகின்ற அதாவது சமஸ்கிருத எழுத்துக்களில் உள்ள தென நம்பப்படுகின்ற, முறைமையில் அமைத்துக் கொள்கின்றார் /றது. இப்படிச் சொல்கின்ற பொழுது தாம் இதுவரை கடைப்பிடிக்கா சடங்கு கள், நடைமுறைகளைக் கடைப்பிடித்து, அதேவேளையில் தாம் இது வரை கடைப்பிடித்து வந்தனவற்றை சமஸ்கிருத நிலைப்படுத்தி அல் லது சமஸ்கிருதமயப்படுத்தி அவற்றையும் உயர் மரபுக்குரியன போன்று போற்றுதல் மரபாகும்.

இத்தகைய ஒரு நடைமுறை உள்ளது என்பதனை எவரும் மறுக்க வில்லை. ஆனால் இந்த நடைமுறையை, ஸ்ரீநிவாஸ் அவர்கள் குறிப்பிட் டது போல ''சமஸ்கிருத நெறிபடுகை'' (Sanskritization) எனக் குறிப் பிடலாமா அல்லது வேறொரு பெயர் கூறலாமா என்பது பற்றிய நீண்ட தொரு விவாதம் நடைபெற்றது. ''பிராமணமயப்படுத்தல் (Brahminization) போன்ற சொற்றொடர்கள் மாற்றாகக் கூறப்பட்டன. ஆனால் கால ஓட்டத்தில் ''சமஸ்கிருத நெறிப்படுகை'' (Sanskritization) எனும் பதமே நின்று நிலைத்தது. சமூகவியலாளரும், வரலாற்றாசிரியர்களும் இம் முறைமையின் தொழிற்பாட்டினை நன்கு விளக்கியுள்ளனர். ஸ்ரீநி வாஸின் "Social Change in Modern India" என்னும் நூலில் (OUP 1977) இக் கொள்கை நன்கு விளக்கப்பெற்றுள்ளது.

## II

இலங்கைத் தமிழரிடையே, குறிப்பாக யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களிடையே நடைபெறும் மேனிலைப்பாடு மத வழிபாட்டு முறை களில் எவ்வாறு தொழிற்படுகின்றது? எவ்வெவ் வகையில் தெரிய வருகின்றது? என்பதனை நோக்குவதற்கு, முதலில் இந்தச் சமூகம் எவ்வாறு ''அமைக்கப்''பட்டுள்ளது என்பதனை அறிந்து கொள்வது அவசியமாகின்றது.



யாழ்ப்பாணச் சமூகம், தென்னிந்தியச் சமூகம் போன்று அதிகார வைப்பு முறை நெறிப்பட்டதே (Hierarchical) இந்த அதிகார வைப்புமுறை சாதிமுறைமை (Caste System) யினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சாதி முறைமை இந்திய முறைமையிலிருந்து வேறுபட்டது. இங்கு ''பிராமண மேலாண்மை'' கிடையாது. இங்கு மேலாண்மை யுடைய வெள்ளாள குலத்தினர் நான்கு வருணமுறைமையினுள் சாஸ்திரப்படி ''சூத்திரர்களே''. இந்தத் தடையிலிருந்து விடுபடுவதற் காக ''சற்சூத்திரர்'' என்ற ஒரு கோட்பாட்டினையே உருவாக்க வேண்டி யிருந்தது. இதனை ஆறுமுக நாவலரின் எழுத்துக்களிலேயே காணலாம். அத்துடன் இந்தச் சற்சூத்திரக் கோட்பாடு காரணமாக சாஸ்திர அங்கீ காரமற்ற ஆனால் மரபு அங்கீகாரமுடைய ''பஞ்சமர்'' கோட்பாடு இங்கு அழுத்தமாக வலியுறுத்தப்படுகின்றது.

சற்சூத்திரக் கோட்பாடு வலியுறுத்தப்படுகின்றமைக்கும் சைவ சித்தாந்தக் கொள்கை நிலைப்பாட்டுக்கும் ஒரு சமூக இயைபுண்டு. விரிவஞ்சி அதனை இங்கு வலியுறுத்த விரும்பவில்லை.

பிரித்தானியா ஆட்சிக் காலத்திலும், அதன் பின்னரும் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்கள் காரணமாக சாதி முறைமையின் இறுக்கம் குறைந்துள்ளது. கல்வி வாய்ப்பு, உத்தியோக வாய்ப்பு (புதிய தொழில் களின் வருகை, புதிய தொழினுட்பங்கள் கொண்டு வந்துள்ள புதிய தொழில்கள்), புதிய ஊதிய முறைமைகள், வேதன உழைப்பு (Wage Labour) ஏற்படுத்தும் சமத்துவம் ஆகியன காரணமாகச் சாதியமைப்பின் இறுக்கம் குறைகின்றது.

உண்மையில் சாதியமைப்பின் இறுதிச் சின்னங்களில் ஒன்றாக விளங்கியது, விளங்குவது கோயில்கள் ''திறக்கப்'' படாமலிருப்பதாகும். முன்னர் ஒடுக்கப்பட்டிருந்த சாதியினர், நவீன காலத்தில் தமக்கு ஏற்பட்டுள்ள சமூக மேனிலைப்பாட்டு அசைவியக்கத்தை ஏற்புடைமை யுள்ள ஒரு முன்னேற்றமாக்கிக் கொள்ள விரும்பியதன் காரணமாகவே, யாழ்ப்பாணத்தில் கோயில் திறப்பு நடவடிக்கை தென்னிந்தியாவிலும் பார்க்க வன்மையுள்ள கோஷமாக அமைத்து வந்துள்ளது.

இந்தச் சாதியமைப்பின் தளர்வு காரணமாக, முன்னர் நிலவிய சாதிகள் பல இப்பொழுது அருகிப் போய், பெருஞ்சாதிக் குழுக்களே முக்கியமாகிக் கொண்டு வருகின்றன. 'கள்ளர், மறவர், கனத்த அகம்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் மெள்ள மெள்ள வந்து வெள்ளாளர்களானார்கள்'' என்பது இதனை நிரூபிக்கும். யாழ்ப்பாணத்தின் முந்திய சாதிகள் பல இப்பொழுது அருகிவிட்டன. வெள்ளாளர், கோவியர், கரையார், கம்மாளர் எனப் பெரு வட்டங்களாகவுள்ளன.

சாதியமைப்பின் இறுக்கம் குலைந்தாலும் சாதித் திரள்நிலை தரும் ''குழும ஒருங்குணர்வு'' இன்னும் தளரவில்லை. விவாகம் பெரும் பாலும் சாதியமைப்புக்குள் நடைபெறும் ஒன்றாக இருப்பது இதற்கான முக்கிய காரணமாகும்.

சாதியமைப்பு இந்நிலையிற் காணப்பட, அதேவேளையில் கல்வி வளர்ச்சி காரணமாகவும், இனக்குழும ஒருமைப்பாட்டுணர்வு காரண மாகவும் மரபு, பண்பாடு பற்றிய உணர்வும் பெரிதும் வளர்ந்துள்ளன. சாதியமைப்பின் தன்மை காரணமாக பண்பாட்டுப் பகிர்வுப் பங் கெடுப்பில் பின் நிற்க எவரும் தயாராகவில்லை. முன்னர் நிகழ்ந்தது போன்று சமய மாற்றத்தினுள் தமது சமூக விமோசனத்தைக் காணவும் இவர்கள் விரும்பவில்லை. இதனால் ஒவ்வொரு குழுமத்தினரும், குழுமங்களின் குடும்பத்தினரும் தமது சமூகநிலை மேனிலை எய்த எய்த, தமக்குக் கிட்டிய புதிய சமூக அந்தஸ்துக்கேற்ப, தமது மத அநுட்டானங்களையும் அமைத்துக் கொள்ள விரும்பினர். அதாவது யாழ்ப்பாணத்தில், யாழ்ப்பாணத்துச் சூழலுக்கேற்ப சமஸ்கிருதநெறிப் படுகை தொழிற்படத் தொடங்கிற்று.

## III

யாழ்ப்பாணத்துச் சூழலுக்கு ஏற்ப நிகழும் சமஸ்கிருத நெறிப் படுகையின் மிக முக்கிய தொழிற்பாடுகளில் ஒன்று, ஒவ்வொரு சாதிக் கும் அல்லது ''பகுதி''க்குமுள்ள கோயில்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கியமையாகும்.

நமது சமூக ஒழுங்கமைப்பில் கோயில் முக்கிய இடம் பெறுகின்றது. அது சமூகச் செல்வாக்கின், சமூகக் கட்டுப்பாட்டின் முக்கிய மையங் களில் ஒன்று. அந்தக் கோயிலில் நமக்குள்ள அந்தஸ்துக்கும், நமக்குச் சமூகத்திலுள்ள அந்தஸ்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கிராமங் களிலுள்ள கோயில்கள் திருவிழாக்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ள முறைமையினை நன்கு அவதானித்தால் இது புலனாகும்.

புதிய சமூக அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டுள்ளவர்கள் தங்கள் அந்தஸ்த்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளக் கோயிலில் இடம்பெற



விரும்புகின்றனர். அதற்கு அந்தக் கோயில் இடம் கொடுக்கவில்லை யெனில், அவர் தனக்கு அந்த இடத்தைத் தரும் கோயிலுக்குச் செல் வதோ, கோயிலைத் ''தோற்றுவிப்பதோ'' இயல்பே.

மேலும் சமூக மேனிலைக்கு வந்துள்ள ஒருவரிடம் தமது நம்பிக் கையின் தளமாக விளங்கிய வழிபாட்டுத் தலத்தையும் வழிபடு கட வுளையும் தனது புதிய சமூக அந்தஸ்திற்கேற்ப வைத்து வணங்கும் ஊக் கம் ஏற்படுவதும் இயல்பே. அவ்வாறு மேனிலைப்படும் பொழுது வழி பாட்டுத்துறையில் இவற்றின் பிரதிபலிப்புக்கள் தெரிவதும் இயல்பே.

இதனை அறிவதற்கான முக்கியமான சான்றாக அமைந்திருப்பது நமது அன்றாட சமூக - சமய வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தைப் பெறும் பஞ்சாங்கமாகும். இந்துத் தமிழ் மக்களிடையே மிகப் பெரிய அளவிற் பயன்படுத்தப்படும் ஒரேயொரு நூல் பஞ்சாங்கமே.

இந்தப் பஞ்சாங்க ஆக்கம் இரு வேறு மரபுகளில் வருவது. ஒன்று வாக்கிய மரபு, மற்றது கணித மரபு. வாக்கிய மரபே யாழ்ப்பாணத்தில் பெரிதும் போற்றப்படுவது. ஒவ்வொரு வருடமும் குறைந்தது 65,000 (அறுபத்தையாயிரம்) பிரதிகள் அச்சிடப்படுவதாகக் கூறப்படுகின்றது.

வாக்கிய பஞ்சாங்கங்களைக் காலவரன்முறை ஒழுங்கமைப்பில் வைத்து நோக்கும் பொழுது சமூக மேனிலைப்பாட்டுக்கும் வழிபாட் டுக்குமுள்ள தொடர்புகள் தெட்டத் தெளிவாக தெரிய வருகின்றன.

இந்தக் கட்டுரையாக்கத்துக்காக பத்தாண்டு இடைவெளிப்பட்ட பஞ்சாங்கங்கள் சான்றாகக் கொள்ளப்பட்டன. வழிபாட்டின் சமூகத் தளங்களில் ஏற்பட்ட மாற்றங்களின் தன்மைகளை நன்கு புலப்பதிவு செய்து கொள்வதற்கு இது உதவும்.

பின்வரும் வருடங்களுக்குரிய வாக்கிய பஞ்சாங்கங்கள் பயன் படுத்தப்பட்டன:

ரத்தாக்ஷி வருடம் (1924 -25)

பிரமோதூத வருடம் (1930 -31)

விக்கிரம வருடம் (1940-41)

விரோதி வருடம் (1949 - 50)

பிலவ வருடம் (1961-62)

சாதாரண வருடம் (1970 - 71)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராக்ஷத வருடம் (1975- 76)

ரௌத்திரி வருடம் (1980- 81)

**விபவ வருடம்** (1988 - 89)

இப் பஞ்சாங்கங்களைப் பயன்படுத்தும் பொழுது அவ்வக் காலங்களில் நடைபெற்ற அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களையும் மனத்திற் பதித்துக் கொள்ளல் அவசியமாகும். அந்தப் பின்புல அறிவின்றி பஞ்சாங்கங்களில் கிடைக்கும் தகவல்களை உரிய முறையில் வியாக்கியானித்தல் முடியாது.

## IV

சமஸ்கிருத நெறிப்படுகையின் முக்கிய மூலாதார பண்பு வழிபாடு இந்துமத மரபின் செந்நெறி மரபு என்று கருதப்படும் சமஸ்கிருத நெறிப்பட நடாத்தப்படுவதேயாகும்.

பஞ்சாங்கம் என்பது நியமமான இந்து நடைமுறைகளைத் தரும் ஓர் ஆவணமாகும். ஒரு வழிபாட்டிடம், அங்கு நடக்கும் வழிபாடு, வைபவம் ஆகியன பஞ்சாங்கத்தில் இடம் பெறுவதே இவை உயர்நெறியைச் சார்ந்தவை என்ற மனப்பதிவை ஏற்படுத்தும்.

வழிபாடு, வழிபாட்டு வைபவம், அதற்குரிய காலம் பற்றிப் பஞ்சாங்கங்களிற் கிடைக்கப்பெறும் தகவல்கள், அவை எத்துணை ஒழுங்கமைப்புடன் போற்றப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டும். பஞ்சாங்கங்களை ஆதாரமாகக் கொண்டு செய்யும் ஆய்வில் முதன் முதலில் நமது கவனத்தை ஈர்ப்பது பஞ்சாங்கத்தில் இடம்பெறும் வழிபாட்டிடங்களின் தொகையும், வழிபாட்டு முறைமைகளின் தொகையும் அதிகரித்துச் செல்வதேயாகும். வழிபாடு, வைபவம் பற்றிய தகவல்கள் குறித்த வழிபாட்டிடப் பொறுப்பாளர்களிடையே அனுப்பப்பெறுதல் வழக்கம் என்பதனையும் முக்கிய கோயில்களுக்குப் பஞ்சாங்கக்காரர் தாமே முன்னின்று திகதிகளைக் குறித்துக் கொள்வர் என்பதனையும் நாம் இங்கு மனங்கொள்ளல் அவசியம்.

தேவாலய உற்சவவிவரங்கள் தரப்படும் முறைமையில் காணப்படும் மாற்றங்களை அவதானித்துக்கொள்ளல் நன்று.

**1924-25** : தேவாலாய உற்சவங்கள் எல்லாம் (பொங்கல் உட்பட) ஒருங்கே குறிப்பிடப்படுகின்றன. ஆலயங்களின் தொகை 66.



**1930-31:** உற்சவங்கள் கிராமவாரியாக (அகரவரிசைப்படுத்தப்பட்டு) தரப்பட்டுள்ளன. உதாரணமாக கரணவாய் - கரவெட்டிக்கு இரண்டு கோயில்களின் பெயர்களேயுள்ளன. 1988- 89க்கு 12 கோயில்கள் இடம்பெறுகின்றன.

**1940-41:** இந்திய, இலங்கைத் தேவாலயங்களின் உற்சவங்கள் தனித்தனியே தரப்படுகின்றன.

ஆனால் இப்பொழுது மாதவாரியாக உற்சவங்கள் தரப்படுகின்றன. இந்த முறையே தொடர்ந்து பேணப்படுகின்றது.

1949 - 50 இல் பின்வரும் முறையில் விபரங்கள் தரப்படுகின்றன.

1. நல்லூர்க் கந்தசாமி கோயில் உற்சவங்கள்
2. தேவாலய மகோற்சவம் (மாதவாரியாக)
3. தேவாலய அலங்கார உற்சவம்
4. தேவாலய சங்காபிஷேகம், தண்டிகை
5. தேவாலய அபிஷேக தினம்
6. தேவாலய பொங்கல்
7. தேவாலய விஷேச உற்சவம்

இக்கட்டத்தில் மஹோற்சவம், அலங்கார உற்சவம், சங்காபிஷேகம் என்பனவற்றின் வேறுபாட்டை விளங்கிக் கொள்ளல் வேண்டும். மஹோற்சவம் என்பது வருடத் திருவிழாவாகும். இது நடக்கும் கோயில்கள் கும்பாபிஷேகம் செய்யப்பட்டனவாக, வருட மஹோற்சவத்துக்கான தகுதியுடையனவாயிருத்தல் வேண்டும். இத்தகைய கோயில்களில் ஆகம முறைமை இயன்றளவு முழுமையாகக் கடைப்பிடிக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சங்காபிஷேகம் என்பது மஹோற்சவ நிலைக்குக் குறைந்த ஒன்றாகும். வருடத்தில் ஒருமுறை சங்காபிஷேகம் அல்லது அபிஷேகம் நடைபெறும்.

எனவே கோயில்கள் தரவாரியாகப் பிரிக்கப்படுவதற்கான நிலைமையுண்டு என்பதனை மனதிற் கொள்ளல் வேண்டும்.

பொங்கல் என்பது உண்மையான ஆகம வணக்கம் அன்று. அது கிராமிய நிலைப்பட்ட வழிபாட்டு முறைமையேயாகும்.

பொங்கல், குளிர்த்தி என்பது ஆகமஞ்சாரா வழிபாட்டு முறைமைகளாகும். 1949 - 50 பஞ்சாங்கத்திற் பொங்கல் செய்யப்படும் கோயில்களின் பட்டியல் தரப்படுகின்றது. ஆனால் 'குளுத்தி' பற்றிய பஞ்சாங்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்கள் 1970-71இல் காணப்படுகின்றது. இங்கு குளுத்தி என்பது சமஸ்கிருத நெறிப்பட்ட மொழிநடையில் ''திருக் குளிர்ச்சி'' எனக் குறிப்பிடப்படுகின்றது.

பொதுவாக நோக்கும் பொழுது வருடாவருடம் கோயில்களின் தொகை அதிகரித்துச் செல்வதைக் காணலாம். பஞ்சாங்க அந்தஸ்து கோயிலுக்கு அவசியமெனும் அபிப்பிராயம் வளர்வதை நன்கு அவதானிக்கலாம். பூரண ஆகம முறையிலான வழிபாடுகள் அற்ற இடங்களும் பொங்கல், குளிர்ச்சி எனும் வழிபாட்டு முறைமைகள் மூலமாகவே இடம்பெற்று விடுகின்றன.

இவ்வாறு பஞ்சாங்க அந்தஸ்துப் பெறும் கோயில்களின் தொகை ஒருபுறம் அதிகரித்துச் செல்ல மறுபுறத்தில் சில முக்கியமான கோயில்களின் உற்சவங்கள் தனியே தரப்படும் முறைமையும் வளர்ந்து வருவதைக் காணலாம். நல்லூர்க் கந்தசாமி கோயில் உற்சவங்கள் 1949 -50இலிருந்து தனித்துக் குறிப்பிட பெறுகின்றன. அடுத்து 1970-71இல் நல்லூருடன் கோட்டை முனியப்பர், வண்ணை வெங்கடேசப் பெருமாள், உசன் கந்தசாமி கோயில்கள் இடம்பெறுகின்றன. 1975 - 76 இல் நல்லூர் முனியப்பர் (முனிஸ்வரன் எனும் பெயரை நோக்குக), காரைநகர் சிவன், பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில்கள் இடம் பெறுகின்றன. திருக்கேதீஸ்வரத்தின் முக்கியத்துவம் வளர்ந்து வருவதையும் நாம் அவதானித்துக் கொள்ளலாம். திருக்கேதீஸ்வரத்தைப் பொறுத்தவரையில், திருவிழாக்களின் பெயர்களும் நடத்துபவர்களின் பெயர்களும் பஞ்சாங்கத்தில் இடம்பெற்றன.

தனிப்பட்ட கோயில்களின் உற்சவ விவரங்களைத் தனிப்படத்தரும் இச்செயல் நெறி 1980-81 இல் உச்சக் கட்டத்தை அடைவதை அவதானிக்கலாம். ரௌத்திரி வருடப் பஞ்சாங்கத்தில், நல்லூர், கோட்டை முனீஸ்வரரைவிடப் பின்வரும் கோயில்களும் இடம்பெறுகின்றன:

தெல்லிப்பளை ஸ்ரீ காசிவிசுவநாதர் ஆலயம்
அரியாலை சித்திவிநாயகர் ஆலயம்
மட்டுநகர் மாமாங்கேஸ்வரப் பிள்ளையார்
ஏழாலை அம்பலவாணேஸ்வரர்
திருக்கேதீஸ்வரம்
காரைநகர் சிவன் (ஈழத்துச் சிதம்பரம்)
நயினா தீவு நாகபூஷணியம்மை



ஏழாலை புவனேஸ்வரி அம்மன்
மாவிட்டபுரம் கந்தசாமி
கொக்குவில் மஞ்சவனப்பதி
உசன் கந்தசாமி
வல்லிபுரம் ஆழ்வார்
பொன்னாலை வரதராஜப் பெருமாள்
வண்ணை வரதராஜப் பெருமாள்
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம்
அச்சுவேலி காட்டுமலை கந்தசாமி ஆலயம்

இப் பட்டியலில் வரும் எல்லாக் கோயில்களும் பிரதேச முக்கியத்துவம் உடையன என்று கூறுவது சிரமமே. அவ்வப் பகுதியினரின் ஆர்வம், செல்வாக்கு என்பன காரணமாகவே இக் குறிப்புக்கள் இடம் பெற்றன என்று சொல்வதிலே தவறு இருத்தல் முடியாது.

இப் பஞ்சாங்கங்களைப் பார்க்கும் பொழுது இன்னொரு முக்கிய சமஸ்கிருதநெறிப்படும் முறைமை தெரியவரும். அதாவது ஆகம முறைப்படி தொழிற்படும் கோயில்களின் தொகை படிப்படியாக அதிகரித்துச் செல்வதைக் காணலாம். முன்னர் பொங்கல், குளுத்தி நடத்தி வந்த கோயில்கள் படிப்படியாக மஹோற்சவக் கோயில்களாக மாறுவதை நாம் அவதானிக்கலாம். உதாரணமாக முன்னர் சங்காபிஷேகக் குறிப்புக் கொண்ட கோயிலாகவிருந்த கரவெட்டி கிழக்கு கிழவித்தோட்டம் பிள்ளையார் கோயில் பின்னர் மஹோற்சவக் கோயிலாக மாறுகின்றது. அதே போன்று முன்னர் பொங்கல் பற்றிய குறிப்பினையே கொண்ட நல்லூர் இலங்கைநாயகி அம்மன் கோயில் இப்போது மஹோற்சவக் கோயிலாக (1970 -71) மாறுகின்றது. இந்தப் பண்பினை நாம் யாழ்ப்பாணம் முழுவதிலும் பல இடங்களிற் காணலாம்.

யாழ்ப்பாணத்து சமஸ்கிருத நெறிப்படுகையின் இன்னொரு வெளிப்பாடாக அமைவது சிறு பாரம்பரியத் தெய்வங்கள் பெரும் பாரம்பரியத் தெய்வங்களாகப் போற்றப்படுவதாகும். இதற்கு நல்ல உதாரணங்களாக அமைபவை அம்மன் கோயில்களே. முன்னர் கண்ணகி அம்மன் கோயில்களாகவிருந்த பல கோயில்கள் இப்பொழுது உயர் பராம்பரியக் கடவுளரின் பெயர்களைக் கொண்ட கோயில்களாகவுள்ளன.

உ-ம்: விபவ (1988 - 90) வருடப் பஞ்சாங்கத்தில் பின்வரும் குறிப்புக்கள் உள்ளன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-''புங்குடுதீவு கிழக்கு கண்ணகை அம்மன் என வழங்கும் இராஜ ராஜேஸ்வரி''

-''புத்தூர் கிழக்கு கண்ணகை அம்மன் என வழங்கும் இராஜ ராஜேஸ்வேரி''

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலும் இத்தகைய ஒரு பெயர் மாற்றத்தைப் பெற்றுள்ளது.

சிறு பாரம்பரியத் தெய்வங்களை உயர் மரபுத் தெய்வங்களாகக் கொள்வது ஒரு புறமிருக்க, முன்னர் குறிப்பிட்டபடி, சிறு பாரம்பரிய வழிபாட்டு முறைகளும் (பொங்கல், குளித்தி) உயர் வழிபாட்டு முறைமைகள் ஆகக் கொள்ளப்படுவதை நோக்கத் தவறக்கூடாது.

இவ்வாறு உயர்நிலைப்படுத்தப்படும் பொழுது சில கோயில்கள் உயர்நிலைச் சுட்டினாற் குறிப்பிடப் பெறும் ஒரு பண்பும் உருவாகின்றது. இதற்கான நல்ல உதாரணமாக அமைவது காரைநகர் சிவன் கோயிலாகும். முன்னர் காரைநகர் சிவன் கோயிலாகக் குறிப்பிடப் பெற்ற இக் கோயில் பின்னர் ''ஈழத்துச் சிதம்பரம்'' எனக் குறிப்பிடப் பெறுகின்றது (1980 - 81).

யாழ்ப்பாணத்துக் கோயில்களை நோக்கும் பொழுது இங்கு பிள்ளையார் கோயில்களே அதிகமாக இருப்பது தெரியவரும். எந்த ஒரு வருடத்துப் பஞ்சாங்கத்தினைப் பார்த்தாலும் இந்த உண்மை தெரியவரும். பிள்ளையார் வணக்கம் இங்கு விவசாயத்துடன் தொடர்புள்ள ஒரு வணக்கமுறைமையாகவே கொள்ளப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணத்தில் சிவன்கோயில்களின் தொகை குறைவு. விவசாயம் சாராதவர்களும் தமது பரம்பரையான வழிபடு தெய்வங்களுக்கு மேலாகத் தமக்கெனக் கோயில்களை அமைக்கும் பொழுது பிள்ளையார் கோயில்களையே அமைத்துக் கொண்டனர் எனலாம்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலக் கோயில் வளர்ச்சியை நோக்கும் பொழுது அம்மன் கோயில்கள் அதிகமாகிக் கொண்டு வருவதை அவதானிக்கலாம். கண்ணகை அம்மன், மாரியம்மன் வழிபாடு அதிகரித்துக் கொண்டு வருகின்றது. பஞ்சாங்கங்களில் வரும் குளிர்ச்சி, பொங்கல் வைபவங்கள் பெரும்பாலும் அம்மன் கோயில்களிலேயே நடைபெறுகின்றன. இவற்றுக்கான பஞ்சாங்க அந்தஸ்துப்பேறு அடிநிலை மக்களின் சமூக மேனிலை அசைவியக்கத்தைச் சுட்டி நிற்கும் ஒன்று என்பதை நாம் மறந்துவிடுதல் கூடாது. அடிநிலை மக்களின் வழிபாட்டு முறைமைகளுக்கு நியமமான சமூக அங்கீகாரம் கிடைக்கும் பொழுது, சிறு பாரம்பரியத் தெய்வங்கள் உயர் பாரம்பரியத் தெய்வங்களாகப் போற்றப்படுவது வழக்கமாகும். இத்தகைய ஒரு நிலையினை தமிழகத்தில் அண்மைக் காலத்தில் முக்கியத்துவம் பெற்று வரும் மாரியம்மன் வழிபாட்டிலிருந்தும் நாம் அறிந்து கொள்ளலாம். இத்தகைய ஒரு நிலை கி.பி.13, 14-ம் நூற்றாண்டுகளிலும் ஏற்பட்டதென்பர். அப்பொழுது கிராம தேவதைகள் அம்மனாகவே வழிபடப்பட்டன. இதனால் அம்மன் கோவில்கள் அதிகரித்தன.

இந்த சமஸ்கிருத நெறிப்படுகையின் சமூக உள்ளடக்கத்தையும் புரிந்து கொள்ளல் அவசியம். ஒரு புறத்தே நோக்கும் பொழுது ஒரு வகைப்பட்ட சமய சனநாயகத்தை இப் பண்பு குறிக்குமதே வேளையில், இப் பண்பு இதற்கு முன்னர் சமூகச் செல்வாக்கற்றிருந்த குழுமங்கள் இப்பொழுது சமூகச் செல்வாக்குடையனவாக மேற்கிளம்பியுள்ளன என்பதையும் சுட்டுகின்றது. வெளிநாட்டுழைப்பினாற் கிடைக்கும் பணவருவாய் சமூகத்தில் சகல மட்டங்களிலும் பரவியுள்ள இன்று, இந்த வளர்ச்சி காணப்படுவது இயல்பே. பண வருவாய் மாத்திரம் இதற்கான ஊக்க சக்தியாகாது. பண்பாட்டிற் பங்கு கொள்ளும் உத்வேகமும் உயர் பண்பாடு என்று கருதப்படுவதை தம் வயப்படுத்திக் கொள்ளும் ஆர்வமும் இதற்கு ஆதார சுருதியாக அமைகின்றது.

கோயிலோடு சம்பந்தப்பட்டிருத்தல் என்பது அன்றைய ராஜராஜ சோழன் முதல் இன்றைய சாதாரண ராசையா வரை சகல தமிழரிடத்தும் காணப்படும் ஓர் அந்தஸ்துணர்வாகும்.

நமது பண்பாடு வலுவாக நிலைத்து நிற்பதற்கு இந்த உணர்வு உதவியுள்ளது. இன்றும் உதவுகின்றது. தொடர்ந்தும் உதவ நமது சமயவிற்பன்னர்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

*பின்குறிப்பு:- இக்கட்டுரையாக்கத்துக்கு வேண்டிய உசாத்துணையாக அமைந்த பஞ்சாங்கங்களைத் தந்துதவிய வல்வைச் சோதிடர் திரு.செ.உத்தமசீலன் அவர்களுக்கு என் நன்றியுத் தாகுக.*

(தலங்காவல் பிள்ளையார் கோவில்
கும்பாபிஷேக மலர் - 1988)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சைவப் பண்பாட்டிற் செல்வச்சந்நிதியின் முக்கியத்துவம்*

## விரிவான ஓர் ஆய்வுக்கான சில தொடக்கக் குறிப்புகள்

தொண்டைமானாற்றிலுள்ள ''செல்வச்சந்நிதி'' எனும் தலம் அதற்குரிய பக்திக் கவர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் பொழுது அதிகம் ஆராயப்படாத ஒரு தலமாகவேயுள்ளது. இலங்கையின் சைவக்கோயில்கள் பற்றிய முக்கிய ஆராய்ச்சிகள் சமூக அதிகாரமுடையோரின் கோயில்களையே பெரிதும் சுற்றி நின்றுள்ளது. இது மனித இயல்பின்பாற்பட்டதே. ஒரு குறிப்பிட்ட கோயிலோடு தொடர்புடையவர்களின் சமூக அதிகாரம், உயரிடச் செல்வாக்கு என்பனவற்றைக் கொண்டே அக்கோயிலுக்கு வெகுஜனத் தொடர்பு ஊடகங்களான பத்திரிகை வானொலியிற் கிடைக்கும் முக்கியத்துவம் தீர்மானமாகின்றது. செல்வச்சந்நிதி அத்தகைய உயர் செல்வாக்கு மட்டத்தினுள் வரவில்லை. அது பெரும்பான்மையும் அடிநிலை மக்களிடையே தான் பக்தி ஈர்ப்பினை கொண்டுள்ளது. இது மாத்திரமல்லாது, சந்நிதியின் கோயிலொழுகு முறையில் தனி மனிதக் கொடைகள் பிரபல்யப்படுத்தப்படும் முறைமைகளோ அல்லது தனிமனித மேலாண்மை மேலோங்கத் தக்க ஒரு முகாமைச் சாத்தியப்பாடோ இல்லை. இது இக்கோயிலின் சமூகவியலடிப்படையில் முக்கியமான ஓர் அம்சமாகும்.

* யாழ்ப்பாணத்து சிந்தனை மரபில் ''சைவத்தமிழ்'' என்று கூறலே மரபு. ஆறுமுகநாவலர் (1822-1879) குறிப்பிட்ட ஒரு வரலாற்றுப் பின்னணியில் குறிப்பிட்ட ஒரு சமூக வரலாற்றுத் தேவைக்காக முன்வைத்த இக்கோஷத்தைப் பண்பாட்டு மானிடவியல் நெறி சார்ந்த இவ்வாய்வுக்கு வேண்டிய அணுகுமுறையாகக் கொள்ளல் சிரமமாகலாம். அனைத்திந்திய அடிப்படையில் நோக்கும் பொழுது சைவமத வழக்காறுகள் பிரதேசங்களுக்கேற்ப சிற்சில மாறுதல்களைக் கொண்டுள்ளமை தெரிய வரும். இவ்வாறு நோக்கும்பொழுது முருகன் முற்றிலும் தமிழ்நாட்டுத் தெய்வமாகும். ''பழையோன் குழவி'' சிவன் மகனாக, சோமாஸ் கந்தனாக ஆகமச் சைவ வணக்க முறைமைக்குள் இணைக்கப்படுகின்றான். ''தமிழ்'' இங்கு தமிழ்நாட்டில் வளர்த்தெடுக்கப்பட்ட பண்பாட்டு முறைமையினைக் குறிக்கும். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டதனால் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டைப் போற்றுபவர்களை இது சுட்டும்.



செல்வச்சந்நிதி பற்றிய விரிவான ஆய்வு யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சைவ மரபின் சில முக்கிய இயல்புகளை -இதுவரை வற்புறுத்தப்படாத முக்கிய இயல்புகளை - வெளிக்கொணர உதவும்.

சந்நிதி ஆகம வழிபாட்டு முறைமையினைக் கொண்டதன்று. ஆகம வழிபாட்டிற் காணப்படும் பல அமிசங்கள் இன்று அங்கும் இடம் பெறத் தொடங்கியுள்ளனவெனினும் (உருத்திராபிஷேகம் போன்றவை) அடிப்படையில் அது தனக்கேயுரிய சில சிறப்பான வழிபாட்டு முறைகளைக் கொண்டதாகும். இச்சிறப்பு முறைமைகளில் ஆகம வழிபாட்டு முறைமை தமிழ்நாட்டிற்கு வருவதன் முன்னர் காணப்பட்ட சில பூர்வீகப் பண்புகளைக் காணலாம்.

இன்னொரு மட்டத்திற் பார்க்கும் பொழுது சந்நிதியில் ''நாட்டார் நிலை'' மத வழக்காறுகள் பலவற்றைக் காணலாம். தமிழ்ப்பண்பாட்டின் செந்நெறி முறைமையும் (Classical form), நாட்டார் நெறி முறைமையும் (Folk form) முருக வணக்கத்தில் இணைந்து நிற்பது தெரிந்ததே. அத்துடன் வடமொழிக் கலப்பும் இவ்வழிபாட்டில் வந்து விட்டது. அக்கலப்பினைத் திருமுருகாற்றுப் படையிலே காணலாம். செல்வச் சந்நிதி வழிபாட்டு முறைமையில் வடமொழிக் கலப்புக்கு முற்பட்ட நிலையினை இப்பொழுதும் பிரித்தறியக் கூடியதாகவுள்ளது.

சந்நிதி பற்றிய ஆய்வில் முக்கிய இடம் பெற வேண்டியது அதனைத் தமது மிக முக்கிய வழிபாடு தலமாகக் கொள்வோருடைய சமூகவியற் பண்புகளாகும். (இவ்வேளையில் ''அடியார்கள்'' எனும் பதத்தை நான் இங்கு பிரயோகிக்க விரும்பவில்லை. ஏனெனில் அடியார் எனும் இக்கருது கோள் வைதிகப் பக்தி எழுச்சியுடன் வந்த ஒரு எண்ணக் கருவாகும்.) இவர்களுக்கும் கோயில் பொறுப்பாளர்களுக்குமுள்ள உறவு பற்றி ஆராய்தல் வேண்டும். இக்கட்டத்திலேதான் இக்கோயிற் பூசகர்களின் தனித்துவமான பண்புகள் நன்கு தெரியவரும். இக்கோயிற் பூசகர்களின் அடிப்படையான அணுகுமுறை இங்கு முக்கியமாகும். இங்கு நடக்கும் பூசை முறைமையை நோக்கும் பொழுது இவர்கள் தங்களைக் ''கும்பிடுபவர்களுள் முன் நிற்போர்'' (first among the worshippers) ஆகக் கருதிக் கொண்டே கிரியைகளைச் செய்கின்றமை தெரியவரும்.

செல்வச் சந்நிதியின் பூசகர்களாக உள்ளவர்கள் தொண்டைமானாற்றைச் சேர்ந்த முன்னொருகால் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த குடும்பத்தினர். இவர்கள் இப்பொழுது மச்சமாமிசம் உண்ணாத ஆசாரசீலராய் உள்ளனர். குறிப்பிட்ட அப் பரம்பரையின் ஆண் வழியினருக்குக் கோயில் உரிமை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து சந்நிதியை தமது உயர் வழிபாட்டுத் தலமாக (முறைப் பாட்டுத் தலமாக துயர் களை தலமாக) கொண்டு கும்பிடுபவர்களின் அடிப்படை மனநிலையும் சமூக உளவியலும் நின்று ஆராயப்படல் வேண்டும். அதாவது சந்நிதியிற் பெறப்படும் ''மத அனுபவம் (Religious experience) யாது? அது மற்றைய வழிபாட்டிடங்களிற் காணப்படு வதிலிருந்து எவ்வகையில் வேறுபடுகின்றது? என்பன போன்றவற்றை ஆழமாக ஆராய்தல் வேண்டும். அப்பொழுது தான் சந்நிதியின் முக்கியத் துவம் புலனாகும். சந்நிதியிற் பெறப்படும் ''அநுபவம்'' சமூக நிலை யுடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்பது தெளிவாக்கப்பட வேண்டும். சமூக உருவாக்கத்தை அறிய முனையும் பொழுது அச்சமூ கத்தின் மத அநுபவம் பற்றிய ஆய்வும் முக்கியமாகின்றமை தெரிந்ததே.

செல்வசந்நிதி யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதற்குமான கோயி லெனினும் அதன் பிரதானமான ''ஈர்ப்பாளர் வட்டம்'' அது இடம் பெற் றுள்ள தொண்டைமானாறும், கிழக்கே அம்பன், குடத்தனை, நாகர் கோவில், துன்னாலை, கரவெட்டி, பருத்தித்துறை, வதிரி, உடுப்பிட்டி, சக்கோட்டை, இன்பருட்டி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை ஆகிய கிராமங்களும் மேற்கே பலாலி, மாதகல், மயிலிட்டி முதலாம் கிராமங் களும், தென்மேற்கே கதிரிப்பாய், இடைக்காடு, பத்தமேனி, அச்சுவேலி முதலாம் கிராமங்களுமாகும்.

இக்கட்டத்தில் ஏற்கனவே குறிப்பிடப்பெற்ற ஓர் உண்மையை வலியுறுத்தல் வேண்டும். சந்நிதியின் வழிபடுவோர் வட்டம் மேனாட்டு மயப்படுத்தப்படாத ஒரு வட்டமே. இது பெரும்பான்மையும் அடிநிலைச் சமூக மட்டமேயாகும். மேனாட்டு மயப்பட்ட வளர்ச்சியையுடையவர் களும் இங்கு வரும் பொழுது மேனாட்டு மயப்பாட்டின் சின்னமான விழு மியங்களையும் நடைமுறைகளையும் முதன்மைப்படுத்துவதில்லை.

கோயிலொழுகு முறையின் அடிப்படையான, ஆகம இறுக்கமற்ற, நெகிழ்ச்சியும் வழிபடுவோரின் மனநிலை நெகிழ்வும் இணையும் பொழுது, முற்றிலும் தனித்துவமான ஒரு அநுபவச் சூழல் இங்கு ஏற்படு கின்றது.

சந்நிதியின் சிறப்பமிசங்களாக நான்கினைக் குறிப்பிடலாம். முதலி ரண்டைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டாயிற்று. அவையாவன:

(1) இக்கோயிலின் சடங்கு முறைமைகள்

(2) வழிபடுவோரின் மனப்பாங்கும் நடைமுறையும் இவைபற்றிய சில முக்கியமான அமிசங்களுண்டு.



இக்கோயிலின் சடங்கு முறைமை மிக முக்கியமானது. எப்பொழு தும் மதம் என்பது சடங்கும் அச் சடங்குக்கு அடிப்படையான ஐதீகமும் இவற்றின் பாலுள்ள நம்பிக்கையுமேயாகும் (Ritual, Myth and Fath). இம் மூன்றும் ஒரு குறிப்பிட்ட உலக நோக்கை வளர்க்கும். முதல் மூன்றுக் கும் சமூக அமைப்புக்கும் தொடர்புண்டு.

சந்நிதி கோயிலின் பூசைமுறை பிராமணிய முறையைச் சாராதது. இக்கோயிற் பூசையிலும் பல்வேறு சடங்குகளிலும் இக்கோயில் பற்றிய பல ஐதீகங்கள் அடிப்படையாய் அமைவதைக் காணலாம். உதாரணமாக பூசை முடிவில் பூசகர் மணி ஆதியனவற்றை வைத்துத் தானே முதன் முதலிற் கும்பிடுவதை எடுத்துக் கூறலாம். இது இக் கோயிலின் தோற்றம் பற்றிய கதைகளோடு தொடர்புடைய ஒரு சடங்காகும்.

சந்நிதியின் ஐதீகங்களையும் சடங்குகளையும் அவதானிக்கும் பொழுது கதிர்காமத்துக்கும் சந்நிதிக்கும் கற்பிக்கப்பட்டுள்ள உறவுகள் தெரியவரும். கதிர்காமத் திருவிழாவுக்கு முதல் நாள் முருகன் இங்கிரு ந்து கதிர்காமஞ் செல்லுவதாகவும் அங்கு தீர்த்தம் முடிந்ததும் இங்கு வருவதாகவும் சொல்லப்படும் கிரியைகள் மிகமுக்கியமானவையாகும்.

வழிபடுவோரின் மனப்பாங்கு நடைமுறையில் சந்நிதிக்கான நேர் த்திக்கடன் முறை மிக முக்கியமானதாகும். காவடி எடுத்தல், குழந்தை களை விற்று வாங்கல், மொட்டையடித்தல், மாவிளக்கு எரித்தல் ஆகியன உண்டு. இக்கோயிலின் முக்கிய நடைமுறைகளில் ஒன்று இங்கு நடைபெறும் அன்னதானமாகும். இக்கோயில் பற்றிய நேர்த்திக் கடன்களுள் அன்னதானமும் ஒன்று. இக்கோயிலுக்கு வரும் மரபு நிலை வழிபடுவோர் அன்னதானச் சோறு சாப்பிடுவதை வழிபாட்டில் ஓரமிச மாகவே கொள்வதுண்டு. அன்னதானம் வணக்க முறையாகவே இங்கு தொழிற்படுகின்றது.

அன்னதானத்தின் சமூக பொருளாதார முக்கியத்துவத்தை நோக்கு தல் வேண்டும். ஒரு நிலையில் இது ''குழுநிலை உணவுப் பகிர்'' வினைக் (Communal meal) குறிக்கும். இன்னொரு மட்டத்தில் உபரிச் செல்வத்தைக் குழுமத்துக்குப் பயன்படும் முறையில் செலவு செய்வ தையும் குறிக்கும் (Communally useful way of sharing the surplus).

மூன்றாவதாகக் குறிப்பிடப்பட வேண்டிய சந்நிதியின் சிறப்பமிசம் இங்கு காணப்படும் மடங்களாகும்.

தீராநோய் தீர்க்கும் மருத்துவனாக சந்நிதியானைக் கொள்ளும் நம்பிக்கையும் அன்னதான நேர்த்திக்கடன் முறைமையும் இங்கு மடங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் தோற்றத்துக்கும் தொடர்ச்சிக்கும் காரணமாக அமைகின்றன வெனலாம். பல்வேறு ஊர்களைச் சேர்ந்தவர்கள், பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்கள் மடங்களைக் கட்டி அவற்றின் நிருவாகத்துக்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்துள்ளனர். பூசகர் குடும்பங்களைத் தவிர இங்கு நிலையான ஒரு சனத்தொகை காணப்படுவதற்கும் மடங்களே காரணமாகும். தத்தம் குடும்பங்களிலிருந்து பிரிந்தவர்களும் பிரிக்கப்பட்டவர்களும் மடங்களைத் தமது வதிவிடமாகக் கொண்டிருந்தமை ஒரு முக்கியமான உண்மையாகும். மடங்களற்ற சந்நிதியைக் கற்பனை பண்ணக் கூட முடியாத அளவுக்கு மடங்கள் சந்நிதியின் ஓரமிசமாகவுள்ளன.

சந்நிதியின் மிக முக்கியமான ஆனால் விதந்து காணப்படாத ஒரு சிறப்பமிசம், அது யோகியர் பலரின் தங்குமிடமாக இருப்பதேயாகும். கிராம வீதிகளில் காணப்படும் சாதாரண சாமியார் முதல் யோகசாதனைகளை புரியும் ஜேர்மன் சாமியார், ஆனைக்குட்டிச் சாமியார் வரை பல யோகியர் இங்கு காணப்படுகின்றனர். சந்நிதி கோயிலின் அன்றாடப் பூசை முறைகளிற் பங்கு கொள்ளாத இப்பெரு யோகியர் பலர் செல்வச் சந்நிதி அளிக்கும் ''சூழலை''த் தமக்கு ஏற்ற இடமாகக் கொண்டுள்ளனர். யாழ்ப்பாணத்துச் சித்தர் பரம்பரைக்கும் சந்நிதிக்குமுள்ள தொடர்பினை ஆராய்தல் வேண்டும்.

செல்வச்சந்நிதியின் சிறப்பமிசங்களை ஆராய முனையும் பொழுது தான் இதன் பெயரின் அசாதாரணத் தன்மை புலனாகின்றது.

தமிழ்ச்சைவ மரபில் பெரும்பாலும் கோயில்களின் பெயர்கள் இடத்தின் பெயரையும் தலமூர்த்தியின் பெயரையும் கொண்டிருக்கும். ஆனால் இங்கோ செல்வச்சந்நிதி என்று மாத்திரமே பெரிதும் வழங்கப் படுகிறது. ''தொண்டைமானாற்றுச் செல்வச் சந்நிதி'' என்னும் மரபும் இல்லையென்றே கூற வேண்டும். அது போல ''சந்நிதி முருகன்'' என்றும் விதந்தோதப்படுவதில்லை. ''சந்நிதியான்'' என்றே குறிப்பிடப் படுவதுண்டு. ''ஆற்றங்கரையான்'' எனும் மரபுண்டு என்பதை இங்கு குறிப்பிடல் வேண்டும். ஊர்ப்பெயரையும் உறையும் தெய்வத்தின் பெயரையும் குறிப்பிட வேண்டாத அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ள ''சந்நிதி'' என்ற இப்பெயரின் கருத்தை அறிவது அவசியம். 'சந்நிதி' என்னும் சமஸ்கிரதச் சொல் சம்+நி+தி என நிற்பது. இதன் கருத்து:

(1) அண்மையில் இருப்பது, அண்மை நிலை

(2) முன் நிற்றல்



என்பனவாகும். காலக்கிரமத்தில் தெய்வம், குரு, பெரியோர் முன்நிற்பதை ''சந்நிதி'', ''சந்நிதானம்'' என்பன குறித்தது. எனவே, ''சந்நிதி'' என்பது முருகன் முன் நிற்றலைக் குறிக்கின்றது. ''செல்வச் சந்நிதியில்'' செல்வம் என்ற அடைமொழி முருகனையே செல்வமாகவும், அவன் தருவனவற்றைச் செல்வமாகவும், அவனைச் செல்வத்தைப் பெறுவதற்கான வழியாகவும் கொள்ளும் அர்த்தங்களும் மன நிலைகளும் அதிலே தொனிக்கின்றன.

கோயில்களிற் ''சந்நிதி''கள் உண்டு. இங்கு ''சந்நிதி''யே கோயிலாகவுள்ளது. செல்வச்சந்நிதி ஓர் அசாதாரண பெயர். செல்வச்சந்நிதி ஓர் அசாதாரணமான கோயில்.

**(சந்நிதி கோயில் புதியதேர் வெள்ளோட்ட விழா மலர் - 1986)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த புராணத்துக்குள் வராத முருகனுக்கு ஒரு பெரிய புராணம் உருவாகின்றது

***பேராசிரியர் அ.சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய 'ஆற்றங்கரையின்' நூலுக்கான பின்னுரை***

செல்வச்சந்நிதி பற்றி எழுதப்பட்டுள்ள முதலாவது விரிவான நூலை இதுவரை வாசித்தீர்கள். இக்கோயில் பற்றியும், அதன் அசாதாரணமான அற்புதங்கள் பற்றியும் இதுவரை ஓரிடத்தே ஒழுங்குபடுத்தித் தரப்படாதிருந்த தகவல்கள் பலவும் இந்நூலில் இயன்ற அளவு தொகுத்துத் தரப்பட்டுள்ளன. தமிழரின் மதப் பாரம்பரியங்களுக்கு மதிப்புக் கொடுப்பவர் எனப் போற்றப்படும் தமிழறிஞர் பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ் அவர்களும் அவருடைய மனைவி மனோன்மணியும் இப்பணியை அவர்களுக்கே இயல்பான அளிக்கைக் கவர்ச்சியுடன் இங்கு தந்துள்ளனர்.

ஆய்வுக்குரிய பலவற்றை அடியானாக நின்றுகொண்டே ஆய்வுணர்வும் கெடாது விசுவாசமும் நலியாது சொல்லியும் ஒரு கண்ணோட்டத்தில் இந்நூலை ஆசிரியர்கள் நிறைவு செய்துள்ளமை, அவர்களது திறனை நன்கு வெளிக்கொணர்கின்றது. ஆறாம் அத்தியாயத்தின் இறுதிப் பகுதி (பக்.99) இந்த அரிய சாதனைக்கான மனநிலையை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதியினரின் இந்தச் சாத்னையை மெச்சிக்கொள்ளும் இவ்வேளையில், அந்த மிக முக்கியமான வினாவினை மீண்டும் ஒருமுறை அழுத்தம் திருத்தமாக முன்வைப்பது அவசியமாகின்றது.

கந்தபுராணக் கலாசாரமே யாழ்ப்பாணத்தின் சைவப் பண்பாட்டுத் தனித்துவம் என்று போற்றப்பட்டும், விதந்து கூறப்பட்டும் வரும் ஒரு மதப் பண்பாட்டுச் சூழலில், யாழ்ப்பாணத்தின் மிக முக்கியமான, சனரஞ்சகமான முருக தலங்களில் ஒன்றான தொண்டைமானாற்றுச் செல்வச்சந்நிதி பற்றிய ஆய்வுகளும் விளக்கங்களும் இல்லையென்று சொல்லத்தக்க அளவுக்கு, ஏன் மிகக் குறைவாகவிருந்து வந்துள்ளன எனும் வினா சுவாரசியமான ஒன்றாகும்.

இதற்கு விடைகாணும் முயற்சி, இச்சூழலின் சைவமதம், மதநிறுவனங்கள் பற்றித் தோன்றியுள்ள ''ஆய்வுகளி''ன் பண்பினை அறிவதற்கான ஒரு தேடலாகவும் அமைந்து விடுவதை அவதானிக்கலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறு முதல், தமிழைக் கிறித்தவத்தின் பால் இசைவுபடுத்தும் முயற்சிக்கு எதிராகக் கிளம்பிய சைவத் தமிழ்ப் பிரக்ஞையானது, யாழ்ப்பாணத்தின் மத (சைவ) பாரம்பரியம் பற்றி எழுதிய பொழுதும் எழுத முனைந்தபொழுதும், இரண்டு முக்கியமான விடயங்களுக்கு முக்கியத்துவமளித்தது.

(i) சைவ நிறுவனங்களையும், சைவ ஒழுகலாறுகளையும் வரன்முறையான சைவ மரபுப் பின்னணியில், அந்த மரபின் சாஸ்திர மரபுகளுக்கேற்ப எடுத்துக்கூறும் தன்மை.

அதாவது சைவ ஆகமங்கள் திருமுறை நெறி முறைகளுக்கேற்ப எடுத்துக் கூறும் பண்பு.

(ii) சைவ சிந்தாந்தம் எனும் தத்துவ நோக்கில் மத விளக்கங்களையும், மத அனுபவங்களையும் விளக்கல்.

இவ்விளக்கத்தினைத் தரும்பொழுது இந்துமதத்தின் மற்றைய தத்துவ நோக்குகள் குறிப்பிடப்படாதும், குறைவுடையனவாகக் காட்டப்பெற்றும் வந்தன.

யாழ்ப்பாணத்தின் சைவம், கலப்பற்ற சைவசித்தாந்த மரபு என்ற ஒரு கருத்துநிலை மிகுந்த கவனத்துடன் வளர்த்தெடுக்கப்பட்டது.

இக்கண்ணோட்டத்தினை ஊறுசெய்யக்கூடியனவாகவும், இதற்கு மறுதலையாக அமைந்தனவுமாகிய பல்வேறு வணக்க முறைகளை (கண்ணகை அம்மன் கோயில்கள் ஆதியன), தத்துவ - வழிபாட்டு நோக்குகளை (கீரிமலை - அளவெட்டிப் பிரதேசத்தில் நிலவிவந்த வீர சைவப் பாரம்பரியம் ஆதியன) பற்றிய ஓர் இலக்கிய மௌனம் வன்மையாக அநுட்டிக்கப்பட்டு வந்தது.

ஆறுமுக நாவலரின் மத எழுத்துக்களில் இக் கண்ணோட்டம் ''பாலிற்படு நெய்யாக'' உள்ளமையை எவரும் கண்டு கொள்ளலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுக நாவலரின் இம்மதக் கண்ணோட்டத்தையும் மத -எழுத்து முறையையும் வரன்முறையான ஒரு 'பண்பாக' நிலைநாட்டுவதற்கு அடித்தளமாக அமைந்தது, அவர் புரட்டஸ்தாந்திலிருந்து பெற்றுக் கொண்ட 'பியூறிற்றன்' (Puritan) மனோபாவமாகும். ''பியூறிற்றனிஸம்'' என்பது கிறிஸ்தவத்தில் கடுந்தூய்மை வாதத்தைக் குறிக்கும். இவ்வாதிகள் ஒழுக்கத்துறைக் கடுங் கண்டிப்பாளராகவிருந்தவர்கள்; ஒழுக்கத்திலும் சமயத்திலும் கடுங் கண்டிப்பான ஒரு நிலைப்பாட்டினை மேற்கொண்டிருந்தனர்.

நாவலரின் ''யாழ்ப்பாணச் சமயநிலை'' எனும் கட்டுரையும், நான்காம் பாலபாடத்தில் வரும் ''தேவாலயம்'', ''தேவாலயதரிசனம்'' என்னும் பகுதிகளும் இம்மனோ நிலையை எடுத்துக் காட்டி நிற்கின்றன.

நாவலர் விதந்தோதிய சாஸ்திரிய அங்கீகாரமுள்ள வழிபாட்டுத் தலங்கள் (பாடல்பெற்ற தலங்கள்) இலங்கையில் இரண்டே இருந்தன. மேலும் நாவலர் நடைமுறையிலிருந்த இந்துப் பாரம்பரியங்களை ஏற்றுக் கொள்ளவுமில்லை. இதனால் நாவலர் பாரம்பரியத்திற் சனரஞ்சக மத நடைமுறைகள் பற்றிப் பேசாது தவிர்க்கும் ஒரு மனோபாவமே காணப்பட்டது. யாழ்ப்பாணத்துச் சைவம் கிறித்தவத் தாக்குதல்களுக்கு இடமளிக்காத கடுந்தூய்மைவாதச் சைவம் என்பது நாவலர் நிலைப்பாடு.

இந்தக் கண்ணோட்டம் தனித்த மதநிலைப்பட்ட ஒன்றாக மாத்திரம் இருந்துவிடவில்லை. ஒரு குறிப்பிட்ட சமூக மேலாண்மையைப் பேணி பாதுகாக்கும் புலமை வலுக்கொண்ட ஒரு கருத்து நிலையாகவே இது வளர்க்கப்பட்டது, தொழிற்பட்டது என்பது நாவலர் பற்றிய எனது ஆய்வுகளில் நிறுவப்பட்டுள்ளது. சனரஞ்சக நிலையில் இந்த நடைமுறைகளுக்கு மாறான வழக்காறுகள் இருப்பினும், மக்களிடையே அந்த நடைமுறைகள் போற்றப்பட்டன வெனினும், அவற்றைப் பற்றிப் பேசாது ஒதுக்கிவிடும் ஒரு கருத்துநிலை இங்கு நிலவி வந்துள்ளது.

உயர்மட்ட ஆய்வுப் பாரம்பரியம் படிப்படியாக எம்மிடையே வந்த பின்னருங்கூட இக்கருத்து நிலை வலுவிழக்கவில்லை. யாழ்ப்பாணத்துத் தமிழர்களான சமயத்துறை அறிஞர்கள் எவரும் மதத்தின் சமூகவியல் பற்றிய ஆய்வுகளை இதுவரை மேற்கொள்ள வில்லையெனலாம். இன்னும்தான் ''ஒப்பியல் மதமும்'', ''மதச்சமூகவியலும்'' இந்துமத உயர் கல்வியின் இன்றியமையாத அங்கங்களாகக் கருதப்படவில்லை.

(சைவம் பற்றிய இந்த அறிகை விளக்கப் பாரம்பரியம் இங்குள்ள கிறித்தவர்களையும் தொற்றிக் கொண்டுள்ளது போலத் தெரிகிறது. அவர்களிடையேயும் சனரஞ்சக நிலை மதவழக்காறுகள், சமயத்தின்



சமூகவியல் தொழிற்பாடுகள் பற்றிய அதிகாரபீட அங்கிகாரமுள்ள ஆய்வுகள் இன்னும் வெளிவரவில்லை.)

இச்சூழலில் வெளிவந்த மத அறிவு, மதநிறுவன அறிவு / விளக்கம் பற்றிய எழுத்துக்களை வாசிக்கும் பொழுது, அவற்றின் நடையும் (Style), அந்த நடையின் மாறுபாடற்ற வாய்ப்பாட்டுத் தன்மையும் இந்தக் கடுந்தூய்மைவாதக் கண்ணோட்டத்தின் செல்வாக்கை இலக்கிய நிலைநின்று எடுத்துக்காட்டுவனவாக அமையும்.

இத்தகைய ஒரு புலமைச் சூழலில் செல்வச்சந்நிதி புறக்கணிக்கப்பட்டு வந்தமை ஆச்சரியம் தருவதன்று. உண்மையில், மேற்சொன்ன மதப்போற்றுகைப் பாரம்பரியம், மதவிதந்துரைப் பாரம்பரியம் ஆதியனவற்றுக்கு நேர் முரணான ஒரு பாரம்பரியத்தின் சின்னமாகவே செல்வச் சந்நிதி அமைந்துள்ளது.

அக்கோயில் பற்றிய வரலாறும், அதன் பூசகர்களின் சமூகப் பின்னணியும், அங்கு நடைபெறும் பூசைமரபும், அந்தக் கோயிலையொட்டிய ஒழுகலாறுகளும், நாவலர் வலியுறுத்திய வழிபாட்டு மரபுகளுக்கு முற்றிலும் எதிர்மாறானவையாகும். நல்லூர்க் கோயில் மரபே நாவலரின் கண்டனத்துக்கு ஆளானது. அப்படியான ஒரு சமூகக் கண்ணோட்ட, புலமைப் பின்னணியில் செல்வச் சந்நிதி அவர் ஆய்வு வட்டத்துக்குள்ளேயே வந்திருக்க முடியாது. இது சம்பந்தமாக இந்நூலின் 19ஆம் 92ஆம் பக்கங்களிலே வரும் குறிப்புகள் முக்கியமானவை.

பக்-19: ''........ மந்திரவழிபாடு மேலான வழிபாடு எனப் பலர் கருதி, சந்நிதி வழிபாட்டு முறைகளைக் கேலிசெய்தனர். சந்நிதி கோயில் குறிப்பாக ஆகம வழிபாட்டாளர்களால் வணங்கப் படாத தலமாகவே இருந்தது......''

பக்.92: ''......... இத்தகைய அன்பர்கள் பலர் சாதி நிலையிலே குறைந்தவர்களாகக் கருதப்பட்டனர். சந்நிதியைக் கீழ்சாதியினரின் வழிபாட்டுத் தலம் என்று வர்ணித்தனர். அன்னதானச் சோற்றுக்காக அலையும் ஏழைகளெனக்கூறினர்.....''

இந்த மனோபாவம் மேலோங்கிநின்றதால், நாவலர் பரம்பரை இக்கோயிலைப் புறக்கணித்தது. அதனாலேதான் உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் இக்கோயிலைப் பற்றிப் பாடாது விட்டார் எனலாம். உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் பாடாமல் விட்டதும், வல்வை இயற் தமிழ்ப் போதகாசிரியர் வயித்தியலிங்கம்பிள்ளை சந்நிதியைப் பற்றிப் பாடியுள்ளமையும் இந்த முரண்பாடுகளை நன்கு முனைப்புறுத்திக் காட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றனவெனலாம். சிவசம்புப்புலவருக்கும் வல்வை வயித்திலிங்கம் பிள்ளைக்கும் இறுதிக் காலத்தில் நிலவிய கருத்து வேறுபாடுகள் இலக்கியப் பிரசித்தமானவை.

சந்நிதி பற்றிய இந்தக் கருத்துநிலைப் புறக்கணிப்பைத் தொண்டைமானாற்றுக்கு மூன்று மைல் தூரத்தேயுள்ள கந்தவனக் கடவைக்கு வழங்கப்பட்ட கவனத்தினாலும் அறிந்து கொள்ளலாம். கந்தவனம் கந்தபுராணக் கலாசாரத்தினுட்பேசப்படும் ஐதீகங்களைக் கொண்டது (வீரபாகுதேவரால் வழிபடப்பட்டது என்பது). அதன் பூசை நடைமுறைகள் ஆகம மரபுவழிநிற்பவை. கந்தவனக் கடவை சைவ அறிஞர் சிவபாத சுந்தரம் அவர்களின் வதிவிடமாக அமைந்தது.

இவ்வாறு நோக்கும் பொழுதுதான் சந்நிதி பற்றிய புறக்கணிப்புணர்வின் சமூக, கருத்து நிலைக் கூர்மை கவனத்திற் குரியதாகின்றது. *கந்த புராணக் கலாசாரமே யாழ்ப்பாணத்தின் கலாசாரம் என்று விதந்து கூறப்படும். மதப்பண்பாட்டு வட்டத்தினுள், ஆற்றங்கரைக் கந்தன் புகழும், அங்கு அவனுக்கு நடக்கும் வழிபாட்டு முறைமையும் கண்டதுண்டு கேட்டதில்லையானவை ஆகின.*

இந்த முரண்பாடு மிக முக்கியமான ஒன்றாகும். *யாழ்ப்பாணத்தின் ''பியூறிற்றனிசச்சைவம்'' வளர்ந்து வந்த சைவநோக்குக்கும், அடிநிலைச் சைவமக்களின் மதநோக்குக்குமுள்ள வேறுபாடுகளை துல்லியமாகக் காட்டும் முரண் அணி இதைவிட வேறு எதுவும் இல்லையென்றே கூறிவிடலாம்.*

யாழ்ப்பாணத்துச் சமூகவியலினதும், யாழ்ப்பாணத்துச் சைவத்தின் சமூகவியலினதும் முக்கிய அமிசங்கள் பலவற்றை வெளிக்கொணருவதாக அமைகின்ற இக்கோயிலும், அதன் வழிபாட்டு முறைமைகளும், யாழ்ப்பாணத்தின் மதக்கருத்துநிலைச் சூழலிற் பயிலப்படாத, ஆனால் மத ஆய்வுத் துறையில் Study of Religion as Phenomenon and as Institution) மிக மிக முக்கியமான பல விடயங்களை எடுத்துக் காட்டுவனவாகவுள்ளன.

இந்நூலில் மேற்கோள்காட்டப் பெற்றுள்ள, இக்கோயில் பற்றிய எனது கட்டுரையில் நான் குறிப்பிட்டுள்ள ஒரு விடயத்தை இங்கு மீண்டும் அழுத்திக் கூறவிரும்புகின்றேன்(பக் 31).

> ''சந்நிதியில் பெறப்படும் மத அனுபவம் யாது? அது மற்றைய வழிபாட்டிடங்களிற் காணப்படுவதிலிருந்து எவ் வகையில் வேறுபடுகின்றது? .......''



இந்த வினா மதத்தினைத் தமது வரன்முறையான பயில்துறையாகக் கொள்பவர்களுக்கும் மதத்தினை ஒரு முக்கிய சமூக நிறுவனமாகக் கொள்ளும் சமூக விஞ்ஞானிகளுக்கும் மிக முக்கியமானதாகும்.*

புலமைவாத மத அணுகுமுறைகள் தராத, தரமுடியாத ஓர் உளவியல் அனுபவத் திருப்தியினைச் சந்நிதி வழிபாடு தருகின்றதென்பது வெள்ளிடைமலை. இந் 'நிகழ்வு' எவ்வாறு ஏற்படுகின்றதென்பதனைப் பல்வேறு பயில்துறைகளின் ஆய்வு நோக்குகள் வழிநின்று தெளிவுபடுத்திக் கொள்வது அவசியமாகின்றது.

சந்நிதி வழங்கும் மத அனுபவத்தின் இரண்டு முக்கிய அமிசங்களை இங்கு வலியுறுத்திக் கூறலாமெனக் கருதுகிறேன்.

முதலாவது அமிசம் சந்நிதியோடு சார்த்திப் பேசப்படுபவையான ''அற்புதங்கள்'', ''ஐதீகங்கள்'' எவையும் பௌராணிக மரபு நிலைப்பட்டவையல்ல. முன்னொரு காலத்தில், முன்னொரு யுகத்தில் நிகழ்ந்தவையென, இன்ன புராணத்தில் இன்ன வகையில் இவ்வாறாக நிகழ்ந்தனவெனக் கூறப்படும் ஐதீகங்கள் எதுவும் சந்நிதிக்கு இல்லை. சுருக்கமாகச் சொன்னால், கந்தபுராணத் தொடர்புகள் எதுவும் சந்நிதிக்குக் கிடையாது. அத்தகைய ஒரு கதையினை இப்பொழுது தொடக்கிச் சந்நிதிக்கு வரன்முறையான சாஸ்திர அங்கீகாரம் வழங்க முனையும் ஒரு எத்தனிப்பு துளிர்விடுகின்றதை அவதானிக்க முடிகின்றதெனினும்

---

* இலங்கைத் தமிழர்களிடையேயுள்ள சமூக விஞ்ஞானிகள் மதத்தின் சமூகப் பரிமாணங்களை ஆராயாது விட்டுள்ளமை மிகப்பெரிய ஒரு குறைபாடாகும். நம்மிடையேயுள்ள மார்க்ஸீய ஆய்வாளர்களிடையேயும் மதம் பற்றிய ஆய்வு சமூகப் பிற்போக்குத்தனமானது என்ற முட்டாள்த்தளமான அறியாமை காணப்படுகின்றது. மதம் என்னும் கருத்து நிலையின் எடுகோள்கள் யாவை, மதம் எவ்வாறு முக்கியமான ஒரு சமூக நிறுவனமாக இயங்குகின்றது, வலுப்பெறுகின்றது, சமூகத்தின் அரச, பொருளாதார, சமூக அதிகாரங்களுக்கு மத நடைமுறைகள் எவ்வாறு நியாயப்பாட்டினை வழங்குகின்றன, மதத்துக்கும் பண்பாட்டுக்குமுள்ள உறவு யாது? என்பன பற்றி ஆராய்வது உண்மையான மார்க்ஸீய ஆய்வாளனின் கடமையாகும். மார்க்ஸ், ஏங்கல்ஸ் காலம் முதல் இத்தகையஆய்வுப் பாரம்பரியத்துக்கு மார்க்ஸியத்தில் ஒரு மதிப்பான இடம் உண்டு. மூல நூற் பரிச்சயமில்லாத மார்க்ஸீய அறிவும் (அறிவின்மையும்) கட்சியின் நடப்பு நிலைபாடுகளே மார்க்ஸீய சித்தாந்தத் தெளிவு என்ற போலிப் போதனைகளும் நம்மிடையே வரன்முறையான மார்க்ஸீய ஆய்வு வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவித்து வந்துள்ளன. இதுவும் ஒரு வகையில் ஒரு ''சைவ வினாவிடை'' மனோபாவம்தான்.

இத்தகைய ஒரு சூழலில், ''நவமார்க்ஸீயத்தின்'' புதுமோஸ்தர்க் கருத்துக்களை எழுத்தளவில் தெரிந்து கொண்டு உச்சாடன முறையில் எழுதி வந்த புலமைப் போலிகள் தம்மையே விளக்கத் தெளிவுள்ள மார்க்ஸிஸ்டுகள் என வாதிடத் தொடங்கின.

இந்த அடிச்சுட்டிக் கரணங்களினூடே பாதிக்கப்பட்டது உண்மையான மார்க்ஸீய அணுகுமுறைமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ''சைவநெறி'' -பத்தாம் வகுப்பு -1988 (7ம் பதிப்பு) பக். 29) சந்நிதி பற்றிய ''கர்ணபரம்பரைக் கதைகள்: காட்சிகள்'' யாவும் அண்மைக்காலத்தனவாக, குறிப்பாக சாதாரண அடிநிலை மக்களின் மத விசுவாசத்தினிலிருந்து முகிழ்த் தனவாக, முகிழ்ப்பனவாக அமைந்துள்ளமையை அவதானிக்கலாம். நோய்கள் மாறியமை, முருகன் தம்மைக் கோயிலுக்கு அழைத்தமை, தாங்கள் செய்ய விரும்பிச் செய்யப் பின்போட்டவற்றைச் செய்ய வைத்தமை என்ற நிலைப்பட்டனவான, அதாவது பக்தர்களின் தனி நிலைப்பட்ட / சொந்த நிலைப்பட்ட ''மதத்தொடர்பு நிலை அனு பவங்களே'' (Experiences in personal religious communication) சந்நிதி யானின் அற்புதங்களின் தளமாகவும் களமாகவும் அமைவதை அவ தானித்தல் வேண்டும். இந்நூலின் மூன்றாவது அத்தியாயத்தில் விவ ரிக்கப்படும் அற்புதங்கள் யாவும் எளிமை நிலையினரான சாதாரண மக்களின் வாழ்க்கை நிலைப்பாடுகளிலிருந்து கிளம்புவன என்பது தெரியவரும். நூறு ரூபாப் பேரத்திலும், 1983க் கலவரத்திலும் முருகன் தங்கள் வாழ்க்கையில் நடத்திய ''அற்புதங்களை''த்தான் இந்த பக்த உள்ளங்கள் போற்றுகின்றன. குறிப்பாகச் சந்நிதி ''மருந்தின்'' மகத் துவம் பற்றிய விசுவாசிப்புகளை நான் நேரடியாகவே அறிவேன். ஆல மிலையில் வழங்கப்படும் புக்கையும், கோயில் வாசலில் எரியும் பெரும் குத்துவிளக்கின் எண்ணெயும் எவ்வாறு மருந்தாகப் போற்றப்படு கின்றன என்பதை நான் நேரிற் கண்டுள்ளேன்.

அதாவது இங்குள்ள மத அநுபவமானது, பௌராணிக, ஐதீகக் கதைகளில் நம்பிக்கை வைக்காததால், அவற்றைப் பற்றியே சிந்தியாத தால், பக்தனுக்கும் - அத்தெய்வத்துக்குமிடையிலான ஒரு தனிப்பட்ட பாச இறுக்க மனநிலையினடியாகத் தோன்றுவனவான நிகழ்வுகளைத் தளமாகக் கொண்டதாக அமைகின்றது. அந்நிகழ்வுகள் சமகால வாழ்வி னடியாக முகிழ்பவையாக அமைகின்றன. தனித்தனி மனிதர்களின் அன்றாடத் தேவைகள், இலட்சியங்கள் நடத்தையுந்தல்களினூடாக ஏற்படும் மத அநுபவமாகவே இவ்வநுபவம் காணப்படுகின்றது. இந்த நிலையில் பக்தனை அவன் வழிபட்டு நிற்கும் முருகனிடத்து அவனை ஈடுபடுத்தும் சாதனமார்க்கம் (that one which mediates the worshipper to the deity he worships) தேவாரம், திருவாசகம் போன்ற பாரம்பரிய தொடர்பு முறைமைகள் அன்று. தானாகவே நின்று, இன்னொரு அநுபவச் சாதனத்தின் உதவியின்றி நேரடியாக எட்டிப்பிடிக்க முயல்கின் றான். நமது பாரம்பரிய வழிபாட்டு முறைமையில் இத் தொடர்பினை (communication) ஏற்படுத்திக் கொள்வதற்கு நாம் தேவார திருவாச



கங்களை, அன்றேல் பெருங்கிரியைகளைப் பயன்படுத்திக் கொள்கி றோம். சந்நிதியில் அருச்சனை கூட தனிப்பட்ட வேண்டுதலாக (அதா வது நட்சத்திரம் பெயர் சொல்லப்படுகிற ஒன்றாக) எடுத்துச் செய்யப் படுவதில்லை. தனிப்பட்ட உறவைக் கும்பிடுபவன் தானே ஏற்படுத்திக் கொள்கிறான். பாரம்பரியச் சின்னங்களின் தொழிற்பாடு மிகக் குறைவு.

அதாவது இந்த உணர்வுநிலை அவனது இருப்பு நிலையோடு (exis- tential) சம்பந்தப்பட்டது. வாழ்க்கையின் ஒருமிப்பு நிலையில் அவன் காணும் பிரச்சினைகளின் உணர்வு நிலை வெளிப்பாடுகளை அவன் தனது நம்பிக்கை / விசுவாசிப்பு என்ற நிலை நின்று நோக்கி, தனது நிலை யில் உண்மையில் இருப்பதாக அவன் கண்டு கொண்டதாக நினைக்கும் அந்தச் சக்தியுடன், அந்தச் சக்தியைத் தனக்குப் புரிந்துகொள்ளக் கூடியதான சமூக மனித உறவு வார்ப்பில் விளங்கிக் கொண்டு, அதனுடன் தொடர்பு கொள்கிறான். இந்தச் சூழலில் மதம் (Religion) வாழுகின்ற அநுபவம் (Living experience) ஆகின்றது. இறுக்கமான பாரம்பரியங்கள், விதிமுறையான சடங்குகள் ஆதியன இல்லாதிருக்கின்றமை இந்த மதத்தொடர்பின் நேரடித்தன்மைக்கு (directness of the communication) உதவுகின்றது.

இந்தப் பண்பாட்டினுள் முருகன் பற்றி நிலவும் பௌராணிக மரபு சாராத நம்பிக்கைகள் முருகன் பற்றி இம்மக்கட் கூட்டத்தினரிடையே நிலவும் இன நினைவுகள் (racial memories), குறிஞ்சித் தெய்வம், வேலன், குறமகள் கணவன் என்பவை இந்த ஈடுபாட்டைச் சுலபப் படுத்துகின்றன. இந்த மக்கட் கூட்டத்தினரிடையே நிலவும் அடிப்படை யான வாழ்க்கைப் பண்பாட்டுச் சமத்துவத்துக்கும், இன்று இம் மக்களி டையே மேற்கிளம்பும் ஒருமையுணர்வுக்கும் முருகன் (தமிழ்த் தெய்வம் முருகன், குழந்தை முருகன் என்ற கோட்பாடுகள்) ஒரு சின்னமாகின் றான். ''முருகன்'', ''முருகையா'' ஆகின்றான்; ''முருகையா'', ''முருகன்'' ஆகின்றான். தனிமனித அபிலாசைகள் குழும நிலைத் தேவைகள் யாவும் இணைகின்றன.

ஐதிகக் கட்டுகளற்ற முருகனின் ''நேரடித்தொடர்புணர்வு'' இங்கு கோலோச்சுகின்றது.

இதனை எடுத்துக் கூறும்பொழுது, சந்நிதியிலும் இப்பொழுது படிப்படியாக வளர்ந்து வரும் சமஸ்கிருத நெறிப்பாடு (Sanskritiaztion) பற்றிக் குறிப்பிடுவது அவசியமாகும். உருத்திராபிஷேகம், புராணப் படிப்பு எனப்பல கிரியைகள் இப்பொழுது புகுந்துள்ளன. சந்நிதிக்கான சமூக அங்கீகாரம் வளர வளர, சந்நிதிக்குழுமம் சமூக அதிகாரச் சின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னங்களைப் பகிர்ந்து கொள்ளும் நிலை ஏற்பட ஏற்பட சமஸ்கிருத நெறிப்பாடு வளர்வது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். மந்திரமில்லாமலே சமஸ்கிருத நெறிப்படுகை நடக்கும் அசாதாரண மதநடைமுறையினைச் சந்நிதியிலே காணலாம்.

ஆனால் இந்தச் சமஸ்கிருத நெறிப்படுகையினூடே, இவற்றைக் கைவிட்டு, முன்னர் நிலவிய அல்லது இன்னும் மேலாண்மையுடைய தாக விருக்கும் நேரடித் தொடர்பநுபவத்துக்குத் தொடர்ந்து முக்கியத் துவம் கொடுக்க வேண்டுமென்ற ஒரு நம்பிக்கை நிலைப்பாடும் சந்நிதி யின் வழிபாட்டாளர்களிடையேயுண்டு. அண்மையில் நடந்த ''புதுத் தேர் எரிப்பு'' (இது இலங்கைப் படையினராற் செய்யப்பட்டது) பற்றிய சில நம்பிக்கைகளை இங்கு மனங்கொள்வது அவசியம். ''சந்நிதியா னுக்கு இந்தப் பெரிய ஆடம்பரமான தேர்களில் நம்பிக்கை இல்லை; பழைய கட்டுத்தேர், புதுத்தேருக்கு அருகிலே நிறுத்தப்பட்டிருந்தும், புதுத்தேரை எரித்த சுவாலையில் ஒரு பொறிகூடப் பழந்தேரை ஒன்றும் செய்யவில்லையே'' என்ற கூற்றினை நான் பலர் வாயிலாகக் கேட்டுள் ளேன். நானே கண்டேன்.

சமஸ்கிருத நெறிப்படுகை வேகம் அதிகரிக்க, அதிகரிக்க சந்நிதி யின், அதற்கேயுரித்தானதாக இருந்து வந்த மத அநுபவத்தளம் மறையத் தொடங்கும்.

சாதாரண மக்களின் நேரடி (மத அநுபவத்) தொடர்பு முறைமை யின் தொழிற்பாட்டைச் சந்நிதியிற் காணுகின்ற அதேவேளையில், இந்த அநுபவ வட்டத்துக்கும் விளக்கத்துக்கும், முற்றிலும் அப்பாலனதும் ''சொல்'', ''பதம்'' கடந்ததுமான மறைஞான அநுபவத்தினைப் பெறு வோர் பலரின் களமாகவும் சந்நிதி அமைந்துள்ளமையை குறித்துக் கொள்ளல் வேண்டும். சந்நிதியில் வன்மையான ஒரு சித்தர் பாரம்பரி யமும் உண்டு.

ஜேர்மன் சாமியாரும், ஆனைக்குட்டிச் சாமியாரும் இத்தலத்திற் பெறும் ''நிம்மதி'' யாது? அந்த மறைஞானத் திருப்தியை நாம் சற்று முன்னர் விவரித்த சாதாரண மக்களின் நேரடித் தொடர்புணர்வுத் திருப்தியோடு எவ்வாறு இணைத்து நோக்குவது? என்பது பற்றி ஆராய் வது இத்துறை வல்லுநர்களின் கடனாகும். இவர்கள் மத அறிவு பற்றிய வாய்ப்பாட்டு மீட்டல்களை ஆராய்ச்சி யெனக்கருதாது, வளக்கொழிப் புடனுள்ள இவ்வாய்வுக் களங்களைத் தமது படிப்பின் பட்டறைகளாக் கிக் கொள்ள முன்வரவேண்டும்.



எவ்வாறாயினும் சந்நிதியின் மத அநுபவத் தனித்துவம் மிக நுண்ணிதாக எடுத்து ஆராயப்படுதல் அவசியமாகும்.

அவ்வாறு ஆராயும் பொழுது முக்கியமான இடத்தைப் பெற வேண்டுவது வழிபடுபவர்களின் மனநிலையாகும். அதாவது நாம் முன்னர் குறிப்பிட்ட ''வாழுகின்ற அநுபவ'' (living experience) த்தன்மை, 'மதத் தொடர்பின் நேரடித்தன்மை' (directness of the communication) ஆதியனவற்றை எவ்வாறு விளங்கிக் கொள்வது என்பது முக்கியமான வினாவாகின்றது.

சந்நிதியிற் காணப்படும் மத அநுபவம் மற்றைய சைவத்தலங்களிற் காணப்படுவதிலிருந்து வேறுபட்டதென்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர். வேறுபட்டதான இந்த வழிபாட்டு நிலையாது? இதனை எவ்வாறு குறிப்பிடலாம்?

சண்முகதாஸ் தம்பதியினர் இந்நூலில் அதனை ''அன்புநிலை'' (அத்தியாயம் 6) என்று குறிப்பிடுகின்றார்கள். ''அன்பு நிலை'' என்னும் தொடரினை அவர்கள் ''பக்திநிலை'' யின் கருத்திலேயே பயன்படுத்து கின்றனர் என்பது துல்லியமாகத் தெரிகின்றது.

சந்நிதியிலே தொழிற்படுகின்ற மத அநுபவ நிலையினை எவ்வாறு குறிப்பிடலாம் என்பதே இங்குள்ள வினா.

அங்கு வழிபட வருகின்ற ஒவ்வொருவனும் தன்னிடத்துச் சந்நிதி யானுக்கு ஒரு தனிப்பட்ட, சொந்த (personal) 'உறவு' உண்டென்ற அடிப்படையிலேயே வருகிறான். அவ்வாறு அவன் வருகின்ற பொழுது, அங்கு வருகின்ற மற்றைய பல்லாயிரக்கணக்கானவர்கள் ஒவ்வொரு வரும் எவ்வெவ் மனநிலையோடு வருகின்றார்கள் என்பதைப் பற்றி அதிகம் சிரத்தை கொள்ளாமல், அவர்கள் வருகையை நடக்கும் ஒரு நிகழ்ச்சியாக ஏற்றுக் கொண்டு, தனது தொடர்பினைப் பிரதானப் படுத்தியே வருகிறான். இவன் ஏற்படுத்துகின்ற இந்த உறவிலே பூசகருக்குக்கூட (கிரியைகள் செய்பவர் என்ற முறையில்) முக்கியத் துவம் இல்லை. இத்தலத்தில், அச்சூழலில் ஏற்படும் தொடர்பு அநுபவம் (communication experience) தான் முக்கியமானது.

மேலும் இந்த அநுபவம் முற்றிலும் மனித நிலைப்படுத்தப்பட்ட (humanized) ஒன்றாகும். அதாவது முருகனை மனித நிலைப்படுத் தப்பட்ட ஒன்றாக்கி, அந்த ''மனித'' நிலையில் தனக்கும் அவனுக்கும் உறவு நிகழ்வதாக அவன் எண்ணிக்கொள்கிறான். நேர்த்திக்கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பதாக இருந்தாலென்ன தீர்ப்பதாகவிருந்தாலென்ன இந்த உறவு நிலையே காணப்படுகின்றது.

தமிழ்ப்பாரம்பரியத்தில் இந்த உறவினை ஏற்படுத்தும் மத அநுபவ நிலையினை நாம் ''பக்தி'' என்று கூறுவதுண்டு. அதாவது தெய்வத்துக்கும் கும்பிடுபவனுக்குமிடையே ஒரு தனிப்பட்ட, சொந்த உறவுமுறையொன்று கற்பிக்கப்படுவதான ஒரு தொடர்புமுறைமை அது.

இந்திய மத வரலாற்றில் இந்த மத உணர்வு வேத காலம் முதல் பகவத்கீதை காலம்வரை பேசப்பட்டு வந்துள்ளதெனினும், பகவத் கீதையில் ''பக்திமார்க்கம்'' என மதஅநுட்டான வழியொன்று பேசப்பட்டுள்ளதெனினும், உண்மையில் தமிழ்நாட்டில், கி.பி.7-ம் நூற்றாண்டு முதல் பெருஞ் சக்தியாக மேற்கிளம்பிய சைவ, வைணவ மத எழுச்சியே இந்த மத அநுபவத்திற்கு இலக்கியமும் இலக்கணமும் வகுத்தது. தமிழ்நாட்டில் தோன்றிய இந்த மத அநுபவ முறைமையும் இலக்கிய வெளிப்பாடும் பின்னர் பதினோராம் நூற்றாண்டுமுதல் படிப்படியாக வடக்கு நோக்கிச் சென்று முழுமையான இந்திய அநுபவமாக மாறிற்று.

தமிழ்நாடு இந்தியப் பண்பாட்டுக்கு அளித்த பெரும் செல்வம் பக்திப்பண்பாடு ஆகும்.

இந்தப் பக்திப் பண்பாட்டின் தொல்சீர் உதாரணங்கள், செந்நெறி எடுத்துக்காட்டுக்கள் தேவாரம், திருவாசகம், திருப்பாசுரம் ஆதியனவாகும்.

இந்திய இலக்கியப் பின்புலத்திலும், உலக இலக்கியப் பின்னணியிலும் தமிழிலக்கியத்தை வைத்து நோக்கும் பொழுது, தமிழிலக்கியத்தின் செழுமைக்கு இவை காரணம் என்பது தெரியவரும்.

இந்த இலக்கியச் செல்வத்தின் தோற்றத்துக்குக் காலாக விருந்தது இவற்றைப் பாடியோர் தமது வழிபடு தெய்வத்துடன் கொண்டிருந்த தனியுறவு நிலைப்பட்ட, ''சொந்த'' மான உறவுணர்வேயாகும்.

அந்த உணர்வு தமிழிலக்கியத்தின் செழுமையைச் சித்திரிக்கும் இலக்கியங்களைத் தந்துள்ள அதே வேளையில், அந்தக் குழுமத்தின் தொடர்ச்சியான பண்பாகவும் அமைந்து வந்துள்ளது. தமிழரிடையே பரவிய இஸ்லாம், கிறித்தவம் ஆதியனவும் இப்பக்தி நிலையை ஏற்றுக் கொண்டன என்பது வரலாற்றுண்மையாகும்.

இப்பக்தி நிலை - அதாவது வழிபடு தெய்வத்துடன் மனித உறவு நிலைப்பட்ட சொந்தக் கொடுக்கல் வாங்கலுணர்வு - கொண்ட அத்தியந்த உறவு ஒன்றினை வைத்துக் கொள்ளல், இக்குழுமத்தினரிடையே காணப்படும் ஒரு முக்கிய பண்பாகும்.



இந்த உறவு காரணமாக மதத்துக்கும் மனிதனுக்குமுள்ள உறவில், அந்த உறவின் சமூக இறுக்கத்திற் சில அசாதாரணமான பரிமாணங்கள் உள்ளன. அவை பற்றிப் பேசுவதற்கு இது இடமன்று.

ஆனால் இங்கு வற்புறுத்தப்பட வேண்டுவது, சந்நிதியில் தொழிற்படுவது, இந்தக் குழுமத்தின் பாரம்பரிய மத அநுபவ முறையான பக்தி அநுபவமே என்ற உண்மையே. அதற்கு இதுவரை, நமக்கு ஏற்கனவேயுள்ள தொல்சீர், செந்நெறி இலக்கிய உதாரணங்கள் இல்லையெனினும், அடிப்படையில் தொழிற்படுவது அந்த மனோநிலைதான். அதாவது வழிபடுதெய்வத்துடன் மனித நிலைப்பட்ட, மனித உறவுச் சின்னங்களைக் கொண்ட உறவினை வைத்திருத்தல்.

இந்த மனநிலை தனித்தனி பக்தர்களிடையே காணப்படுகின்ற ஒன்றாகவே அமைவதெனினும், அது அந்த மனிதர்களின் தொகுதியான சமூகத்தினது (தமிழ்ச் சமூகத்தினது) சமூக உளவியல் அமிசமாகவும் (an aspect of their social psychology) அமைந்து விடுகின்றது.

இங்கு தெய்வம் என்பது சித்தப் பொருளாகவல்லாது உணர்வுப் பொருளாக, உணர்வுறவு ஊடகமாக அமைவதைக் காணலாம். மாணிக்க வாசகரிடத்துக் காணப்பட்ட அதே பக்தியுணர்வு, நாவுக்கரசரிடத்துக் காணப்பட்ட அதே பக்தியுணர்வு, சுந்தரிடத்துக் காணப்பட்ட அதே பக்தியுணர்வு சந்நிதியிற் கும்பிடும் சாதாரண விவசாயிடத்தும் மீன்பிடிகாரனிடத்தும் விவசாயத் தொழிலாளியிடத்தும் காணப்படுகின்றது என்று சொல்ல மரபின் 'தடிப்பு'த் தடுக்கலாம். ஆனால் இத்தகைய சாதாரண மனிதர்கள்தான் - சலவைத்தொழிலாளி, பறையர் குலத்தவர், மீன்பிடிகாரன், சாதாரண விவசாயி, மட்பாண்டம் வனைந்தவன் முதலியோரே - பக்தி இயக்கத்தின் தூண்களாக அமைந்தனர் என்பதை மறந்துவிடக் கூடாது. அவர்களை நாயனாராக்கி, அறுபத்து மூவர்களாக வழிபடத் தொடக்கிவிட்டு, அந்த உணர்வையே அந்தச் சமூக மட்டங்களிலிருந்து அந்நியப்படுத்திக் கொள்வது (alienating) கருத்தைப் பொருளுருப்படுத்திப் பின்னர் அப்பொருளை உச்சாணி விடயமாகப் போற்றும் மனோபாவத்தின் வெளிப்பாடேயாகும்.

சந்நிதியில் அரசோச்சும் உணர்வு, பக்தியுணர்வுதான். ஆனால் இதுவரை சமூக, இலக்கிய அங்கீகாரம் பெறாத பக்தி உணர்வு இது. கந்தபுராணத்தினுள் வராத இந்த ஐதீகப் பாரம்பரியத்துக்குச் சாதாரண மக்களிடையே ஒரு 'பெரிய' 'புராண' மரபுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சண்முகதாஸ், மனோன்மணி ஆகியோரின் இந்த நூல் சந்நிதி அநுபூதியாளர்களின் பெரியபுராணம் ஒன்றுக்கான ஒரு தொடக்க முயற்சியாகும்.

இறுதியில், 'சொந்த நிலைப்'பட்ட ஒரு குறிப்பு. பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதியினர் இந்நூலின் பின்னிணைப்பாகத் தொகுத்துள்ள ''சந்நிதி இலக்கியங்கள்'' என்ற பகுதியில், எனது தகப்பனார் காலஞ்சென்ற, பண்டிதர், சைவப்புலவர் த.பொ.கார்த்திகேசு அவர்கள் 1962 ஆம் ஆண்டு வெளியிட்ட செல்வச்சந்நிதி வேற்பெருமான் தோத்திரப் பாமாலை என்னும் நூலிலிருந்து சில பகுதிகளை இங்கு பிரசுரித்துள்ளனர். மகன் என்ற பெருமித உணர்வு குத்திட்டுக் கிளம்புகின்றது. நான் செய்யாத ஒன்றை நண்பர் சண்முகதாசும் அவர் மனைவியும் செய்துள்ளனர். எனது பணிவான வணக்கங்கள்.

*வேண்டுவார் வேண்டுவதை வேண்டியவாறே கொடுக்கும்*
*ஆண்டிநீ ஐயா அருள்வாய் வேலாயுதனே.*

**(1988)**

பி.கு: இந்நூலின் 117ம் பக்கத்திலே ''சந்நிதியிற் கூத்துக்கள் ஆடப்பட்டதற்கான சான்றுகளோ, செய்திகளோ கிடைக்கவில்லை'' என ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

1963ம் ஆண்டு இலக்கிய 'உலகில்' மரபுப் போராட்டம் நடந்து கொண்டிருந்த பொழுது ஒரு சனியன்று இரவு கட்டுவனில் நடந்த ஒரு விவாதத்திற் கலந்து கொண்டுவிட்டு, அன்றிரவு சந்நிதியில் நடந்த காத்தவராயன் கூத்தினைப் பார்க்கச் சந்நிதி சென்றேன். ஞாயிறு காலை எமது உறவினர் ஒருவர் அளித்த அன்னதானத்திற் கலந்து கொண்டு வீடு திரும்பினேன். அக்கூத்தினைப் பார்க்க எனது தகப்பனாரும் வந்திருந்தார்.



# யாழ்ப்பாணத்தில் 'தொடர்பும்' பண்பாடும்

## *1930 ஆம் தசாப்தத்து ஈழகேசரிப் பத்திரிகையைத் தளமாகக் கொண்ட ஒரு தொடர்பியல் நோக்கு*

வரலாறு என்பது நிகழ்காலம் கடந்த காலத்தைப் பார்க்கின்ற ஓர் அறிமுறையாகும். நிகழ்காலத்தின் சிந்தனையோட்டங்கள், தேவைகள் கடந்தகாலத்தைப் பார்ப்பதற்கான குவிமுனை (Focus) யாகின்றன. இதனால் வரலாறெழுதியல் காலத்துக்குக் காலம் விரிவடைந்து செல்வதை நாம் அவதானிக்கலாம். இந்தக் குவிமுனை அழுத்த வேறுபாடுகள் கடந்த கால நிகழ்ச்சிகளைக் கண்டறிந்து கொள்வதிலும், கண்டறியப்பட்டனவற்றினை விளங்கிக் கொள்வதிலும் ஆழ, அகல விஸ்தரிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

ஈழகேசரி நா.பொன்னையா பற்றிய நமது பார்வையும் இந்த வரலாற்றெழுதியற் போக்கினை (வளர்ச்சிகளினை) எடுத்துக்காட்டுவதாக அமைதல் அவசியம்.

குரும்பசிட்டி நாகமுத்தர் பொன்னையாவின் ''வாழ்க்கைச் சீவியத்தை'' குவிமுனையாகக் கொண்டு அவரது சாதனைகளையும் செல்வாக்கினையும் அறிவது ஒரு நோக்குமுறை; அவரது சாதனைகள், அவற்றின் பிரதேச, தேசிய, மொழிநிலை முக்கியத்துவங்களைத் தளமாகக் கொண்டு அவற்றினூடே 'மேற்கிளம்பும்' பொன்னையா ஆளுமையைக் கண்டறிவது இன்னொரு நோக்குமுறைமை. முதலாவது ஏற்கனவே தெளிவாகச் செய்யப்பட்டுள்ளமையால், இரண்டாவதற்கான பிராரம்பமுயற்சியினை இந்த நினைவுரையின் மூலம் தொடக்கி வைக்கலாம் என்று கருதுகின்றேன்.

உரை நிகழ்த்துபவருக்கும், உரைப்பொருளாக விளங்குபவருக்கும் (அல்லது விளக்குவதற்கும்) உள்ள தொடர்பினை எடுத்துக் கூறுவது நினைவுரை மரபுகளில் ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய குலமுறைகிளத்தலுக்கான ஒரு வாய்ப்பும் எனக்கு உண்டு. ஈழகேசரி தொடங்கப் பெற்ற இரண்டாம் மாதத் தொடக்கத்தில், (30-7-1930) அப் பத்திரிகையின் இரு வாரத் தொடர்க் கட்டுரையாக வெளிவந்த ''எழுத்தின் உற்பவம்'' என்னும் கட்டுரையை எழுதிய ''கோப்பாய் ஆசிரிய கலாசாலை த.பொ. கார்த்திகேசு''வின் மகன் நான். ஆயினும் நான் இந்த நினைவுரை முயற்சியை மேற் கொள்வதற்குக் காரணம் தமிழர் சமூக வரலாறு என்னும் எனது ஆய்வுச் சிரத்தையின் ஒரு அமிசமான ஈழத் தமிழர் சமூக வரலாற்றை அறிந்து கொள்வதற்கு ''ஈழகேசரி'' பற்றிய ஆய்வு பெரிதும் பயன் தரும் என்பதாலாகும்.

யாழ்ப்பாணத்தின் வரலாற்றைச் சில பெரிய மனிதர்களின் வாழ்க்கை வரலாறாகவே கொண்டுள்ள ஒரு துர்ப்பாக்கிய வரலாற்றுப் போக்கு நம்மிடையே நன்கு வேரூன்றி விட்டது. அது கூட விளங்கிக் கொள்ளப்படத்தக்க ஓர் அணுகு முறையே. ஆனால் இதில் விசனம் தருவதென்னவெனில், யாழ்ப்பாண வரலாற்றின் அத்தியாயங்கள் எனக் கருதப்படும் அந்தத் தனிப்பட்ட வாழ்க்கை வரலாறுகளின் மிக முக்கியமான வரலாற்றுண்மைகள் சில மறைக்கப்படுமளவுக்கு எடுத்துக் கூறப்படாமையாகும். ஆறுமுகநாவலர் முதல் பொன்னம்பலம் இராமநாதன் வரை பலர் இந்த நோக்குக் காரணமாகத் தண்டிக்கப்பட்டு விட்டனர் என்றே சொல்லல் வேண்டும்.

அதிர்ஷ்டவசமாக திரு.பொன்னையா அவர்கள் அத்தகைய தண்டனைக்கு இன்னும் ஆளாக்கப்படவில்லை.

ஆரம்பகால ''ஈழகேசரி''யின் ஆளுமை, அதன் பிரசுரகர்த்தரும் பத்திராதிபருமான திரு.நா.பொன்னையா அவர்களின் ஆளுமையின் ஒளித்தெறிப்பேயாகும். இலங்கையின் புதினப்பத்திரிகையின் வளர்ச்சியில் ''லேக் ஹவுஸ்'' விஜயவர்த்தனா அவர்கட்கு எத்துணை இடமுண்டோ, ஈழத்துத் தமிழ்ப் புதினப் பத்திரிகை வளர்ச்சியில் நா.பொன்னையா அவர்களுக்கு அத்துணை இடமுண்டு. ''தினகரன்'', ''வீரகேசரி'' ஆகிய நாளிதழ்கள் வரு முன்னரே தோன்றி, செய்தியளிக்கையில், இலங்கைத் தமிழ் நிலைப்பட்ட சில புதிய பரிமாணங்களை ஏற்படுத்திக் கொண்ட பெருமை திரு.பொன்னையா அவர்களைச் சாரும். ஈழத்துத் தமிழரின் முதலாவது புதினப்பத்திரிகை (அது வார இதழாகவே வெளிவந்ததெனினும்) ''ஈழகேசரி''யே என்று விதந்து கூறப்படத்தக்க அளவுக்கு, பிரதேசப் பத்திரிகையான அதனை அவர் நடத்தினார்; பத்திரிகைத் தொழில் முறைமையின் (Journalism) தர்ம, அதர்மங்களைத் தெரிந்தவராய், தனது கருத்துநிலைச் செம்மையிலிருந்து பிறழ்ந்து போகாதவராய்க் காணப்பட்டார் என்பது குறிக்கப்படாது போய்விடக்கூடாது.



எனவே தான் நான் இந்தத் தலைப்பினை வரித்துக் கொண்டேன். பத்திரிகைப் பணியைத் தமிழ்த் தொண்டாக மாத்திரம் பார்க்காது அதன் தாய்த்தளமான தொடர்பியலின் வழி நின்று நோக்கி, ஈழகேசரி எவற்றைச் சொல்ல வந்தது, அது யாவற்றைச் சொல்லியது, ஏன் சொல்லியது, யாருக்குச் சொல்லியது, எத்துணை வன்மையுடன் சொல்லியது, இவ்வாறு சொல்லும் பொழுது, சொல்லப் பயன்படுத்தப்பட்ட மொழியில் என்ன மாற்றங்கள் ஏற்பட்டன என்பனவற்றை அறிய முனையும் ஒரு சமூக வரலாற்றுத் தேடலாக; இன்னும் திட்டவட்டமாகக் கூறினால் தொடர்புச் சாதனச் சமூகவியல் (media Sociology) தேடலாக இவ்வுரையை அமைத்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இதன் காரணமாக, இந்த உரை பின்வரும் முறையில் அமைக்கப் படுகின்றது.

முதலில், தொடர்பு (Communication) என்பது யாது என்பதை மிகச் சுருக்கமாக விளக்கி, தொடர்ந்து 'பண்பாடு' யாது என்பதை எடுத்துக் கூறி, பின்னர் தொடர்புக்கும் பண்பாட்டுக்குமுள்ள ஊடாட்டங்களைத் தொட்டுக்காட்டி, மேலே சென்று அச்சுத் தொடர்பு முறைமையின் பண்புகளை விவரித்து, தொடர்பியல் நோக்கின் பரிமாணங்களை வரையறை செய்து கொள்ள விரும்புகின்றேன்.

அதனைத் தொடர்ந்து ஈழகேசரி தொடங்கிய காலத்தில் நிலவிய சமூக- அரசியல் நிலைமைகளையும், பத்திரிகைத்தொழில் நிலையையும் எடுத்துக்கூறவுள்ளேன்.

அதற்குமேல், அதிகாரப்பட்டு நிற்கும் தசாப்தத்தின் (1930களின்) பிரதான நிகழ்வுகளையும் சமூக - அரசியற் பிரச்சினை மையங்களையும் எடுத்துக் கூறவுள்ளேன்.

இவற்றின் பின்னர் 1930 - 1939க் காலத்தில் ஈழகேசரியின் அமைப்பு, பிரசுரப் பொருள், மொழிநடை, வாசகவட்டம் ஆகியனவற்றைப் பருமட்டாக எடுத்துக்கூறவுள்ளேன்.

இவ்வகையில் எடுத்துக்கூறும் பொழுது ஈழகேசரியின் வரலாறும், அதனூடாக அதன் தளமும் களமுமாக அமைந்த அக்கால யாழ்ப்பாண வாசகரின் ஆளுமையும், அவர் வாழ்ந்த சமூகத்தின் மாறுநிலையும் புலனாகுமென்று கருதுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# II

''தொடர்பு'' எனும் சொல், இங்கு ''கொம்யூனிக்கேஷன்'' (Communication) எனப்பெறும் ஆங்கிலப்பதத்தின் மாற்றீடாகப் பயன் படுத்தப்படுகிறது.

''தொடர்பு'' என்பது பொதுவில் வாய்மொழியாலோ அன்றேல் அதற்கிணையான பிற குறியீடுகளாலோ (எழுத்து, சித்திரம் ஆதியன) தெட்டத்தெளிவாக ஒரு குறிப்பிட்ட நோக்கத்தில் கையளிக்கப்பெறும் தகவல்கள், செய்திகளையே குறிக்கும். அவ்வாறு குறிப்பிடும்பொழுது, அத்தகவற் செய்தி, அதனைப் பெற்றுக் கொள்பவரால் எத்தனை விளக்கத்துடன் உள்வாங்கப்பட்டது என்பதனை அறிந்து கொள்வதற் குதவும் ''மீள் ஊட்டு'' (Feedback) ம் அந்தத் ''தொடர்பு'' நிகழ்ச்சியின் ஓரங்கமாகவேயிருக்கும். இந்தக் கருத்து உண்மையில் சொல்லொடு பொருட்கருத்தே, ''தொடர்பு'' என்பது, இந்நிலைக்கு மேலே சென்று, மக்கள் ஒருவரையொருவர் பாதிக்கும் முறைமைகளையும் அன்றேல் ஒருவரை ஒருவர் செல்வாக்குக்கு உட்படுத்தும் முறைமைகளையும் சுட்டி நிற்கும். அந்த நிலையில் ''தொடர்பு'' என்பது சமூக அசைவியக் கத்துக்கு வேண்டப்படுவதான ஊடாட்டத்துக்கு (Interaction) அச்சாணி யாக அமைகின்றது.

அந்தத் தொடர்பு

*நேருக்கு நேர்,*

*எழுத்து,*

*மனிதன் - யந்திரம்,*

*மனிதன் - யந்திரம் - மனிதன்*

*யந்திரம் - யந்திரம்,*

என்ற வகையிலே நடைபெறும்.

தொடர்பினை ஏற்படுத்துபவை ''தொடர்பு ஊடகங்கள்'' (Communication Media) எனப்படும். இவற்றை, ஒரு குறிப்பிட்ட மட்டத்தில் அச்சு ஊடகங்கள் (எழுத்தை மீளுருவப்படுத்திப் பரப்புபவை- Print Media), மின்னியல் ஊடகங்கள் (ஒலி, பிம்பங்களை மீளுருவப்படுத்திப் பரப்புபவை - Electronic Media) என வகுத்தல் வழக்கம்.

நவீன உலகின் அன்றாட அசைவியக்கத்துக்கு இந்தத் தொடர்புச் சாதனங்கள் அத்தியாவசியமானவை. இந்த ஊடகங்கள்,



*தகவல்* (Information)

*குறிப்புரை* (Comment)

*மகிழ்வளிப்பு* (Entertainment)

ஆகியனவற்றை வழங்குவனவாக அமையும். இம்மூன்று அமிசங் களும் தனித்தனியாக எடுத்துச் சுட்டப் பெறாத முறையில் இணைந்து ஒரு கலவையாகவே வரும்.

தொடர்பின் தன்மை, தொடர்பு ஊடகங்களின் அசைவியக்கத் துக்கு வேண்டிய நிலைகள் ஆதியனபற்றி ஊன்றிச் சிந்திக்கும் பொழுது எந்தவொரு 'தொடர்பு' நடவடிக்கையும் ஏதோ ஒரு பண்பாட்டுச் சூழலினுள் நடப்பதே என்பது புலனாகும்.

'பண்பாடு' (Culture) எனும் எண்ணக்கரு இரண்டு நிலைகளிலுள்ள நடைமுறைகளை தனித்தும் ஒருமித்தும் குறிப்பிடுவதாக அமையும்.

ஒரு நிலையில் அது சமூகத்தின் வரலாற்றோட்டத்தில் மனத்தினது (சித்தத்தினது) ஈடுபாட்டை (அல்லது ஈடுபாடுகளை)க் குறிப்பதாகும். அத்தகைய கருத்துப்போக்கான விடயங்களும் பிண்டப்பிரமாணமான பொருட்களின் பயன்பாடும் இணைந்து சமூக வாழ்க்கையின் முழுமை யைச் சுட்டும் பொழுது 'பண்பாடு' எனும் எண்ணக்கரு மேற்கிளம்புவ தைக் காணலாம்.

அதாவது ''பண்பாடு' எனும் பொழுது ஒரு மக்கட் கூட்டத்தினரால் பகிர்ந்து கொள்ளப் பெறும் உற்பத்திப் பொருட்கள், அறிவு, மரபுகள், திறன்கள், நம்பிக்கைககள் ஆகியனவை எண்ணக்கரு மட்டத்தில் ஒருமித்துக் குறிப்பிடப்படுகின்றன.

,, பண்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட சமூகப் பிரக்ஞை நிலையும், அதற்கான ஏதுக்களும், அந்தப் பிரக்ஞை நிலையினைப் பரம்பரை, பரம்பரையாகக் கையளிப்பதற்கான நடைமுறையுமாகும்.

பண்பாடு பற்றிய இப் பண்பு விளக்கம், அது ''தொடர்பு'' முறை மையின் தொழிற்பாட்டால் பேணப்படுவது என்பதை நன்கு விளக்கும்.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் தொடர்பு முறைமைகள் சுமுகமாக இயங்காவிட்டால் அதன் பண்பாட்டுக் கையளிப்போ, பண்பாட்டு வெளிப்பாடோ நடவாது. அதாவது பண்பாட்டுக்கும் தொடர்புக்கும் ஊடாட்ட உறவு உண்டு. தொடர்பு, பண்பாட்டு வட்டத்தினுள் நடை பெறுகின்றது. பண்பாட்டின் தொடர்ச்சி தொடர்பு முறைமைகளினால் பாதிக்கப்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு முறைமைகள் மாறும் பொழுது பண்பாட்டில் மாற்றம் புலனாகும். பண்பாடு மாறும்பொழுது புதிய தொடர்பு முறைமைகள் வேண்டப்பெறும்.

இக்கட்டத்தில் ''தொடர்பு ஊடகங்கள்'' என்பவை ஏதோ ஒரு தொழினுட்பத்துடன் (Technology) சம்பந்தப்பட்டவையென்பதை வலியுறுத்திக் கொள்வது அவசியமாகின்றது. இது பாரம்பரியப் பறையறிவிப்பாக இருக்கலாம். அன்றேல் நவீன தொலைக்காட்சியாக இருக்கலாம். இரண்டுமே ஒவ்வொரு தொழினுட்ப நிலையைச் சேர்ந்தவை.

புதிய தொடர்பு ஊடகங்கள் இதனால், ஏதோ ஒரு வகையில் சமூக அசைவியக்கத்தோடு தொடர்புபட்டவையே.

'ஈழகேசரி' பற்றிய நமது ஆய்வுக்குத் தளமான 'அச்சு ஊடகத்தின்' (Print Medium) சமூக முக்கியத்துவத்தை நோக்குவோம்.

முதலில் இது வாசிப்பின் பரப்பை விஸ்தரிக்கின்றது. இந்த விஸ்தரிப்பு, அறிவுப்பரம்பல் பற்றி முன்னர் நிலவிய வரையறைகளை உடைப்பதாகவே அமையும்.

அச்சு ஊடகம் பற்றிக் குறிப்பிடும் தொடர்பியலாளர் ''அது சனநாயகத்தின் சிசு; அதே வேளையில் அதன் செவிலியுங் கூட'' என்பார்கள்.

அச்சு ஊடகம் நூல், பத்திரிகைகளோடு சம்பந்தப்பட்டது. பத்திரிகைத் தொழிலே (Journalism) அச்சுச் சாதனம் வழிவந்த ஒரு சனநாயக மயப்பாட்டின் சிசு தான். நூல் (புத்தகம்) என்பது வரன் முறையான அறிவின் தரப்படுத்தப்பட்ட ''அளிக்கை''யானால் பத்திரிகை என்பது வித்தியாசப்படும் அறிவு மட்டங்களினூடே இடம்பெறும் சராசரி நிலைப்புள்ளி ஆகும். அதாவது பத்திரிகைக் கலை சராசரி வாசகருக்கானது. இந்தச் சராசரி வாசகரது சமூகப்பின்னணி யாது? குறிப்பாக நமது சமூகங்களில் இவர் எங்கிருந்து மேற்கிளம்பினார்?

இவற்றுக்கான விடைகள் எம்மை இரண்டு புதிய எண்ணக் கருக்களுக்கு இட்டுச் செல்லும். ஒன்று எழுத்தறிவு (Literacy) என்பது, மற்றது இலக்கிய உற்பத்திமுறைமை (Literary Mode of Production) என்பது.

எழுத்தறிவு என்பது சனநாயக நியமங்களில் ஒன்று. இதன் படிக்கு அறிவு உயர்ந்தோருக்கேயுரிய பிரத்தியேகத் திறன் அன்று; இது ஒரு பரிமாணம்.



எழுத்தறிவின் மற்றைய பரிமாணம் மொழியின் தரம், அதன் நெகிழ்ச்சி நிலை ஆகியவற்றை உள்ளடக்கி நிற்பது. எழுத்தறிவு என்பது வரிவடிவக் குறியீடுகளை ஒலிவடிவத்தினவாகப் பெயர்க்குத் திறனுடன் நிறைவுற்றுவிடுவதில்லை. எழுத்தறிவு, சொற்களுக்கு அர்த்தத்தை வழங்கும் ஆற்றல் சம்பந்தப்பட்டது. அத்துடன் ஒருவர் எடுத்துக் கூறவிரும்பும் ஒரு கருத்தினை இனம்கண்டு கொள்வதான ஒரு முயற்சியாகும். இவ்வாறு இனங்கண்டு அறிந்ததன் பின்னர் அது வாசகனின் சொற்களஞ்சியத்தில் ஒன்றாகி விடுகின்றது.

சனநாயக சமூகத்தில் பத்திரிகைகள் எழுத்தறிவுடன் இணைந்த உறவுடையவை. பாரம்பரிய சமூக அமைப்பிலிருந்து விடுபட்டு நவீனமயப்படும் ஒரு சமூக அமைப்பில் எழுத்தறிவென்பது, முன்னர் கல்வி (எழுத்து)ப் பண்பாட்டுள் வராத சமூக மட்டத்தினரைக் கல்வி வட்டதுள் கொண்டுவரும் முயற்சியாகும்.

இவையாவற்றையும் வளரும் பத்திரிகைத்துறையின் நிலைநின்று நோக்கினால், எந்த ஒரு பத்திரிகையும் சனரஞ்சகப் பத்திரிகையாகத் திகழவேண்டுமானால் அது புதிய எழுத்தறிவுடையோரைத் தனது வாசகராகக் கொள்ள வேண்டுவது ஒரு தொடர்பியல் நிர்ப்பந்தமாகும்.

மேலும் நமது சமூக அமைப்பில் தனிப்பட்ட ஒரு தொழில் முனைப்பாளரின் பத்திரிகைப் பிரசுரம் என்பது லாபநோக்குக் கொண்ட ஒரு வியாபார முயற்சியாகும் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

அடுத்து, இலக்கிய உற்பத்தி முறைமை (Literary Mode of Production) பற்றி ஒரு சிறிது கூறல் வேண்டும். ஆங்கில இலக்கிய விமரிசனத்தில் ரெறி ஈகின்ற்றன் (Terty Eagleton) என்பார் இந்தக் கோட்பாட்டைப் பிரபலப்படுத்தியுள்ளார். ஆங்கில இலக்கிய விமர்சனப் போக்குப் பற்றிய அவரது நூலில் அவர் இக்கருதுகோளைப் பயன்படுத்தியுள்ள மிகநுண்ணியமுறைமையில் இங்கு நோக்காது அடித்தளக் கருத்தை மாத்திரம் எடுத்துக் கூறினாலே போதுமானதாகும்.

நாட்டின் பொதுவான (பொருளாதார) உற்பத்தி முறைமைக்கும் இலக்கிய உற்பத்தி முறைமைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. உற்பத்தி முறைமையில், உற்பத்தி, விநியோகம், நுகர்வு என்பன உற்பத்தி முறைமையின் தன்மைக்கேற்ப வேறுபடும். ''அச்சு ஊடகம்'' தளமாக அமையும் சமூகத்தின் இலக்கிய உற்பத்தி முறைமை அச்சுக்கு முற்பட்ட காலத்து உற்பத்தி முறைமையிலிருந்து வேறுபட்டதாகும். அச்சுமுறைமை, உற்பத்தி நிலையில் பிரசுரகர்த்தரையும், எழுத்தாளரையும் துல்லியமாக வேறுபடுத்துவதுடன், நுகர்வோராகிய வாசகரை ஒரு முக்கிய நிர்ணய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியாக்குகின்றது. அச்சு உற்பத்தி முறைமையின் நுகர்வோருக்கும் (வாசகர்களுக்கும்) அச்சுக்கு முந்திய இலக்கிய உற்பத்தி முறைமையின் நுகர்வோருக்கும் (இவர்கள் கேட்போரே - Listenery)வேறுபாடு உண்டு.

புதிய இலக்கிய உற்பத்தி முறைமையில் நூற்பிரசுரத்துக்கான தளமொருபுறமிருக்க, பத்திரிகைகளே இலக்கிய ஆக்கத்துக்கான தளமுமாகின்றன.

அச்சு என்ற தொடர்பு முறையின் பண்புகளும், பத்திரிகை என்னும் தொடர்பு ஊடகத்தின் பண்புகளும் புதிய வாசகர் கூட்டத்தையும், நல்விநியோக முறைமைகளையும் ஏற்படுத்திவிடுகின்றன.

தொடர்பியல் நோக்கினுள் இவையாவும் இடம்பெறல் வேண்டும்.

''தொடர்பியல் நோக்கு'' என்பது தொடர்பில் தொழிற்படும் காரணிகள் நிலைநின்றும், குறிப்பிட்ட தொடர்பு ஊடகத்தின் அன்றேல் ஊடகங்களின் நிலைநின்றும், முன்வைக்கப்பட்டுள்ள பிரச்சினையை அணுகுதலாகும். தொடர்பின் பிரதான தளம்:

*விடுப்போன்→ செய்தி→ பெறுவோன்*

*↑ —— மீள் ஊட்டு ←*

(விசெபெமீ) என்பதாகும். எந்த ஒரு தொடர்பியல் ஆய்விலும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதை அவதானித்துக் கொள்ளல் வேண்டும்.

நாம் ஏற்கனவே கூறியபடி, இந்தத் தொழிற்பாடு ஒரு வெற்றுக் கோளத்தில் நடைபெறுவதன்று. இந்த விசெபெமீ நிகழும் பின்புலமும் அதுபற்றிய எதிர்பார்ப்பு உந்துதல்கள் ஆகியனவும் தெளிவுபடுத்தப் படல் வேண்டும். அத்துடன் 'விசெபெமீ'த் தொழிற்பாடு நடைபெறும் ஊடகம் ஒலி (மொழி) ஒளி (பிம்பம்) என்பன எத்தகையன என்பதும், அந்தத் தொழிற்பாடு காரணமாக அந்த ஊடகத்தில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் அறிந்து கொள்ளல் வேண்டும்.

மேலும் ஒரு தொடர்பு ஊடகத்தின் தொழிற்பாட்டினுள் பிற தொடர்பு ஊடகங்களின் அன்றேல் தொடர்பு முறைமைகளின் தாக்கம், பாதிப்பு உண்டா என்பதையும் நோக்குதல் வேண்டும்.

தொடர்பியல் நோக்கு என்பது பல்துறை ஆய்வுச் சங்கமம் ஆகும். இவ்வுரையில் அவையாவற்றையும் விரிவான முறையில் எடுத்தாராய்வது முடியாத காரியமாகும்.



# III

''ஈழகேசரி'' என்னும் ''வாரவெளியீடு'' 22.6.1930 ஞாயிற்றுக் கிழமையன்று முதன்முதலில் வெளியிடப் பெற்றது.

தொடர்பியல் தொழிற்பாட்டில் புலப்படுவனவும், நோக்கப்பட வேண்டியனவும் என நாம் கற்று முன்னர் நோக்கியவற்றை மனத்திருத்திக் கொண்டு, இவ் வெளியீட்டின் முதலாவது பகுதியில் எடுத்துக் கூறப்பட்டுள்ள இரு முக்கிய விடயங்களை முழுமையாக நோக்குதல் அவசியமாகும்:

(அ) 'நமது பத்திரிகை' (முதலாம் பக்கத்து முதல் பத்தியில் வருவது).

(ஆ) வேண்டுகோள் (முதலாம் பக்கத்து நான்காம் பத்தியில் வருவது).

## நமது பத்திரிகை

*நாகரீகம் நனி சிறந்து விளங்கும் நாடுகளெல்லாவற்றினும் பத்திரிகைகள் நன்னிலையடைந்து விளங்குதலொருதலை, அரசியற் றிருத்தங்களை மாற்றவும், சீர்திருத்தஞ் செய்யவும், அதிகாரிகட்கு உணர்ச்சியை எழுப்பவும், கல்வி, சமயம், தத்துவம், பொருளாதாரம், கமத்தொழில், கைத்தொழில், வாணிபம் முதலாய எல்லாத்துறைகளிலும் பத்திரிகைகளின் கருத்துக்கள் பெரிதுந் தழுவப்படுகின்றன. ஒருவர் உள்ளக் கருத்தை மட்டும் உணர்த்தாது, ஒரு குழுவினர் ஒரு வகுப்பினரின் துணிந்த முடிபுகளையே எடுத்துரைப்பதற்கும், அறியாமை வயப்பட்டு உறங்கிக் கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்பி அறிவுச்சுடர்கொளுத்துவதற்கும் ஏற்ற நல்விளக்குப் பத்திரிகையே. ஒப்புயர்வற்ற கல்வியறிவும் நுண்ணுணர்ச்சியும் இயற்கையறிவும் வாய்ந்த பல புலவர்கள் தங்கள் கருத்தை வெளிப்படுத்துவதற்கும் சிறந்த சாதனமாயுள்ளது பத்திரிகையே.*

*...................................... ''நமது நாடு அடிமைக்குழியிலாழ்ந்து, அன்னியர் வயப்பட்டு, அறிவிழந்து, மொழிவளம் குன்றி, சமயமிழந்து சாதிப்பேய்க் கோட்பாட்டுச் சன்மார்க்க நெறியழிந்து உன்மத்தராய் மாக்களாய் யுண்டுறங்கிவாழ்தலே கண்ட காட்சியெனக் கொண்டாடுமிக் காலத்தில் எத்தனை பத்திரிகைகள் தோன்றினும் மிகையாகாது.*

*பத்திரிகைகளை நடத்துவோர் தேசநன்மைக்காக வேண்டியவைகளைக் காய்தலுவத்தலகற்றி நடுவுநிலைமையோடும் காலதேச வர்த்தமானங்களுக்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேற்றவாறு எடுத்துரைத்தல் வேண்டும். அப்படிக்கின்றித் தாம் நினைத்த செயலை முடிப்பதற்காகவோ அல்லது ஒருசிலர் மீது கொண்ட குரோதங் காரணமாகவோ, அன்றிச் செல்வச் செருக்காலோ, அறியாமையாலோ ஒருவரையொருவர் தூசித்தலும் சாதிமத சம்பந்தமான விதண்டவாதங்கள் சொல்வதும் ஏனையோருடைய மனதைப் புண்படுத்துவதுமான வீண் செயல்களிற் காலத்தைக் கழிக்காது, அறநூல்வழி நின்று திறமை யோடும் ஒத்துழைப்பதே சாலச் சிறப்புடைத்தாம்.

ஆகவே எமது இடம் பொருளேவல் முதலியவற்றின் மிகுதியா லாவது, சுயநலங் கருதியாவது இப்பத்திரிகையை வெளியிடத் துணிந்தே மல்லேம். மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தன்னலமற்ற தியாக சிந்தையுடனும் யாதானுமொரு பணியிற் கடனாற்றுதல் வேண்டு மென்னும் பேரறிஞர் கொள்கை சிரமேற் கொண்டும் எமது சிற்றறிவிற் போந்தவாறு ''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனிசிறந்தனவே'' என்னும் ஆன்றோர் வாக்கின்படியும் தேசத்தின் தொண்டு செய்தலே சிறப்புடையதெனக் கருதி இப்பணியை மேற் கொண்டோம். இதற்கு வழிகாட்டியாக எமது தேசநன்மையைக் கருதித் தமது தள்ளாத கிழப்பருவத்திலும் தம்மாற் செல்லுதற்கியலாத நிலை யிலும், மனைவி மக்களைத் துணைக் கொண்டும் சாகரங்கடந்து, எங் களை ஆள்பவர்களிடம் எங்கள் குறைகளை நிவர்த்திக்க வேண்டிச் சென்றிருக்கும் எங்கள் தாதாவும், தனக்கென்று வாழாப் பிறர்க்குரியாள ளுந் தயாள வள்ளலும் அருட்கொடை அண்ணலும், அன்னை பணியின ரிய சிங்கேறுமாகிய இலங்கைச் சிங்கம் (ஈழகேசரி) கௌரவ சேர் பொன் னம்பலம் இராமநாதனவர்கள் பாரிசமேதராய் இங்கிலாந்து சென்றிருப்பதற் கறிகுறியாவே ''ஈழகேசரி'' யென்னும் திருநாமம் புனைந்து இவ்வெளி யீட்டை அன்னார்க்கு அர்ப்பணஞ் செய்து வெளியிடலானோம்.

இதனைத் தமிழர்களாயுள்ளாரெவரும் அன்புடனேற்று ஆதரித்து எமக்கு ஊக்கமூட்டி என்றுங் குன்றா விளக்காய் நின்று நிலவுமாறு தங்கள் தயவையளிப்பார்களென்னும் நம்பிக்கையுடன் அங்கிங்கெனாத படி எங்கும் பிரகாசமாய் ஆனந்தமாய் அறிவுக்கறிவாயய் விளங்கும் அருட் பெரு வள்ளலை அகத்திருத்தி அனைவர்க்கும் வணக்கம் செய்கின்றோம்.

பத்திராதிபர்



## வேண்டுகோள்

பத்திரிகாபிமானச் செல்வர்களே!

நமது தேசத்தில் எத்தனையோ பத்திரிகைகள் தோன்றியும் அவை நடைபெறவேண்டிய சாதனங்களின்றி மாண்டுபோயினமை யாவரும் அறிந் ததே. ஒரு தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானால் பத்திரிகைகளாலன்றி ஒருவர் இருவராய்ப் பேசினால் மட்டும் ஒரு பொது நன்மையுமுண்டாக மாட்டாது. பத்திரிகைகள் நிலையாக நடைபெற அதனை ஆதரிப்பவர்களின் கரு ணையே பெரிதும் வேண்டப்படும். ஆதலால் சகோதர சகோதரிகள் யாவ ரும் நமது ஈழகேசரியை அன்புடனேற்று இதன் வளர்ச்சிக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து எமது நோக்கம் இனிதுநிறைவேறும் வண் ணம் ஒவ்வொருவரும் அங்கத்தவர்களாகச் சேர்வதுடன் தமது நண்பர் களையும் உற்றார் உறவினரையும் சேரும்படி செய்து ஊக்கப்படுத்துமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வாழ்த்துகின்றோம்.

மனேஜர்

அண்மைக் காலத்தில் மேனாடுகளிற் வியாக்கியானங்களுடன் எடுத்து மொழியப்படுவதான டிகொன்ஸ்ற்றக்ஷன் (Deconstruction) என்னும் இலக்கிய விமரிசனக் கொள்கை நிலைநின்று இங்கு தரப்பட் டுள்ள ''பாடங்களை'' (Texts) கட்டவிழ்ப்புச் (De-construct) செய்து இவ ற்றை எழுதியவர் அன்றேல் எழுதியவர்கள் என்னென்ன விடயங்களை மனதிற் கொண்டு இந்தப் பாடங்களை இவ்வகையில் அமைந்தனர் என்று நோக்கினால் ''ஈழகேசரி'' தோன்றிய காலத்துப் பிரச்சினைகள் யாவை, யார் யார் தகாதவற்றைச் செய்தார்கள், திரு.பொன்னையாவின் உந்துதல்கள் யாவை, அவர் குறிப்பிடும் தெய்வ விவரணங்களின் ஊற்று யாது, அந்த ஊற்றுக்கு (சன்மார்க்கம்) ஒரு சமூகப் பரிமாணம் உண்டா, திரு.பொன்னையாவின் 'போஷகர்' யார் என்பன போன்ற பல வினாக் களும் அவ்வினாக்களுக்கான விடைகளும் மேற்கிளம்பும்.

இந்நோக்குக்கொண்டே மேற்கோளாகத் தரப்பட்டுள்ள பாடங் களுக்கு (Texts) அழுத்தம் இடப்பட்டுள்ளன. இவை மாத்திரமல்லாது, முதலாம் பகுதியின் ஆசிரியத் தலையங்கமாக அமையும் ''தேசத் தொண்டு'' எனும் பாடமும் மிக நுண்ணிதாக நோக்கப்பட வேண்டிய தாகும்.

''செய்யும் தொண்டுகள் பயனை அளிக்கவேண்டின் அஃதினை யியற்றுவோன் சுயநல வெறுப்பு, தெய்வபக்தி, களங்கமற்ற அந்தரங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீவியம் (Purity of Private Life) என்பவற்றைத் தமக்கு அணிகலனாகக் கொண்டு பொதுசன அபிவிருத்திகளில் அக்கறையுள்ளோர் விளங்குதல் வேண்டும்.'' ..........................................................................

.................. ''இவ்வாறன்றி பொது ஊழியங்களை நமது நாட்டில் நன்கு நிலைப்படுத்துவதற்குச் சனங்கட்கு பலதுறைகளிலுமறிவூட்டி விரிந்த நோக்குடையோராகச் செய்தல் நமது கடனாகும். இத்தொண்டினை ஆற்றுவதற்கு வேறு வழிகள் அனேக முளதெனினும், நடுநிலைமை குன்றாது துணிவாக உண்மைகளை ஆராய்ந்து வெளியிடும் பத்திரிகையே பிர தான சாதனமென்பதை எவரும் கைக்கொள்ளுவர்'' ..................................

இந்த விஞ்ஞாபன, ஆசிரியர் தலையங்க வாக்கியங்களால் ''ஈழகேசரி'' தான் மதிப்பிடப்பட வேண்டுவதற்கான அளவு கோல்களை தானே முன் வைத்துள்ளமை புலனாகின்றது.

ஈழகேசரியின் இந்த நிலைப்பாட்டை விளங்கிக் கொள்வதற்கு நாம் அதன் தோற்றப் பின்னணியை விளங்கிக் கொள்வது அத்தியாவசி யமாகும். பின்னணி என்பது இங்கு இரண்டு விடயங்கள் பற்றியதாகும்:

i. யாழ்ப்பாணத்தின் அக்கால சமூக, பொருளாதார, அரசியற் பின்னணி.

ii. ஈழகேசரி தோன்றிய காலத்தில் யாழ்ப்பாணத்தில் அச்சு ஊடக நிலைமை; குறிப்பாக பத்திரிகையின் வரலாற்று நிலை.

இவை ஒவ்வொன்றுமே தனித்தனியே ஆராயப்பட வேண்டிய விடயங்களாகும். முதலாவது அம்சத்தைப் பொறுத்த வரையில் இரண் டொரு ஆராய்ச்சி முயற்சிகளைத் தவிர இன்னும் முற்று முழுதான வரலாறு எழுதப்படவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இரண்டாவதனைப் பொறுத்த வரையில் அவ்வாய்வு இன்னும் மொழி, இலக்கியத் தொண்டுகளாக மட்டுமே பார்க்கப்பெறும் அறியாமை இன்னும் முற்றாக அழிக்கப்பெறவில்லை.

இங்கு இவை பற்றிய குறிப்புக்கள் மிக மிகச் சுருக்கமானவை யாகவும், அதேவேளையில் மேலோட்டத்தன்மையினவாகவும் அமை யும். முதலில் சமூக - அரசியற் பின்னணியை நோக்குவோம்.

''ஈழகேசரி'' வெளிவரத் தொடங்கிய காலத்தில் யாழ்ப்பாணத்தின் பிரதான அரசியற் சிரத்தையாக விளங்கியது டொனமூர் கொமிஷனின் அரசியற் சீர்திருத்தச் சிபார்சுகளே. இலங்கைக்கு 'பொறுப்பாட்சி' வழங் குவதற்கான நடைமுறைகளைச் சிபாரிசு செய்வதாகக் கூறிய அக்குழு, புதிய ஓர் அரசியல் அமைப்பையும், சர்வசன வாக்குரிமையையும் சிபார்சு



செய்திருந்தது. 1924 நவம்பரில் தோற்றுவிக்கப் பெற்ற யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் பூரண சுயாட்சி கோரிற்று. இந்த நிலைப்பாடு காரணமாக பின்னர் அது அரச சபைக்கான தேர்தல்களையே பகிஷ்கரிப் பதற்கான இயக்கத்தை நடத்திற்று. சேர்.பொன்னம்பலம் இராமநாதனும் டொனமூர் சிபார்சுகளை வேறு நியாயங்கட்காக எதிர்த்தார். சர்வசன வாக்குரிமை அளிக்கப்படக் கூடாதென்பதும், சிபாரிசு செய்யப்படும் ஆட்சி முறைமை சுமுகமாக இயங்க முடியாதது என்பதும் அவர் வாதம்.

இலங்கையினது அரசியல் தேவைகளையும் கோரிக்கைகளையும் இந்திய சுதந்திரப் போராட்டப் பின்னணியில் வைத்து பார்க்கும் பண்பு மிகுந்திருந்தது. இந்திய சுதந்திரப் போராட்டத்தினை நமது சொந்தப் போராட்டமாகவே பார்க்கும் ஒரு மனோநிலையும் நிலவியது. மகாத்மா காந்தியைப் போற்றும் பண்பு நிலவிற்று. ஆனால், அதேவேளையில், மகாத்மா காந்தியின் சமூக சமத்துவக் கோட்பாடுகளை எதிர்க்கும் சனாதனதர்மமும் காணப்பட்டது.

ஆரம்பக் கல்வி மக்களிடையே பரவும் நிலை காணப்பட்டது. ஆனால் அது குடியேற்றவாதக் கருத்துநிலை (Colonialist ideology) அமைப்புக்குள்ளேயே தொழிற்பட்டது. ஆங்கிலக்கல்விக்குக் கல்லூரி களும் தமிழ்ப் பயில்வுக்குப் பள்ளிக்கூடங்களும் என இரு கிளைப்பட்ட ஒரு நிலை காணப்பட்டது.

இந்தக் கல்வி முறையால் கல்வி ஒரு மட்டத்தில் இரு மொழி வழிப்பட்டதாகவும் (Bilingual), இன்னொரு மட்டத்தில் ஒரு மொழி நிலைப்பட்டதாகவும் (Unilingual) இருந்தது. இரண்டாவது தமிழ்க் கல்வி யாகவே இருந்தது. இந்த இரண்டு நிலைகளும் இருவேறு சமூக நிலைப் பாடுகளை, தொழிற்சாத்தியப்பாடுகளைச் சுட்டி நிற்பனவாக அமைந்தன.

கல்விப் பரம்பலுக்கும் 'மத அரசியலுக்கும்' நெருங்கிய தொடர்பு இருந்தது. கிறிஸ்தவம் நவீன மயப்பாட்டுக்கான திறவு கோலாக அமைவது என்ற கருத்து நிலையைக் கிறிஸ்தவக் கல்வி முறை முன் வைத்தது. ''சைவாகிங்கில வித்தியாசாலை'' மரபு, ஆங்கிலக் கல்வியை யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய சமூக அமைப்புக்குள் வைத்துக் கொள் வதற்கான ஒரு முயற்சியாகவே அமைந்தது.

அரசாங்கத் தொழிற்றுறை பிரதான பொருளாதார முயற்சியாக அமைந்ததால், அதற்கான கல்வி விவசாய வாய்ப்பு முக்கிய தேடலாக அமைத்தது. பாரம்பரிய விவசாயம் தொடர்ந்து நடைபெறும் அதே வேளையில், புகையிலை மலையாளத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனால் லாபம் தரும் செய்கையாகக் கருதப்பட்டது.

தொழில் வாய்ப்புக்களுக்காக மலாயா செல்லும் வழக்கு ஏற்பட்டு விட்டது.

இந்திய சுதந்திர அரசியற் போக்கும், உள்நாட்டு வளர்ச்சிகளும் பாரம்பரிய சமூக அமைப்பின் தொடர்ச்சியான சவால்களாக அமையும் கட்டம் படிப்படியாக உருவாகத் தொடங்கிற்று.

சமூக அமைப்பு அதிகாரவரன் முறைப்பட்ட (Hierarchical) அடுக்கு முறைமையக் கொண்டிருந்ததால், சமூக முன்னேற்றத்துக்குக்கான பிரக்ஞைகள் குழுமநிலைப் பிரக்ஞை (Group Consciousness) யாகவே அமைந்தது. இது சாதியுணர்வாகக் கிளம்பிற்று. ''சமாசனம் சமபோசனம்'' பற்றிய போராட்டம் இவ்வுண்மையை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. மாறத் தொடங்கியுள்ள ஒரு அரசியற் பொருளாதாரச் சூழலில், உயர் மட்டத்திலிருந்தோர் நவீனமயப்பாட்டின் பலா பலன்களைப் பகிர்ந்து கொள்ள மறுக்கும் பொழுது இப்பிரச்சினைகள் தோன்றின. இப்பகிர்வு மறுப்பு ஒரு மட்டத்தில் பொருளாதாரப் பிரச்சினையாகவும், இன்னொரு மட்டத்திற் பண்பாட்டுப் பிரச்சினையாகவும், பிறிதொரு மட்டத்தில் மதப் பிரச்சினையாகவும் முகிழ்க்கத் தொடங்கிற்று.

அடுப்புப் பற்றவைக்கப்பட்டாயிற்று. பானைகொதிக்கத் தொடங்குகின்றது. சமூக மாற்றத்துக்கான முதற்குரல்கள் கேட்கத் தொடங்குகின்றன.

இந்தப் பின்னணியிலே தான் ''ஈழகேசரி'' வெளிவரத் தொடங்குகின்றது.

1930 வரையுள்ள யாழ்ப்பாணத்தில் பத்திரிகை வரலாற்றை நோக்கும் பொழுது ஒரு உண்மை மிகத் துல்லியமாகப் புலனாகின்ற யாழ்ப்பாணத்தில் அது காலவரை, ஆங்கிலப் பத்திரிகைத் துறை வளர்த்திருந்த அளவுக்குத் தமிழ்ப் பத்திரிகைத்துறை வளராதிருந்தது.

யாழ்ப்பாணத்தின் பத்திரிகை வரலாறு, 1841 இல் தொடங்கப் பெற்ற உதயதாரகை (Morning Star) என்னும் ஆங்கில -தமிழ் (Anglo Tamil) பத்திரிகை முயற்சியுடன் தொடங்குகின்றது. இது அமெரிக்க மிஷனின் பிரசுரம். 1853இல் வைமன் கதிரைவேற்பிள்ளையின் "Literary Mirror" (லிற்றரி மிறர்) வெளிவந்தது. யாழ்ப்பாணத்தின் முதலாவது புதினப்பத்திரிகை எனக் கொள்ளத்தக்கதாக அமைவது 1862இல் நிக்கலஸ் கூல்டினால் (Ncholas Gould) வெளியிடப்பெற்ற ''ஜப்னா ஃபிறீமன்'' (Jaffna - Freeman) எனும் பத்திரிகையாகும். 6-2-1863 இல்



சி.வை.கதிரைவேற்பிள்ளையின் இலங்காபிமானி (Ceylon Patriot) வெளிவந்தது. ''சிலோன் பேற்றியற்'' றுக்கும் (Ceylon Patriot) ''ஜஃப்னா பிறீம'' னுக்குமிடையில் போட்டி நிலவியது.

1865இல் இலங்காபிமானி கைமாறியது. சொலமென் ஜோன் பிள்ளை என்பவர் அதனை வாங்கினார். 1867 இல் ''ஃபிறீமன்'' மூடப்பட்டது. இவையிரண்டும் இணைக்கப்பெற்றன என்று கூறப்படுகின்றது.

1871இல் ஹியூஸ் (Hughes) என்பவரால் "Jaffna News" என்னும் பத்திரிகை வெளிக்கொணரப்பட்டது.

Hindu Organ (இந்து சாதனம்) சைவபரிபாலன சபையால் 1889 இல் முதன்முதல் வெளியிடப்பெற்றது. இது 5-7-1899 முதல் தனியே ஆங்கிலப் பத்திரிகையாகவும், பின்னர் 1906 யூலை 11 ஆம் திகதி தமிழ்ப் பத்திரிகை தனியேயும் (இந்து சாதனம்) வெளிவரத் தொடங்கின.

தமிழைப் பொறுத்தவரையில் பத்திரிகைகள் பிரதானமாக மத பின்னணியைக் கொண்டனவாகவே தொடங்கின. எனினும் சாதி எதிர்ப்பியக்கம் சம்பந்தமான சில மாத இதழ்களும் ('திராவிடன்' *: 1915 - 16, ''மேல் நோக்கம்'' - ஆசிரியர் கு.சின்னப்பு : 1929 - 30) வெளிவந்தன.

யாழ்ப்பாணம் அரசியல் மயப்படுத்தப்படும் ஒரு சூழலிலேயே ஈழகேசரி வெளிவரத் தொடங்குகின்றது. அதன் பிரதான 'தொடர்பு'த் தளம் அரசியல் - சமூக மாற்றம் பற்றியதேயாகும். இதனால், ஈழகேசரி, யாழ்ப்பாணத்தின் முதலாவது சமயச் சார்பற்ற புதினப்பத்திரிகை என்று கொள்ளப்படத்தக்கதாகவுள்ளது.

இந்தப் பத்திரிகையின் உள்ளீடான கருத்துநிலையாக ஓர் அரசியல் உந்துகை (Political persuasion) நிற்பதை நாம் அவதானிக்கத் தவறக் கூடாது.

* இவற்றுக்கான தகவலை Henry Martyn இன் Notes on Jaffna விலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV

''ஈழகேசரி''யின் பூரணமான வெளியீட்டு வரலாற்றையும் இந்த ஒரு உரையிலே நோக்கி விடுதல் முடியாது.

இங்கு அதன் முதல் பத்து வருட வெளியீட்டு வரலாறும், வெளியீட்டு முறைமையும் நோக்கப்படும். அதுவும் சற்று மேலோட்டமாகவே பார்க்கப்படலாம்.

அவ்வாறு நோக்கும் பொழுது ஒரு முக்கிய அமிசத்தை நான் முதன்மைப்படுத்த விரும்புகின்றேன். யாழ்ப்பாணத்தின் முதலாவது சனரஞ்சகத் தொடர்புச்சாதனமாக மேற் கிளம்பிய இப்பத்திரிகையினூடே இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில், அதன் (யாழ்ப்பாணத்தின்) உயர் பண்பாட்டு அமிசமெனக் கருத்துருவமாக வளர்த்தெடுக்கப்பட்டு நிலைப்படுத்தப்பட்ட ஒரு பண்பாட்டு நியமம் (இது அறப் பெறுமானம் முதல் இலக்கியம் வரை, சமூக அமைப்பு முதல் சமயம் வரை சகலவற்றிலும் தெரியப்பட்டது) எவ்வாறு பேணப்பட்டது, பேண முயலப்பட்டது என்பதையும் அதே வேளையில் அந்த நியமங்களை ஊடறுத்து,

(அ) இந்த மேல்கட்டுமானத்தின் மறுபுறத்தில் எவையெவை காணப்பட்டன அவை எவ்வாறு சமூக மாற்றக்காலங்களில் வெளிவந்தன என்பதையும்,

(ஆ) உலக அரசியல், பொருளாதார வளர்ச்சிகளாலும், நவீன மயப்பாட்டினாலும் எவ்வெவ் விடயங்கள் யாழ்ப்பாணச் சமூக வாழ்க்கையினுள்ளும், சமூகப் பிரக்ஞையினுள்ளும் கொண்டு வரப்படுகின்றன என்பதையும்,

அறிந்து கொண்டால், நாம் யாழ்ப்பாணச் சமூகத்தில் ''ஈழகேசரி'' பெற்ற இடத்தினை விளங்கிக் கொள்ளலாம். அத்துடன் முக்கியமாக, யாழ்ப்பாணத்தையும் விளங்கிக் கொள்ளலாம்.

இந்த மூன்று அமிசங்களையும் ஆராய்கின்ற பொழுது, இந்தப் பண்பாட்டுடன் காரண காரியத் தொடர்பு கொண்டுள்ள இலக்கிய (எழுத்து) வெளிப்பாட்டு முறைமையையும் விளங்கிக் கொள்ளலாம். மொழியையோ அல்லது மொழிவழி வரும் இலக்கியத்தையோ அவற்றுக்குரிய பின்னணியிலிருந்து பிரித்து அவற்றைத் தம்முள்தாம் முக்கியமானவையாக மாத்திரம் நோக்கினால், மொழியினதும், இலக்கியத்தினதும் வளர்ச்சியை நாம் விளங்கிக் கொள்ளத் தவறியவராவோம்.



தமிழில் வரும் பத்திரிகைககள் என்பன ஏதோ ஒரு வகையில் சமயப் பின்னணியுடன் தொடர்புடையன என்ற மரபு ஏறத்தாழ 90 வருடம் போற்றப்பட்டு வந்த ஒரு சமூகச்சூழலில், ''ஈழகேசரி'' அந்த மதப் பண்பாட்டை ஏற்றுக் கொள்வதாய், ஆனால் அந்த மதப் பண்பாட்டை விளக்குவதே தனது பணி எனக் கொள்ளாமல் முற்றிலும் சமூக - அரசியற் சிரத்தை கொண்டதாய் வெளிவருவது அதன் முக்கிய அமிசமாகும்.

இவ்விடத்திலே, ''ஈழகேசரியின்'' உரிமையாளரும், பிரசுரகர்த்தரும் அதன் ஆரம்பகால ஆசிரியருமான திரு.நா.பொன்னையாவின் கருத்துநிலை (Ideology) முக்கியமாகின்றது.

பர்மா, இந்தியா ஆகிய நாடுகளில் தான் பெற்ற அனுபவத்தையும், இந்தியாவில் பெற்றிருந்த அரசியல் தொடர்புகளையும் உள்வாங்கியவராய் (1925), இலங்கையில் நடைபெற்ற அரசியல், சமூக மாற்றங்களை அப்பின்னணியில் வைத்து நோக்கி, இலங்கையினதும், நமது தமிழ் மக்களினதும் வளர்ச்சி அந்தப் பெரு வளர்ச்சிகளினுள்ளே அமைவதாகவும் இடம் பெறுவதாகவுமிருத்தல் வேண்டுமென்ற கருத்து நிலைப்பாட்டுடன் ஈழகேசரியைத் தோற்றுவித்தார் என்பது நன்கு புலனாகின்றது.

யாவற்றுக்கும் மேலாக, புதினப்பத்திரிகை என்ற தொடர்புச் சாதனத்தின் ஆழ அகலங்களை, நெளிவு சுளிவுகளை நன்கு தெரிந்த ஒருவராகவே அவர் பத்திரிகையைப் பதிப்பித்தார்; பிரசுரித்தார். விளம்பரம் (Advertisment) இல்லாது பத்திரிகை லாபகரமான முயற்சியாக அமைய முடியாது என்பதைத் தெட்டத் தெளிவாக அறிந்திருந்தார்.

ஈழகேசரி பிரசுரவட்டத்தைப் பொறுத்தவரையில் அது தொடங்கிய முதற் பத்து வருட காலத்தின் மிக முக்கியமான நிகழ்ச்சிகள் எனப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

- யாழ்ப்பாணப் பாடசாலைகளில் நடைபெற்ற ''சமாசனம் சமபோசனம்'' பிரச்சினை.
- சேர்.பொன்னம்பலம் இராமநாதன் மறைவு (26.11.30).
- யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் தொழிற்பாடுகளும், அரசியலில் பூரண சுதந்திரம் வேண்டி அது தொடங்கிய தேர்தல் பகிஷ்கரிப்பு.
- அந்தப் பகிஷ்கரிப்புக்கு பின்னர் கைவிடப்பட வேண்டி வந்தமை; அந்தத் தேர்தலில் ஜி.ஜி.பொன்னம்பலம், சு.நடேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை, அ.மகாதேவா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டமை (1934).

* மலையாளத்தில் (கேரளத்தில்) யாழ்ப்பாணப் புகையிலை விற்பனை செய்வதில் ஏற்பட்ட பிரச்சினைகள்.
* மலாய் நாட்டில் இலங்கைத் தமிழர் குடியேற்றம்.
* இந்திய சுதந்திரப் போராட்டம், சைமன் கமிஷன், 1935 இன் இந்தியச் சட்டம் முதலியன.
* உலக யுத்தம் மூளுகை, அதன் தொடக்கம் (1939).

## V

ஈழகேசரி அதன் முதல் இரண்டு வருடங்களிலும் புதன்கிழமைகளில் வெளியிடப்பெற்று, மூன்றாவது வருடம் தொடக்கம் (1933) ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்பட்டது.

முதலிரண்டு வருடங்களிலும் 12" X 18 1/2"அங்குல அளவிலான தாளில் அச்சிடப் பெற்றது. மூன்றாவது வருடம் முதல் 40" X 16"அளவில் வெளிவரத் தொடங்குகின்றது.

நான்கு பத்திப்பக்கங்களைக் கொண்டமைந்த இப்பத்திரிகை, மூன்றாம், நான்காம் வருடங்களில் வெளியே வர்ணத்தாள் (பெரும் பாலும் பச்சை) கொண்டதாய் உள்ளே 8-12 பக்கங்கள் கொண்ட தாய் வெளிவரத் தொடங்குகின்றது.

இப்பத்திரிகையின் வளர்ச்சி வரலாற்றில், அது தன்னைப் பற்றிய சுய விவரணத்தைத் தந்துள்ள முறையை நோக்குதல் வேண்டும். 30-6-35 முதல், ஆங்கிலத்தில் பின்வரும் முறையில் அது அமைகிறது: "The Leading Tamil National Daily. Largest Circulation Guarantee Best Medium for Advertisment".

7.7.35 முதல் ''தமிழில் சிறந்த தேசிய தமிழ்ப் பத்திரிகை'' என்ற குறிப்புக் காணப்படுகின்றது.

ஆங்கிலத்திலுள்ள அந்தக் குறிப்புப் பின்னர், பத்திரிகையின் பின்புறத்தில் அச்சிடப்படுகின்றது.

இந்த ஆங்கிலக் குறிப்புக்கள் (மிகப்பெரிய விற்பனை உத்தரவாதம் உடையது; விளம்பரங்களுக்கான சிறந்த சாதனம் என்பவை)



விளம்பரங்களைக் கொடுக்கும் பெரிய நிறுவனங்களை நோக்கிய குறிப்பாகும். புகையிலைக்கு வேண்டிய பசளை விளம்பரங்களைக் கொழும்புக் கொமர்ஷியல் கம்பனி (1933 - 34) ஆரம்பத்திலிருந்தே ஈழகேசரிக்குக் கொடுத்து வந்துள்ளது. அதே போன்று வங்கி, காப்புறுதி விளம்பரங்களும் வெளிவரத் தொடங்கின.

பத்திரிகை ஆரம்பத்திலிருந்தே ''இலங்கை, இந்தியா, பர்மா, மலாய் நாடு'' ஆதிய இடங்களையே வாசகப் பிரதேசமாகக் கொண்டுள்ளது என்பது தெரியவருகின்றது. பர்மா, மலாய் நாடுகளில் வாழ்ந்து வந்த யாழ்ப்பாணத் தமிழ் மக்களே பிரதானமாக வெளிநாட்டு வாசகர்கள்.

1930 - 1939 இதழ்களை நோக்கும் பொழுது, இலங்கைக்குள்ளே ஈழகேசரியின் விற்பனை விஸ்தரிக்கப்படும் முறைமை தெரியவரும். யாழ்ப்பாணக் குடாநாட்டினுள்ளும், கொழும்பிலும், யாழ்ப்பாண வியாபாரிகள் தொழிற்பட்ட பிரதேசங்களிலும் (இரத்தினபுரி, சிலாபம், காலி, கெக்கிறாவை) வாசக வட்டம் படிப்படியாக விரிவதைக் காணலாம். விற்பனை நிலையங்களின் முகவரிகள் தொடர்ந்து தரப்படுகின்றன. இரண்டாவது வருடத்திலிருந்தே (1932) இந்த வளர்ச்சியை அவதானிக்கக் கூடியதாக விருக்கிறது (4.12.1932).

ஈழகேசரியின் பிரசுரப் பொருளை (Published matter) நோக்கும் பொழுது பண்பாடு பற்றிய மரபுணர்வையும், நவீன மயப்பாடு ஏற்படுத்தும் தொடர்புத் தேவைகளையும், புதிய தொடர்பு விடயங்களையும் ஒரு ''சமநிலையுடன்'' கொண்டு செல்வதற்கான ஒரு முயற்சி எவ்வாறு வெற்றிகரமாய்க் கையாளப்பட்டுள்ளது என்பதைக் கண்டு கொள்ளலாம்.

எனினும், யாழ்ப்பாணத்தினதும், யாழ்ப்பாணத் தமிழர்களினதும், (மட்டக்களப்பைப் பற்றிய செய்திப் பிரக்ஞை அதிகம் இருக்கவில்லை; விற்பனை நிலையம் இருந்தது) புதினங்கள் பற்றிய சிரத்தையே முக்கிய இடம் பெறுகின்றது. இதனால் இந்த வாசகர்களின் வாழிடம் பற்றிய புதினங்களும், இந்த வாசக வட்டத்துக்குப் பிடித்தமான புதினங்களும் இடம் பெற்றன எனலாம்.

புதினங்களில் உள்ளூர்ப் புதினங்கள் இரு மட்டங்களில் தரப்படுகின்றன.

(அ) உள்ளூர்ப் புதினங்கள்.

*(இவற்றில் அசாதாரண விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.)*

(ஆ) இலங்கை, யாழ்ப்பாண அரசியல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை, யாழ்ப்பாண அரசியலில் ஈழகேசரி 1930 - 40 இல் ஒரு நிலையான கொள்கையைக் கடைப்பிடித்து வந்துள்ளது. வாலிபர் காங்கிரசை ஆதரித்து, முழுமையான தேசியம் வளரவேண்டுமென்னும் நிலைப்பாட்டிலிருந்து ஈழகேசரி பின்செல்லவேயில்லை. 1934 இல் தேர்தல் நடந்த பொழுது, பகிஷ்கரிப்புப் பக்கத்தினருக்கு ஆதரவாக வந்தவர்களையே ஈழகேசரி ஆதரிக்கின்றது. பகிஷ்கரிப்பை எதிர்த்த ஜி.ஜி.பொன்னம்பலம், சு.நடேசபிள்ளை, அ.மகாதேவா ஆகியோரை ஈழகேசரி கண்டிக்கின்றது. அவர்கள் அரசாங்க சபைக்குச் சென்ற பின்னரும், அவர்களின் நிலைப்பாடுகளை ஈழகேசரி வன்மையாகக் கண்டிக்கின்றது. வாலிபர் காங்கிரசை ஈழகேசரி தொடர்ந்து ஆதரிக்கின்றது.

சேர்.பொன்னம்பலம் இராமநாதனையே தனது பிரதான, முன் மாதிரியாகக் கொள்வதாகக் கூறிக்கொண்டே ஈழகேசரி, அவரது சமூக நிலைப்பாடுகளை எதிர்த்து நின்ற வாலிபர் காங்கிரசை ஆதரித்தது என்பது முக்கியமான ஒரு விடயமாகும். சமாசனம் சபோசனம் விடயத்திலும், தீண்டாமை விடயத்திலும் ஈழகேசரிப் பத்திராதிபர் திரு.பொன்னையா நிச்சயமாகக் காந்திய நிலைப்பாட்டையே எடுத்துக் கூறுகின்றார் எனலாம்.

இவ்வாறான ஒரு ஸ்திர கருத்து நிலைப்பாட்டினை கொண்டிருந்த ஈழகேசரி, உள்ளூர்ச் செய்திகளை வெளியிட்டுள்ள முறைமை பரபரப்பூட்டும்பான்மையில் (Sensational) அமைந்திருந்து. இங்கு நுண்ணாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் 1930 - 40 இலேயே இப்பண்பு, பின்னரிலும் பார்க்கத் துல்லியமாகத் தெரிகின்றது.

ஆரம்பத்தில் 'வர்த்தமானங்கள்' (31,32) என்ற தலைப்பிலும் பின்னர் 'கலம்பகம்' ''செய்தித்திரட்டு'' என்ற தலைப்புக்களிலும், பிரதானமாக 'பரபரப்பூட்டுபவை' யான செய்திகளே தரப்படுகின்றன. அப்படித் தரப்படும் செய்திகள் பல, பிற்காலத்தில் வந்த தினத்தந்தி நடையின் முன்னோடி என்று கொள்ளத்தக்க நடையில் அளிக்கப் பெறுகின்றது.

| | |
|---|---|
| 02-10-32 - | சாரதியோடு சென்ற தங்கம்மா. |
| 27-12-37 - | காரைப்புரட்டிய கான்ஸ்டபிள். |
| 22-01-33 - | போலீஸ் நிலையத்தில் பேன்குத்தி உதைத்துக் கழுத்தை நெரித்த 1997 குப்புற விழுந்த சின்னையா. |
| 11-02-32 - | காதற் படங்களால் நேர்ந்த கதி. |
| 15-09-35 - | நடுத்தெருவில் தாலி கட்டப்பட்ட நல்லூர் சரஸ்வதி வழக்கு. |



உள்ளூர்ப் புதினங்களில் மிக முக்கியமாக இடம் பெறுபவை யாழ்ப்பாணச் சுப்றீம் கோட்டு வழக்குகளாகும். வல்லைக் கொலை வழக்கு (1932)ப் போன்றவை மிக விரிவாகத் தரப்பட்டுள்ளன.

உள்ளூர்ப் புதினங்களைத் தரும் பொழுது, இந்தக் காலகட்டத்தில் (1930- 39) சாதிப் பெயர்கள் அப்படியே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 15-10-30- | கோயிலில் சாதிச் சண்டை. (வெள்ளாளருக்கும் கோவியருக்கும்) |
| 11-08-35- | பத்தைமேனி பள்ளர் கொலை. |
| 11-09-32- | வெள்ளாளனைக் கத்தியால் வெட்டிய வண்ணான். |

உள்ளூர்ப் புதினங்கள் தரப்படும் பொழுது யாழ்ப்பாணத்து விவசாயிகளின் நிலைமை முதன்மைப்படுத்தப்படுகின்றது. மலையாளத்துக்கான புகையிலை ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் (1932 - 33) பற்றிய விரிவான செய்திகள் பல வெளிவந்துள்ளன.

ஈழகேசரி வெளியிடப்பட்ட பொழுது தினகரன், வீரகேசரி வெளியிடப் பெறவில்லை. 4-12-32 இல் வெளிவந்த ''தமிழ் மக்களின் நித்திரையும் தமிழ்ப் பத்திரிகைகளின் வயோதிப நிலையும்'' என்ற விடயத்தில் சி.வி.சிதம்பரநாதன், யாழ்ப்பாணத்தவருக்கு ஈழகேசரியும், இந்துசாதனமுமே உண்டென்றும், அதிலும், இந்து சாதனம் வயோதிபம் எய்திவிட்டதென்றும், ஈழகேசரி நாளிதழாக வேண்டுமென்றும் கூறுகின்றார். இந்தக் கட்டுரையையும், யாழ்ப்பாணத்துச் செய்திகள் பூரணமாக வெளியிடப்படும் முறைமையையும் பார்க்க கொழும்புத் தினசரிகளின் தாக்கத்தை ஈழகேசரி 1932 பிற் கூற்றிலேயே எதிர் நோக்கத் தொடங்கி விட்டதெனலாம்.

அத்துடன் கொழும்பில் நடைபெறும் தமிழர் பற்றிய அரசியல் விடயங்களை யாழ்ப்பாணத் தமிழர் நலன் என்ற நோக்கிற் பார்த்து எழுதப் பெறும் கொழும்பு நிருபரின் செய்தி விமர்சனமும் முக்கியப் படுத்தப்பட்டுப் பிரசுரிக்கப்படுகின்றது.

இந்தியச் செய்திகள், குறிப்பாக இந்திய சுதந்திரப் போராட்டச் செய்திகள் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரம் செய்யப்படுகின்றன. காந்தி, நேரு போன்ற தலைவர்கள் போற்றிப் புகழப்படுகின்றனர்.

இவ்வாறு கூறும் பொழுது ஈழகேசரி முற்றிலும் ஒரு 'பிரதேச'ப் பத்திரிகையாக இயங்கும் தன்மை நிலவியதோ எனச் சிலர் ஐயுறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1936 - 37 முதல் உலக நிகழ்ச்சிகள் முதன்மைப்படுத்தப்படுகின்றமை யையும், உலக மகாயுத்தம் தொடங்குவதற்கு முன்னர் நிலவிய பரபரப் பான நிலையையும் 1939 ஈழகேசரி இதழ்கள் நன்கு காட்டுகின்றன. 3-9-39 அன்று வெளிவந்த ஈழகேசரியில் ''மகாயுத்தம் ஆரம்பமாகி விட்டது'' என்ற தலைப்புக் காணப்படுகின்றது.

பத்திரிகையின் வளர்ச்சியோடு படிப்படியாகப் பத்திரிகை விவர ணப் பகுதி (Feature) விஸ்தரிக்கப்படுவதைக் காணலாம். ''சிறுவர் பகுதி'' படிப்படியாக வளர்த்தெடுக்கப்படுகின்றது. பெண்களுக்கு ஆர்வமுள்ள பல விடயங்கள் இடம்பெறத் தொடங்கின.

03-02-1935 - பெண்களுக்கும் அரசாங்க உத்தியோகம்.

17-02-1935 - பெண் நியாயவாதியின் முதல் வழக்கு.

பெண் எழுத்தாளர்கள் சிலரும் (மா.மங்களநாயகி) ஈழகேசரியில் எழுதுகின்றனர்.

இவ்வாறு நோக்கிச் செல்கையில், நாம் ஒரு முக்கியமான தொடர் பியல் வினாவுக்கான விடையைத் தருதல் வேண்டும்.

ஈழகேசரியின் வாசகர் வட்டம் யாது?

ஈழகேசரியின் சகல எழுத்துக்களையும், அவற்றின் முனைப்பு முக்கியத்துவங்களையும் அவதானிக்கும் பொழுது, திரு.நா.பொன் னையா பின்வருவோரையே தனது வாசகர் வட்டமாகக் கொள்ள விரும்பினார் என்பது தெரியவரும்:

(I) ஆங்கிலம் - தமிழ் இருமொழியறிவு படைத்த தமிழர் என்ற உணர்வுள்ள அரசாங்க உத்தியோகத்தர்.

(II) வியாபாரிகள் குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு வெளியேயிருந்த தமிழ் வியாபாரிகள்.

(III) தமிழ் மொழியை மாத்திரம் படித்து சமூகத்தில் முன்னணியில் நிற்போர், ஆசிரியர்கள் இக்குழுமத்தில் முக்கியமானவர்கள்.

(IV) யாழ்ப்பாணத்துக்கு வெளியேயுள்ள தமிழர்.

இந்தத் தமிழரைச் சாதி சமய வரையறைகளுக்கு அப்பாற் சென்று ஈழகேசரி அவர்களை ஈர்த்தது. அல்வையூர் மு.செல்லையா ஈழகேசரி யின் முக்கிய எழுத்தாளர்களுள் ஒருவராகக் காணப்படுகின்றார்.



முந்திய பத்திரிகைகள் மதம் என்ற தளத்திலிருந்து கிளம்பியவை. அவையும் செய்திகளைப் (News) பிரசுரித்தனவெனினும், அவற்றின் நோக்குச் செய்தி வெளியீடு அன்று. ஈழகேசரி செய்தி வெளியீட்டையே தனது பிரதானமான தொடர்பியல் அமிசமாய்க் கொள்கிறது.

## V

இவ்வாறு கூறுகின்ற பொழுது, ஈழகேசரியில் கட்டுரை எழுத் துக்கள் முக்கியம் பெறவில்லை என்று கருதிவிடக் கூடாது.

சமூகப் பிரக்ஞை, மொழிப்பிரக்ஞை ஆகியவற்றை ஏற்படுத்தும் பல முக்கிய கட்டுரைகள் வெளியாகின.

1932 - 1933 : வேளாளர் வருண ஆராய்ச்சி.

- வ.குமாரசுவாமி

1930 - 1931: 1800 வருடங்களுக்கு முற்பட்ட தமிழர்.

-கனகசபைப்பிள்ளையின் ஆங்கில ஆக்கத்திலிருந்து

அத்துடன் ஈழநாட்டுத் தமிழ் இலக்கியப் பாரம்பரியம் பற்றியும் அந்த மரபின் வரலாறு பற்றியும் கட்டுரைகள் வெளிவந்தன. சி.கணேசையர் அவர்களது கட்டுரைகள் பல ஈழகேசரியில் இடம் பெறுகின்றன. ஈழ நாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம் ஈழகேசரி வழியாகவே வந்ததெனலாம்.

முதலில் ஈழத்துத் தமிழிலக்கிய பாரம்பரியம் பற்றிய கட்டுரைகள் காணப்படுகின்றன. பின்னர் படிப்படியாக நவீன தமிழ் இலக்கியங்கள் (நாவல், சிறுகதை) பிரசுரமாகத் தொடங்குகின்றன. சத்தியதேவி (1937) தொடர்நவீனமாக வெளிவருகின்றது. 1939இல் இலங்கையர் கோன், வைத்திலிங்கத்தின் எழுத்துக்கள் வெளிவரத் தொடங்கு கின்றன.

ஈழகேசரி ஆண்டு மடல்கள் (1938 ஆம் ஆண்டினது என் பார் வைக்குக் கிட்டிற்று) இந்த இலக்கிய வளர்ச்சிகளை நன்கு எடுத்துக் காட்டுகின்றன (1935, 38).

தமிழ் இலக்கியத்தினைப் பொறுத்தவரையில் மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய இன்னொரு தகவல் ஈழகேசரி 1930 - 39 இலேயே பாரதி, வி.க.முதலிய தமிழ்நாட்டுத் தமிழ் இலக்கியகாரருக்குக் கொடுத்த முக்கியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930 - 1931 இல் ஈழகேசரியில் வெளிவந்த தமிழ் இலக்கியம், பண்பாடு பற்றிய கட்டுரைகள் பாரம்பரியத்தையும் நவீனத்துவத்தையும் சமநிலையில் வைத்துப் பார்க்கும் ஒரு மனப்பாங்கைக் காட்டுகின்றன.

## VI

1939க் கால ஈழகேசரியில் வரும் விளம்பரங்களும், பிறதொடர்புச் சாதனங்கள் பற்றிய குறிப்புக்களும் யாழ்ப்பாணத்தின் வேகமான நவீன மயப்பாட்டை உணர்த்துகின்றன எனலாம்.

கிராமஃபோன் ரெக்காட்டுகள் பற்றிய விளம்பரங்களும், திரைப் படம் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றிய செய்திகளும் சுவாரசியமானவை.

ஈழகேசரியில் முதலில் வரும் விளம்பரங்கள் புத்தகங்கள் பற்றிய வையே. இவை தனலக்குமி புத்தகசாலைக்குரியனவாகும். பாரதி பாடல் கள், நம்மாழ்வார் பாசுரங்கள் முதலிய இந்தியப் பிரசுரங்களும் விளம் பரப்படுத்துகின்றன.

பரிமள வெற்றிலைபாக்கு விளம்பரம் (1930 முதல்), கொழும்பு கொமர்ஷியல் கொம்பனியின் பசளை விளம்பரம், இந்தியன்லைப் இன்சுரன்ஸ்கம்பனியின் விளம்பரம், லினோலியா, லக்ஸ், சன்லைற் சவர்க்காரங்களுக்கான விளம்பரங்களின் வருகை இவ்வகையில் முக்கியமானவையாகும். தைலம், ஓடுகள், மூக்குக்கண்ணாடி, பற் பொடி ஆகியனவுக்கான விளம்பரங்களும், கோட்டு அடைவு நகை விற்பனை விளம்பரங்களும் முக்கியமானவை.

யாழ்ப்பாணத்தின் சமூக வரலாற்றுக்கான தரவுகளாக இவை அமைகின்றன.

1937 - 1939 இல் கொழும்பிலிருந்து இங்கு வானொலியின் தாக்கத்தையும் ஈழகேசரியிற் காணலாம். ஈழகேசரி றேடியோவை ''ஒலி பரப்பி'' என்கின்றது.

## VII

ஈழகேசரியின் வன்மையான தளமாக அமைந்தது 'திருமகள் அழுத்தகமே' யாகும். திருமகள் அழுத்தகம், தனலக்குமி புத்தகசாலை யின் நூற் பிரசுரத்தையும் ஈழகேசரி வெளியீட்டையும் தாங்கி நிற்கின் றது. இந்த அச்சுச் சாதனவசதியிருந்தமையாலேயே திரு.பொன்னை யாவால் ஈழகேசரியை அத்துணை அழகாக வெளியிட முடிந்தது. 1937 - 1939 இல் இருவர்ண அச்சுமுறைமைகூட வந்துவிட்டது.

## VIII

ஈழகேசரியின் வரலாற்றினுள் நமது சமூகத்தின் வரலாறும் அதன் அசைவியக்கப் பண்பு இரகசியங்களும் நிறைய உள்ளன.

அவற்றை அவ்வத்துறைக்குரிய ஆய்வுமுறைகளுக்கேற்ப வெளிக் கொணருவது அவசியம்.

இந்த உரையில் இடம்பெறும் அத்திவாரம் அடுத்துவரும் உரைகள் மேலே கிளம்புவதற்கான பலமான தளமாக அமையவேண்டுமென்பதே என் அவா.

**(ஈழகேசரி ந. பொன்னையா நினைவுப் பேருரை - 1991)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடும் அதன் தொடர்புநிலை வலுவும்

## *விரிவான ஓர் ஆய்வுக்கு ஆதாரமான சில குறிப்புகள்*

தொடர்பியல் (Communication Studies) பற்றிய வரன்முறையான பரிச்சயம் இன்னும் நம்மிடையே பூரணமாக வந்துவிடவில்லை. தொடர்பியலின் கீழ்வரும் ஆய்வுத்துறைகள் பற்றியும், தொடர்பியலின் கலைச்சொற்கள் பற்றியும் தமிழியலாய்வுகளில் அதிக குறிப்புக்கள் கிடையா.

தொடர்பியற் பரிச்சயமின்றேல் சமூக நடைமுறை பற்றியும், சமூக நடைமுறைக்கும் சமூக அசைவியக்கத்துக்கும் ஆதாரசுருதியாக அமையும் ''மனோபாவங்கள்'', பெறுமானங்கள் (விழுமியங்கள்) பற்றியும் தெளிவு ஏற்படாது. எனவேதான் இன்று 'தொடர்பியல்' சமூக அறிவியல் துறையின் ஒரு முக்கிய அம்சமாகின்றது.

சமூக சிந்தனையின் உருவாக்கம், அரசியல், சமூக பண்பாட்டு நடத்தை முறைமை ஆகியவற்றில் தொடர்பியல் முக்கிய பங்கு வகிக்கின்றது. நமது தமிழ்ச் சமூகத்தின் இன்றைய அசைவியக்கத்தைப் புரிந்து கொள்வதற்கு நமது சமூகத்தில் தொடர்பு முறைமை எவ்வாறு அமைந்துள்ளது என்பதை அறிந்து கொள்ளல் வேண்டும். தொடர்புச் சாதனங்களின் தன்மை, அவற்றின் பயன்பாடு, அவை பயன்படுத்தும் மொழிநடை, அம்மொழிநடையின் உளநிலைத் தாக்கங்கள், உள நிலைகள் ஏற்படுத்தும் மனோபாவங்கள் என இவ் ஆய்வு சங்கிலித் தொடராகச் செல்லும்.

நவீன சமூக அமைப்பின் அசைவியக்கத்திலே தொடர்புச் சாதனங்கள் (பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகியன) முக்கிய இடம் பெறுகின்றன. அச்சுவழிச் சாதனமான புதினப் பத்திரிகைகள்,



சஞ்சிகைகள், நூல்கள், முதலானவை ஒவ்வொன்றும் அதற்கு ஏற்ற வகையில் சமூக அசைவியக்கத்தை நிர்ணயிக்கின்றன. அது மாத்திர மல்லாமல், அவை வர்த்தமான சமூக அசைவியக்கத்தின் தன்மைகளை, அதன் செல்நெறிகளை எடுத்துக்காட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

1958ல் தொடங்கப் பெற்று, இன்று வெள்ளிவிழாக் கொண்டாடும் ''ஈழநாடு'' பத்திரிகையின் வரலாற்றில், அதாவது பல்வேறுகால கட்டங்களில் அது தனது தொடர்பு நிலையை அமைத்துக் கொண்ட முறையில் ஈழத்துத் தமிழ்மக்களிடையே ஏற்பட்டுவரும் சமூக நடைமுறை மாற்றங்களைக் கண்டுகொள்ளக் கூடியதாக விருக்கின்றது.

ஏழத்தாழ நான்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர், மற்றைய தினசரிப்பத்திரிகைகளுக்கு ''மேலதிக''மாக வாசிப்புப் பொருளாக விருந்த ''ஈழநாடு'', இன்று யாழ்ப்பாணத்துப் பத்திரிகை வாசகர்களின் கட்டாய வாசிப்புப் பொருளாக மாறியுள்ளமையை நோக்கும்பொழுது, இம்மாற்றம் ஏன் நிகழ்ந்தது, எவ்வெவ் வகையில் நிகழ்ந்தது, எவ்வெவ் முறையில் தெரியவந்தது எனும் வினாக்கள் முக்கியமானவையாக மேற்கிளம்புகின்றன. இவ்வினாக்களுக்கான விடைகள் ''ஈழநாடு'' பத்திரிகையின் வளர்ச்சியை மாத்திரமல்லாது தமிழ் மக்களின் நிலைமை மாற்றங்கள் சிந்தனை மாற்றங்கள் ஆகியனவற்றையும் புலப்படுத்துவன வாக அமையும். ''ஈழநாடு தமிழுக்கு ஆற்றிய தொண்டு'' என அடியார் பாவத்துடன் இப்பிரச்சனையை நோக்கினால் கயிற்றைவிட்டு வாலைப் பிடித்த கதையாகத்தான் இருக்கும்.

தொடர்பியல் என்னும் பயில்துறையின் கருத்தோட்டப் பின்னணியில் சமூக, அரசியல் நிகழ்ச்சிகளை இணைத்து, ''ஈழநாட்''டின் வளர்ச்சியை விளங்கிக் கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## II

1958 இல் தொடங்கப் பெற்ற ''ஈழநாடு'' தினசரி புதினப் பத்திரிகையாக வெளிவந்த பொழுது அது ஒரு ''சாதனையை'' நிலை நிறுத்திற்று. இலங்கையின் தலைநகரத்துக்கு வெளியேயிருந்து, ஒரு மாகாண நகரத்திலிருந்து வெளியிடப்படும் முதல் இலங்கைத் தின்சரியாக ஈழநாடு அமைந்தது.

தொடர்பியல் நிலைநின்று நோக்கும்பொழுது தான் இதன் முக்கியத்துவம் நன்கு புலப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சம்பந்தமாக முதலாவதாக எடுத்துக் கூறப்பட வேண்டியது, யாழ்ப்பாணத்தில் அக்காலகட்டதில், நவீன தினசரிகளுக்கு வேண்டிய ''ரெலிபிறின்ற்றர்'' போன்ற சாதனங்கள் இல்லாதிருந்தமையேயாகும். உலகச் செய்திச் சேவைகளின் ரெலிபிறின்ற்றர் (தொலை அச்சியந்திரம்) இன்னும்தான் ''ஈழநாட்''டில் இல்லையென்றே கருதுகின்றேன். தொலைபேசி வசதி கூட இப்பொழுது உள்ளது போல இருக்கவில்லை. வானொலி ஒன்றுதான் இவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது (இப்பொழுதும் அமைந்துள்ளது எனலாம்).

இதுமாத்திரமல்லாமல், செய்திச் சேகரிப்புக்கான ஓர் ஒழுங்க மைப்பைத் தமக்கென ஏற்படுத்திக் கொள்வதிலும் அமைப்புச் சிக்கல் களும் நிதிப் பிரச்சினைகளுமிருந்தன. அதற்கும் மேலாக பத்திரிகை விநியோகத்திலும் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலையிருந்தது. அந்நாட்களில் ஒரு பத்திரிகை நிறுவனத்தின் விற் பனை முகவர்களாகவிருப்போர் மற்றைய பத்திரிகைகளின் விற்பனை முகவர்களாகவிருத்தல் முடியாது.

''லேக்ஹவுஸ்'' நிறுவனத்தின் வலுவான ஒழுங்கமைப்பும், வீர கேசரிச் செல்லத்துரை போன்ற திறன்மிக்க செய்தி நிருபர்களின் செல்வாக்கும் சுலபத்திற் புறங்காணக் கூடியவையல்ல. இன்றும்தான் ''ஈழநாடு'' அத்தகைய ஓர் ஒழுங்கமைப்பையோ செய்திச் சேகரிப்பு முறைமையையோ நிறுவிக் கொண்டுவிட்டதாகச் சொல்லி விட முடி யாது.

ஆனால் நிறுவக நிலைப்பட்ட இந்தக் குறைபாடுகளை ''ஈழநாடு'' உணராமலிருக்கவில்லை. 1960 களின் நடு பிற்கூறுகளில் ''ஈழநாட்'' டைக் கொழும்பிலிருந்து வழிநடத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப் பட்டன. சிலகாலம் அப்போதைய பிரதம ஆசிரியர் (காலஞ் சென்ற திரு.பிராணதார்த்தி ஹரன்) கொழும்பிலிருந்தே செயற்பட்டு வந்தார்.

யாழ்ப்பாணத்திற் செய்யப்படவேண்டிய ஒரு முதலீடாகவே கருதப்பட்டு ''ஈழநாடு'' நடாத்தப் பெற்று வந்தது. ஆனால் அது தனது பணியினைப் பூரண நிறைவுடன் ஆக்குவதற்கான வளங்களையோ அமைப்பினையோ கொண்டிருக்கவில்லை.

மேற்கூறிய வரையறைகள் காரணமாக ''ஈழநாடு'' ஒரு மாகாணப் பத்திரிகையாகவே இயங்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது.

ஆனால் அந்த வட்டத்தினுள்ளும் அது ஒரு பண்பாட்டுத் தேவை யைப் பூர்த்தி செய்தே வந்தது எனும் உண்மை மறக்கப்படக்கூடாது.



தேசியத் தினசரிகளின் பரந்துபட்ட செய்தி வட்டத்தினுள் பெருமுனைப் புப் பெறாத ஆனால் பிரதேச வட்டத்தினுள் நிகழ்வு முக்கியத்துவ முடைய மத, பண்பாட்டு நடவடிக்கைகளை, குறிப்பாக வழிபாடுகள் பற்றிய விடயங்களை முனைப்புறுத்திக்காட்டி அவற்றின் வழியாக ஒரு பிரதேச வாசக வட்டத்தைப் பெற்றிருந்தது. இந்த வழிபாட்டு நிகழ்ச்சி களுள் யாழ்ப்பாணத்துச் சைவப் பெரும் பாரம்பரியத்து வழிபாட்டுச் செய்திகளும் சமய நடவடிக்கைகளுமே பெருமுக்கியத்துவமுடையன வாகவிருந்தனவெனலாம்.

''ஈழநாட்டின்'' இந்தச் சிறப்புச் செய்தியளிக்கை காரணமாக வட, கிழக்குப் பிரதேசக் கோயில்களின் தீர்த்தம், தேர் நிகழ்ச்சிகளை விரி வாகவே செய்தியளிக்கை செய்யவேண்டிய ஒரு நிலை கொழும்பி லிருந்து வெளிவரும் தேசிய மட்டப் பத்திரிகைகளுக்கு ஏற்பட்ட தெனலாம்.

யாழ்ப்பாண்த்தின் ''பிரதேச''ச் செந்நெறி எழுத்துப் பாரம்பரியத் துக்கமைய ஈழநாடு செயற்பட வேண்டியிருந்ததால், பரபரப்பான செய்திகளையோ அன்றேல் செய்திகளைப் பரபரப்பு ஏற்படுத்தும் முறையில் எழுதியோ வெளியிடும் மரபு ''ஈழநாடு''க்கு அந்நியமான ஒன்றாகவே இருந்து வந்தது எனலாம். இவ்விடயத்தில் ''ஈழநாட்''டின் ஆசிரிய ஆலோசகர்களுக்கு முக்கிய பங்கு உண்டு. இவர்கள் பெரும் பாலும் இளைப்பாறிய பாடசாலை ஆசிரியர்களாகவே இருந்தனர்.

பண்பாட்டுச் செய்தியளிக்கையிற் காணப்பட்ட ஸ்திரமான நிலைப்பாட்டினை அரசியலிற் காணமுடியாதிருந்தது என்றே கூற வேண்டும். எனவே அரசியற் செய்திகளைப் பொறுத்தவரையில் ஈழநாடு தனக்கென ஒரு வாசக வட்டத்தை ஆரம்ப முதல் கடந்த நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் வரை வளர்த்துக் கொள்ளவில்லை யென்றே கூறவேண்டும். செய்திச் சேகரிப்பிலோ, அல்லது செய்திப் பின்னணி அளிக்கையிலோ ''ஈழநாடு'' கொழும்பைத் தளமாகக் கொண்ட தேசிய தினசரிப் பத்திரிகைகள் போன்றோ, அன்றேல் அரசியல் கட்சிப் பத்திரிகைகள் போன்றோ ஈடுபாடு காட்டவில்லை யென்றே சொல்லலாம்.

எனவே பிரதேசப் பண்பாட்டுச் செய்தியளிக்கை இதன் தளமாக அமைந்தது. அரசியற் செய்திகள் இடம் பெற்றன. ஆனால் இதன் வலுவான தளம் அந்தப் பண்பாட்டுமையமேயாகும்.

இக்கட்டத்தில் ஈழநாடு யாழ்ப்பாணத்தின் ''மாகாணப் பத்தி ரிகை'' யாக இயங்கியதா என்ற வினா எழும்புவதியல்பே. மாகாணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையாக இயங்குவதற்கான வாய்ப்பிருந்தும், வடமாகாணத்தின் சகல மாவட்டங்களையும் வன்மையாக உள்ளடக்கும் செய்திச் சேகரிப்பு முறை அதற்கு இருக்கவில்லையென்றே கூறவேண்டும். சிலகாலங்கள் மாவட்டச் செய்தித் தொகுப்புக்கள் வந்தது உண்மையே. ஆனால் அவை காரணமாக இத்தினசரி மாகாண மட்டத்தில் ''தவிர்க்க முடியாத'' இன்றியமையாத வாசிப்புப் பொருளாக அமைந்தது என்று கூறிவிட முடியாது. அத்துடன் அண்மைக்காலம் வரை ''ஈழநாடும்'' தேசிய மட்டத்தையே தனது செய்திக்களமாகக் கொள்ளும் ஒரு மனப்பான்மை யுடன் இயங்கி வந்தது எனலாம். அவ்வாறு இயங்க முடியாதிருந்தமை காரணமாக அது உள்ளூர்ச் செய்தி அளிக்கையுடன் திருப்திப்பட்டுக் கொண்டு வந்ததேயன்றி, உள்ளூர்ச் செய்தியளிக்கையையே தனது, 'பலமாகக் கருதி இருக்கவில்லை. அதற்கான வழிவகைகளை வளர்த்துக் கொள்ளவுமில்லை.

இப்பத்திரிகையின் ஆசிரிய மட்டம் முகாமை மட்டத்தினை மீறமுடியாதிருந்தமை காரணமாகவே இந்தத் திரிசங்குநிலை (அதாவது தேசிய மட்டச் செய்தியளிக்கைக்கு வேண்டிய ஒழுங்கமைப்பு வலு இல்லாமலும், உள்ளூர்ச் செய்தியளிக்கைக்கான சிறப்புச் செயற்பாடு இல்லாமலும் இயங்கும் நிலை, ஏற்பட்டது எனலாம். இந்தத் திரிசங்கு நிலையினை இம்முதற்கட்ட கால விளம்பரங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஒரு பத்திரிகையில் வரும் விளம்பரங்களைக் கொண்டு அதன் வாசக வட்டத்தை அறிந்து கொள்ளலாம். ''ஈழநாட்''டின் இன்றைய மாற்றத்தை விளம்பரங்களின் அடிப்படையாகக் கொண்டு விளங்குவது அவசியமாகும்.

இத்தகைய நிச்சயமின்மைகளுக்கூடேயும் குறிப்பிட்ட அந்த வட்டத்தினுள் வாசக வலுவுடன் இயங்கி வந்தது. ஆயினும், முன்னர் குறிப்பிடப்பட்டது போன்று, செய்தியளிக்கைப் பூரணத்துவத்தைப் பொறுத்தமட்டில் கொழும்பைத் தளமாகக் கொண்ட தேசியத் தினசரி களுடன் ஒப்புநோக்கும் பொழுது, ஈழநாடு அவற்றிற்கு ''மேலதிகமாக'' வாசிக்கப்படத் தக்கவொன்றாக விருந்ததேயன்றி, அவற்றுக்குப் பதிலாக வாசிக்கத்தக்க ஒன்றாக (அதாவது ''ஈழநாட்டைப் பார்த்தால் போதும்'' அதிலும் ''இந்தச் செய்திகள் சிறிதாவது இருக்கின்றனதானே'' என்ற மனோபாவத்துடன் அணுகத்தக்க ஒன்றாக) ஈழநாடு அமைந் திருக்கவில்லை.

ஆனால் இன்றோ யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ''ஈழநாடு'' உண்மையில் இன்றியமையாத வாசிப்புப் பொருளாக (அது



''இன்றி'' செய்தியறிவுத் திருப்தி பூரணமாக ''அமையாத'' வாசிப்புப் பொருளாக) மாறியுள்ளது.

இந்த மாற்றம் எவ்வாறு ஏற்பட்டது என்பதனை மிகச் சுருக்கமாகப் பார்ப்போம்.

## III

புதினப்பத்திரிகை பற்றிய ஆய்வு என்ற வகையில், மேற்கூறிய நிலைமைகள், இரண்டு அடிப்படைக் காரணிகளை மையமாகக் கொண்டிருந்தன எனலாம்.

முதலாவது, கொழும்பைத் தளமாகக் கொண்ட தமிழ்த் தினசரிகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் (அத்துடன் தமிழ்ப்பகுதிகளில்) தொடர்ந்து பிரச்சினையெதுவுமின்றி விநியோகிக்கப்படத்தக்க போக்குவரத்து ஒழுங்குமுறையாகும். ஆகாயவிமானம், ரயில், வீதிவழிப் போக்கு வரத்துக்கள் முன்னர் இருந்தன. தினசரிகள் ரயிலையும், வீதியையும், பயன்படுத்தின. இந்தப் போக்குவரத்துச் சமூக ஓட்டத்தில் எங்காவது, ஏதாவது ஊறு ஏற்படின் பத்திரிகைகளின் சுற்றோட்டம் பாதிக்கப்படும். அப்படிப் பாதிக்கப்படுவதே செய்தி ஆதலால், தகவல் வேட்கை வாசக மட்டத்தில் அதிகரிக்கும். அதற்கு ஏற்கனவே உள்ள ''உள்ளூர்''ப் பத்திரிகை உதவத் தொடங்கும்.

இரண்டாவது கொழும்பே எப்பொழுதும் நிகழ்ச்சி மையமாக இருக்குமென்ற அடிப்படையிலேயே மேற்கூறிய நிலைமை தொடரும். அப்படியிருக்கும் பொழுதுதான் கொழும்பை மையமாகக் கொண்ட பத்திரிகைகள் செய்தி அளிக்கையில் முன்னிடத்தைப் பெறமுடியும். இவ்வாறு சொல்லும்பொழுது இன்னுமொரு விடயம் இதனுள் தொக்கு நிற்கின்றது. மேற்கூறிய கொழும்பு மேலாண்மை தொடர்வதற்கு கொழும்பு மையமாக இருப்பது மாத்திரமல்லாமல் யாழ்ப்பாணம் (மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்கள்) முக்கிய மையங்கள் ஆகா என்ற நிலைமையுமிருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் ''ஈழநாடு'' எப்பொழுதும் கொழும்பை நோக்கிய பயிராக இருக்க வேண்டிய நிலைமையிருக்கும்.

1977க்குப் பின்னர் இந்நிலைமை மாறியது. முதலில் தமிழ்த் தலைமையின் தளம் மாறியது யாழ்ப்பாணத்தையே தமது முக்கிய செயற்களமாகக் கொண்ட தமிழ்த் தலைவர்கள் முன்னணிக்கு வந்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அமிர்தலிங்கம், சிவசிதம்பரம்). இந்தக்காலம் அத் தலைமையே உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாகவும் அமைந்தது.

இதுமாத்திரமல்லாமல் இளைஞர் இயக்கங்களின் செயற்பாடு களும் அவற்றுடன் காரண காரியத் தொடர்பு கொண்டிருந்த இராணுவ-பொலிஸ் நடவடிக்கைகளும் யாழ்ப்பாண மாவட்டத்தின் முக்கியத்துவ த்தை அதிகரித்தன. இந்தச் செயற்பாடுகளும் எதிர்நடவடிக்கைகளும் யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் பரவியிருந்ததால் நேற்று எங்கு எது நடைபெற்றது என்பதைக் கொண்டே இன்று அங்கு எவ்வித சன நடமாட்டம் இருக்கும், இருக்க வேண்டும் என்பதை உய்த்துணர்ந்து ''அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டிய நிலைமை'' ஏற்பட்டது. அத்தகைய செய்திகளை வானொலி அறிவிப்பதில்லை. கொழும்பைத் தளமாகக் கொண்ட பத்திரிகைகள் உடனடியாகத் தெரிவிக்கவும் முடியாது. இதனால் இவற்றைத் தெரிவிக்கக்கூடிய (சூசகமான முறை யில் தானும் சுட்டி எழுதக்கூடிய) உள்ளூர் பத்திரிகைக்கான கேள்வி யினை அதிகரித்தது.

அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தினுள் 1970 - 77 இல் இல்லாத அரசியல் பரபரப்பு நிலையொன்றும் நிலவியது. மாவட்ட சபைகள் பற்றிய எதிர்பார்ப்பு, அதற்கான தயார் நடவடிக்கைகள், இறுதியில் மாவட்ட சபைகள் பற்றி நடந்த தேர்தற் கூத்துக்கள், அதன் பின்னர் வந்த ஜனாதிபதித் தேர்தல், அதன் பின்னர் வந்த ஒப்புதல் வாக்கெடுப்பு எனப் பல நிகழ்ச்சிகள் சற்று முன்னர் கூறிய இளைஞர் இயக்கப் பொலிஸ்-இராணுவ ஊடாட்டங்களுடன் இணைந்து யாழ்ப்பாண மாவட்டத்தைச் செய்தி வேட்டைக்கான களமாக்கின. இந்த நிலையில் உள்ளூர்ப் பத்திரிகைக்கு என்றும் தவிர்க்க முடியாத ஓர் இடம் இருப்பது இயல்பே. உள்ளூரில் நடப்பனவற்றை உள்ளூர்வாசிகள் விரைவாக விளக்கமாக அறிவதற்கான வாசிப்புப் பொருளாக மாத்திரமல்லாமல், பிற மாவட்டத் தினர் யாழ்ப்பாண மாவட்டத்தில் என்ன நடக்கின்றது என்பதை யாழ்ப்பாணக் கண்ணோட்டத்தின் வழியாக அறிந்து கொள்வதற்குமான வாசிப்புப் பொருளாக ''ஈழநாடு'' அமையத் தொடங்கிற்று.

இந்தப் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டமையாலும், யாழ்ப்பாணத் திலும் மற்றத் தமிழ்ப் பிரதேசங்களிலும் தமிழர் உயிருக்கும் பிரதான மாகத் தமிழர் சொத்துக்கும் முன்னர் நடக்காத முறையிலும் அளவிலும் ஊறுவிளைவிக்கப்பட்டதாலும், ''ஈழநாடு'' படிப்படியாக ஒரு கொள்கை நிலைப்பாட்டை வன்மையாக வற்புறுத்த வேண்டி ஏற்பட்டது.



பொலிஸ் - இராணுவத்தின் தாக்கு மையங்கள் பரவலாகி பதற்றம் பொதுப் பண்பாக மாறிவந்த பொழுது ''ஈழநாடு'' இந்த ஆசிரிய நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாயிற்று.

இத்தகைய மாற்றம் ஏற்பட்டுக் கொண்டு வருகின்ற பொழுதுதான் 1981 இல் ''ஈழநாடு'' இலங்கைத் தமிழ் மக்களின் புலமைச் சொத்துக் களில் ஒன்றாகவும் யாழ்ப்பாணத்தின் புலமைச் சொத்துக்களில் ஒன்றாக வும் யாழ்ப்பாணத்தின் புலமைச் சுயாதீனத்தின் எடுத்துக்காட்டுக்களில் ஒன்றாகவும் அமைந்து வந்துள்ளது என்பதைச் சுட்டும் பொலிஸ் தாக்குதல் நடைபெற்றது. ஈழநாடு அச்சகமும் உபகரணங்களும் சேதப் படுத்தப்பட்டன. அத்தாக்குதலுடன் ''ஈழநாடு'' சர்வ தேசிய முக்கியத் துவமுடைய ஒரு பத்திரிகையாயிற்று.

இது ''ஈழநாட்''க்கு இருவகையில் உதவிற்று. ஒன்று அதற்குக் கிடைத்த வாசக அபிமானம், சர்வதேசக் கணிப்பு; மற்றது அதுவரை ''ஈழநாட்''டின் திடீர்ப் புனருத்தாரணத்திற்குத் தடையாகவிருந்த யந்திரங்கள் ஆகியனவற்றை விடுத்து முற்றிலும் புதிதாகப் புனர் நிர்மாணஞ் செய்வதற்கான ஒரு வாய்ப்பு. புத்தாக்கத்திற்கு அழிவும் அத்தியாவசியமாகின்றது.

உண்மையில் இந்த அழிபாடுகளிலிருந்து, மேற்கத்திய பாரம்பரி யத்திற் கூறப்படும் ''ஃபினிக்ஸ்'' எனும் சுவர்ணப் பறவைபோன்று, ''ஈழநாடு'' புதுப்பொலிவுடன் கிளம்பிற்று எனலாம்.

இந்த மாற்ற காலத்திலும் அதனைத் தொடர்ந்தும் வன்மையான ஆசிரியத் தலையங்கங்கள் எழுதும் ஒரு பழக்கம் ஏற்படத் தொடங்கு கின்றது.

குறிப்பாக 1983 யூலைக்குப் பின்னர் தமிழர்களுக்கான பாது காப்பான ஒரேயொரு பத்திரிகை ''ஈழநாடு'' எனும் உணர்வு வளரத் தொடங்கிற்று. கொழும்பைத் தளமாகக் கொண்ட பத்திரிகைகளுக்கேற் பட்ட அநுபவத்தின் காரணமாகவே இவ்வுணர்வு ஏற்பட்டது. கொழும் பில் இயங்கிவரும் தமிழர் மூலதனப் புதினப் பத்திரிகையைக் கூட யாழ்ப்பாணத்தில் அச்சிடுவதே பொருத்தமானது என்று கூடச் சிலநாள் யோசிக்கப் பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட நிகழ்ச்சிகளிலும் அவற்றை அந்தக் கள மட்டத்து அணுகுமுறையுடன் எடுத்துக் கூறுவதும் ஒரு தேசியத் தேவை யாகவும், சர்வதேசியத் தேவையாகவும் அமைந்த முறைமையினை ''சற்றடே றிவியூ'' வின் திடீர் வளர்ச்சி கொண்டு அறிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்ததே. ''சற்றடே றிவியூ'' எடுத்துக் கொண்ட வன்மையான ஆசிரிய நிலைப்பாடும் இடித்துரைக் கும் மொழிநடையும் ஈழநாட்டின் நிலைப்பாட்டையும் வலுப்படுத்த உதவியிருக்குமென்பதில் தவறு இருக்கமுடியாது.

1983 வன் செயல்களின் பின்னர் ஈழநாட்டின் அமைப்பிலும், எழுத்திலும் ஒரு முக்கிய பிணைப்பினைக் காணலாம். ''தமிழ் மக்க ளுக்கு தமிழ்ப் பிரச்சினை பற்றி எழுதுகின்ற தமிழ்ப் பத்திரிகை ஈழநாடு'' எனும் பிரக்ஞையுடன் அதுபிரசுரிக்கப்படுவதே உலகச் செய்திகளைக் கூட இலங்கைத் தமிழர் பிரச்சினை கண்கொண்டு நோக்கிச் செய்தி களை எழுதுவதும் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதும் ஈழநாட்டின் பண்பான இந்த எழுத்து உருமாற்றத்தில் தற்போதைய ஈழநாடு ஆசிரியர் திரு. ந. சபாரத்திரனத்துக்கு முக்கிய பங்குண்டு. பல்வேறு இன்னல் களுக்கிடையேயும் ''ஈழநாட்''டின் புதினத் தினசரிப் பண்பைக் காப் பாற்றி வந்த கோபாலரத்தினத்தின் மௌன சேவை, இந்த ''மாற்ற'' காலத்திலே நன்கு புலனாயிற்று. எனலாம்.

''ஈழநாட்''டின் இந்தப் புதிய தொடர்பியல் வலுவினை அதன் விளம்பரச் செல்வாக்கிற் காணலாம். 1979 முதல் இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களல்லாத இடங்களிலிருந்து வந்த தமிழர் முதலீடுகள் யாழ்ப் பாணத்தின் மையங்கொள்ளக் கொள்ள யாழ்ப்பாணத்தில் ஒரு வணிக விசாலிப்பு ஏற்பட்டுவருகின்றது. இந்தப் புதிய முதலீடுகள் முற்றிலும் யாழ்ப்பாண வட்டத்தினுள் தொடர்பு வலிமையுடன் இயங்குகின்ற ''ஈழநாட்''டில் தம்மை வளம் பெறச் செய்வது இயல்பே.

ஈழநாட்டின் வாசக வட்டம் யாழ்ப்பாணத்துச் சராசரி மக்கள் என்பது நிர்ணயமாக, அந்தச் சராசரி மக்களை நுகர்வாளராகக் கொண்ட உற்பத்திகளை ஈழநாட்டில் விளம்பரம் செய்வது அத்தியாவசியமா கின்றது.

இதனால் ''ஈழநாடு'' இப்பொழுது, முன்னர் எக்காலத்துமில்லாத வகையில் இலாபகரமான நிறுவனமாகவும் இயங்குகின்றது எனலாம்.

## IV

இந்த மாற்றத்தினை நுணுகி நோக்கும் பொழுது ''ஈழநாட்''டின் இன்றைய மாற்றநிலை புறத்தாக்கங்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பது புலனாகும். அந்தப் புறத்தாக்கங்களுக்கேற்ற அகநிலை மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன என்பதும் பிரத்தியட்சமாகத் தெரிகின்றது.

ஆனால் ஏற்பட்டுள்ள இந்த மாற்றங்களை ஆதாரமாகக் கொண்டு எதிர்காலச் சவால்களைக் கணக்கிட்டு, மேலே செல்வதற்கான ஒரு தயார் நிலை காணப்படுகின்றதா என்பது முக்கியமான வினாவாகும்.

பிறிதொரு தினசரியின் போட்டியற்ற நிலையில் இப்பொழுது ஏற்பட்டுள்ள மாற்றங்கள் போதுமானவையாக விருக்கலாம். ஆனால் பிறிதொரு தினசரி தோன்றுவதற்கான கருத்துநிலைச் சூழல் ஏற்படாதா என்பது முக்கியமானவினாவாகும்.

''ஈழநாடு'' தனது இன்றைய தொடர்புநிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த ஸ்திரப்பாடு ஒரு வணிக முயற்சி மாத்திர மன்று அது ஒரு கருத்துநிலை முயற்சி, நிறுவக முயற்சி, பிரதானமாக, அது ஒரு தொடர்பியற் பணி.

**(ஈழநாடு 25வது வருட மலர் -1983)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக வரலாற்றுப் பின்புலத்தில் யாழ்ப்பாணச் சமூகம்

யாழ்ப்பாணத்துச் சமூகம் எனத் தனித்துவமான, பிரித்தறியப்படத் தக்கதான அம்சங்களைக் கொண்டதான ஒரு சமூக அமைப்பாக முகிழ்ப் பது தேசவழமைச் சட்டக் கோவையிலேயே ஆகும் (1707). அச்சட்டக் கோவை தொகுக்கப் பெற்ற முறைமையிலிருந்து இச்சமூக அமைப்பு நீண்டகால அமைவியல் வரலாறுடையதென்பது புலனாகிறது. (தொகுக் கப் பெற்ற காலத்துக்கு முன்னர் குறைந்தது சில நூற்றாண்டைத் தொடர்ந்து உய்த்தறியப்படக்கூடியதாக உள்ளது).

இச்சட்டக் கோவையில் யாழ்ப்பாணச் சமூகத்தின் பொருளாதார அமைப்பு, அப் பொருளாதார அமைப்புக்கியைந்ததான சமூக அமைப்பு (அதிகார வரன் முறை), இச்சமூக அமைப்பின் தொடர்ச்சியில் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் ஆகியன விரிவான முறையில் எடுத்துக் கூறப்பட் டுள்ளன.

இந்தச் ''சமூக உருவாக்க''த்தின் தொடக்கத்தை யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை ஆகிய நூல்களிலிருந்து உய்த்தறிந்து கொள்ளலாம். யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் ஏறத்தாழ சுயாதிக்கமுடைய முதலிமார் குடும்பங்கள் குடியேறியமை - மாதகல், இருபாலை, உடுப்பிட்டி, எனவரும் இடங்கள்.

14ம் நூற்றாண்டு முதல் 1529 வரை நிலவிய அரசியலுருவாக்கம் இந்தச் சமூக அமைப்பு முறைமையின் தொடர்ச்சிக்கு வேண்டிய ஸ்திரப்பாட்டை வழங்கிற்று எனலாம்.



**இந்த அமைப்பின் பிரதான அம்சங்கள்:**

* விவசாய மேலாண்மையுடைய ஒரு பொருளாதாரம்.
* அதன் அசைவியக்கத்திற்கேற்ப அமைந்த ஒரு சாதியமைப்பு முறைமை.

  குடிமக்கள் முறைமை ( முற்றிலும் விவசாயத்தினருடன் சம்பந்தப்படுகின்றது).

  குடிமக்கள் முறைமைக்குள் வராத பிறசாதியினர்: விவசாயம் சாராத குழுமங்களே இதற்குள் பெரும்பாலும் வருதல்.
* விவசாய அமைப்பு முறைமை:

  தமிழ் நாட்டில் நிலவும் காணியாட்சி முறைமையின் (ரயத் வாரி) தன்மைகளைக் கொண்டது.

  விவசாயக் கூலிகள் குடிமக்களாக இருக்கின்ற தன்மை (அதாவது அவர்கள் உற்பத்திக் கருவிகளுள் ஒன்றாக அமைந்தமை).
* பிரதேச ஸ்திரப்பாடு:

  பிரதேசங்களுக்கிடையே சனப்பெயர்வின்மை, இதனால் வன்மையான ஒரு பிரதேசப் போக்கு (வடமராட்சி, தென்ம ராட்சி, வலிகாமம்), இந்தப் பிரதேச ஸ்திரப்பாடு குலையாத வரை பொருளாதார அமைப்பும் ஸ்திரமானதாக (அதாவது ஸ்திரமான பொருளாதார உறவுகளைக் கொண்டதாக) அமைதல்.
* இதனால் இந்தத் தொடர்ச்சி இருக்கும் வரை அடிப்படை யான பெரு மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை.

**முக்கிய வரலாற்றுக் காலகட்டங்கள்:**

* போத்துக்கேய ஆட்சி:

  அடிப்படைப் பொருளாதார அமைப்பில் மாற்றங்கள் இல்லை- கத்தோலிக்கத்தின் வருகை - கத்தோலிக்கப் பெரும்பான்மையும் அடிநிலைச் சமூகங்களிடையே பரவி யமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஒல்லாந்த ஆட்சி:-

இறப்பிறமாது மதப்பரவுகை.

உள்ளூர் கட்சியில் பிரபுத்துவக் குடும்பங்கள் முக்கிய பங்கெடுத்தமை.

நிருவாகத்துக்கு வேண்டிய ஆட்சேர்ப்பும் திருச்சபை சார்ந்த கல்வி முறையும் இதனால் ஏற்பட்ட சமூக அசைவியக்கம்.

* பிரித்தானிய ஆட்சி:

சிங்களப் பகுதியில் தோன்றியது போன்ற ஒரு முயலுநர் குழு தோன்றவில்லை. அடிப்படைப் பொருளாதார அமைப்பில் மாற்றம் இல்லை.

நிர்வாகயந்திரத்துக்கான எழுத்தறிவுடையோர் தேவைப்பட்டமை. அதற்கும் திருச்சபை மேலாண்மையுடைய கல்விக்குமிருந்த தொடர்பு.

த்மது அடிப்படையான சமூக அமைப்பில் மாற்றம் ஏற்படாத வகையில் ஆட்சியாளரின் ''நவீனமயப்பாட்டு'' (கல்வி) முயற்சிகளை ஏற்றுக் கொண்டமை.

நவீனமயப்பாட்டு கல்வி முறைமை ஏற்படுத்திய மேனிலைப்பாட்டிற்கும், சமூகக் கட்டுப்பாட்டை தம்மிடத்தேயே வைத்துக் கொள்ளும் உயர்நிலையாளர் நிலைப்பாட்டுக்குமிடையே தோன்றிய ஊடாடங்கள்.

சைவமும் தமிழும் என்ற கோஷத்தின் சமூக, பொருளாதார உட்கிடக்கை.

தாழ்த்தப்பட்டோர் நிறுவனங்கள் தோன்றியமை. அரசியல், சமூக, சமத்துவப் போராட்டங்கள் எழுந்தமை.

ஆங்கிலக் கல்வி தந்த நவீனமயவாக்கம் தாராண்மை நோக்கு காரணமாகவும் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் செல்வாக்குக் காரணமாகவும் தோன்றிய மாணவர் காங்கிரஸின் பிரகடனம் (1924) ''உண்மையான'' ஒரு தேசியப் பண்பாட்டை மீள் கண்டுபிடிப்புச் செய்வதிலும், உருவாக்குவதிலும் அது காட்டிய ஆர்வம்.

யாழ்ப்பாணத்தின் மார்க்ஸிய இயக்கங்களின் வரலாறு.



## 1948க்குப் பின்:

* இலவசக் கல்வி ஏற்படுத்திய சமூக அசைவியக்க மாற்றங்கள்.
* சிங்கள தேசிய வாதத்தின் எழுச்சியும் அதன் சிறுபான்மை (தமிழர்) விரோதப் போக்கும், 1956 அதன் திருப்பு முனையாக அமையும் தன்மை, சிங்களம் மட்டும் சட்டம், இனக் கலவரத் தொடக்கம்.
* தமிழ் மொழி மூலக்கல்வியின் வளர்ச்சி, இதன் சமூக உட்கிடக்கை, இலவசக்கல்வி, தமிழ் மொழி மூலக்கல்வி இவற்றின் ஒருமித்த தாக்கம்.
* சிங்களத் தேசியவாதத்தின் வழியாகத் தோற்றுவிக்கப்பட்ட தமிழர் ஒருமைப்பாடு; இந்த ஒருமைப்பாட்டு கோஷத்தின் மத்தியவர்க்கப்பாங்கு.
* மேற்கூறியவை காரணமாக ஏற்படும் சமூக மாற்றங்கள்:

தீண்டாமை எதிர்ப்பு இயக்கம்.

சாதி எதிர்ப்பு இலக்கியங்கள் (முற்போக்கு இலக்கிய எழுச்சி).

ஈழத்தின் தனித்துவத்தை வற்புறுத்தும் ஒருதேசியம், தமிழ் வழியாக அதனை நோக்கும் தேசியம் என இருநோக்குகள்.

1960களில் ஏற்பட்ட பொருளாதார (விவசாய) மாற்றங்களும், அவைவழியாக வந்த தொழிநுட்ப மயப்பாடு (இரண்டாம் தர தொழில்நுட்பம்) ஏற்படுத்திய சமூக மாற்றங்கள்.

* 1970 களில் மத்திய கிழக்கு ஏற்படுத்திய பொருளாதார வாய்ப்புகள்.

## இளைஞர் தீவிரவாத எழுச்சியும், இனப்போரும்:

* சிங்களத் தேசியவாதத்தின் தமிழர் விரோதப் போக்கினால் ஏற்பட்ட தமிழர் ஒருமைப்பாடும் இளைஞரிடையே அரசியல், கல்விப்பாரபட்சங்கள் ஏற்படுத்திய தாக்கங்களும்.
* இளைஞர் இயக்கங்களின் தோற்றம். இவை ஏற்படுத்திய சமூக மாற்றங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* 1984 முதல் வட கிழக்கில் நடைபெறும் இனப்போரும் அதன் காரணமாக ஏற்பட்டுள்ள மாற்றங்களும். நீண்ட காலமாகத் தாங்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்களிலிருந்து அகதிகளாக இடம்பெயர்ந்து வாழ்பவர் நிலைமை.

  பிறநாடுகளில் குடியேறும் போக்கு.

  இளைஞர் இயக்கங்களின் ஒழுங்கமைவும் அதன் சமூக முக்கியத்துவமும் இளைஞர் இயக்கங்களின் தலைமைகளின் தன்மையும்.

* பெண்கள் போராளிகளாக இடம்பெறல்.

**மேற்கூறப்பட்ட அரசியற் காரணிகளை ஊடறுத்து ஓடும் சில முக்கிய சமூகவியற் போக்குகள்:**

* சமஸ்கிருத மயமாக்கமும் அது சமூகச் சின்னங்களில் ஏற்படுத்தும் மாற்றங்களும்.
* இதற்கும் சாதியமைப்புக்குமுள்ள தொடர்பு.
* அகப்பிரிவுகள் குறைந்த சாதிப் பெருக்குழுமத் தோற்றம்.
* கிறிஸ்தவத்தின் தமிழ் மயவாக்கம்.
* இந்த மாறுதல்களினூடே சைவமும் தமிழும் கோஷத்தின் மீள்வரவு.

**(யாழ்ப்பாண சமூகம் ஒரு பன்முக ஆய்வு எனும் கலந்துரையாடலின் போது வழங்கப் பெற்ற சில குறிப்புகள் - 19.09.1994)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org